365 மிஷனெரிகளின் அரிய வரலாறு

மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்

வீர சுவாமிதாஸ்

Scanned with CamScanner

மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்

365 அருட்பணியாளர்களின் அரிய வரலாறு

எழுதியவர் :

V. வீர சுவாமிதாஸ்

இயக்குனர், வேதாகம நண்பன்

வேதாகம நண்பன்

எண்.1, வீராசாமி 3வது தெரு, அயனாவரம், சென்னை-600 023.

தமிழ் நாடு, தென் இந்தியா.

செல் : 9884120603, 9445415147, 7200234145/ போன் : 044-26471115

e-mail: vethagamananban@gmail.com/ web:bible2bible.com

Scanned with CamScanner

மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்
365 அருட்பணியாளர்களின் அரிய வரலாறு
முதல் பதிப்பு - 2007
இரண்டாம் பதிப்பு - 2008
மூன்றாம் பதிப்பு - 2011
நான்காம் பதிப்பு- 2013

வெளியீடு :
வேதாகம நண்பன்
எண்.1, வீராசாமி 3வது தெரு, அயனாவரம், சென்னை-23.
செல் : 9884120603, 9445415147, போன் : 044-26471115
e-mail: vethagamananban@gmail.com

நன்கொடை ரூ.200/-

அச்சிட்டோர் :
இம்பீரியல் கிராபிக்ஸ்
சென்னை
Scanned with CamScanner

இறைத் திட்டப்படி,
இவ்வுலகிற்கு என்னை வழங்கிய,
என் இனிய பெற்றோர்



தந்தை : வேத சுந்தரமாணிக்கம்
தாய் : தங்கம்மாள்

நினைவாக...

Scanned with CamScanner

எமது வெளியீடுகள்

1. ஆதியாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
2. யாத்திராகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
3. லேவியராகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
4. எண்ணாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
5. உபாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
6. யோசுவா 850 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
7. நியாயாதிபதிகள் & ரூத் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
8. 1 சாமுவேல் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
9. 2 சாமுவேல் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
10. 1 இராஜாக்கள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
11. 2 இராஜாக்கள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
12. 1 நாளாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
13. 2 நாளாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
14. எஸ்றா, நெகேமியா, எஸ்தர் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
15. யோபு 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
16. சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் பாகம் - 1	ரூ. 40/-
17. சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் பாகம் - 2	ரூ. 40/-
18. சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் பாகம் - 3	ரூ. 40/-
19. சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் பாகம் - 4	ரூ. 40/-
20. நீதிமொழிகள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
21. தானியேல் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
22. மத்தேயு 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
23. மாற்கு 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
24. லூக்கா 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
25. யோவான் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
26. அப்போஸ்தலர் நடபடிகள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
27. ரோமர் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
28. 1 கொரிந்தியர் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 40/-
29. வெளிப்படுத்தல் கேள்வி பதில்கள்	ரூ. 40/-
30. திருமறைப் புத்தகங்கள் - ஓர் அறிமுகம்	ரூ. 40/-
31. யார் இந்த இயேசு? - விடுதலையாளர்	ரூ. 40/-
32. Who is this Jesus? - The Liberator	ரூ. 40/-
33. Pongal - Christian Festival	ரூ.20/-
34. The New Testament Chart	ரூ.20/-
35. வேதாகம விடுகதைகள் 200 பாகம் 1	ரூ. 25/-
36. வேதாகம விடுகதைகள் 200 பாகம் 2	ரூ. 25/-
37. வேதாகம விடுகதைகள் 200 பாகம் 3	ரூ. 25/-
38. வேதாகம விடுகதைகள் 200 பாகம் 4	ரூ.25/-
39. வேதாகம விடுகதைகள் 200 பாகம் 5	ரூ.25/-
40. பெண்கள் விடுகதைகள் 200	ரூ.25/-
41. மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்	ரூ. 200/-
42. வில்லியம் கேரி	ரூ. 5/-
43. தங்கவசன டைரி 2014	ரூ. 15/-
44. ஜான்பன்யனின் ஜெபம்	ரூ.25/-
45. ஏசாயா விளக்கவுரை	ரூ.80/-

Scanned with CamScanner

மனந்திறந்து...

இறை மைந்தன் இயேசுவின் இனிய நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக. கடந்த சில ஆண்டுகளாகவே எனக்குள் ஆண்டவர் தந்த தரிசனத்தை செயல்படுத்தியதினால், வெளிவருவதே மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள் என்ற தியான நூல்.

இந்நூலை வெளியிடுவதற்கு நான் மேற்கொண்ட பிரயாசங்கள் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. பல போராட்டங்கள், தடைகள், சோதனைகள்... ஆயினும் அனைத்தையும் இயேசு கிறிஸ்து அருளிய பெலத்தினால் வெற்றி கொண்டு, இந்நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலை நீங்கள் படிப்பதினால் உங்கள் வாழ்வு நிச்சயமாக மாற்றப்படும். நீங்கள் மனிதர்களைத் தேடும் மாமனிதர்களாக மாறுவீர்கள். இல்லையெனில் மனிதர்கள் உங்களைத் தேடி வருவார்கள்.

இறை மைந்தர்களின் வரலாறு ஒவ்வொன்றும் வாசிக்க, வாசிக்க அவை தேன் சுளைகள். இவை இனிப்பாக மட்டுமல்ல, இதயத்தை இயக்குபவையாகவும், உருக்குபவையாகவும், உருவாக்குபவையாகவும் அமைகின்றது.

இவ்வுலகில் வாழ்ந்தால் இவர்களைப் போன்று வாழ வேண்டும் என நம்மை உற்சாகப்படுத்தும், 365 இறை மைந்தர்களின் வரலாறுகளை மிகவும் எளிதாக்கி, அதை அனுதின தியானமாக உங்கள் கரங்களில் தருவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இறைவன் இப்பணி செய்ய என்னைத் தேர்ந்தெடுத்ததால் இறைவனை நன்றியோடு துதிக்கின்றேன்.

இப்புத்தகத்தின் முதல் மூன்று பதிப்புகளும் ஆயிரக்கணக்கானோர் உள்ளங்களிலும் இல்லங்களிலும் சென்று பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினபடியால் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கின்றேன். இன்னும் மாபெரும் சீர்திருத்தத்தையும் மாற்றங்களையும் ஏற்படுத்தட்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

இங்கு வார்த்தைகளை அதிகமாக உதிர்க்க முடியாததால் நிறுத்துகிறேன்.

இந்நூலை அநேகருக்கு அறிமுகப்படுத்துங்கள். பயன் பெறுங்கள். மனிதர்களைத் தேடுங்கள். மகத்துவமான இறை சமுதாயம், இம்மண்ணினில் மலர செயல்படுங்கள். இறையருள் உங்களை வழி நடத்துவதாக.

இறைப்பணியில்

V. வீர சுவாமிதாஸ்

இயக்குனர், வேதாகம நண்பன்

Scanned with CamScanner

நன்றிகள் பல....

என் உள்ளம் நன்றியால் நிறைகின்றது.

ஆண்டவர் தந்த மாபெரும் தரிசனத்திற்காகவும், அதனை செயல்படுத்த தந்த பெலத்திற்காகவும், அதற்கு உறுதுணையாக தந்த நல்ல உள்ளங்களுக்காகவும் என் ஆண்டவருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து, நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

இப்புத்தகப் பணியில் எனக்கு உதவிய எவரையும் நான் மறக்க இயலாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதங்களில் மிகப்பெரிய உதவிகளைச் செய்ததற்காக ஆண்டவருக்குள் நன்றி செலுத்துகிறேன்.

குறிப்பாக:-

அறிவர். Dr. எபி சாமுவேல், தமிழ்நாடு செயலாளர், இந்திய வேதாகம சங்கம்

Rev. P. டேனியல் செல்லத்துரை, ஆயர் CSI

Rev. P. ஸ்டீபன் ஜெப மாரிஸ், ECI

Rev. A.S. மார்ட்டின், ECI

Rev. ஜெயக்குமார், ECI

திரு. யோபு, Computer Engineer, HBI

திரு. ராஜன், மிஷனெரி, வேங்கோடு

திரு. வால்டர், Transform India Mission

திரு. இன்பவாணன், தூத்துக்குடி

மற்றும் இரவும் பகலும் என்னுடன் கூட இருந்து, இப்புத்தகத்தை சிறந்த முறையில் கம்ப்யூட்டரில் டைப் செய்த சகோதரர் மாறன் அவர்களுக்கும் என் நன்றிகள்.

இப்புத்தகத்தை திருச்சபைகளில் அறிமுகப்படுத்திய போதகர்களுக்கும், நண்பர்களுக்கும் என் நன்றிகள்.

இதனைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்து எனக்குப் பெரும் உதவிகள் செய்து வரும், இம்பீரியல் கிராபிக்ஸ் அச்சக உரிமையாளர் திரு. அருளானந்தம் அவர்களுக்கும், உடன் பணியாளர்களுக்கும் என் நன்றிகள்.

இதனை வாங்கி உபயோகப்படுத்தும் உங்களுக்கும், பிறருக்கு அறிமுகப்படுத்தும் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

கிறிஸ்துவின் சமாதானம் உங்களோடிருப்பதாக.

– வேதாகம நண்பன்

Scanned with CamScanner

ஜனவரி

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	பேராயர் V. S. அசரியா	1874 – 1945	19
2	புனித பேசில்	330 – 379	20
3	டேமியன்	1840 – 1889	21
4	ஸ்தேவான்	–	22
5	வெலிஸ் மான்ஸ்	1498 – 1527	23
6	எமில் ரிச்சர்டு	–	24
7	பிரான்சிஸ் பெனலன்	1651 – 1715	25
8	ஜிம் எலியட்	1927 – 1956	26
9	ஜார்ஜ் பாக்ஸ்	1624 – 1691	27
10	ஐசக் ஜோக்ஸ்	1607 – 1646	28
11	மேரி மெக்லீன்	1855 – 1943	29
12	ஆல்ரட்	1110 – 1167	30
13	மேரி ஸ்லேசர்	1848 – 1915	31
14	தேவசகாயம் பிள்ளை	1712 – 1752	32
15	மார்ட்டின் லூத்தர் கிங்	1929 – 1968	33
16	ராபர்ட் டி நொபிலி	1577 – 1656	34
17	கேத்தரின் பூத்	1829 – 1890	35
18	ஏமி கார்மிக்கேல்	1867 – 1951	36
19	ஆன்ட்ரு முர்ரே	1828 – 1917	37
20	புனித செபாஸ்டின்	– 288	38
21	M. S. ஏசுதாசன்	1917 – 1992	39
22	பெப்ரீஷியஸ்	1711 – 1791	40
23	கிரஹாம் ஸ்டெயின்ஸ்	1941 – 1999	41
24	புனித இக்னேஷியஸ்	50 – 107	42
25	புனித பவுல்	– 68	43
26	மாற்கு டேனியல் பாண்டேன்	1923 – 1989	44
27	ஆரிஜன்	182 – 251	45
28	ஜான் ஜி. பேட்டன்	1824 – 1907	46
29	ஸ்டான்லி ஜோன்ஸ்	1884 – 1973	47
30	லெஸ்லி நியூபிகின்	1909 – 1998	48
31	சார்லஸ் ஸ்பர்ஜன்	1834 – 1892	49

Scanned with CamScanner

பிப்ரவரி

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	டைட்டஸ் கோன்	1801 – 1882	50
2	எலிசா ஆக்னியூ	1807 – 1883	51
3	H.A. கிருஷ்ணப் பிள்ளை	1827 – 1900	52
4	ஜான் ரோஜர்ஸ்	1500 – 1555	53
5	பர்னபா	– 61	54
6	லூட்விக் நோம்மென்ஸன்	1834 – 1918	55
7	புனித லாரன்ஸ்	– 258	56
8	பெர்பெத்துவா	181 – 203	57
9	தாமஸ் உவாக்கர்	1859 – 1912	58
10	ஜோனத்தான் கோபோர்த்	1859 – 1936	59
11	G.U. போப்	1820 – 1908	60
12	அலெக்ஸாண்டர் டஃப்	1806 – 1878	61
13	ரீஸ் ஹவல்ஸ்	1879 – 1950	62
14	புனித சிரில்	376 – 444	63
15	அமந்தா ஸ்மித்	1837 – 1915	64
16	வேத மாணிக்கம்	– 1827	65
17	ரிச்சர்ட் உம்பிராண்ட்	1909 – 2001	66
18	ஹென்றி மார்ட்டின்	1781 – 1812	67
19	ஆபிரகாம் லிங்கன்	1809 – 1865	68
20	பிரடரிக் டக்ளஸ்	1818 – 1895	69
21	எரிக் லிட்டல்	1902 – 1945	70
22	ஜான் கூட்டன்பர்க்	1398 – 1468	71
23	போலிகார்ப்	69 – 156	72
24	கிளாடிஸ் அயில்வார்டு	1902 – 1970	73
25	ஜார்ஜ் விசார்ட்	1513 – 1548	74
26	தெர்த்துலியன்	160 – 225	75
27	கான்ஸ்டன்டைன்	272 – 337	76
28	மார்ட்டின் பியூசர்	1491 – 1551	77
29	யாக்கோபு	– 62	78

Scanned with CamScanner

மார்ச்

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	ஜான் டி பிரிட்டோ	1647 - 1693	79
2	ஜான் வெஸ்லி	1703 - 1791	80
3	குளோரிந்தாள்	- 1806	81
4	பிலிப்பு	-	82
5	கிரகோரி	329 - 389	83
6	Rev. ஞானமுத்து	1816 - 1888	84
7	தாமஸ் அக்வினாஸ்	1225 - 1274	85
8	ஜேம்ஸ் கால்வர்ட்	1813 - 1892	86
9	டாமினிக் சாவியோ	1842 - 1857	87
10	ஜார்ஜ் முல்லர்	1805 - 1898	88
11	தீமோத்தேயு	-	89
12	ஃபிளேவியஸ் யோசிபஸ்	37 - 100	90
13	ஜேம்ஸ் ஹெப்பர்ன்	1815 - 1911	91
14	மாற்கு	- 68	92
15	இன்கிரிட் கவுஸ்கி	- 1995	93
16	கடவுளின் யோவான்	1495 - 1550	94
17	புனித பேட்ரிக்	387 - 493	95
18	ஜேம்ஸ் ரென்ஸ்விக்	1662 - 1688	96
19	கிரிண்ட்லர்	1677 - 1720	97
20	இசபெல் கூன்	1901 - 1957	98
21	பெர்க்மான்ஸ்	1599 - 1621	99
22	ஜோனத்தான் எட்வர்ட்ஸ்	1703 - 1758	100
23	அடா லீ	1856 - 1948	101
24	ஃபேனி கிராஸ்பி	1820 - 1915	102
25	லூத்தர் ரைஸ்	1783 - 1836	103
26	ரிச்சர்ட் ஆலன்	1760 - 1831	104
27	வில்லியம் ஹண்ட்டர்	1536 - 1555	105
28	அந்தோணி	251 - 356	106
29	இசபெல்லா தோபர்ன்	1840 - 1901	107
30	புனித சிப்பிரியன்	200 - 258	108
31	பிரான்சிஸ் அஸ்பரி	1745 - 1816	109

Scanned with CamScanner

ஏப்ரல்

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	சாலமோன் ஹின்ஸ்பர்க்	1867 - 1927	110
2	சாமுவேல் சுவோமர்	1867 - 1952	111
3	பிஷப் ஹீபர்	1783 - 1826	112
4	அம்புரோஸ்	330 - 397	113
5	பண்டித ராமாபாய்	1852 - 1922	114
6	ஜெராண்ட் மஜெல்னா	1726 - 1755	115
7	தாவீது சுந்தரானந்தம்	1772 - 1806	116
8	ஜான் ஃபாக்ஸ்	1516 - 1587	117
9	டைட்ரிச் போன்ஹோபர்	1906 - 1945	118
10	வில்லியம் பூத்	1829 - 1912	119
11	டேவிட் சீஸ்பெர்கர்	1721 - 1808	120
12	அதோனிராம் ஜட்சன்	1788 - 1850	121
13	புனித மார்ட்டின்	316 - 397	122
14	ஜான் ஹார்ப்பர்	1872 - 1912	123
15	காரி டென் பூம்	- 1983	124
16	ராக்லாந்து	1815 - 1858	125
17	நாராயணன் வாமன் திலக்	1861 - 1919	126
18	I.R.H. ஞானதாசன்	1915 - 1973	127
19	சவரிராயன் ஏசுதாசன்	1882 - 1969	128
20	டேவிட் பிரெய்னார்டு	1718 - 1747	129
21	ஆன்செலம்	1033 - 1109	130
22	லூக்கா	- 84	131
23	நான்காம் பிரடெரிக்	1671 - 1730	132
24	வின்சென்ட் தெ பால்	1581 - 1660	133
25	ஜான் ஹன்ட்	- 1848	134
26	லாசரு	-	135
27	மார்காஷியஸ்	1852 - 1908	136
28	வெல்லஸ்லி பெய்லி	1846 - 1937	137
29	ஜார்ஜ் எஸ். வேதநாயகம்	1868 - 1933	138
30	மைல்ட்ரெட் கேபிள்	1878 - 1952	139

Scanned with CamScanner

மே

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	டேவிட் லிவிங்ஸ்டன்	1813 - 1873	140
2	அதநேஷியஸ்	293 - 373	141
3	யாக்கோபு அல்பேயு	-	142
4	மோனிகா	331 - 387	143
5	பீட்டர் பெர்சிவல்	-	144
6	வில்லியம் கௌடி	1857 - 1922	145
7	கால்டுவெல்	1814 - 1891	146
8	அகஸ்டின்	354 - 430	147
9	மேரி ஜோன்ஸ்	1784 -	148
10	தீத்து	-	149
11	மார்ட்டின் தெ போரஸ்	1579 - 1639	150
12	சாமுவேல் மாரீஸ்	1872 - 1893	151
13	டேவிட் ஹில்	1840 - 1896	152
14	மத்தியா	- 80	153
15	இராபர்ட் சிங்களேயர்	1883 - 1946	154
16	பிலிப்பு	-	155
17	சா. பரமானந்தம் ஐயர்	1873 - 1960	156
18	போப் 2ம் ஜான்பால்	1920 - 2005	157
19	சின்ன யோவான்	339 - 405	158
20	ஜோசப் வெஸ்கி	1680 - 1747	159
21	ராபர்ட் மர்ரே மச்செயின்	1813 - 1843	160
22	சாலமோன் துரைசாமி	1917 - 1992	161
23	ஸவர்ணரோலா	1452 - 1498	162
24	ஐடா ஸ்கடர்	1870 - 1960	163
25	பில்லி சண்டே	1862 - 1935	164
26	சின்செண்டார்ப் பிரபு	1700 - 1760	165
27	சாமுவேல் பவுல் ஐயர்	1844 - 1900	166
28	புனித பெனடிக்ட்	480 - 543	167
29	வாட்ச்மேன் நீ	1903 - 1972	168
30	சாமுவேல் பாக்கிய நாதன்	-	169
31	ஜோன் ஆப் ஆர்க்	1412 - 1431	170

Scanned with CamScanner

ஜூன்

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	பில்லி பிரே	1794 – 1868	171
2	அலெக்ஸாண்டர் சில்வர்	1883 – 1954	172
3	ஹட்சன் டெய்லர்	1832 – 1905	173
4	ஜே.பி. ராட்லர்	1749 – 1836	174
5	பானிபெஸ்	680 – 755	175
6	ஜார்ஜ் வில்லியம்ஸ்	1821 – 1905	176
7	தாமஸ் மூர்	1478 – 1535	177
8	ஸ்மித் விக்கிள்ஸ் வொர்த்	1859 – 1947	178
9	கொலம்பா	521 – 597	179
10	அலெக்ஸாண்டர் மெக்கே	1849 – 1890	180
11	ஜான் சுங்	1901 – 1944	181
12	சவாரா குரியாகோஸ்	1805 – 1871	182
13	லோத்தி மூன்	1840 – 1912	183
14	ஷீ மேயு	1873 – 1954	184
15	ஜேம்ஸ் சால்மர்ஸ்	1841 – 1901	185
16	கானானியனாகிய சீமோன்	– 104	186
17	கிறிஸ்டோபர் மோசஸ்	1943 – 1983	137
18	தாமஸ் கிராண்மர்	1489 – 1556	188
19	எபன் அசரியா	1932 – 1987	189
20	டேவிட் செல்லப்பா	1905 – 1964	190
21	புனித டொமினிக்	1170 – 1221	191
22	ஜான் ஃபிஷர்	1469 – 1535	192
23	கிறிஸ்டின் பிரடரிக் ஸ்வார்ட்ஸ்	1726 – 1798	193
24	சிலுவையின் யோவான்	1542 – 1591	194
25	பால் சுந்தரம் கடம்பவனம்	1887 – 1980	195
26	P. சாமுவேல்	1922 – 2005	196
27	எட்வர்ட் கொர்நேலியு	1831 – 1916	197
28	ஜான் ஹோல்ம்ஸ்	1866 – 1934	198
29	புனித பேதுரு	– 67	199
30	ஜஸ்டின் மார்ட்டையர்	100 – 167	200

Scanned with CamScanner

ஜூலை

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	ஜான் ஹைறடு	1865 - 1912	201
2	சார்லஸ் தெ ஃபூக்கோ	1858 - 1916	202
3	தோமா	- 72	203
4	பக்த்சிங்	1903 - 2000	204
5	புருனோ	1030 - 1101	205
6	ஜான் ஹஸ்	1369 - 1415	206
7	பேட்டன்	1891 - 1970	207
8	பால் பிராண்ட்	1914 - 2003	208
9	சீகன் பால்கு	1682 - 1719	209
10	ககாவா	1888 - 1960	210
11	ஆலன் கார்டினர்	1794 - 1851	211
12	மத்தேயு	-	212
13	ஜான் பிளெச்சர்	1729 - 1785	213
14	டொனால்ட் மெக்காவரன்	1897 - 1990	214
15	ஜான் ஆண்டர்சன்	1805 - 1855	215
16	C.T. ஸ்டட்	1862 - 1931	216
17	A.M. ஆலிஸ்	-	217
18	அகஸ்டின் சாலின்ஸ்	1914 - 1985	218
19	ஹென்றி புளுச்சோவ்	1677 - 1746	219
20	நவமணி அன்னாபாய்	1935 - 2006	220
21	ஸ்டீபன் நீல்	1900 - 1984	221
22	பிலிப்பு நேரியார்	1513 - 1595	222
23	கிறிஸ்மஸ் எவான்ஸ்	1766 - 1838	223
24	ஜான் நியூட்டன்	1725 - 1807	224
25	யாக்கோபு	- 44	225
26	K.S. ஆபிரகாம்	1915 - 1978	226
27	ஜான் கெடி	1815 - 1872	227
28	ஹார்வுட் ரா	1871 - 1905	228
29	பொன். இலாசரசு	1947 - 2006	229
30	அனி ஆம்ஸ்ட்ராங்	1850 - 1938	230
31	இக்னேஷியஸ் லயோலா	1491 - 1556	231

Scanned with CamScanner

ஆகஸ்டு

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	இராபர்ட் மாரீசன்	1782 - 1834	232
2	யோவான்	- 101	233
3	பிரான்சிஸ் அசிசி	1181 - 1226	234
4	ஜார்ஜ் ஒயிட்பீல்டு	1714 - 1770	235
5	ரோலண்ட் பின்க்காம்	1872 - 1942	236
6	சூசன்னா	1669 - 1742	237
7	மரியான் உபதேசியார்	-	238
8	ரிங்கல் தௌபே	1770 -	239
9	யூதா	-	240
10	ஜான் டக்கர்	1792 - 1873	241
11	ஜான் ஹென்றி நியூமேன்	1801 - 1890	242
12	கார்ல் பேக்கர்	1873 - 1945	243
13	பிளாரன்ஸ் நைட்டிங்கேல்	1820 - 1910	244
14	சிம்போராசா	-	245
15	பேராயர் சர்ஜென்ட்	1815 - 1889	246
16	ஜான் போஸ்கோ	1815 - 1888	247
17	வில்லியம் கேரி	1761 - 1834	248
18	சி.எஸ். பாயல்	1493 - 1973	249
19	சி.ஐ. ஸ்கோபீல்டு	1843 - 1921	250
20	சார்லஸ் பின்னி	1792 - 1875	251
21	ஜெசிமன் பிராண்டு	- 1928	252
22	ஞா. சாமுவேல்	-	253
23	பர்த்தொலோமேயு	- 68	254
24	வில்லியம் வில்பர்போர்ஸ்	1759 - 1833	255
25	சார்லஸ் மீட்	1792 - 1873	256
26	கிளாரா ஸ்வைன்	1834 - 1910	257
27	ராபர்ட் ஏனன்	1834 - 1867	258
28	டி. சாங்கி	1840 - 1908	259
29	சந்தியாகு	-	260
30	நேட் செயின்ட்	1923 - 1956	261
31	ஜான் பன்யன்	1628 - 1688	262

Scanned with CamScanner

செப்டம்பர்

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	பிஷப் ஹீப்பர்	1495 - 1555	263
2	ஜான் ஸ்கடர்	-	264
3	சாது சுந்தர் சிங்	1889 -	265
4	கால்வின் ஃபேர்பாங்க்ஸ்	-	266
5	அன்னை தெரசா	1910 - 1997	267
6	கர்த்தார் சிங்	-	268
7	வேதநாயகம் சாஸ்திரியார்	1774 - 1864	269
8	வீர சூரியா	-	270
9	மேரி பிஷ்ஷர்	1623 - 1698	271
10	தாமஸ் டீ க்	1808 - 1892	272
11	குவின்டின்	- 287	273
12	நீலகந்த கோரே சாஸ்திரி	- 1895	274
13	மாலா மொய்	1863 - 1953	275
14	ஜான் கிறிஸ்சொஸ்தம்	349 - 407	276
15	ஆன்ட்ரு ஃபுல்லர்	1754 - 1815	277
16	வில்லியம் கேமரான் டவுன்சென்ட்	1896 - 1982	278
17	இராபர்ட் எ. தாமஸ்	- 1866	279
18	எரேமியா மெக்குலே	1839 - 1884	280
19	ஜ. ஜே. ஜயாத்துரை	1890 - 1973	281
20	ராபர்ட் ஜாப்ரி	1873 - 1945	282
21	மேரி மொஃபட்	1795 - 1871	283
22	பாப் பியர்ஸ்	1914 - 1976	284
23	சி.எப். ஆன்ட்ருஸ்	1871 - 1940	285
24	ஜான் எலியட்	1604 - 1690	286
25	மட்சுக்கோ	-	287
26	மாசா ஹிசா யுமுரா	1857 - 1925	288
27	வில்லியன் டிரேஸர்	1887 - 1961	289
28	மார்வின் எக்	-	290
29	ஜார்ஜ் கிரென்ஃபெல்	1849 - 1906	291
30	ஜெரோம்	347 - 420	292

அக்டோபர்

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	ஆன் ஜட்சன்	1789 - 1826	293
2	ஹென்றி நாட்	1774 - 1844	294
3	நீலகண்ட சுப்பையா தாஸ்	-	295
4	மெனோ சைமன்ஸ்	1496 - 1561	296
5	மெல் டிராட்டர்	1870 - 1940	297
6	வில்லியம் டிண்டேல்	1495 - 1536	298
7	பிபியானா	-	299
8	பெஞ்சமின் சுல்ஸ்	1688 - 1760	300
9	ராபர்ட் லாஸ்	1851 - 1934	301
10	டான் பீச் பிராட்லி	1804 - 1873	302
11	ஸ்விங்ளி	1484 - 1531	303
12	எப்பா	- 683	304
13	தாமஸ் பெக்கட்	1117 - 1170	305
14	மாக்ஸிமில்லியன் கோல்பே	1894 - 1941	306
15	பீட்டர் கிளேவர்	1580 - 1654	307
16	லாட்டிமர்	- 1555	308
17	மரியா டக்கர்	1821 - 1893	309
18	ஜேம்ஸ் கில்மோர்	1843 - 1891	310
19	சார்லட் எலியட்	1789 - 1871	311
20	கிலெமெந்து	-	312
21	ஜேம்ஸ் ஹாப்	1789 - 1847	313
22	பீட்டர் ஃபேபர்	1506 - 1569	314
23	சாமுவேல் மார்ஷ்டன்	1764 - 1838	315
24	தாமஸ் கெம்பர்	-	316
25	எம்மா ஒயிட்மோர்	- 1931	317
26	புனித ஜார்ஜ்	- 300	318
27	ஜான் கால்வின்	1509 - 1564	319
28	கியர்னாந்தர்	1710 - 1788	320
29	ஜேம்ஸ் ஹன்னிங்டன்	1847 - 1885	321
30	ஆவிலா தெரசா	1515 - 1582	322
31	மார்ட்டின் லூத்தர்	1483 - 1546	323

Scanned with CamScanner

நவம்பர்

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	வில்லியம் பார்டன்	1887 - 1913	324
2	ஹென்றி பவர்	1813 - 1889	325
3	ஜான் ஆர். மாட்	1865 - 1955	326
4	பிரான்சிஸ் ஸ்கேஃபர்	1912 - 1984	327
5	ரேனியஸ்	1790 - 1838	328
6	மேத்யூ ரிசி	1552 - 1610	329
7	ஜே. டி. ஜெனிக்கே	1759 - 1800	330
8	ஆஸ்வால்டு ஜே. ஸ்மித்	1889 - 1986	331
9	கேம்பிரிட்ஜ் எழுவர்	-	332
10	ஜான் தாமஸ்	1807 - 1870	333
11	லோத் கேரி	1780 - 1828	334
12	மேய்ப்பர் சுந்தரம்	1909 - 1989	335
13	ஜாக்வாஸ் மார்குட்டி	1637 - 1675	336
14	கெரிக்	1742 - 1803	337
15	ஆஸ்வால்டு சேம்பர்ஸ்	1874 - 1917	338
16	எட்மண்ட்	- 1242	339
17	நிக்கோலஸ் ரிட்லி	- 1555	340
18	எல்.பி. லார்சன்	1862 - 1940	341
19	வின்செண்ட் ஃபெரர்	1350 - 1419	342
20	ஜான் வில்லியம்ஸ்	1796 - 1839	343
21	பிஷப் டேனியல் கோரி	1778 - 1837	344
22	சி. எஸ் லூயிஸ்	1898 - 1963	345
23	சாராள் பிளவர் ஆடம்ஸ்	1805 - 1848	346
24	ஜான் நாக்ஸ்	1514 - 1572	347
25	ஐசக் வாட்ஸ்	1674 - 1748	348
26	ஹெலன் ரோஸ்வியர்	1925 -	349
27	ஜே.பி. கோலாஃபு	1710 - 1790	350
28	ஜோசப் முகாசா	1860 - 1885	351
29	மார்க்கஸ் ஒயிட்மேன்	1802 - 1847	352
30	அந்திரேயா	- 70	353

டிசம்பர்

தேதி	பெயர் பட்டியல்	ஆண்டு	பக்கம்
1	கார்ல் குட்சலாப்	1803 – 1851	354
2	சாராள் டக்கர்	–	355
3	பிரான்சிஸ் சேவியர்	1506 – 1552	356
4	எலிசபெத் ஃபிரை	1780 – 1845	357
5	ஜோசுவா மார்ஷ்மேன்	1768 – 1837	358
6	புனித நிக்கோலஸ்	– 343	359
7	மரியா டையர் டெய்லர்	1837 – 1870	360
8	ஜான் ஸ்டாம், பெற்றி ஸ்டாம்	– 1934	361
9	சார்லஸ் பிரைஸ் ஜோன்ஸ்	1865 – 1949	362
10	ஜார்ஜ் பாரோ	1803 – 1881	363
11	சி.எச். மோனஹன்	1871 – 1963	364
12	சார்லஸ் வெஸ்லி	1707 – 1788	365
13	ஐவன் புரோக்னாவ்	– 1924	366
14	பிரான்ஸ் ஹவர்கேள்	1836 – 1879	367
15	ஏ.பி. சிம்ப்ஸன்	1843 – 1919	368
16	ஹென்றி ஸ்பால்டிங்	1803 – 1874	369
17	தியோடர் பிசா	1519 – 1605	370
18	ஈவ்லின் பிராண்ட்	1879 – 1974	371
19	லியோனார்டு ரேவன்ஹில்	1907 – 1994	372
20	வில்லியம் மில்லர்	1782 – 1849	373
21	தாமஸ் பர்னார்டோ	1845 – 1905	374
22	டி.எல். மூடி	1837 – 1899	375
23	பெர்த்தா ஸ்மித்	1888 – 1988	376
24	NMS நிறுவனர்கள்	–	377
25	இயேசு கிறிஸ்து	–	378
26	மேரி லிவிங்ஸ்டன்	1820 – 1868	379
27	இராபர்ட் மொஃபெட்	1795 – 1883	380
28	ஆரோன்	1698 – 1745	381
29	இ.எம். பவுண்ட்ஸ்	1835 – 1913	382
30	ஈவன் ராபர்ட்ஸ்	1878 – 1951	383
31	ஜான் விக்ளிப்	1320 – 1384	384

Scanned with CamScanner

பேராயர் V.S. அசரியா

1874 - 1945

தீர்மானங்கள் திருப்புமுனையாகட்டும்

அது ஒரு மாபெரும் மிஷனெரி மாநாடு. அலைகடல் என மக்கள் கூட்டம். மான்கள் நீரோடைகளைத் தேடித் தவிப்பது போல, பேராயர் V.S.அசரியாவின் இறை வார்த்தைக்காக மக்கள் ஆவலாய் காத்துக் கொண்டிருந்தனர்.

இறைச் செய்தியின் இனிய நேரம். வேகமாகப் பறக்கும் அம்புகளைப் போல இறை பணியின் அவசியத்தையும், தேவைகளையும் அனைவர் உள்ளத்திலும் பாயச் செய்தார் அசரியா. இறைப் பணியின் வாஞ்சைப் பற்றி எரிந்த போது...

"மிஷனெரிப் பணிக்காக அர்ப்பணிப்போர் உங்களில் எத்தனை பேர்? அவர்கள் முன்னே வரலாம்." அசரியா அறைகூவல் ஒன்றை விடுத்தார்.

திடீரென்று புயலெனச் சீறி எழுந்தான் ஓர் வாலிபன். "நீங்களே ஏன் ஒரு மிஷனெரியாகச் செல்லக்கூடாது?"

அந்தோ! அசரியாவின் உள்ளம் உடைந்தது. கதறிக் கதறி அழ ஆரம்பித்தார். இயேசுவின் கைகளில் இதயத்தைக் கொடுத்தார். தோர்ணக்கல் என்ற பகுதியில் அவர் தன் கால்களைப் பதித்தார். அது கர்த்தரின் பூமியாகக் கனிந்தது. 8,000 கிறிஸ்தவர்கள் என்ற எண்ணிக்கை 2,26,000 ஆக உயர்ந்தது.

'மாபெரும் மிஷனெரி,' 'மிஷனெரி இயக்கத்தின் விடிவெள்ளி,' 'முதல் இந்திய பேராயர்' என்று போற்றப்பட்ட இவர் IMS, NMS,CSI போன்ற மாபெரும் நிறுவனங்கள் உருவாக அடித்தளமிட்டார்.

அஞ்சா நெஞ்சத்துடன் அயராது உழைத்தவர்; கிறிஸ்துவின் உத்தமத் தொண்டன்; கிறிஸ்தவர்களின் வழிகாட்டி; அர்ப்பணிப்பின் மகுடம் என்ற பெரும் புகழுடைய V.S.அசரியா, இதே நாள், ஜனவரி 1ல் 1945ம் ஆண்டு கோதுமை மணியானார்.

அன்பரே! இப்புத்தாண்டில் உமது தீர்மானம் சிறந்ததாக அமையட்டுமே!

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பிறர் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதை விட அந்தப் பணியை நீங்களே ஏன் செய்யக் கூடாது?

– பண்டித ராமாபாய்

குயவனின் கரங்களில் : அன்புள்ள ஆண்டவரே! என்னையே உம் கரங்களில் தத்தம் செய்கின்றேன்.

தியானத்திற்கு : ஆதி. 1-2, சங்.1-2, மத்.1-2.

இன்று...

மண்ணில் : 17.08.1874	பேராயர் அசரியா நினைவு தினம்
விண்ணில் : 01.01.1945	ஸ்விங்ளி 1484
ஊர் : வெள்ளாளன் விளை	வின்சென்ட் டெய்லர் 1887
நாடு : இந்தியா	புனித பேசில் 379
தரிசன பூமி : தோர்ணக்கல், இந்தியா	நாதன் பிரவுன் 1886
	கிளாடிஸ் அயில்வார்டு 1970

புனித பேசில்

330 - 379

பெருமை நமக்கு வேண்டாம்

பதவியும் பட்டங்களும் பெறுவது மட்டுமா வாழ்க்கை? இல்லை. இல்லவே இல்லை.

சிலர் பதவி வந்ததும் தங்களையும் மறப்பர். தங்களைச் சுற்றி உள்ளோரையும் மறந்து விடுவர்.

இப்படிப்பட்ட உலகத்தில் ஓர் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்துக் காட்டியவர் தான் பேசில். கல்வியில் சிறந்தவர்; கற்றுத்தந்தவர்களையும் மிஞ்சியவர்; பேச்சிலே வல்லுநர்; நட்புப் பாராட்டுவதில் நல்லுள்ளம் கொண்டவர். சொற்பொழிவாற்றுவதில் சிறந்தவராகக் காணப்பட்டதால் நீதிமன்றத்தில் வழக்கறிஞரானார். புகழும் செல்வமும் அவரைத் தேடி வந்தன. பலபதவிகளும் அவரை நாடி வந்தன. நண்பர்கள் வட்டம் நாலாபுறமும் இருந்து குவிந்தது. பரி.கிரகெரி என்பவர் மட்டுமே இவரின் உண்மை நண்பராக உறுதுணையானார்.

பதவியில் நம்மைப் பறிகொடுத்துவிட்டால் பின்னர் பரிதாபம்தான். பேசில் இதை உணர்ந்தார். பெருமை என்னும் சோதனைக்கு உள்ளாவதை வெறுத்தார். தன்னைத் தேடி வந்த பதவிகள் அனைத்தையும் உதறி கூட தள்ளினார். தன் செல்வமனைத்தையும் எடுத்து, தரித்திரர், நோய்வாய்ப்பட்டோர் போன்றவர்களைப் பராமரிக்கவும், ஆண்டவரின் அன்பு, தியாகம் போன்றவைகளை எடுத்துரைக்கவும் பயன்படுத்தினார். அருட்பணிக்கே முதலிடம் கொடுத்தார்.

வழக்கறிஞர் தொழிலை விட்டு, துறவறம் மேற்கொண்டார். ஏழைகளை அரவணைத்து அவர்களுக்குப் பலவித உதவிகளையும் செய்தார். நாள்தோறும் இவரின் பிரசங்கத்தைக் கேட்க மக்கள் கூட்டம் கூடினர். மக்களுக்காகவே, சிறந்த போதகராய் மாறி, அவர்களின் ஆன்மீக வாழ்வை உயர்த்தினார். ஆயிரக்கணக்கானோர் மறுபிறப்படைந்தனர்.

அன்பரே! மக்களுக்காகவே வாழ்ந்த இம்மாமனிதரைப் போன்று சுயநலமில்லா வாழ்க்கை வாழ ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார்.
- பேதுரு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உலகத்தின் பெருமையை உதறித் தள்ளி
உந்தன் பணி செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 3-4, சங்.3-5, மத்.3-4.

இன்று...

மண்ணில் : 330

விண்ணில் : 01.01.379

ஊர் : சிசெரியா

நாடு : கப்பதோக்கியோ

தரிசன பூமி : சிசெரியா

பெஞ்சமின் ஹாப்ஸன் 1816

Scanned with CamScanner

டாமியன்

அர்ப்பணிப்பில் தான் ஆனந்தம் உள்ளது

1840 - 1889

பசிபிக் மகா சமுத்திரத்தில் ஹவாய் தீவுகள் கூட்டம். அதில் மொலாக்காய் என்பது சிறு தீவு. தென் பசிபிக் தீவில் தொழுநோய் பரவியபோது, தொழுநோயாளிகள் இத்தீவில்தான் தனிமையில் போடப்பட்டனர். அவர்கள் கவனிப்பாரற்று தங்கள் வாழ்வை இழந்தனர்.

மக்களால் கைவிடப்பட்டவர்கள், தாங்கள் கடவுளாலும் கைவிடப்பட்டோம் என்ற முடிவுக்கு வந்தனர். அவர்களுக்கு உதவி செய்யவும், அந்த தொழுநோயிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும் எவரும் முன்வரவில்லை. ஏனெனில் அத்தீவிற்குச் சென்றவர்கள் மீண்டும் தங்கள் நாட்டிற்கு வரக்கூடாது என்பது அரசாங்கக் கட்டளை.

1873ம் ஆண்டு துன்பத்தில் உழலும் மக்களுக்குத் துணைவனாக, துயர் துடைக்கும் நண்பனாக அம்மக்களைத் தேடிப் புறப்பட்டார் ஓர் இளைஞர். அவர்தான் ஜோசப் டி வெஸ்டர் என்ற இயற்பெயர் கொண்ட டாமியன். பலர் டாமியனைத் தடுத்தனர். ஆனால் டாமியனோ தன் தீர்மானத்தில் உறுதியானார். மொலாக்காய் தீவில் இறங்கிய உடன் அங்கு அவர் கண்ட காட்சிகளோ கொடூரங்கள்!

வாழ்வில் நம்பிக்கையில்லாமல் நடைப் பிணங்களாக, வியாதியின் கொடுமையினால் தாக்குண்டு, உடலெல்லாம் புண்களாக, சீழ் வடிந்த நிலையில் வாழ்ந்த மக்களுக்கு வாழ்வின் நம்பிக்கையைக் கொடுத்தார். வீதியில் அலைந்த மக்களுக்கு வீடுகள், மருத்துவமனைகள் கட்டினார். துன்பத்தில் அவர்களின் துணைவரானார்.

ஓர் நாள் தன் உடலில் கொதிநீர் பட்டபோது உணர்ச்சியற்ற நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அந்தோ! தொழுநோயாளிகளின் நண்பனுக்கும் தொழுநோய் தொற்றிக்கொண்டது. அன்று ஞாயிறு ஆராதனையில் "தொழுநோயாளியாகிய நம்மேல் கடவுள் அன்பாயிருக்கிறார்" என்று ஆண்டவரைப் புகழ்ந்தார். நோயின் கொடூரம் அவரை முற்றிலும் தாக்கவே 12 ஆண்டுகளாகத் தான் அன்பு பாராட்டி வந்த மக்களை விட்டு அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்தார். மக்கள் தங்கள் நண்பரை இழந்தனர்.

அர்ப்பணிப்பில் ஆனந்தம் கண்ட தந்தை டாமியன் இதே நாள் ஜனவரி 3ல் 1840ம் ஆண்டு பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் உங்களில் ஒருவனாக இதுவரை இல்லாமல் இருந்தேன். இப்பொழுதோ உங்களில் ஒருவனாக ஆகிவிட்டேன். - டாமியன்

குயவனின் கரங்களில் : இறைவா! டாமியனைப் போன்று, அர்ப்பணிப்புள்ள இருதயத்தை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : ஆதி. 5-6, சங்.6-8, மத்.5.

இன்று...

மண்ணில் : 03.01.1840

விண்ணில் : 15.04.1889

ஊர் : திரமெலு

நாடு : பெல்ஜியம்

தரிசன பூமி : மொலாக்காய் தீவு

டாமியன் பிறந்த தினம்

ஸ்டேன்லி ஜோன்ஸ் 1884

ஜேம்ஸ் கால்வர்ட் 1813

சவரா குரியாகோஸ் 1871

ஜெபிக்க :

Scanned with CamScanner

- 35

துணிந்தவருக்குத் துக்கமில்லை

ஒரு கிறிஸ்தவனை அழித்தால் ஓராயிரம் கிறிஸ்தவர்கள் எழும்புவார்கள் என்பதற்கு சாட்சியாக விளங்குபவரே ஸ்தேவான். கிறிஸ்தவ உலகின் முதல் இரத்த சாட்சி இவர். அன்று முதல் இன்றுவரை தங்களையே இரத்த சாட்சிகளாக அர்ப்பணிப்போர் எண்ணிக்கைக்கு அடங்காதவர்கள். 'இரத்த சாட்சிகளின் முன்னோடி' என்று இவரை அழைத்தால் அது சாலப்பொருந்தும்.

இவர் கிரேக்க மொழிப் பேசும் ஒரு யூதர். ஸ்தேவான் என்றால் 'முடி' அல்லது 'கிரீடம்' என்பது பொருள். பெயருக்கேற்றார் போல கிறிஸ்துவிடமிருந்து தனது மரணத்தின் மூலம் கிரீடத்தைப் பெற்றவர்.

எருசலேம் சபையில் செல்வாக்கு பெற்றவர். பந்தி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஏழு பேரில் முதன்மையானவர். கிரேக்க விதவைகளுக்கு அன்றாட உணவை கவனிக்கும் பணியைச் செய்து வந்தார். விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்த இவர், பரிசுத்த ஆவியின் நிறைவையும் பெற்றவர். ஆண்டவரிடமிருந்து அற்புத அடையாளங்களைச் செய்யும் வரத்தினைப் பெற்றிருந்தார்.

கிரேக்க மொழி பேசும் யூதருடைய ஆலயங்களில் "இயேசுவே மேசியா" என்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூறியதால் யூதர்களின் வெறுப்புக்கு ஆளானார். எனினும் தைரியத்தோடு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கித்தார். பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாக தூஷணம் பேசுகிறார் என்று குற்றம் சாட்டப்பட்டார். எனவே ஆலோசனைச் சங்கத்தாரின் முன்பு நிறுத்தப்பட்டார்.

ஸ்தேவானின் பதில்களால் எதிரிகள் ஆச்சரியமும், ஆத்திரமும் கொண்டனர். பல்லைக் கடித்தனர். பலவந்தம் பண்ண துடித்தனர். ஆனால், ஸ்தேவானோ தேவ தூதனைப் போல் காட்சியளித்தார். விசுவாச உறுதியுடன் பதிலளித்தார்.

யூதத் தலைவர்களின் கோபம் அதிகரிக்கவே கிறிஸ்துவின் தொண்டன் ஸ்தேவான் கல்லால் எறியுண்டு, இரத்த சாட்சியாக கர்த்தரின் மகிமையில் எடுத்துக் கொள்ளப்பட்டார். விசுவாச வீரன் 'இரத்த சாட்சிகளின் வித்து' ஆனார்.

அன்பரே, கிறிஸ்துவின் பணியில் இரத்த சாட்சியாகவும் மரிக்க நீங்கள் ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆண்டவரே இவர்கள் மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும்.

- ஸ்தேவான்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! துணிவுடன் உமக்குள் செயலாற்றவும், உமது அன்பைத் துணிவுடன் எடுத்துரைக்கவும் உதவிச் செய்யும்.

தியானத்திற்கு : ஆதி. 7-8, சங்.9-10, மத்.6.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : கி.பி. 34-35

ஊர் :

நாடு : எருசலேம்

தரிசன பூமி : எருசலேம்

ஜேம்ஸ் உஸ்ஸர் 1581

T. S. எலியட் 1965

ஜெபிக்க :

Scanned with CamScanner

பெலிஸ் மான்ஸ்

மீண்டும் பிறக்க வேண்டும்



1498 - 1527

வாழ்க்கையில் பல சட்ட திட்டங்கள் நமக்கு உண்டு. செய்யக்கூடியனவும், செய்யக் கூடாதவைகளும் இதில் அடங்கும். அவற்றில் சரியானவற்றை முறைப்படி செய்தால் மட்டுமே நம்முடைய வாழ்வு சிறப்பாக அமைய முடியும், அப்படித்தானே?

பெலிஸ் மான்ஸ் ஒரு சிறந்த கல்வியாளர். எபிரேயம், கிரேக்கம், லத்தீன் மொழிகளில் நிபுணர். ஸ்விங்கிளி என்ற சீர்திருத்தவாதியின் சீடனாகத் தன்னை இணைத்துக் கொண்டவர். சமுதாயத்தின் சீரழிவுகளைக் கண்டு அவைகளைத் திருத்தம் செய்யும் வேகமும் விவேகமும் உடையவர்.

சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களைக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கும் முறைகளைக் கண்டு கொதித்து எழுந்தார். தன் நண்பர் உடன் இணைந்து மக்களிடம் பல கேள்விகளை முன்வைத்தார். ஞானம் அடைந்த பின்னரே ஞானஸ்நானம் என்ற முறையை அறிமுகப்படுத்தினார். இதனால் திருச்சபைக்குள் சில பூசல்கள் வளர ஆரம்பித்தன. பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்காமல், அவர்கள் பெரியவர்களான பின்பே ஞானஸ்நானம் கொடுக்க சம்மதித்தனர். இதனால் திருச்சபையின் சட்ட திட்டங்களுக்கு உட்படாதவராக பெலிஸ் பலமுறை குற்றம் சாட்டப்பட்டார்; சிறையிலடைக்கப்பட்டார்; நியாய விசாரணையின்போது தண்டிக்கப்பட்டார். இதனால் புதிய சீர்திருத்த சபையைத் தோற்றுவித்தார். மக்கள் கூட்டம் இவரைப் பின் தொடர்ந்தது.

பெலிஸ் மான்ஸ் கலகக்காரர் என்ற முத்திரை குத்தப்பட்டு, ஜனவரி மாதம் இதே நாள் 1527ம் ஆண்டு கைகள் இரண்டும் ஒரு மரத்தில் கட்டப்பட்டவராக, படகு ஒன்றில் ஏற்றப்பட்டு, பனிக்கட்டிகள் நிரம்பிய தண்ணீருக்குள் உயிருடன் மூழ்கடிக்கப்பட்டார். மரண வேளையிலும் கிறிஸ்துவுக்குள் நிலையான உறுதிக் கொண்டவராக தன் தீர்மானத்தில் நிலைத்து நின்று, கிறிஸ்துவின் கரங்களில் தன்னை அர்ப்பணித்தார். இவர் எழுதிய பாடல்கள் இன்று அநேகரை கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியான ஞானஸ்நானத்தைப் பெற ஊக்கப்படுத்துகின்றன.

அன்பரே, கிறிஸ்துவுக்குள் நீங்கள் மறுபடியும் பிறந்துவிட்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான். – இயேசு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! அனுதினமும் நான் உமக்குள் பிறந்து உம்முடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள உதவி செய்யும்.

தியானத்திற்கு : ஆதி. 9-10, சங்.11-13, மத்.7.

இன்று...

மண்ணில் : 1498 **விண்ணில் :** 05.01.1527 **ஊர் :** சூரிச் **நாடு :** சுவிட்சர்லாந்து **தரிசன பூமி :** சுவிட்சர்லாந்து	பெலிஸ் மான்ஸ் நினைவு தினம் இராபர்ட் மாரிஸன் 1782 சிமியன் ஸ்டைலிட்டஸ் 459 எட்வர்ட் தி கன்பெஸர் 1066

ஜெபிக்க :

Scanned with CamScanner



தரிசனம் செயல்பட வேண்டும்

சிறுவிதை ஆலமரமாகும். அதிலிருந்து வரும் விழுதுகளும், எண்ணற்றவையாகத் தொடரும். ஆம்! சிறு தரிசனங்களும் அப்படியே! அவை விரிவடைந்துக் கொண்டே செல்லும். ஆண்டவர் தரும் தரிசனங்கள் நிச்சயமாகவே பெருகி, பலருக்குப் பயனைத் தரும்.

எமில் ரிச்சர்டு தரிசனத்தின் சொந்தக்காரரானார். இந்தியாவின் ஆதரவற்ற ஏழைக் குழந்தைகளுக்காக அவர் உள்ளம் ஏங்கியது. உடனே தன்னை அர்ப்பணித்தார். 1957ம் ஆண்டு, இந்தியாவின் ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு நிறுவனத்தை ஜெர்மனி தேசத்தில் ஆரம்பித்து இந்தியாவில் கால் பதித்தார். இன்று இந்தியாவில் 70க்கும் மேற்பட்ட இடங்களிலும், அயல்நாடுகளிலும் தன் கிளைகளைப் பரப்பி, பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை, வாழ்வின் உயர்ந்த நிலைக்கு உயர செய்து, ஆயிரமாயிரம் மாணவ, மாணவிகளின் வாழ்வில் ஒளியேற்றி, சுடர்விட்டு பிரகாசிக்கும் “கிறிஸ்டியன் மிஷன் சர்வீஸ்” (CMS) என்பதே அந்த நிறுவனம்.

உண்ண உணவிற்குக் குறைவில்லை; உடுக்க உடைக்குப் பஞ்சமில்லை; தங்கும் இடத்திற்கோ அளவில்லை; உலகியல் அறிவுக்கு பள்ளிகள்; உன்னதரைப் பற்றி அறிவதற்கு அனுதினமும் காலை மாலை தியானங்கள்; விசுவாசத்தில் நிலைக்க ஜெப ஜீவியங்கள். மொத்தத்தில் C.M.S. ஒரு “குட்டிப் பரலோகம்” என்றே சொல்லலாம்.

அர்ப்பணித்த அடியார்களால் ஆச்சரியமான தலைவர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர், உருவாகிக்கொண்டும் இருக்கின்றனர். எமில் ரிச்சர்டு இந்திய ஏழைகளின் கனவை நனவாக்கினார். பாதையறியா மக்களுக்குப் பாதையைக் காட்டி, அவைகளில் நடக்கும் பக்குவத்தையும் கொடுத்தார். பரலோக வாழ்வை இகத்தினில் கொடுக்க இதயத்தைத் திறந்தார். இவரால் இளம் இதயங்கள் இன்பமுடன் தங்கள் வாழ்வைத் தொடர்கின்றனர். எமில் ரிச்சர்டு என்ற விதை ஆலமரமானது.

இப்புத்தகத்தின் ஆசிரியர் இந்நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பரே! பிறர் வாழ்வை உயர்த்த உங்களின் சிறு முயற்சி என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள் - சாலமோன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மிடத்திலிருந்து பெரிய தரிசனங்களைப் பெற்று பெரிய காரியங்களைச் செய்ய என்னைப் பலப்படுத்தும்.



தியானத்திற்கு : ஆதி. 11-12, சங்.14-16, மத்.8.

இன்று...

மண்ணில் :	கிறிஸ்டியன் மிஷன் சர்வீஸ் துவக்க தினம்
விண்ணில் :	
ஊர் :	
நாடு : ஜெர்மனி	
தரிசன பூமி : இந்தியா	

ஜெபிக்க :

Scanned with CamScanner

பிரான்சிஸ் பெனலன்

சுயநலம் அழியட்டும்

1651 - 1715

தூய்மைக்கும், பக்திக்கும் புகழ்வாய்ந்தவர் பெனலன். இவர் ஓர் பிரதம அத்தியட்சர். கேயோ என்ற சீமாட்டியின் பக்தியுள்ள வாழ்க்கையினால் கவரப்பட்டு ஆன்மீகத்தில் அடியெடுத்து வைத்தார். சுயத்தை வெறுத்து கிறிஸ்துவுக்குத் தன்னை அர்ப்பணித்தார்.

இவர் எழுதிய புத்தகங்களும், பிரசங்கங்களும் மிகவும் பிரசித்திப் பெற்றவை. 14ம் லூயி என்ற அரசனுக்கு ஆன்மீக குருவாகப் பணியாற்றியவர். 'சுயத்தை வெறுத்தல்' என்னும் கோட்பாட்டை மிகவும் வலியுறுத்தியதால் அவ்வரசனின் வெறுப்புக்குள்ளானார். பெனலன் உயர்ந்த திறமையுள்ளவரெனினும், சிறு குழந்தையைப் போன்று கற்றுக் கொள்ளும் விருப்பமுடையவர். தாம் கற்றுக் கொண்டதைத் தெளிவாக எழுத ஆரம்பித்தார்.

"நமது நற்குணக் கிரியைகளில் நம்பிக்கையோ, திருப்தியோ கொள்ளும் மனநிலை சிலுவையில் அறையப்பட வேண்டும். ஏனென்றால், ஆன்மா தன் நற்காரியங்களைப் பார்த்து திருப்தி கொள்வது ஒருவித சுயநலமாகும். மேலும் தன்னால் நடைபெறும் உண்மை, ஒழுக்கம், விசுவாசம், இரக்கம் இவைகள் தன்னுடையவைகளென்று எண்ணிக் கொள்வதால், தேவன் தன்னை ஏற்றுக் கொள்வார் என்ற எண்ணங் கொள்கிறது.

இவ்வித எண்ணங்களுக்கு மரிப்பது அவசியமாயிருக்கிறது. இரகசியமாகக் கூட அவைகளில் திருப்தி கொள்ளாமல், அவைகளை நம்மில் நடப்பிக்கிற தேவன் பேரிலேயே திருப்தி ஏற்பட வேண்டும்".

இவ்வாறு கூறிய பெனலன் அகவாழ்வு பற்றி "பரிசுத்தவான்களின் கூற்று" "ஆண்களுக்குக் கடிதங்கள்" மற்றும் "பெண்களுக்குக் கடிதங்கள்" போன்ற நூல்களை எழுதி திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். திருச்சபை சீர்திருத்தம் அடைந்தது.

அன்பரே, உமது செயல்பாடுகள் அனைத்தும் ஆண்டவரையே சார்ந்துள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மெய் சந்தோஷம் தேவ சித்தத்தோடு ஐக்கியம் கொள்வதால் உண்டாகுமேயொழிய, புலன்களால் வரும் சந்தோஷம் சந்தோஷமல்ல. – பிரான்சிஸ் பெனலன்

துயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னிலுள்ள சுயநலம் அழிந்து பொதுநலம் பிறக்க உமது ஆவியை எனக்குத் தந்தருளும்.

தியானத்திற்கு : ஆதி. 13-14, சங்.17, மத்.9.

இன்று...

மண்ணில் : 06.08.1651 விண்ணில் : 07.01.1715 ஊர் : பெரிகோர்ட் நாடு : பிரான்ஸ் தரிசன பூமி : பிரான்ஸ்	பிரான்சிஸ் பெனலன் நினைவு தினம் ஹென்றி பிராஸ்ட் 1858

ஜெபிக்க :

ஜிம் எலியட்

1927 - 1956

மனிதர்களைத் தேடுங்கள்

தென் அமெரிக்காவிலுள்ள ஈக்வொடார் என்னும் இடம். 25 வயது நிரம்பிய ஜிம் எலியட் இளம் மிஷனெரியாக அங்கே போய் சேர்ந்தார். தன் நண்பர்கள் நால்வருடன் உற்சாகமாக ஊழியத்தை ஆரம்பித்தார்.

ஆகாஸ் என்ற இன மக்கள், அமெரிக்காவிலேயே இவர்கள்தான் கொடூரமானப் பழங்குடி மக்கள்; ஈவு இரக்கமற்றவர்கள்; கண்டதும் கொலைச் செய்யும் கொடூரர்கள்; பழி பாவங்களுக்கு அஞ்சாதவர்கள்.

ஜிம் எலியட் துணிச்சலான வீரர். நற்செய்தி அறிவிப்பதில் மிகுந்த நாட்டம் கொண்டவர். அதிலும் கொடூரமான பழங்குடி மக்களுக்குக் கிறிஸ்துவின் அன்பைக் கூறி, அம்மக்களை மாற்றம் பெறச் செய்வதில் அதிக ஆர்வத்துடன் காணப்பட்டார்.

காலமும் நேரமும் கைகூடியது. ஆகாஸ் இனப் பெண் ஒருவரின் மூலம் ஆகாஸ் மொழியில் சில வார்த்தைகளைக் கற்றுக் கொண்டார். அவர்களைப் பார்த்து பேசுவதற்கு ஆவல் கொண்டார். 1955ம் ஆண்டு 'ஆகாஸ் இயக்கக் குழு' ஆரம்பிக்கப்பட்டு, ஆகாஸ் இன மக்களுக்காகப் பாரத்தோடும், கண்ணீரோடும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன.

சிறு விமானம் ஒன்று தயாரானது. ஆகாஸ் இன காட்டுப் பகுதிக்குள் நுழைந்தனர். பரிசுப் பொருட்களை அள்ளி வீசினர். காட்டுவாசிகள் ஆவலுடன் அவற்றை அள்ளிச் சென்றனர்.

மறுநாள், ஆகாஸ் இன மக்களோடு நேரில் பேசிவிட ஆவலுடன் சென்றார் ஜிம் எலியட் உடன் நால்வர். அந்தோ! எப்படிச் சொல்வது? நற்செய்தி அறிவிக்கச் சென்ற நற்பண்பு மிக்கவர்களை எங்கிருந்தோ வந்த விஷ அம்புகள் தாக்கின. ஜிம் எலியட் இரத்த சாட்சியாய் அம் மண்ணில் வீழ்ந்தார். அத்துயரச் செய்தி காட்டுத் தீபோல் எங்கும் பரவியது.

இரண்டு ஆண்டுகளுக்குள் ஜிம் எலியட்டின் இலட்சியக் கனவு நிறைவேறியது. ஆகாஸ் இன மக்கள் மனந்திரும்பினர். ஜிம் எலியட்டைக் கொன்ற ஒருவனுடைய மகன் இன்று ஆகாஸ் திருச்சபையின் போதகராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

அன்பரே! கிறிஸ்துவின் பணியில் உங்களின் இழப்பு எதுவாக உள்ளது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தன்னால் இழக்க முடியாத ஒன்றைப் பெற்றுக் கொள்ள,
தன்னால் வைத்திருக்க முடியாத ஒன்றை
இழப்பவன் முட்டாளல்ல - ஜிம் எலியட்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மையறியாத மனிதர்களைத் தேடிச் சென்று, உமது அன்பின் செய்தியை எடுத்துரைக்க கிருபை செய்யும்.

தியானத்திற்கு : ஆதி. 15-16, சங்.18, மத்.10.

இன்று...

மண்ணில் : 08.10.1927
விண்ணில் : 08.01.1956
ஊர் : போர்ட்லாண்டு
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : ஈக்வொடார்

ஜிம் எலியட் நினைவு தினம்

மாக்ஸி மில்லியன் கோல்பே 1894

மாசாஹிசா யுமுரா 1925
கலிலியோ கலிலி
நேட் செயின்ட் 1956

ஜெபிக்க :

ஜார்ஜ் பாக்ஸ்



1624 - 1691

தேசத்தை அசையுங்கள்

குவேக்கர்கள் என்பவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? தீமையான காரியங்களுக்கு எதிராக, சாந்தமும் சகிப்பும் உடையவர்களாய் போராடக்கூடியவர்களே இவர்கள்!

அடிமை வியாபாரங்களை ஒழித்து, அடிமைகள் மக்களாக வாழ வழி செய்தவர்கள். யுத்தம் செய்வது கிறிஸ்தவ கொள்கைகளுக்கு மாறானது என்று கருதி துன்பமும் இம்சையும் சகித்தவர்கள். பெண்கள் சுதந்திரம் குறித்து புத்துணர்ச்சியை உண்டு பண்ணியவர்கள். பல சீர்திருத்தங்களை மக்கள் மனதில் ஏற்படுத்தியவர்கள் இவர்கள்!

ஜார்ஜ் பாக்ஸ், இவர்தான் இவ்வியக்கத்தின் தலைவர். தேசத்தின் தீமைகளுக்கு விரோதமாக இவர் பேச ஆரம்பித்தபோது மக்கள் இவரைக் கல்லால் அடித்தனர். சிறையில் அடைத்து சித்தரவதைச் செய்தனர். எனினும் தீமைகளுக்கு விரோதமாக சத்தியத்திற்கும், சுயாதீனத்திற்கும் பாடுபட்டபடியால் அனைத்தையும் பொறுமையுடன் சகித்தார்.

பல துன்பங்களின் மத்தியிலும் பாக்ஸ், நல்ல தரிசனங்களையும், ஆவிக்குரிய அனுபவங்களையும் பெற்றார். ஒருமுறை 14 நாட்கள் மரித்தவரைப் போல் ஒருவித நிலையையடைந்து விசேஷித்த ஆவியின் உற்சாகத்தினால் புதுபெலன் அடைந்தார். அவருக்குள் வந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. இவர் பிரசங்கம் செய்யும் போதெல்லாம் ஆவியானவர் வல்லமையாக ஜனங்களுக்குள்ளே கிரியைச் செய்தார். இவருடைய உபதேசம் ஆழ்ந்த ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களைக் கவர்ந்தபடியால், "சிநேகிதர்கள் சங்கம்" என்ற அமைப்புகளை பல சபைகளிலும் நிறுவினார்.

இங்கிலாந்திலும் பல தேசங்களிலும் சுற்றுப்பயணம் செய்து ஆயிரம் பதினாயிரம் மக்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தினார். மக்களையே கிறிஸ்துவின் ஆலயமாகக் கண்ட இவர் பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலை தினமும் தன் வாழ்வில் பிரதிபலித்தார்.

அன்பரே, உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் அபிஷேகத்தால் நிறையப்படுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஒரு மனிதனாவது மனுஷியாவது அப்போஸ்தலர்களைப் போல், வல்லமையுடையவர்களாய்க் காணப்பட்டால் அது தேசத்தை அசைக்கும் வல்லமையை உண்டாக்கும். – ஜார்ஜ் பாக்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தேசத்தை அசைக்கும் வல்லமையுள்ள ஊழியனாக என்னை உமது கரங்களில் எடுத்துப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : ஆதி.17-18, சங். 9-21, மத்.11.

இன்று...

மண்ணில் : 1624

விண்ணில் : 13.01.1691

ஊர் : லீஸ்ட்டர்ஷையர்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

ஜெபிக்க :

Scanned with CamScanner

1607 - 1646

ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிபவர்களே

ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிபவர்களே இறைத் தொண்டர்கள். இவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். துணிந்து செயல்படும் உறுதி கொண்டவர்கள். உடல் அழிந்தாலும் உள்ளங்களை கிறிஸ்துவின் பக்கம் திசை திருப்புபவர்கள்.

ஐசக் ஜோக்ஸ் பிரான்ஸ் தேசத்தில் பிறந்தவர். 10 வயதிலேயே இயேசு சபையில் தன்னை இணைத்துக் கொண்டவர். கொழுந்து விட்டு எரியும் சுவிசேஷத் தாகத்தை பிஞ்சு பருவத்திலேயே பெற்றிருந்தார். உடலையும், உள்ளத்தையும் உலகத்தின் பக்கம் திருப்பாமல் கிறிஸ்துவை நோக்கித் திருப்பினார்.

இயேசு சபையின் தலைமையிடத்திலிருந்து ஒரு அழைப்பு ஐசக் ஜோக்ஸைத் தேடி வந்தது. வட அமெரிக்காவுக்கு சுவிசேஷத்தை ஏந்திச் செல்ல வேண்டும் என்பதே அந்த அழைப்பு. உடனே தன்னை அர்ப்பணித்தார் ஐசக்.

நெடுநாள் பயணத்திற்குப் பின் 8 பேர் அடங்கிய மிஷனெரிக் குழு வட அமெரிக்காவை அடைந்தது. 'இராக்வா' என்ற காட்டுமிராண்டிகள் கூட்டம் இவர்களை மிகவும் கோபத்துடன் எதிர்கொண்டது. இடையூறுகளும், ஆபத்துகளும் ஏராளமாக ஏற்பட்டன. அப்பழங்குடி மக்களிடையே ஏற்படும் கொள்ளை நோய்களுக்கும், அசம்பாவிதங்களுக்கும் இவர்கள் மேல் குற்றம் சுமத்தப்பட்டது. ஐந்து ஆண்டுகள் கடினமாகப் பணி செய்தாலும் அக்காட்டுமிராண்டிகளால் அதிகம் சித்தரவதைகளுக்கு உள்ளாயினர்.

ஐசக் ஜோக்ஸ் இராக்வா காட்டுமிராண்டிகளால் பிடிக்கப்பட்டார். தசை தசையாக அவர் உடலை வெட்டினர். கைவிரல்களையும் வெட்டி அவர் கண் முன்பாகவேத் தின்றனர். திடீரென ஒருவன் கோடாரியால் வெட்ட, அவர் உடல் கீழே விழுந்தது. இரத்தம் பூமியில் சிந்தியது.

ஆயினும் அவர் கொல்லப்பட்ட ஓர் ஆண்டுக்குள் அங்கு 3,000 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். இச்செய்தி அவரின் பணியினை வெளிப்படுத்திக் காட்டுவதாகவும், நம்முடைய விசுவாச வாழ்வை பலப்படுத்துவதாகவும் அமைகின்றது.

அன்பரே! இரத்தசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து என்பது உண்மையல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்துவுக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தியவரே கிறிஸ்துவின் இரத்தத்தைப் பருகுவதற்கு தகுதியானவராவர்.

ஆயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம் நாமத்தினிமித்தம் இரத்தம் சிந்தவும் நான் ஆயத்தமாயிருக்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 19, சங்.22, மத்.12.

இன்று...

மண்ணில் : 10.01.1607
விண்ணில் : 18.10.1646
ஊர் : ஓர்லியான்ஸ்
நாடு : பிரான்ஸ்
தரிசன பூமி : வட அமெரிக்கா

ஐசக் ஜோக்ஸ் பிறந்த தினம்

இரத்த சாட்சிகளின் தினம்

லைமேன் பீச்சர் 1865
மேரி ஃமொபட் 1871
ஃபேபியன் 236

ஜெபிக்க :

மேரி மெக்லீன்

1855 - 1943

அறியாமை அகலட்டும்

சென்னையை அடுத்த சோழலிங்கபுரம், 64 புண்ணியத் தீர்த்தங்களும், 25க்கும் மேற்பட்ட வழிபாட்டுத் தலங்களும் உள்ள இடம். ஒரு காலத்தில் வைணவ ஆலய குருமார்களைப் பயிற்றுவித்த சமஸ்கிருத கலாசாலை இங்கு செயல்பட்டது. சமய வைராக்கியமுள்ள "சாதி இந்துக்களின் நகரம்" என்றே இதை அழைக்கலாம்.

இப்பகுதியில் அருட்பணி ஆற்றுவது என்பது எளிதல்ல. அக்காலக் கட்டத்தில் குழந்தைத் திருமணங்கள், சதி போன்றவை வழக்கத்தில் இருந்தன.

சிறு குழந்தைகளுக்குத் திருமணம் செய்தபின் கணவன் இறந்துபோனால் அக்குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளோ மிக மிகக் கொடூரம்!

குழந்தைகளின் வண்ண உடைகளைக் களைந்து, வெள்ளாடை உடுத்தி, பூவைக் களைந்து, பொட்டை அழித்து, மொட்டையடித்து, தாலியை அறுத்து, வீட்டிற்குள் ஒரு மூலையில் தள்ளிவிடுவார்கள். இவர்கள் வீட்டை விட்டு வெளியே வருவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்பட்டது.

மேரி மெக்லீன் இப்பெண்களுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தார். ஆஸ்திரேலியாவை விட்டு இந்தியா வந்தார். சோழலிங்கபுரத்தை கிறிஸ்துவின் நகரமாக மாற்றத் துணிந்தார். வீட்டில் அடிமைகளாக அடைபட்டுக் கிடந்த பெண்களுக்கு எழுத படிக்கக் கற்றுக் கொடுத்தார். 'ஜனனா மிஷன் பணி' என்ற அமைப்பின் மூலம் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார். வேதபாடங்களும், ஜெபங்களும் கற்றுக் கொடுக்கப்பட்டன. இயேசு கிறிஸ்துவை இம்மக்களின் நண்பராக்கினார்.

அன்புள்ளம் கொண்ட அன்னையாக, ஆஸ்திரேலிய பிரிஸ்பித்தேரியன் சபையின் முதல் அருட்பணியாளராக இந்தியா வந்த மெக்லீன், சிறந்த சேவகியாகவும், விசுவாசிகளுக்கு சிறந்த மாதிரியாகவும் வாழ்ந்தார். அவர்களின் சேவை இன்றும் தொடர்கிறது.

அன்பரே! அறியாமையால் அடைபட்டுக் கிடக்கும் மக்களை முன்னேற்ற முன் வருவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கர்த்தாவே, இதோ உம் திருப்பணிக்கு என்னை அர்ப்பணிக்கிறேன். என்னை இந்திய நாட்டிற்கு அனுப்பும்.
– மேரி மெக்லீன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் வாழும் சமுதாயத்தைச் சீர்திருத்த, என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : ஆதி.20-21, சங்.23-25, மத்.13.

இன்று...

மண்ணில் : 1855

விண்ணில் : 18.01.1943

ஊர் : பெரி

நாடு : ஆஸ்திரேலியா

தரிசன பூமி : இந்தியா

ஏலி ஸ்மித் 1857

ஜெபிக்க :

ஆல்ரட்

1110 - 1167

உறவுகள் புனிதமாகட்டும்

ஆடம்பரமான வாழ்வு; அரச மாளிகையில் உயர் பதவி; விரும்பியவைகளைப் பெற்றுக் கொள்ளும் அதிகாரம்; செல்வச் செழிப்பிற்கு எல்லை இல்லை; ஆனால் மனதிலோ நிம்மதி இல்லை.

ஆல்ரட் ஒரு போதகரின் மகனாகப் பிறந்ததால் இறைப்பணியின் தாக்கம் அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தது. கிறிஸ்துவைப் போன்று வாழ அவர் உள்ளம் ஏங்கியது. அரச மாளிகையின் அத்தனை ஆடம்பரங்களையும் தன்னை விட்டுத் தூக்கி எறிந்து விட்டு கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சிலுவை சுமக்கத் தயாரானார்.

வயது 24. இளமையிலும் அவர் அனுபவங்களில் முதுமையானார். தன்னை முற்றிலும் துறவியாக அர்ப்பணித்தார். குடும்ப சுகங்களைத் துறந்து தனிமையை நாடினார். எளிமையான வாழ்வை வாழ்ந்துக் காட்டினார். துறவி மடத்தின் தலைவரானார். முன்மாதிரியான வாழ்வுக்கு வழிகாட்டினார்.

தனிமனித உறவுகளை வலியுறுத்திய ஆல்ரட், கிறிஸ்துவின் அடியவர்கள் ஒருவருக்கொருவர் பரிசுத்தமான ஐக்கியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று போதித்தார். அரசர்களின் நன்மதிப்பைப் பெற்ற அவர், தான் சுற்றுப்பயணம் செய்து ஊழியம் செய்த ஒரு நாட்டின் அரசனையும் தன்னைப் பின்பற்றி வரச் செய்தார்.

எளிமையும், தியாகமும் இவரின் முக்கிய குணங்களாகும். தன்னுடைய பிரசங்கங்கள் அனைத்தையும் எழுதி மக்கள் பயன் பெற வெளியிட்டார். 'நண்பர்கள் ஐக்கியம்' என்ற சங்கத்தை ஆரம்பித்து, அநேக நண்பர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். 'ஆவிக்குரிய சகோதரத்துவம்' என்ற இவரது நூல் மிகச் சிறந்த படைப்பாகும். தீவிரவாதங்களும், சண்டைகளும், பொறாமைகளும் பெருகிவிட்ட இக்காலக் கட்டத்தில் சகோதரத்துவம் என்பது முக்கியமல்லவா? 'ஒருவருக்கொருவர் சகோதரர்களாக வாழ வேண்டும்' என்ற கிறிஸ்துவின் போதனையின்படி வாழ்ந்த ஆல்ரட் நமக்கு ஓர் சிறந்த முன்மாதிரி ஆவார்.

அன்பரே, உங்களைப் போல் பிறரையும் நேசிப்பதில் ஆர்வம் காட்டுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பகைவர் பெருகினால் தூய்மையாய் வாழ கவனமாயிரு. நண்பர்கள் பெருகினால் தூய்மையைத் தக்கவைக்க ஜாக்கிரதையாயிரு

– ஜீவ நீரோடை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எப்பொழுதும் மனத் தெளிவுடன் வாழ எனக்குக் கற்றுத் தாரும்.

தியானத்திற்கு : ஆதி.22-23, சங்.26-29, மத்.14.

இன்று...

மண்ணில் : 1110

விண்ணில் : 12.01.1167

ஊர் : ஹெங்ஸ்காம்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

ஆல்ரட் நினைவு தினம்

தேசிய இளைஞர் தினம்

ஜான் வின்ட்ராப் 1588

ஜெபிக்க :

மேரி ஸ்லேசர்

அறியாமை அகலட்டும்

1848 - 1915

ஆப்பிரிக்கா தேசம். டேவிட் லிவிங்ஸ்டன் என்ற மாபெரும் மிஷனெரியை இழந்து தவித்த சமயம். ஆப்பிரிக்காவிற்கு செல்லவோ ஆட்கள் இல்லை. அர்ப்பணம் செய்தார் மேரி ஸ்லேசர்.

கலபார் நதி. இன்றைய நைஜீரியா. மனிதர்கள் மனிதர்களாகவே இல்லை. வாழ்க்கைக்கானச் சட்டம் இல்லை. வாழ்க்கை முறையும் இல்லை. மூடப் பழக்கவழக்கங்கள் மலிந்து கிடந்தன.

அந்தோ பரிதாபம்! இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள் ஓர் தாய். குழந்தைகளின் உடல் ஈரம் காய்வதற்கு முன்னே, கொடூரன் ஒருவனின் கை, மூர்க்கமாய் பாய்ந்தது. மெல்லிய வாய் திறந்து குழந்தைகள் அழும் முன்னே, அவைகளின் தலைகளைத் துண்டித்து எறிந்தான். சோகத்தின்மேல் சோகம் மீண்டும் தொடர்ந்தது. அழுவதற்குக் கூட கண்ணீரற்ற அத்தாய் வீட்டை விட்டு காட்டிற்கு விரட்டப்பட்டாள். தனிமையில் அவள் வேதனைப்பட்டாள்.

காரணம்...? 'இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் அவை தீய சக்திகள் மூலம் பிறந்தவை' என்பது அவர்களின் நம்பிக்கை. என்ன அறியாமை இது?

மேரியின் கண்கள் சிவந்தன. யுத்தவீரனைப் போல உள்ளத்தில் வீறுகொண்டு எழுந்தாள். கிறிஸ்துவின் அன்பு அவரை உந்தித் தள்ளியது. வீடு வீடாய்ச் சென்று உண்மைச் செய்தியை உற்சாகமாய் உரைத்தாள். மக்களின் அறிவுக் கண்களைத் திறந்தாள். இரட்டைக் குழந்தைகளைக் காப்பாற்றினாள்.

ஆப்பிரிக்காவின் வெள்ளை ராணி "மா" என்று அன்புடன் அழைக்கப்படும் மேரி ஸ்லேசர் இதே நாள் இதே மாதம் 1915ம் ஆண்டு தான் காப்பாற்றிய இரட்டைக் குழந்தைகள் சூழ்ந்திருக்க இறைவன் பாதம் சரணடைந்தார்.

அன்பரே! அறியாமை என்னும் இருளை அகற்ற, முன்வருவீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் அங்கு போய் அதை நிறுத்தாவிடில் அங்கே
அதிக இரத்தம் சிந்தப்பட்டு அநேகர் கொல்லப்படக்கூடும்
– மேரி ஸ்லேசர்

தூயவனின் கரங்களில் : அன்புள்ள இறைவா! கனிவுள்ள கண்களை எனக்குத் தாரும்.
அறியாமை என்னும் இருள் அகற்ற ஆற்றல் தாரும்.

தியானத்திற்கு : ஆதி. 24, சங்.30, மத்.15.

இன்று...

மண்ணில் : 02.10.1848
விண்ணில் : 13.01.1915
ஊர் : ஏபர்டீன்
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : நைஜீரியா

மேரி ஸ்லேசர் நினைவு தினம்

பிலிப் ஜேக்கப் ஸ்வெனர் 1635

ஜார்ஜ் பாக்ஸ் 1691
ஜான் ஸ்கடர் 1855
சார்லஸ் மீட் 1873

ஜெபிக்க :

Scanned with CamScanner

தேவசகாயம் பிள்ளை



1712 - 1752

இறைவனின் அடியார் இறந்தும் பேசுவர்

காற்றாடி மலை.. தமிழ்நாட்டில் ஆரல்வாய்மொழி என்ற இடத்தில் அமைந்துள்ளது. நாள்தோறும் அவ்விடத்தைத் தரிசனம் செய்வோர் எண்ணற்றோர்.

அவ்விடத்தில் அப்படி என்னதான் சிறப்பு? கண்டவர் வியக்கும் காட்சிகள். அண்டியவர் அதிசயிக்கும் செய்திகள். ஆம். இந்தியாவில் புனிதர் தோமாவிற்குப் பின் இரத்தசாட்சியான வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை தன் உடலைக் கிறிஸ்துவிற்குக் காணிக்கையாகக் கொடுத்த இடம். தேவசகாயம் பிள்ளை வைதீக இந்து குடும்பத்தில் பிறந்தார். சாஸ்திரங்களில் முறைப்படி வளர்க்கப்பட்டார். தனது 28ம் வயதில் அரசு அதிகாரியாக மன்னரால் நியமிக்கப்பட்டார். மன்னரின் தலைமைத் தளபதியான டினலாய் மூலம் கிறிஸ்துவின் அன்பைப் பற்றி அறிந்து கொண்டார். அன்றுமுதல் கிறிஸ்துவின் தொண்டரானார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மதம் மாறிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். கிறிஸ்துவை மறுதலிக்கும்படி பலமுறை எச்சரிக்கப்பட்டார். ஆனால் தேவசகாயம் பிள்ளையோ கிறிஸ்துவின் அன்பை விட்டு விலகுவதில்லை என மன உறுதியுடன் காணப்பட்டார்.

மூன்று ஆண்டுகள் கடும் சித்தரவதைக்குள் தள்ளப்பட்டார். சிறைவாசத்திற்குள் அடைக்கப்பட்டார். எருமை மாட்டின் மீது ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு போகப்பட்டார். சூரைமுள் கொண்டு அடிக்கப்பட்டார். சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளானார்.

எத்தனையோ கொடுமைகள்! ஆனால் தேவசகாயம் பிள்ளையின் விசுவாசத்தை, அவைகளால் அசைக்க முடியவில்லை. இறுதியில் 1752ம் ஆண்டு ஜனவரி 14ல் போர் வீரர்களின் குண்டுகளுக்குப் பலியாகி, பலரின் விசுவாசத்தை உயிர் பெறச் செய்தார். இன்றும் காற்றாடி மலை அவர் புகழை அனைவருக்கும் பறைசாற்றுகின்றது.

அன்பரே! இவ்வுலக வாழ்வுக்குப் பின்பும் இயேசுவுக்குச் சாட்சி பகர உம்மால் முடியுமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இயேசுவின் மேல் கொண்ட உன்னதமான நம்பிக்கையின் வீரனாக அவருக்காக மடிய நான் தயார்.

– தேவசகாயம் பிள்ளை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் வாழ்விற்குப் பின்னரும் உம் நாமத்தைப் பிறர் மகிமைப்படுத்த என் வாழ்வு சிறந்ததாக அமைய உதவி செய்யும்.

தியானத்திற்கு : ஆதி. 25-26, சங்.31, மத்.16.

இன்று...

மண்ணில் : 23.04.1712

விண்ணில் : 14.01.1752

ஊர் : பத்மநாபபுரம்

நாடு : இந்தியா

தரிசன பூமி : இந்தியா

தேவசகாயம் பிள்ளை நினைவு தினம்

ஆல்பிரட் ஸ்வைட்சர் 1875

ஜெபிக்க : Mr. N. Durairaj, Bethel schools, Ayanavaram, Chennai-23

Scanned with CamScanner

சமத்துவம் மலரட்டும்



1929 - 1968

இனவெறி அமெரிக்கர்களிடையே இணைப்பிரியாமல் இருந்த காலம். கருப்பு நிறத்தவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகவும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு இழிவானவர்களாகவும் நடத்தப்பட்டனர்.

வெள்ளையர்களுக்கும், கருப்பர்களுக்கும் தனித்தனி பள்ளிகளும் கல்லூரிகளும் அமைக்கப்பட்டு, கல்வி அளிக்கப்பட்டு வந்தது. ஒற்றுமை என்பது கானல் நீராக கூடக் காட்சி அளிக்காமல் இருந்தது.

மார்ட்டின் லூத்தர் கிங், புரட்சிகர மனிதனாக புதுமைகள் செய்யப் புறப்பட்டார். கறுப்பு இனத்தவரின் காவலனாக, வெள்ளை இனத்தவர்களுக்கு நண்பனாக, அவர்களிடையே சமத்துவம் ஏற்படவும், பொதுநீதி கிடைக்கவும் போராட்டங்களை நடத்தினார்.

60 லட்சம் மைல்கள் தூரம் அமெரிக்காவைச் சுற்றி வந்து, 2500 கொள்கை விளக்கப் பொதுக் கூட்டங்களை நடத்தி, பகைவருக்கும் அன்பு செலுத்தும் ஆன்மீக வழியில் பதினொரு ஆண்டுகள் போராடி வெற்றி கண்டார்.

கருப்பு இன மக்களைத் தட்டி எழுப்பும் கடிதம் ஒன்றை எழுதினார். இது உலகப் புகழ்மிக்க உரிமைக் குரலாக அமைந்தது. உலக நாடுகள் அனைத்தின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்தார். சுமார் 2 1/2 லட்சம் கருப்பு இனத்தவர்களைக் கூட்டிச் சேர்த்து, தன் கனவுகளை வெளிப்படுத்தினார்.

போராட்டங்கள் வெற்றிப் பெற்றதால் பட்டங்கள் அவரைத் தேடி வந்தன. 1965ம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று டைம்ஸ் பத்திரிகை புகழ்ந்தது. உலக சமாதானத்திற்கான நோபல் பரிசைத் தமது 35ஆம் வயதிலேயே பெற்றார்!

சமத்துவத்தை மலரச் செய்த இவர், நிறவெறி பிடித்த ஒருவனால் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டார். இம்மாபெரும் விடுதலை வீரர் இறைப்பட்டம் பெற்ற ஓர் பாப்டிஸ்ட் சபையின் போதகர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பரே, சமத்துவத்தை மலரச் செய்ய என்ன முயற்சி செய்கிறீர்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : வாழ்க்கையின் மிக முக்கியமான கேள்வி எதுவெனில், நாம் மற்றவர்களுக்காக என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதே.
– மார்ட்டின் லூத்தர் கிங்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, சமத்துவத்தை நிலைநாட்ட என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 27, சங்.31, மத்.17

இன்று...

மண்ணில் : 15.01.1929
விண்ணில் : 04.04.1968
ஊர் : அட்லாண்டா
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : அமெரிக்கா

மார்ட்டின் லூத்தர் கிங் பிறந்த தினம்

மாசாஹிசா யுமுரா 1858

ஹாரி ஹயர்ன்சைடு 1951

ஜெபிக்க :

Scanned with CamScanner

ராபர்ட் டி நொபிலி

1577 - 1656

பிற சமயத்தவர்களும் இறைமக்களே

மதத்தால் மனிதன் இன்று பிரிவுபடுகின்றான். மேலும் பிரிக்கப்படுகின்றான். இதனால் சண்டைகளும் சச்சரவுகளும் மலிந்துவிட்டன, குவிந்து விட்டன.

மனிதன் யார்? மதம் என்பது என்ன? என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வாழ்வைக் கடத்தாமல், 'மதபாகுபாடு இன்றி மனிதர்களை நேசிப்பவரே இயேசு' என்பதை ஒவ்வொரு மனங்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

1605ஆம் ஆண்டு இந்தியாவில் காலடி எடுத்து வைத்தார் ராபர்ட் டி நொபிலி என்ற தத்துவப் போதகர். சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சை அவர் உள்ளத்தில் அக்கினிச் சுவாலைகளாய் பற்றி எரிந்தது.

1606ஆம் ஆண்டு மதுரை வந்த இவர், உயர் ஜாதி இந்துக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் வாஞ்சையில் தன்னையும் அவர்களைப்போல மாற்றினார். உணவுப் பழக்கவழக்கங்களும், உடைகளும் மாறின. அவர்கள் முறைகளில் சுவிசேஷத்தை எடுத்துக்கூறினார். எதிர்ப்புகள் பல இடங்களிலிருந்தும் கிளம்பின. ஆனால் எவைகளையும் பொருட்படுத்தாமல் தன் பணியைத் தொடர்ந்தார்.

கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். நாளுக்கு நாள் அநேக உயர் ஜாதி இந்துக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். மதுரை மாநகருக்கு இரட்சகர் இயேசுவை இலவசமாகக் கொடுத்தார் ராபர்ட் டி நொபிலி.

இத்தாலி, போர்ச்சுக்கல், லத்தீன், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் புலமைப் பெற்றிருந்த இவர், தாம் சேவைப் புரிந்த ஐம்பது ஆண்டுகளில் பல புத்தகங்கள் எழுதினார்.

பிற சமயத்து நண்பராகத் தன்னை மாற்றிய இராபர்ட் டி நொபிலி 1656ம் ஆண்டு ஜனவரி இதே நாள் தமது 80ம் வயதில் வாழ்வை முடித்தார்.

அன்பரே! பிற இன மக்களுக்காக உங்களின் சுவிசேஷப் பணி என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஏ வழிப்போக்கனே! இங்கே சிறிது நில்! இந்தக் குறுகிய கல்லறையில் ஒரு வலிமையான ஞாயிறு மறைந்து உறங்குகிறது. மேற்கே தோன்றிய இந்த ஞாயிறு கிழக்கே ஏன் மறைய வேண்டும்? – ராபர்ட் டி நொபிலி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! பிற சமயத்தவருக்கும் நற்செய்தி அறிவிக்க, என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 28-29, சங்.32, மத்.18

இன்று...

மண்ணில் : 1577
விண்ணில் : 16.01.1656
ஊர் : டஸ்கேனி
நாடு : இத்தாலி
தரிசன பூமி : மதுரை, இந்தியா

ராபர்ட் டி நொபிலி நினைவு தினம்

ஜோஹன்னாஸ் ரெப்மென் 1820

ஜாண் டக்கர் 1873

ஜெபிக்க :

கேத்தரின் பூத்

நீங்களே உலகின் ஒளி

1829 - 1890

குடி குடியைக் கெடுக்கும்; குடிப்பழக்கம் வீட்டைக் கெடுக்கும்; மது நாட்டுக்கும் வீட்டிற்கும் கேடு, இந்த வாசகங்களை நாம் கேட்டிருக்கலாம். அல்லது பார்த்திருக்கலாம். தெரிந்து பலர் தவறு செய்வது போல் அநேகர் அறிந்தே இக்குடிப் பழக்கத்திற்கு அடிமையாக காணப்படுகின்றனர்.

கேத்தரின் பூத், மக்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமைகளாகக் கிடந்ததைக் கண்டு, மனம் வருந்தினார். அவர்களை மீட்டு சரியான வழிகாட்ட வாஞ்சைக் கொண்டார்.

12 வயதிற்குள் 8 முறை வேதாகமத்தைப் படித்ததினால் தைரியத்தையும், தெளிவையும் பெற்றிருந்தார் கேத்தரின். ஆண்டவரின் கரம் தன்னோடு இருப்பதை உணர்ந்தார். குடிப் போதைக்கு எதிராக பல கைப்பிரதிகளை எழுதினார்; மக்கள் வாழ்வைக் கண்டித்தார்; மகிழ்ச்சியான வாழ்வை எடுத்துரைத்தார். 1855ஆம் வருடம் வில்லியம் பூத்துடன் தன் வாழ்வை இணைத்துக் கொண்டார். ஆண்டவரின் திட்டம் இத்தம்பதியினர் மூலம் அழுகுற நிறைவேற தொடங்கியது.

“பெண்களின் ஊழியம்” என்ற புத்தகத்தை கேத்தரின் எழுதி வெளியிட்டார். இதில் ஊழியத்தில் பெண்கள் எவ்விதம் செயல்பட வேண்டும் என்பதையும், அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்தினார். இவரின் அனலுள்ள பிரசங்கத்தால் அநேகப் பெண் பிரசங்கியார்கள் எழும்பி, தேசத்தை அசைத்தனர்.

கேத்தரின் ஓர் கருத்துள்ள ஸ்திரீயாகவும், நடைமுறைக் கிறிஸ்தவராகவும், ஜெபத்தில் சிறந்தவராகவும் அனுதினமும் தன்னைக் கிறிஸ்துவுக்குள் புதுப்பித்தவராகவும், தன் கணவரின் “இரட்சண்ய சேனை” ஊழியத்தில் சிறந்த ஆலோசகராகவும் செயல்பட்டார்.

“சேனையின் தாயார்” என்று அழைக்கப்பட்ட இவரால் இங்கிலாந்தில் “விபச்சாரத் தடுப்புச் சட்டம்” கொண்டுவரப்பட்டது. இதனால் ஒழுக்கமுள்ள வாழ்வு வாழ மக்கள் தூண்டப்பட்டனர்.

அன்பரே! சமுதாய சீர்கேட்டை மாற்ற உமது பங்களிப்பு என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : முன்னேறிச் செல்லுங்கள், பரிசுத்த வாழ்வு வாழுங்கள்,
ஒருவரையொருவர் நேசியுங்கள் – கேத்தரின் பூத்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் உலகத்திற்கு ஒளியாகப் பிரகாசிக்க, என்னை மாற்றியருளும்.

தியானத்திற்கு : ஆதி. 30, சங்.33, மத்.19.

இன்று...

மண்ணில் : 17.01.1829

விண்ணில் : 04.10.1890

ஊர் : ஆஷ்பர்ன், டெர்பிஷயர்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : உலக நாடுகள்

கேத்தரின் பூத் பிறந்த தினம்

அனைத்துலக மதங்கள் தினம்

தியோடோஸியஸ் 1 – 395

எகிப்தின் அந்தோணி 356

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஏமி கார்மிக்கேல்

1867 - 1951

சேவை செய்ய புறப்படுங்கள்

1912ஆம் ஆண்டு. ஓர் மாலை நேரம். சூரியன் தன் கண்களை மூடிக்கொண்டிருந்த வேளை. ஏமி கார்மிக்கேலின் கண்கள் தெளிவாக திறந்துக் கொண்டிருந்தன. காதுகள் அத்தொனியைக் கூர்மையாக கேட்டுக் கொண்டிருந்தன.

"ஊழியத்திற்குப் புறப்பட்டுப் போ." இதுவே அந்த சத்தம். உடனே இறைவன் பாதம் தன்னை ஒப்புக் கொடுத்தார். ஜப்பான் நாட்டை நோக்கி தன் பயணத்தைத் தொடர்ந்தார். 15 மாதங்கள் ஊழியத்தை முடித்து இலங்கை சென்று பணியாற்றினார்.

அக்காலத்தில், இந்தியாவில் தேவதாசி முறைகள் பின்பற்றப்பட்டு, சமுதாயம் சீரழிந்துக் கொண்டிருந்தது. இம்மக்களை மீட்கவோ, ஆதரவுக் கொடுக்கவோ யாரும் முன்வராத வேளை. ஏமி கார்மிக்கேல், 1895ஆம் ஆண்டு இந்தியாவை நோக்கி, இச்சீரழிவைத் தடுக்க சீற்றத்துடன் புறப்பட்டார்.

சிறுமிகள் மற்றும் பெண்களைப் போன்று சிறுவர்களும் ஆலயங்களுக்குப் படைக்கப்பட்டு, நாடகக் கம்பெனிகளுக்கு விலைக்கு விற்கப்பட்டனர். இத்தகைய ஒழுக்கமற்ற வாழ்வை தடுக்க 1926ஆம் ஆண்டு "டோனாவூர் ஐக்கியத்தை" நிறுவினார் ஏமி கார்மிக்கேல். திக்கற்றவர்கள், விதவைகள், துன்பப்படுவோர் ஒழுக்கங்கெட்டவர்கள், ஆதரவற்றோர் போன்றவர்களுக்கு புகலிடம் தந்து, அவர்களுக்குக் கிறிஸ்துவின் அன்பைச் செயல் வடிவத்தில் காட்டினார். இந்த அமைப்பை "நட்சத்திரக் கூட்டம்" என்றும் அழைத்தார். இன்றும் டோனாவூர் ஐக்கியம் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு வாழ்வளித்து வருகின்றது. செம்புலிங்கம் என்ற மாபெரும் கொள்ளையனும் இவரால் மனந்திரும்பினான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

56 வருடங்களாக இந்தியாவின் நசுக்கப்பட்டவர்களுக்காகவே சேவை செய்த இவர், 38 நூல்களை எழுதியுள்ளார். அவைகளில் பல நூல்கள் தம் வாழ்நாளில் எலும்புமுறிவினால் 20 ஆண்டுகள் தாம் படுத்தப் படுக்கையாக இருக்கும்பொழுது எழுதியவையே. 'ஏழைகள் என்னுடையவர்கள்' என்ற வாக்கின்படி வாழ்ந்த இவ்வம்மையார் 1951ஆம் வருடம் இதேநாளில் விண்ணகம் சென்றார்.

அன்பரே! சமுதாயத்தில் நசுக்கப்படுகின்ற மக்களுக்காக உமது சேவை என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : அன்புகூராமல் கொடுக்க முடியும். ஆனால், கொடுக்காமல் அன்புகூர முடியாது - ஏமி கார்மிக்கேல்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஏமி கார்மிக்கேலைப் போன்று சேவை செய்ய இதோ புறப்படுகிறேன். என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : ஆதி. 31, சங்.34, மத்.20.

இன்று...

மண்ணில் : 16.12.1867
விண்ணில் : 18.01.1951
ஊர் : கவுன்டி டவுன்
நாடு : அயர்லாந்து
தரிசன பூமி : இந்தியா

ஏமி கார்மிக்கேல் நினைவு தினம்

கிரஹாம் ஸ்டெயின்ஸ் 1941
ஹென்றி பவர் 1813

ஆண்ட்ரூ முர்ரே 1917
மேரி மெக்லீன் 1943

Scanned with CamScanner

ஆன்ட்ரு முர்ரே

1828 - 1917

ஜெபம் ஜெயத்தைத் தரும்

இது எழுப்புதலின் காலம். உலகமெங்கும் சுவிசேஷத் தீ பற்றி எரிந்துக் கொண்டிருக்கின்றது. கூட்டம் கூட்டமாக மக்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் இணைகின்றனர்.

சுவிசேஷத்தை அறிவித்தால் மட்டும் போதாது. அச்சுவிசேஷம் மக்களின் வாழ்வில் ஓர் எழுப்புதலைக் கொண்டு வர வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதது போல, வெறும் வாயளவுப் பிரசங்கமும் மக்களை மாற்றாது. சுவிசேஷம் செயலிலும் காண்பிக்கப்பட வேண்டும்.

ஸ்காட்லாந்திலிருந்துத் தென்னாப்பிரிக்காவுக்கு மிஷனெரியாகச் சென்ற ஓர் தகப்பனாரின் கனவுகளை நனவாக்கும் குழந்தையாகப் பிறந்தார் ஆண்ட்ரு முர்ரே. சிறுவயதிலிருந்தே வேத வசனங்களை மனப்பாடமாக கற்கும் சிறந்த பழக்கத்தைப் பெற்றிருந்தார்.

கல்விக்காக ஸ்காட்லாந்து சென்ற முர்ரே, சார்லஸ் பின்னியின் பிரசங்கத்தால் மிகவும் கவரப்பட்டார். அவர் உள்ளத்தில் ஓர் எழுப்புதல் உண்டானது. சுவிசேஷ வாஞ்சை அவருக்குள் துளிர்விடவே, இறையியற் பயிற்சி பெற்றார்.

1860ஆம் ஆண்டு தனது மனைவி எம்மா மற்றும் பிள்ளைகளுடன் வொர்ஸ்டர் ஆலயப் போதகராக நியமனம் பெற்றார். அங்கிருந்து பல இடங்களுக்கும் சென்று வல்லமையான செய்திகளைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். இவரின் போதனைகள் பலருடைய உள்ளத்திற்குள் ஊடுருவிப் பாய்ந்து மாபெரும் எழுப்புதலை ஏற்படுத்தியது. 1865ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் YMCA உருவாக காரணமானார். அனேக சமூகப் பணிகளை சுவிசேஷப் பணியுடன் செய்தார். தையல் இயந்திரத்தை தென் ஆப்பிரிக்காவுக்கு அறிமுகப்படுத்தியது ஆண்ட்ருவின் குடும்பமாகும். வட அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று சுவிசேஷத்தை எடுத்துரைத்து எழுப்புதலுக்காக ஜெபித்தார். டி.எல்.மூடியுடன் இணைந்து பிரசங்கித்தார். அநேக ஆவிக்குரிய புத்தகங்கள் மூலம் இவர் செய்த எழுப்புதல் பணி இன்னும் தொடர்கின்றது.

அன்பரே! உங்கள் உள்ளத்தில் எழுப்புதல் தீ பற்றி எரிய தொடங்கிவிட்டதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மக்கள் உன்னைப் புறக்கணிக்கலாம். ஆனால், கிறிஸ்து உன்னை அரவணைக்கிறார் – ஆன்ட்ரு முர்ரே

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மோடு இணைந்த வாழ்வு வாழ எனக்குக் கற்றுத் தாரும்.

தியானத்திற்கு : ஆதி. 32-33, சங்.35, மத்.21.

இன்று...

மண்ணில் : 09.05.1828

விண்ணில் : 18.01.1917

ஊர் : கிராப் ரெய்னட்

நாடு : தென் ஆப்பிரிக்கா

தரிசன பூமி : தென் ஆப்பிரிக்கா

சார்லஸ் பிரைஸ் ஜோன்ஸ் 1949

ஜெபிக்க :

புனித செபாஸ்டின்



- 288

நான் நிற்கும் பாறை கிறிஸ்துவே

கிறிஸ்தவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்ட காலம் அது. பலர் விசுவாசத்தை விட்டு வழி விலகி போகும் நிலைகள் கூட ஏற்பட்டன. மக்களை திடப்படுத்தவும், தைரியப்படுத்தவும் இறைத்தொண்டர்களின் உதவி மிகவும் தேவையாயிருந்தது.

அப்படிப்பட்ட ஓர் காலகட்டத்தில் கால் என்ற நாட்டில் பிறந்தவரே செபாஸ்டின். சிறுவயதிலேயே கிறிஸ்துவில் தீவிரமாய் வளர்ந்தார். இராணுவத்தில் இணைந்தால் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதைக் குறைக்க முடியும் என்ற நோக்குடன் இராணுவத்தில் இணைந்தார்.

செபாஸ்டின் அற்புதங்களை நிகழ்த்தும் வரங்களை இறைவனிடமிருந்து பெற்றிருந்தார். ஒருமுறை, ஆறுவருடம் பேசும் சக்தியை இழந்த ஓர் பெண்ணுக்கு ஜெபித்த உடனே, அப்பெண் குணமடைந்து பேசினாள். பல வியாதியஸ்தர்கள் குணப்படுத்தப்பட்டனர்.

இவரின் அற்புதமான இறைபக்தியால் பலர் இரட்சிக்கப்பட்டனர். ரோம கவர்னர் குரோமட்டியஸ் என்பவர் தன் குடும்பத்தோடு ஞானஸ்நானம் பெற்றார். எனவே சிறையில் அடைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் விடுதலை பெற்று, நிம்மதி பெருமூச்சும் விட்டனர்; கிறிஸ்துவை மகிமைப்படுத்தினர்.

திடீரெனத் தீவிரவாதிகளின் சதிபோல டயோகிலிடயன் என்னும் ரோம சக்கரவர்த்தி எழும்பி தன் சதிவேலையைத் தொடங்கினான். கிறிஸ்தவர்களுக்கோ தங்கள் விசுவாசத்தில் நிலைக்கவும், புதுப்பிக்கவும் அது ஏதுவாயிற்று.

செபாஸ்டின் தந்திரமாக பிடிக்கப்பட்டு அம்பெய்து கொல்லும் கொலையாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். உடல் முழுவதும் அம்புகளால் தைக்கப்பட்ட அவர் சரிந்து கீழே விழுந்தார். மரித்து போனார் என்று விடப்பட்ட அவர் ஆண்டவரின் பெலத்தால் எழுந்து நடந்தார். கிறிஸ்தவர்களின் பக்தி வாழ்வை கிறிஸ்துவில் நிலைக்க செய்தார்.

உபத்திரவங்களிலே தான் உண்மையான விசுவாசம் வெளிப்படும் என்பதை வெளிக்காட்டிய இவர் மீண்டும் பிடிக்கப்பட்டு, தடிகளால் அடிக்கப்பட்டு, இதே நாள் ஜனவரி 20ல் ஓர் குளத்தில் வீசப்பட்டார். கிறிஸ்துவின் இரத்தசாட்சியானார்.

அன்பரே! உங்கள் வாழ்வு கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டு உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இயேசுவுக்குச் சொந்தமானவர்ளை சாத்தானிடமிருந்து பறிக்க, சிரமம் பாராமல் உழைக்க வேண்டும் – செபாஸ்டின்

குயவனின் கரங்களில் : அன்பு நிறைந்த இறைவா! எவ்வித சோதனைகளிலும், உமக்காக தொண்டு செய்வேன்.

தியானத்திற்கு : ஆதி. 34-35, சங்.36, மத்.22.

இன்று...

மண்ணில் : **விண்ணில் :** 20.01.288 **ஊர்** : நார்போன் **நாடு** : ஃகால் **தரிசன பூமி :** ரோம்	புனித செபாஸ்டின் நினைவு தினம் எலிஸ் டேவிஸ் 1879 சூசன்னா வெஸ்லி 1669 மைல்ஸ் கவர்டேல் 1569 சி.எச். ஸ்பர்ஜன்

ஜெபிக்க :

Scanned with CamScanner

M.S. ஏசுதாசன்

தாலந்துகள் பயன்படட்டும்

1917 - 1992

புதுவருட ஆராதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் முடிய, கோயிலின் முன்னால் பட்டாசு சத்தம். திடீரென ஒரு பட்டாசு பச்சிளங்குழந்தை மீது விழ, வீறிட்டு அழுதது. சற்று நேரத்திற்குள் உடல் நீல நிறமாக, அந்தோ! அக்குழந்தை பரிதாபமாக மரித்துப் போனது. சபையார் துக்கத்தில் ஆழ்ந்தனர். ஆம்! ஊரே அழுதது.

குழந்தையின் தாய் அழுதுகொண்டே ஆண்டவரிடம் முறையிட்டார்கள். மீண்டும் ஒரு மகனைத் தந்தால், அவனை உம் பணிக்கே அனுப்புவேன் என்று பொருத்தனை செய்தார்கள். அம்மன்றாட்டின் வெளிப்பாடாக பிறந்தவரே ஏசுதாசன்.

வளரும் பருவத்திலே புதுமையான செயல்களைச் செய்தார்; கல்வியில் சிறந்தார்; ஆசிரியரானார்; புதுமையான முறையில், புரிந்து கொள்ளும் வழியில் கற்றுக் கொடுத்தார்; கவிதைப் பாணியில் கடகடவென கல்வியைக் கற்றுக் கொண்டனர் மாணவர்கள். குருத்துவப் பயிற்சி பெற்று நெல்லை திருமண்டலத்தில் ஆயரானார். தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலனாக, உற்ற நண்பராக உழைத்தார். எண்ணிறந்த வாலிபர்களை "கிறிஸ்துவுக்குள் வாலிபர் இயக்கம்" மூலம் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்.

ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷை பேசும் அற்புத ஜெப வீரர். விசுவாசத்தினாலே தன் தேவைகள் அனைத்தையும் தேவனிடமிருந்து பெற்றவர். தன்னை நாடி வரும் அனைவருக்கும் நல்லதொரு ஆலோசனையாளர். பாடல்களை இயற்றுவதிலும், இசைக் கருவிகளை மீட்டுவதிலும், வேத வியாக்கியானங்கள் செய்வதிலும் சிறந்தவர்.

இறைபணியை இலக்கிய சுவையோடும், இனிமையான நயத்தோடும், இன்பமான முகத்தோடும் செய்தவர். பணப்பற்று இல்லாமல், பொருட் செல்வம் தேடாமல், ஊர் போற்றும் உத்தமராய், இறைவனின் தூதுவராய் வாழ்ந்த இவர், அனைவருக்கும் ஒரு வழிகாட்டி.

அன்பரே! உங்கள் தாலந்துகளையும், திறமைகளையும் ஆண்டவரின் அருட்பணிக்கு பயன்படுத்துகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பரலோகத்தில் அழகான நிரந்தரமான வீடு ஒன்றை என் ஆண்டவர் எனக்காக கட்டி வைத்துள்ளார். - M.S.ஏசுதாசன்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் தாலந்துகள் அனைத்தையும், உந்தன் நாம மகிமைக்காக பயன்படுத்துவேன்.

தியானத்திற்கு : ஆதி. 36, சங்.38, மத்.23.

இன்று...

மண்ணில் : 06.08.1917

விண்ணில் : 22.01.1992

ஊர் : பசுவந்தனை, கோவில்பட்டி

நாடு : இந்தியா

தரிசன பூமி : இந்தியா

ஜெபிக்க : திருமதி. ஜெயா ஜேம்ஸ், சென்னை.

Scanned with CamScanner

1711 - 1791

உபத்திரவங்கள் உறுதியின் சின்னங்கள்

வாழ்க்கையில் வரும் வேதனைகளும் சோதனைகளும் நம்மை உறுதி உள்ளவர்களாக மாறச் செய்கின்றன. சோதனைகளைக் கண்டு துவண்டு போகின்றவர்கள் எதனையும் சாதிக்க முடியாது.

40 வருடங்கள், தன் வாழ்வின் பாதி காலத்தை மொழிப்பெயர்ப்புப் பணிக்காகவே செலவு செய்து வெற்றியின் கனியாகிய வேதாகமத்தைப் புது வடிவத்தில் தந்தவரே பெப்ரீஷியஸ்.

முறைப்படி வேத சாஸ்திரம் கற்றவர். சுவிசேஷ லூத்தரன் சபையின் குரு. இந்திய திருநாட்டில் இறை மக்களை உருவாக்க இதயத்தில் வாஞ்சை கொண்ட இவர் 1740ஆம் ஆண்டு இந்தியா வந்தார். மிஷனெரி சுல்ட்ஸ்சே அவர்களின் பணியை பொறுப்புடன் ஏற்று சிறப்புடன் செய்தார்.

இவர் நேரத்தை வீணாக்காதவர். சிக்கன வாழ்க்கை நடத்தியவர். எபிரேய மொழியிலும் தமிழ் மொழியிலும் புலமைப் பெற்றவர்.

பல இடையூறுகளின் மத்தியில் 1772ஆம் ஆண்டு ஒத்த வாக்கிய குறிப்புகளுடன் தமிழ் வேதாகமத்தை வெளியிட்டார். இவர் மொழிபெயர்த்து வெளியிட்ட ஞானப்பாடல்கள் இன்றும் திருச்சபைகளில் பாடப்படுகின்றன.

பல இன்னல்கள், போர் அபாயங்கள் உள்நாட்டுப் பிரச்சனைகள், பொருளாதார குறைபாடுகள், ஏமாற்றங்கள் வந்தபோதும் தம் அழைப்பில் உறுதியுடன் பணியாற்றினார்.

சிறுவர்களுக்கான இல்லம் அமைத்ததோடு பலருக்கு வீடுகள் கட்ட உதவி செய்தார். தன்னலம் சற்றும் கருதாமல் பிறர் நலத்திலே கருத்தாய் காணப்பட்டார். இவரின் எளிய வாழ்வு முறையால் "சந்நியாச குரு" என எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

வசதிவாய்ப்பற்ற அந்நாட்களிலே பெரும்பணிகளை ஆற்றிய இத்திருமகன் 1791ஆம் ஆண்டு இதேநாள் ஜனவரி 22யில் இப்புவியினில் ஓய்வு பெற்றார்.

அன்பரே! உபத்திரவங்கள் வரும்போது, கிறிஸ்துவின் மேல் உள்ள பற்று எப்படி உள்ளது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தன் ஆத்துமத்தை சிநேகிக்கிறவனெல்லாம்,
இந்த சுவிசேஷத்திற்கு செவிகொடுப்பானாக! – பெப்ரீஷியஸ்

தூயவனின் கரங்களில் : 'ஆண்டவரே! உபத்திரவங்களிலும் நிலைத்து நின்று,
உந்தன் பணி செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 37, சங்.39-40, மத்.24.

இன்று...

மண்ணில் : 22.01.1711
விண்ணில் : 22.01.1791
ஊர் : கீலிபர்க்
நாடு : ஜெர்மனி
தரிசன பூமி : இந்தியா

பெப்ரீஷியஸ் பிறந்த மற்றும் நினைவு தினம்

எம். எஸ் ஏசுதாசன் 1992
ஜாண் ஹூஃப்பர் 1555
சாராள் டோர்மஸ் 1877
வின்சென்ட் சரகோஸா 304

ஜெபிக்க :

Scanned with CamScanner

கிரஹாம் ஸ்டெயின்ஸ்

இறைவனின் அடியார் இறந்தும் பேசுவர்

1941 - 1999

1999ம் வருடம் ஜனவரி 23. இதயங்கள் உடைந்த நாள். கிறிஸ்துவின் அருட்பணியாளர்களுக்கு சவாலைத் தந்த நாள்.

கிரஹாம் ஸ்டெயின்ஸ் என்ற தொழு நோயாளிகளின் நண்பனும், அவரது இரு சின்னஞ்சிறிய தூதர்களைப் போன்ற குழந்தைகளும் தீயில் உயிருடன் கருகிய நாள்.

இந்திய நாட்டில் ஒரிசா என்ற மாநிலம். தொழுநோயாளிகளுக்கென அமைக்கப்பட்ட அந்த மையத்திற்கு 1965ஆம் ஆண்டு கிரஹாம் ஸ்டெயின்ஸ் அடி எடுத்து வைத்தார். கடவுளின் அன்பை தொழுநோயாளிகளுக்கு காட்டி, அவர்கள் வாழ்வுக்கு மறுவாழ்வு கொடுக்கவே அவர் அங்கு சென்றார். இளமையிலேயே ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்த இவர் 1983ம் ஆண்டு நற்குணசாலியான ஊழியர் கிளாடிஸ் என்ற ஆஸ்திரேலிய பெண்மணியை மணந்தார். இவரும் ஏற்கனவே இந்தியாவில் கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றியவர். இன்னும் செயலில் காட்டிக்கொண்டிருக்கிறார்.

தீயகுணம் நிறைந்த திருட்டு மனிதர் கூட்டம் அன்று (23.1.1999) அவர்களைச் சூழ்ந்து கொண்டது. கிரஹாம் ஸ்டெயின்ஸ், மகன்கள் பிலிப் (11), தீமோத்தி (7) ஆகியோர் தங்கள் வாகனத்தில் இரவு உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அந்தக் கொடூரம் நடந்தது.

வேடர் கைகளில் சிக்கிய மான்களைப் போல, கயவர்களின் கைகளில் மாட்டி சிக்கிக் கொண்டனர். அந்தோ பரிதாபம். சின்னஞ்சிறு பாலகர்கள் தங்கள் தந்தையை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டு, கதறி அழுது கொண்டிருக்கும் போதே, அவர்கள் ஈவு இரக்கமற்றவர்களால் மனசாட்சியேயில்லாமல் உயிருடன் தீயில் கொளுத்தப்பட்டனர். கருகிய மலர்களான அவர்கள் கிறிஸ்துவில் மலர்ந்தனர்.

அவர் விட்டுச் சென்ற 80 தொழுநோயாளிகளையும் அவர் மனைவி கிளாடிசும், மகள் எஸ்தரும் கனிவாய் கவனித்து வருகின்றனர்.

அன்பரே! உங்கள் வாழ்வால் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எத்தனைபேர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எனது தந்தையும் எனது சகோதரர்களும்
கிறிஸ்துவுக்காக மரிப்பதற்கு பாத்திரர் என்று கண்ட
என் ஆண்டவரைத் துதிக்கிறேன் - எஸ்தர் ஸ்டெயின்ஸ் (மகள்)

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தேவையுள்ள மக்களுக்கு தொண்டு செய்ய,
எந்தன் வாழ்வை காணிக்கையாக்குகிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 38, சங். 41-43, மத். 25.

இன்று...

மண்ணில் : 18.01.1941
விண்ணில் : 23.01.1999
ஊர் : பாம்ஸ் உட்
நாடு : ஆஸ்திரேலியா
தரிசன பூமி : ஒரிசா, இந்தியா

கிரஹாம் ஸ்டெயின்ஸ் நினைவு தினம்

வின்சென்ட் வெஃரர் 1350

புனித இக்னேஷியஸ்

50 - 107

கிறிஸ்துவில் எழுந்து நில்

ஆதி கால கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக பக்தி வைராக்கியத்துடன் நின்ற விதங்கள் நம்மை மெய் சிலிர்க்கச் செய்கின்றன.

பெருவெள்ளத்து இரைச்சலைப் போன்ற போராட்டங்கள் நம் வாழ்வில் மோதும்போது இம்மாபெரும் தியாகிகளின் தியாகங்கள் நம்மை தலை நிமிரச் செய்கின்றன. இவர்கள், போராட்டங்களை வேரிலேயே ஆட்டம் காணச் செய்தவர்கள். டிராஜன் என்ற அரசன் கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத்திக் கொண்டிருந்தான். கி.பி. 107ஆம் ஆண்டு அந்தியோகியாவில் பிரவேசித்தான். அவன் தன் முதல் வேலையாக கிறிஸ்தவர்களின் பாதுகாவலனாக விளங்கிய இக்னேஷியஸைத் தேடினான். அரசன் முன் கொண்டுவரப்பட்ட இக்னேஷியஸ் பல கேள்விக் கணைகளால் துளைக்கப்பட்டார். முடிவில் விசுவாச வீரன் இக்னேஷியஸ் வெற்றி பெறவே அரசன் பொங்கி எழுந்தான். இக்னேஷியஸை சிறைப்பிடிக்க ஆணையிட்டான்.

புலி பயந்தால் ஓடும். ஆனால், கிறிஸ்துவின் வீரர்கள் புறமுதுகு காட்டி ஓடுபவர்கள் அல்ல. வாழ்வானாலும் சாவானாலும் அது கிறிஸ்துவுக்குள் என்பதில் உறுதியானார் இக்னேஷியஸ். அந்தியோகியாவைவிட்டு ரோம் நகருக்கு அழைத்து வரப்பட்டார். தான் வந்த வழிகளிலெல்லாம் மக்களை கிறிஸ்துவில் பெலப்பட தைரியப்படுத்தினார்.

பேராயர் போலிகார்ப்பையும் சந்தித்தார். கிறிஸ்துவின் அன்பினால் இருவரும் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டனர். பல கடிதங்களை இக்னேஷியஸ் திருச்சபைகளுக்கு எழுதி அனுப்பினார்.

கி.பி.107ஆம் ஆண்டு இதே நாள் ஜனவரி 20ல் ரோமாபுரிக்குக் கொண்டு வரப்பட்ட இக்னேஷியஸ் மீண்டும் எச்சரிக்கப்பட்டார். விசுவாச வீரன் கிறிஸ்துவில் நிலைத்து நின்றதால் சிங்கங்களின் கூண்டுக்குள் போடப்பட்டார். அவர் உடல் அழிந்தது. ஆனால், உயிர் இறைவனில் இணைந்தது. புத்துயிர் பெற்றது.

அன்பரே! கிறிஸ்துவுக்காக எழுந்து நிற்க உங்களை ஆயத்தப்படுத்திவிட்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : வெற்றிக்கரமான உலக சுவிசேஷ ஊழியத்திற்கு நமது குணாதிசயமே திறவுகோல் – ஷர்வுட் எட்டி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! புனித இக்னேஷியஸைப் போன்று உமக்குள் வைராக்கியத்துடன் செயல்படுவேன்.

தியானத்திற்கு : ஆதி. 39-40, சங்.44, மத்.26.

இன்று...

மண்ணில் : கி.பி. 50
விண்ணில் : கி.பி. 107
ஊர் :
நாடு : அந்தியோகியா
தரிசன பூமி : அந்தியோகியா

வேதநாயகம் சாஸ்திரியார் 1864

ஜெபிக்க :

Scanned with CamScanner

புனித பவுல்

- 68

நீங்கள் கிறிஸ்துவின் ஆலயம்

கிறிஸ்தவர்களை சிறையில் அடைத்து சித்ரவதை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பயணமானார் சவுல். தமஸ்கு பட்டணத்தை நோக்கிய பயணம் அது.

திடீரென வானில் ஒரு ஒளி. குதிரையிலிருந்து தரையில் விழுந்தார் சவுல். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு ஓர் அன்பான குரல். "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?" சத்தம் கேட்டது. ஆளைக் காணவில்லை. "ஆண்டவரே நீர் யார்?" என சவுல் கேட்க, "நீ துன்புறுத்தும் இயேசு நானே" என்ற பதில் கிடைத்தவுடன் கதிகலங்கினார். தன் தீய வழிகளை விட்டு கிறிஸ்துவின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தார். இந்நிகழ்ச்சியால் சவுல் மறைந்தார். பவுல் பிறந்தார். பழைய வாழ்வு அகன்றது. புது வாழ்வு பிறந்தது.

தனது மனமாற்ற நிகழ்வுக்குப் பின் இயேசுவை மேசியா என அனைவருக்கும் எடுத்துக் கூற ஆரம்பித்தார். இதனால் யூதர்கள் பவுலைக் கொல்ல வகைதேடினர். எனினும் பல இடங்களுக்கு துணிகரமாகச் சென்று நற்செய்தியைப் பிரசங்கித்தார்.

மூன்று மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். இயேசுவின் சீடர்கள் இவருக்கு உறுதுணையாயினர். இவர் அனுபவித்த கொடுமைகளோ ஏராளம் ஏராளம்.

கிறிஸ்து தன்னில் வாழ்வதாகவே உணர்ந்த இவர் பல கடிதங்களை திருச்சபை மக்களுக்கு எழுதினார். அவற்றில் 13 கடிதங்கள் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பவுல் தனது நிருபங்களின் மூலம் இன்றும் வாழ்கின்றார் என்பது உண்மையாகும். ஆயிரக்கணக்கானோர் இவரால் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர்.

உபத்திரவங்கள் மத்தியிலும் உண்மையாக கிறிஸ்துவைப் பின்பற்றிய இவர், பலமுறை சிறைத்தண்டனை பெற்று, இறுதியில் தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியானார்.

அன்பரே, பழைய வாழ்வைக் களைந்துபோட்டு புது வாழ்வால் சாட்சி பகருகின்றீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்து எனக்கு ஜீவன்,
சாவு எனக்கு ஆதாயம் – பவுல்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் செல்வம் அனைத்தையும்
குப்பையாக எண்ணி உம்மை பின் தொடர்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 41, சங்.45, மத்.27.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : கி.பி. 68

ஊர் : தர்சு

நாடு : சிசேரியா

தரிசன பூமி : உலகின் பல பாகங்கள்

புனித பவுல் மனமாற்றம் அடைந்த தினம்

ஆஸ்வால்டு ஜே. ஸ்மித் 1986
ஸ்டான்லி இ. ஜோன்ஸ் 1973

ஜெபிக்க :

சேவை செய்வதில் மகிழ்ச்சி



1923 - 1989

1923ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 26ஆம் தேதி இதேநாள். கனடா நாட்டில் ஒரு பிரசங்கியாரின் தவப்புதல்வனாக போதகர் மாற்கு டேனியல் பாண்டேன் பிறந்தார்.

சிறுவயதிலேயே மிஷனெரிகளைக் குறித்ததான அநேக புத்தகங்களை விரும்பி படிப்பார். தானும் இவர்களைப் போன்ற சிறந்த ஓர் மிஷனெரியாக மாறவேண்டும் என்று எண்ணினார். ஆயினும், கடவுளின் அழைப்பிற்காக காத்திருந்தார்.

1942ஆம் ஆண்டு. வானொலி நிலையத்திலிருந்து தன்னுடைய பணியை முடித்து விட்டு களைப்புடன் வீட்டிற்கு வந்தார். படுக்கையில் சாய்ந்த சில மணித்துளிகளில் ஆண்டவர் தன்னோடு பேசுவதை உணர்ந்தார். உலகப்பிரகாரமான வேலையை தள்ளிவிட்டு தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார்.

1954ஆம் ஆண்டு தனது மனைவி ஹில்டாவுடன் இந்தியாவிலுள்ள கல்கத்தா வந்தார். “மிஷன் ஆப் மெர்சி” என்ற நிறுவனத்தை தோற்றுவித்து அநேக மக்களின் வாழ்க்கையை பிரகாசமடையச் செய்தார்.

1964ஆம் ஆண்டு 'அசெம்பிளீஸ் ஆப் காட்' என்ற பள்ளிக்கூடத்தை கல்கத்தாவில் நிறுவினார். மேலும் தொழிற்கல்விக் கூடத்தையும், ஆசிரியர் பயிற்சி பள்ளியையும் ஆரம்பித்தார். 1965ல் மாணவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்தைத் தொடங்கினார். தற்போது 20000க்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தால் பயன் பெற்று வருகின்றனர்.

இவருடைய சேவையைப் பாராட்டி 1969ம் வருடம் அமெரிக்காவின் பெத்தானி வேதாகமக் கல்லூரியும், 1984யில் கொலம்பியா மிசோரி பல்கலைக்கழகமும் இவருக்கு பண்டிதர் பட்டம் வழங்கி சிறப்பித்தன.

கடவுளுக்காய் பெரிய காரியங்களைச் செய்தும், மற்றவர்களை இப்பணியில் உற்சாகப்படுத்திய சிறந்த மிஷனெரி மாற்கு டேனியல் பாண்டேன் 1989ஆம் ஆண்டு ஜீன் 3ஆம் தேதி இறைவன் பாதம் சரணடைந்தார்.

அன்பரே! உலகம் உங்கள் சேவைக்காக காத்திருக்கிறது என்பதை அறிவீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இயேசுவுக்கான முழுமையாய் அர்ப்பணிக்கப்பட்ட எந்த வாழ்வும் ஒருபோதும் வீணாய் போவதில்லை.

- தியோடர் வில்லியம்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உந்தன் அழைப்பை ஏற்று, உலக மக்களின் நலனுக்காக சேவை செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 42-43, சங்.46-48, மத்.28.

மண்ணில் : 26.01.1923
விண்ணில் : 03.06.1989
ஊர் : வின்னிப்பெக்
நாடு : கனடா
தரிசன பூமி : கல்கத்தா, இந்தியா

இன்று...

மாற்கு டேனியல் பாண்டேன் பிறந்த தினம்

எரிக் லிட்டல் 1902

உலக சுங்கத்துறை நாள்
இந்திய குடியரசு தினம்

ஜெபிக்க :

ஆரிஜன்

182 - 251

உடலிலும் உள்ளத்திலும் இறைவனைத் தேடு

மாலை நேரம். சூரியன் தன் கதிர்களைத் தன்னுள் இழுத்துக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியே அவற்றை ரசித்துக் கொண்டிருந்தான் சிறுவன் ஆரிஜன்.

வெட்டுக்கிளிகள் புறப்பட்டு வருவதுபோல வேகத்துடனும் விறுவிறுப்புடனும் போர்வீரர்கள் அவன் வீட்டை நெருங்கி வந்தனர். சிறிது நேரத்திற்குள் எல்லாம் முடிந்து விட்டது. ஆம். கிறிஸ்துவைப் பின்பற்றியதாலும், கிறிஸ்துவை பிறர்க்கு எடுத்துக் கூறியதாலும் மரணத் தண்டனை கைதியாக அவர் தந்தை இழுத்துச் செல்லப்பட்டார். அதன்பின் அவர் தந்தை திரும்பவே இல்லை. என்ன ஆனார் என்றே தெரியவில்லை.

இளம் வயதில் இக்காட்சி ஆரிஜன் உள்ளத்தில் முற்றிலும் தாக்கத்தை உண்டுபண்ணியது. தந்தையைப் போன்று கிறிஸ்துவுக்காக மரிக்க ஆயத்தமானார்.

பதினேழு வயதில் ஓர் கல்லூரியின் தலைமை ஆசிரியரானார். பக்தியான வாழ்க்கையினால் மாணவர்களின் மனதைக் கவர்ந்தார். 17 வருடங்கள் கடந்தன.

டிசியஸ் என்ற அரசனின் ஆட்சிக் காலம். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். பலர் சிறையில் தள்ளப்பட்டனர். இரத்த சாட்சிகளாய் இவ்வுலகத்தில் மாண்டனர்.

ஓர்நாள் ஆரிஜனும் கைதுசெய்யப்பட்டார். கிறிஸ்தவராக மாறியதினாலும், பிறரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்ததினாலும், அவரைக் கொடுமைப்படுத்தினர். ஓர் மேசையில் அவர் கிடத்தப்பட்டார். பாரம் மிகுந்த சுமை அவர் உடலின் மேல் வைக்கப்பட்டது. கால்களையும் கைகளையும் பிடித்து இழுத்துத் துன்புறுத்தினர். தந்தையைப்போன்று ஆரிஜன் தன் விசுவாசத்தில் உறுதியாய் நின்றார். எந்தக் கொடுமைகளும் அவரை ஒன்றும் செய்ய இயலாமல் ஏமாந்து போயின.

கிரேக்கத் தத்துவ ஞானங்களையும், வேத சாஸ்திரங்களையும் இளமையிலே கற்று கிறிஸ்துவின் சிறந்த தொண்டராய் வாழ்ந்து பிறரையும் கிறிஸ்துவின் வீரர்களாய் மாற்றிய இவர் கி.பி. 251ல் தம் பணியை நிறைவு செய்தார்.

அன்பரே! உங்களைப் பார்த்து பிறர் இறைவனை தேடுகிறார்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இறைவனுக்கு தன்னை அடிமையாக்கிக் கொண்டவனைப் போல் உலகத்தில் சுதந்திரமாக வாழ்கிறவன் யாருமில்லை.

– ஜீவ நீரோடை

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! உடலிலும், உள்ளத்திலும் உம்மையே எப்பொழுதும் நினைத்து வாழ்ந்திருப்பேன்.

தியானத்திற்கு : ஆதி. 44-45, சங்.49, ரோமர்.1-2.

இன்று...

மண்ணில் : கி.பி. 182

விண்ணில் : கி.பி. 251

ஊர் : அலெக்சாந்திரியா

நாடு : எகிப்து

தரிசன பூமி : அலெக்சாந்திரியா

ஜெபிக்க :

ஜான் ஜி பேட்டன்

1824 - 1907

சோதனையிலும் சாதிப்போம்

மனிதர்களை கடித்து, ருசித்து, சாப்பிடும் நரமாமிசப் பட்சினிகளைக் குறித்து எப்பொழுதாவது கேள்விப் பட்டதுண்டா? கேள்விப்பட்டிருப்பீர்கள்.

ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு பகுதியிலுள்ள நியூஹைப்ரிட்ஸ் தீவு கூட்டங்கள். நரமாமிச பட்சிகளாய் வாழ்ந்தவர்கள். நாகரீகம் என்ன என்பதையே அறியாதவர்கள்.

1858ஆம் ஆண்டு தனது இளம் மனைவி மேரி ஆனுடன் நியூஹைப்ரிட்ஸ் தீவுகளை நோக்கி பயணம் சென்றார்.

நரமாமிசப் பட்சிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்தாலும் எதையும் பொருட்படுத்தாது தன் ஊழியத்தைத் தொடர்ந்தார்.

1859ம் வருடம் தன் அன்பு மனைவியை விஷக்காய்ச்சலில் இழந்தார். மூன்று வாரமான பிஞ்சு குழந்தையும் ஒரே வாரத்தில் இறந்து போனது. தன் கையாலேயே மனைவி மற்றும் குழந்தையை குழி தோண்டிப் புதைக்கும் கொடூரத்திற்கு உள்ளானார்.

சோதனைகளும் வேதனைகளும் ஒன்று சேர்ந்து பேட்டனை நிலைகுலையச் செய்தது. என்ன வந்தாலும் துணிந்து நிற்பதும் அழைப்பில் நிலைத்து நிற்பதுமே மிஷனெரிப் பணியின் தத்துவம் என்பதால் பேட்டன் எதைக் கண்டும் சோர்ந்து போய் விடவில்லை.

ஒருமுறை அத்தீவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. பேட்டன் கிணறு வெட்டி உதவினார். பூமியிலிருந்து தண்ணீர் வருவதைக் கண்ட மக்கள் பூமியின் அடியிலிருந்து மழை பெய்கிறது என்றனர். அறியாமையில் வாழ்ந்த அத்தீவு மக்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார் பேட்டன். 1899ஆம் ஆண்டு அனிவா மொழியில் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்து வெளியிட்டார்.

ஆதரவற்றோர் இல்லங்கள், பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள், வேதாகமப் பயிற்சி மையம் ஆகியவற்றை அம்மக்களுக்காய் ஏற்படுத்திய பேட்டன், 1907ஆம் வருடம் இதே நாள் ஜனவரி 28ஆம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்பரே! ஜான் ஜி பேட்டனைப் போன்று உங்களால் செயல்பட முடியுமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இயேசுகிறிஸ்துவும் அவருடைய ஐக்கியமும் எனக்கு கிடைத்திராவிடில் நான் எப்பொழுதோ பைத்தியக்காரனாகியிருப்பேன். – ஜான் ஜி. பேட்டன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் காட்டும் இடத்திற்கு நான் உடனே செல்ல ஆயத்தமாயிருக்கிறேன்.

தியானத்திற்கு : ஆதி. 46-47, சங்.50, ரோமர்.3-4.

இன்று...

மண்ணில் : 25.04.1824
விண்ணில் : 28.01.1907
ஊர் :
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : நியூஹைப்ரேடீஸ்

ஜாண் ஜி. பேட்டன் நினைவு தினம்

ஹென்றி IV – 1547

ஜெபிக்க :

Scanned with CamScanner

வாழ்க்கையே பேசட்டும்

1884 - 1973

இந்தியர்களுக்கு இந்திய சமூகப் பண்பாட்டின் அடிப்படையில் சுவிசேஷத்தை அறிவிக்க வந்தவர் ஸ்டேன்லி ஜோன்ஸ். தன்னுடைய கல்லூரி நாட்களிலேயே 'தன்னார்வ மாணவர்கள்' என்ற இயக்கத்தில் இணைந்து வெளிநாட்டிற்கு மிஷனெரியாக செல்ல தீர்மானித்தார்.

இந்தியாவிற்கு வருவதற்கு முன் ஒருநாள் அவர் ஓரிடத்தில் பிரசங்கிப்பதற்கு சென்றார். அதுவே அவரது முதல் பிரசங்கம். பிரசங்க பீடத்தில் ஏறி நின்றவுடனேயே செய்தி முழுவதும் மறந்து போனது. பேச இயலாதவராக உட்கார்ந்து விட்டார். அப்போது ஆவியானவர் அவரில் கிரியை செய்தார். பிரசங்கிக்க முடியாவிட்டாலும், ஆண்டவர் உன் வாழ்வில் செய்ததை சொல்லலாமே என்று அவர் உணர்த்தப்பட, அந்நேரமே எழுந்து தன் சாட்சியை பகிர்ந்து கொண்டார். ஆராதனை முடிவில் ஒரு வாலிபன் வந்து தன்னை இயேசுவிடம் அர்ப்பணித்து ஜோன்ஸிடம் ஜெபித்து மறுவாழ்வு பெற்றான்.

இந்நிகழ்ச்சி மூலம் அன்றிலிருந்து தனது வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கு சாட்சியாக வாழத் தீர்மானித்தார். இந்தியாவிற்கு வந்த ஜோன்ஸ், மெதடிஸ்ட் போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டார். உயர்ஜாதி மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் அழைப்பைப் பெற்று, அவர்களிடம் வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்ட சுவிசேஷகனாகப் பணியாற்றினார். ஜாதி, சமூக வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் சமமாக வாழ வழி செய்யும்படியாக 'கிறிஸ்தவ ஆசிரமம்' ஒன்றை ஏற்படுத்தினார். மகாத்மா காந்தியின் நண்பராகவும் விளங்கினார்.

இந்தியாவில் 40 வருடங்கள் மிஷனெரியாகப் பணி செய்த இவர் உலகம் முழுவதும் பாராட்டப்பட்டார். பல புத்தகங்களை எழுதி ஆவிக்குரிய வாழ்வில் அதிகமானோரைத் தட்டி எழுப்பினார். உத்தம ஊழியக்காரராகவும், மிஷனெரி ஸ்தாபனங்களுக்கு மிகச்சிறந்த முன்மாதிரியாகவும் வாழ்ந்து காட்டிய ஸ்டேன்லி ஜோன்ஸ் ஓர் மாபெரும் வழிகாட்டி.

அன்பரே! மக்கள் புரிந்துகொள்ளும்படியாக உங்கள் சுவிசேஷப் பணி அமைகின்றதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நீ வாழ்கின்ற வாழ்க்கை இறைவனை பிரதிபலிக்காவிட்டால், நீ செய்கின்ற வழிபாடு இறைவனுக்கு ஏற்றதல்ல

- ஜீவ நீரோடை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எளிய முறையில் உம் அன்பை எடுத்துக் கூற எனக்கு கற்றுத்தாரும்.

தியானத்திற்கு : ஆதி. 48-50, சங்.51-52, ரோமர்.5-6.

இன்று...

மண்ணில் : 03.01.1884
விண்ணில் : 25.01.1973
ஊர் : பால்டிமோர்
நாடு : மேரிலேண்டு, அமெரிக்கா
தரிசன பூமி : இந்தியா

ஃபியோடர் டாஸ்டாய்ஸ்வெஸ்கி 1881

ஜெபிக்க :

லெஸ்லி நியூபிகின்

1909 - 1998

பிறப்பை சிறப்பிப்போம்

வெள்ளை உருவம், கொள்ளை கொள்ளும் பார்வை, கற்றோரும் காது கொடுத்துக் கேட்கும் பேச்சு, அலை போன்ற தமிழ் ஓசைக்கு சொந்தக்காரர், சிந்தனையாளர், திருச்சபையின் வழிகாட்டி, இறைவனின் அருட்கொடை; அவர்தான் பேராயர் லெஸ்லி நியூபிகின்.

1909ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் நாள் இங்கிலாந்து நாட்டில் பிறந்தார். இறைவனைத் தேடும் வாஞ்சை இளம் வயதில் ஏற்பட்டது. இறையியல் படிப்பைத் தொடர்ந்தார். கிறிஸ்தவ இயக்கத்தில் இணைந்தார். கிறிஸ்துவின் நற்செய்தியை உலகமெங்கும் கூறும் ஆர்வம் இவரை உந்தித் தள்ளியது.

1936ஆம் ஆண்டு திருமணமான தன் இளம் மனைவி ஹெலன் அம்மையாருடன் இந்தியா புறப்பட்டு வந்தார். இறையருளால் உந்தப்பட்ட இவர் தமிழைச் சரளமாகப் பேசும் கலையில் தேர்ந்தார்.

1947ஆம் ஆண்டு மதுரையில் பேராயராகப் பொறுப்பேற்றார். பின்னர் 1965ஆம் ஆண்டு சென்னையிலும் பேராயராகப் பொறுப்பேற்றார்.

இவர் பதவி என்ற சிங்காசனத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்தவரல்ல. மாறாக பிறர் வாழ்வோடு இணைந்து அவர்கள் வாழ்வையும் சிறப்பித்தவர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களை தேடிச்சென்று அவர்களோடு தங்கி அவர்கள் குறைகளைக் களைந்தவர். கிறிஸ்துவின் சொல்லை அனுதினமும் செயலில் காட்டியவர். தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலனாய் விளங்கி, சாதி ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கப் பாடுபட்டவர். நீதிக்குக் குரல் கொடுத்தவர்.

தென்னிந்திய திருச்சபையை புகழின் உச்சிக்கு உயர்த்தியவர். இவர் ஓர் சிறந்த எழுத்தாளர். இவரது அருளுரைகள் இன்றும் எண்ணற்றவரால் பயன்படுத்தப்படுகின்றன.

வாழ்வு முழுவதும் மனித நேயத்தை மனிதருக்குக் கற்பித்த பேராயர் லெஸ்லி நியூபிகின் அவர்கள் 1998ஆம் ஆண்டு இதே நாள் ஜனவரி 30ல் இறைவனில் ஐக்கியமானார்.

அன்பரே! உமது பிறப்பு சிறப்பாக்கப்பட என்ன முயற்சி செய்கிறீர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஒற்றுமையின் சீர்குலைவுக்கு வித்திடுகிறவர்கள்
சுவிசேஷத்தின் எதிராளிகள். – லெஸ்லி நியூபிகின்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எனது வாழ்வு சிறப்பாக்கப்பட,
உமது வார்த்தையை என்றும் கைக்கொள்ளுவேன்.

தியானத்திற்கு : யாத். 1-2, சங்.53-55, ரோமர்.7-8.

இன்று...

மண்ணில் : 08.12.1909
விண்ணில் : 30.01.1998
ஊர் : நியூகாஸல்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இந்தியா

லெஸ்லி நியூபிகின் நினைவு தினம்

பிரான்சிஸ் ஸ்கேபஃீர் 1912

தியாகிகள் தினம்

ஜெபிக்க :

Scanned with CamScanner

சார்லஸ் ஸ்பர்ஜன்

1834 - 1892

வார்த்தைகள் வாழ்வாகட்டும்

அது ஒரு இருட்டான அறை. இங்கிலாந்து அரசு விதித்திருந்த ஜன்னல் வரி காரணமாக, அவ்வீட்டின் ஜன்னல்கள் அடைக்கப்பட்டிருந்தன. உள்ளே ஓர் சிறுவன். வீடு தான் இருள் நிறைந்து காணப்பட்டதே தவிர, அவன் உள்ளத்திலோ ஒளி வெள்ளமாகிய இயேசு நிறைந்திருந்தார். யார் அந்தச் சிறுவன்?

அவர் தான் 'பிரசங்கிகளின் இளவரசன்', 'மாபெரும் பிரசங்கி' என்றழைக்கப்படும் சார்லஸ் ஸ்பர்ஜன். சிறுவயதிலேயே வேதவசனங்களை மனப்பாடம் செய்யும் பழக்கம் உடையவர். ஓர் நாள் சுழல்காற்றில் அகப்பட்டச் சருகு போல பனிப்புயலில் மாட்டிக்கொண்டார். தப்பித்துப் பிழைக்க எண்ணிய அவர் அருகில் இருந்த ஆலயத்தில் தஞ்சம் புகுந்தார். அங்கே... ஏசாயா 45:22ஆம் வசனத்தில் ஓர் அழகான பிரசங்கம். செய்தியளித்தவர் சார்லஸ் ஸ்பர்ஜனையே உற்றுப்பார்த்து 'தேவனை நோக்கிப்பார், அவர் உன்னை இரட்சிப்பார்' என்று எச்சரிப்போடு யதார்த்தத்தைக் கூறினார்.

சார்லஸ் ஸ்பர்ஜன் தன் நிலை உணர்ந்தார். இறைமைந்தன் இயேசுவிடம் சரணடைந்தார். அந்நேரமே அவர் உள்ளத்தில் மாபெரும் மாற்றம் பிறந்தது. உள்ளான மனிதனும் பிறந்தான். 17வது வயதில் தெருக்களில் நின்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்த ஸ்பர்ஜன், 20வது வயதில் புகழ்பெற்ற ஆலயத்தில் போதகரானார். 1854ல் 232பேர் கொண்ட அவர் சபை விரைவில் 5,000க்கும் மேற்பட்டோரை உருவாக்கியது. 1867ஆம் ஆண்டு ஆதரவற்றோர் இல்லத்தையும், பின்னர் பெண்களுக்கென ஓர் இல்லத்தையும் தோற்றுவித்தார். ஊழிய ஸ்தாபனத்தையும், வேதாகமக் கல்லூரியையும் ஆரம்பித்தார்.

மிகச்சிறந்த பிரசங்கியாரான இவர், 3560க்கும் மேற்பட்ட பிரசங்கங்கள் செய்துள்ளார். அந்நாட்களில் இவர் பிரசங்கங்கள் உடனுக்குடன் பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

ஆண்டவரின் அழைப்பை அற்புதமாய் ஏற்று அரிய பிரசங்கங்கள் செய்த இவர், 1892ஆம் ஆண்டு இதே நாள் ஜனவரி 31ல் விண்நகர் பயணமானார்.

அன்பரே! உமது வார்த்தை பிறருக்கு பயனுள்ளதாக அமைகின்றதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : சுயசித்தம் நரகத்திற்கு அழைத்துச் செல்லுமேயொழிய ஒருபோதும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லாது.

– சார்லஸ் ஸ்பர்ஜன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்முடைய வார்த்தையை எவ்விடங்களிலும் தைரியமாக பிரசங்கிக்க பெலன் தாரும்.

தியானத்திற்கு : யாத். 3-4, சங்.56-57, ரோமர்.9.

இன்று...

மண்ணில் : 19.06.1834

விண்ணில் : 31.01.1892

ஊர் : ஹெல்வெடன்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

சார்லஸ் ஸ்பர்ஜன் நினைவு தினம்

ஜான் போஸ்கோ 1888

ஜான் ஆர் மாட் 1955

மென்னோ சிம்சன்ஸ் 1561

ஜெபிக்க : Bethel schools, Ayanavaram, Chennai- 23

Scanned with CamScanner

டைட்டஸ் கோன்



1801 - 1882

பிறரை புரிந்து கொள்ளுங்கள்

அனுதின குறிப்புகள் எழுதுதல் ஒரு நல்ல பழக்கம். வாழ்க்கையின் நடைமுறைகளை அது நமக்கு ஞாபகப்படுத்தும். நாம் வாழ்ந்த வாழ்வுக்கு எந்த ஒரு தடயமும் இல்லாதிருந்தால் அது சரியானதாகுமோ? வெற்றி பெற விரும்பும் ஒவ்வொருவரும் கடின முயற்சிகளுடன் சில தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டும்.

டைட்டஸ் கோன், ஹவாய் தீவுகளுக்கு 1935ஆம் ஆண்டு தன் ஊழியப் பயணத்தை மேற்கொண்டார். ஊழியமானது அவரது வித்தியாசமான முயற்சியால் துரிதமாக வளர்ந்தது. 1870ஆம் வருடத்தில் அவரது சபை 13,000 மக்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

இவரின் ஊழியத்தின் இரகசியம் என்ன தெரியுமா? ஒவ்வொரு மக்களின் தனிப்பட்ட நிலமைகளையும் இவர் நன்கு அறிந்திருந்தார். அவர்களைக் குறித்த முழு விவரங்களையும் அவர் சேகரித்து வைத்திருந்தார். சுமார் 16,000 மக்களின் குறிப்புகள் அவர் கரத்தில் இருந்தன.

டைட்டஸ் கோன் எங்கெல்லாம் பிரசங்கித்தாரோ அங்கெல்லாம் மக்கள் கூட்டம் அலைமோதியது. ஆன்மீக விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. மக்கள் ஆண்டவரின் இரக்கத்திற்காக கதறி அழுது வேண்டுதல் செய்தனர். வசனத்திற்காக பல மணி நேரங்கள் தாகத்தோடு காத்துக் கிடந்தனர். கடின இதயங்கள் உடைந்து விழுந்தன. பல ஆயிரக்கணக்கானோர் தீய வழிகளை விட்டு மனந்திரும்பினர்.

மக்களிடையே நல்லதொரு உறவை வளர்த்துக் கொண்டதாலும், அவர்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டதாலும், இவரால் ஊழியத்தில் பல வெற்றிகளைக் காண முடிந்தது. பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். அவை இன்றும் ஆயிரக்கணக்கானோரை கிறிஸ்துவிடம் வழி நடத்துகின்றன. ஹவாய் மக்களிடம் இறுதிவரை ஊழியம் செய்த இவர் அங்கேயே மரித்து தன் வாழ்வினால் மிகுந்த பலன் பெறச் செய்தார்.

அன்பரே! நீங்கள் இவ்வுலகில் வாழ்ந்ததற்கான தடயம் எதுவாக உள்ளது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உண்மையான தலைமைத்துவம் அன்பில் வேரூன்றி ஊழியத்தில் செயலாற்ற வேண்டும். – எங்ஸ்டேராம்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னைச் சார்ந்த மக்களை புரிந்துகொண்டு, அவர்களிடம் உமதன்பை கூறுவேன்.

தியானத்திற்கு : யாத். 5-6, சங்.58-59, ரோமர்.10-11.

இன்று...

மண்ணில் : 01.02.1801
விண்ணில் : 01.12.1882
ஊர் : கில்லிங்வொர்த்
நாடு : கனெக்டிக்கட்
தரிசன பூமி : ஹவாய் தீவு

டைட்டஸ்கோன் பிறந்த தினம்

தாமஸ் கேம்ப்பெல்1763

பெட்டி அன் ஓல்சன் 1968

ஜெபிக்க :

Scanned with CamScanner

எலிசா ஆக்னியூ

விதைக்கப்படும் வாழ்வு



இந்திய தேசத்திற்கு அருகாமையில் உள்ள நாடு இலங்கை. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளதால் இதை தீவு என்று அழைக்கலாம். கடல் கடந்து வாணிபம் செய்வோர் பெருகியிருந்த காலத்தில் சுவிசேஷத்தை இலவசமாகக் கொண்டு சென்றார் ஆக்னியூ.

அமெரிக்க நாட்டில் பிறந்த இவர், 8 வயதிலேயே இறைப்பணிக்குத் தன்னை தயார் செய்தார். 32ஆம் வயது வரை தன் கல்விப் பணிகளை நியூயார்க் நகரத்தில் முடித்தார். ஆண்டவரின் சத்தம் காதினில் தொனிக்க இலங்கை நாட்டை நோக்கி 1839ம் ஆண்டு சுவிசேஷ வீராங்கனையாகப் புறப்பட்டார்.

1807 - 1883

கல்விக்கூடம் ஒன்றின் முதல்வராக தனது பணியை ஆரம்பித்தார். 41 வருடங்கள் அப்பள்ளியின் பொறுப்பை மிகவும் சிறப்புடன் ஏற்று நடத்தினார். தான் கற்றுக் கொடுத்த பெண் பிள்ளைகளின் குழந்தைகளுக்கும், அவர்களது பேரப் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்கும் மாபெரும் பணியை மனநிறைவுடன் செய்தார். இதனால் "ஆயிரம் பெண் குழந்தைகளின் அம்மா" என்று அன்புடன் அழைக்கப்பட்டார். அக்காலத்தில் இவர் செய்த பணி மிகவும் சிறப்புடன் பாராட்டத்தக்கது.

இவர் கல்விப் பணியோடு கர்த்தரின் களங்கமில்லா வார்த்தைகளை கனிவுடன் கற்றுக் கொடுத்தார். இதனால் சுமார் 600க்கும் மேற்பட்ட இளம் ஆக்னியூக்கள் உருவானார்கள். ஒவ்வொரு நாளும் தான் கற்றுக் கொடுத்த மக்களைச் சென்று பார்த்து அவர்களுடன் பேசுவது இவரது வழக்கம் ஆகும். அவர்களில் பலர் ஆசிரியர்களாகவும், பிரசங்கியாளர்களாகவும், மருத்துவர்களாகவும், வக்கீல்களாகவும், பிரபல தொழில் செய்பவர்களாகவும் மாறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

43 வருடங்கள் இலங்கையிலேயே தங்கி, அங்கேயே ஊழியம் செய்து கோதுமை மணியாக விதைக்கப்பட்டார் ஆக்னியூ.

அன்பரே! உங்கள் ஊழிய பணித்தளத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தன்னைத் தானே தியாகம் செய்வது,
அன்றாடம் செலுத்த வேண்டிய விலைக்கிரயம் ஆகும்.
– ஆஸ்வால்டு சேண்டர்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! கோதுமை மணி போன்று, நானும் விதைக்கப்பட்டு உமக்குள் கனி தர முன்வருகின்றேன்.

தியானத்திற்கு : யாத். 7-8, சங்.60-61, ரோமர்.12.

இன்று...

எலிசா ஆக்னியூ பிறந்த தினம்
ஹன்னா மூரே 1807

மண்ணில் : 02.02.1807
விண்ணில் : 14.06.1883
ஊர் : நியூயார்க்
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : இலங்கை

ஜெபிக்க :

H.A. கிருஷ்ணப் பிள்ளை

1827 - 1900

இதயம் திறந்தால் இயேசுவைக் காணலாம்

வைணவ குடும்பம், சிறந்த தமிழ் பண்டிதரின் மகனாகப் பிறந்தார் கிருஷ்ணப்பிள்ளை. சிறுவயதிலேயே வைணவ நூல்கள் அனைத்தையும் மனப்பாடமாகக் கற்றுத் தேறினார். வைணவ சமயத்தின் தீவிர பக்தனாய் மாறினார். கிருஷ்ணபிள்ளைக்குத் தமிழ் மீது அதிக நாட்டம்; இலக்கண சாஸ்திரங்கள் அனைத்தையும் எளிதாய் கற்று தமிழ் பண்டிதரானார்.

அச்சமயம், வேதாகமக் கல்லூரி ஒன்றிற்கு தமிழ் ஆசிரியர் தேவைப்பட்டதால் அங்கு தம் பணியை ஆரம்பித்தார். ஆனால் கிறிஸ்தவர்களிடம் தொடர்பு கொள்வதை அவர் விரும்பவே இல்லை.

ஒருநாள் ஹக்ஸ்டபிள் என்ற மிஷனெரி ஒரு புதிய ஏற்பாட்டை கிருஷ்ணப்பிள்ளைக்கு கொடுக்கவே, வெறுப்படைந்த அவர் தன் வேலையையும் விட்டுவிட்டார். ஆனாலும் மிஷனெரியின் அன்பு அவரை சிந்திக்க வைத்தது.

அந்நாட்களில் அநேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் இதயத்தைத் திறந்து கொடுத்தனர். அவர்களில் தனக்கோடி ராஜீ என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ணப்பிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

ஓர் இரவு, கிருஷ்ணப்பிள்ளையால் தூங்க முடியவில்லை. கிறிஸ்துவைக் குறித்த சிந்தனைகள் உள்ளத்தில் நிறைய ஆரம்பித்தது. இதயம் மெல்லத் திறந்தது. கிறிஸ்துவை தன் உள்ளத்தில் வரவழைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

தமிழ் பண்டிதரான கிருஷ்ணபிள்ளை, கிறிஸ்துவைப் புகழ்ந்து பாடல்கள் எழுதவும், பாடவும் ஆரம்பித்தார். இரட்சண்ய யாத்ரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நூல்கள் அவர் மூலமாக வெளிவந்தவையே. மாபெரும் மிஷனெரிகளான சர்ஜென்ட், உவாக்கர், ஏமிகார்மைக்கேல் மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக் கொடுத்த இவர், 1900ஆம் ஆண்டு இதே நாள் பிப்ரவரி 3ஆம் தேதி என்றும் இறைவனை புகழ்ந்து பாட விண்ணகம் சென்றார்.

அன்பரே! கிருஷ்ணப்பிள்ளையைப் போன்று இயேசுவை மட்டுமே பாடுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆண்டவர் என் இருதயத்தைத் திறந்தார். அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன். - H.A. கிருஷ்ணப்பிள்ளை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் தந்த வாழ்வில் நான் உம்மை துதிக்காமல் இருந்தால் எனக்கு நாவு இருந்தும் என்ன பயன்?

தியானத்திற்கு : யாத். 9, சங்.62-63, ரோமர்.13-14..

இன்று...

மண்ணில் : 23.04.1827
விண்ணில் : 03.02.1900
ஊர் : ரெட்டியார்பெட்டி
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

கிருஷ்ணபிள்ளை நினைவு தினம்

லேட்டி பி கௌமன் 1870
டி எல். மூடி 1837

ஆன்ஸ்கர் 865
ஜான் சவட்டன்பர்க் 1468

ஜெபிக்க :

ஜான் ரோஜர்ஸ்



1500 - 1555

மாபெரும் சிலாக்கியம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக நிலைத்து நின்று இரத்த சாட்சியாக மரிப்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய சிலாக்கியம் அல்ல. இச்சிலாக்கியம் பெற்றோர், பேறுபெற்றவர்கள் ஆவர்.

1555ஆம் வருடம். இதே நாள் பிப்ரவரி 4ஆம் தேதி. மாபெரும் கூட்டத்தின் நடுவே கம்பத்தில் கைகால்கள் கட்டப்பட்டவராக சுற்றிலும் விறகு கட்டைகள் அடுக்கப்பட்டுத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டார் ஜான் ரோஜர்ஸ்.

"இரத்த மேரி" என்று அழைக்கப்படும் இங்கிலாந்து அரசியின் ஆட்சிக்காலம் அது. கத்தோலிக்க மதம் சாராத புரோட்டஸ்டண்டுகள் தேடிப் பிடிக்கப்பட்டு இரத்த சாட்சிகளாக்கப்பட்டார்கள். அரசாட்சியில் கொடுங்கோன்மை கோரதாண்டவமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆயினும், புரட்சியாளர்கள் தங்கள் புதுமைகளை கிறிஸ்துவுக்குள் மிகுந்த தைரியத்துடன் செய்து வந்தனர்.

ஜான் ரோஜர்ஸ் 1500ஆம் வருடம் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்றவர். கத்தோலிக்கப் போதகராகத் தன் பணியைத் தொடங்கிய இவர், ஜான் விக்ளிப்பின் நட்பைப் பெற்று கிறிஸ்துவின் தொண்டரானார். அனைவர் கைகளிலும் வேதாகமம் கிடைக்க வேண்டும் என்ற ஆவல். அவர் உள்ளத்தில் எழுந்தது. இந்நிலையில் ஜான் விக்ளிப் கலகக்காரர் என்று கைது செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டார். எனவே, விக்ளிப் மொழிபெயர்த்த வேதாகமத்தின் பிரதிகளை ஆங்கிலத்தில் வெளியிட முயற்சிகளை மேற்கொண்டார். மக்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் மொழிகளில் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தனர்.

இறுதியாக ஜான் ரோஜர்ஸ் எதிரிகளின் கைகளில் சிக்கினார். வேதாகமத்தை வெளியிட்ட காரணத்திற்காக அவரைத் தீயிலிட்டு உயிரோடு கொளுத்தினர். மரண வேளையிலும், கிறிஸ்துவின் மீது மிகுந்த பற்று கொண்டவராக தன் விசுவாசத்தை நிலை பெறச் செய்தார்.

அன்பரே! உங்கள் கரங்களில் உள்ள வேதாகமத்தை எவ்விதம் பயன்படுத்துகிறீர்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : என்னை எல்லா கட்டுகளிலிருந்தும் விடுவித்து, கல்வாரியின் ஆணிகள் என்னில் பாய, என்னைத் திறக்க உதவி செய்யும்.

– ஜிம் எலியட்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உமக்குள் சுடர்விட்டு பிரகாசிக்கும், நல்வாழ்வை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : யாத். 10, சங்.64-65, ரோமர்.15-16.

மண்ணில் : 1500

விண்ணில் : 04.02.1555

ஊர் : டெரிடென்ட், பிர்மிகம்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

இன்று...

ஜான் ரோஜர்ஸ் நினைவு தினம்

டைட்ரிச் போன்ஹோபர் 1906

ஜான் டி பிரிட்டோ 1693

ஜோசப் பெஸ்கி 1747

அலெக்ஸாண்டர் மெக்கே 1890

ஐ. ஜே. ஐயாத்துரை 1973

ஜெபிக்க :

பர்னபா



- 61

சாட்சி பகரும் வாழ்வு

உங்கள் வாழ்க்கையைக் குறித்து கீழ்கண்டவிதமாக சாட்சி கூற முடியுமா?

நல்லவர்
பரிசுத்த ஆவியால் நிறைந்தவர்
விசுவாசத்தில்நிறைந்தவர்
உதார குணமுள்ளவர்

நாம் வாழ்வது எப்படியோ அப்படியே பிறரும் நம்மைப் பற்றி கூற முடியும். மேற்கூறிய வாசகங்கள் பர்னபாவைப் பற்றி கூறப்பட்டவையே.

அப்போஸ்தலர்களாலே 'ஆறுதலின் மகன்' என்றழைக்கப்பட்ட பர்னபா தன்னை நாடி வந்த ஊழியர்களை மிகவும் உற்சாகப்படுத்தி உதவிகளைச் செய்கிறவராயிருந்தார். ஆதரவில்லா ஏழைகளுக்கும், பஞ்சத்தில் அவதியுறும் சகோதரர்களுக்கும் உதவி செய்கிறவராகக் காணப்பட்டார்.

பர்னபா தனது நல்ல நடக்கையினாலும், விசுவாசத்தினாலும், பரிசுத்த ஆவியின் நிறைவினாலும் அநேகரை கிறிஸ்துவண்டை இழுத்து வந்தார். கிறிஸ்துவால் தரிசனம் பெற்று மனந்திரும்பிய சவுலை எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததும் பர்னபாவே.

ஊழியங்களுக்கு நிதி திரட்டிக் கொடுக்கும் முக்கிய பொறுப்பை முழு உற்சாகமாகச் செய்தவர் இவர். மேலும், மாற்கு என்பவரை ஊழியத்தில் உற்சாகப்படுத்தி வளர்த்தவரும் இவரே. முதல் அருட்பணியாளர்களாக பவுலுடன் இணைந்து ஊழியத்திற்குப் புறப்பட்டார். சீப்புரு தீவில் இவர் செய்த பணிகளோ ஏராளம்.

ரோம் நகரில் கிறிஸ்தவர்கள் சித்தரவதை செய்யப்பட்ட போது விசுவாசிகள் சிதறுண்டு போகத் துவங்கினார்கள். அப்பொழுது அவர்களை தைரியப்படுத்தி விசுவாசத்தில் நிலைக்கச் செய்தார் பர்னபா. அதனால் யூதர்கள் இவர்மேல் ஆத்திரம் கொண்டனர். இறுதியாக அவர்களால் படுகொலை செய்யப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார்.

அன்பரே! ஊழியங்களைத் தாங்குவதில் உங்களுடைய செயல்பாடு எவ்விதம் உள்ளது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இறைவனுக்காக எவ்வளவு செய்கிறாய் என்பதல்ல
அவர் எதிர்பார்ப்பதை செய்கிறாயா என்பதே முக்கியம்.

- ஜீவ நீரோடை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! பர்னபாவைப் போன்ற சாட்சியை நானும் பெற என்னைத் தகுதிபடுத்தும்.

தியானத்திற்கு : யாத். 11-12, சங்.66-67, மாற்கு.1.

இன்று...

மண்ணில் :
விண்ணில் : 61
ஊர் : சாலமி
நாடு : சீப்புரு தீவு
தரிசன பூமி : சீப்புரு தீவு

டேவிட் செல்லப்பா 1905
டி.எல்.மூடி 1805
ஆன்ட்ரு ஃபுல்லர் 1754

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஹூட்விக் நோம்மென்ஸன்

அற்புதம் செய்வார்

1834 - 1918

"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்."

20 வயதான ஹூட்விக், கால் உடைந்த நிலையில் படுக்கையில் படுத்திருந்தார். மேற்கண்ட வசனத்தை மீண்டும் மீண்டும் படித்தார். மிகவும் சோகமான குரலில் தன் தாயை அழைத்தார்.

அம்மா! நான் மீண்டும் நடக்க முடியுமா? ஆண்டவர் என் தேவையை சந்திப்பாரா? நான் கேட்கும் உதவியை அவர் செய்வாரா?

தாய் மிகுந்த நம்பிக்கையுடன் தன் மகனின் கரங்களைப் பற்றிப்பிடித்து கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளச் செய்தார். மூன்று வருடங்கள் கடந்தன. ஓர் நாள், தன் படுக்கையை விட்டு குதித்து எழுந்தார்; நடந்தார்; ஓடினார்.

24 வயது இளைஞர் அவர். கையில் வேதாகமத்துடன் சுமத்திரா தீவை நோக்கி பயணமானார். இதுவரை கிறிஸ்து யார் என்பதையே அறியாத மக்களுக்குத் தன் வாழ்வில் நடந்த அற்புதங்களை எடுத்துக் கூற மாபெரும் மிஷனெரியாக சென்றார்.

'பேபாக்' என்ற மக்கள் கூட்டம். பல இடையூறுகளின் மத்தியில் பொறுமையுடன் அவர்களுக்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். அவர்கள் மொழியிலேயே வேதாகமத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். 1862ஆம் ஆண்டு அங்கு ஊழியத்தை ஆரம்பித்த அவர் 1876ஆம் வருடம் 2000 ஆத்துமாக்களை ஆதாயம் செய்தார். 1878ஆம் ஆண்டு புதிய ஏற்பாட்டை பேபாக் மொழியில் வெளியிட்டார். பெரும் புதையலைப் பெற்றுக் கொண்ட மகிழ்ச்சியில் மக்கள் அனுதினமும் கிறிஸ்துவுக்குள் வளர ஆரம்பித்தனர்.

மக்களுடைய கலாச்சாரத்தை மாற்றாமல் மக்களோடு மக்களாகப் பணி செய்த நோம்மென்ஸன் 1918ஆம் ஆண்டு இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தபோது 1,80,000 ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டிருந்தனர். தற்பொழுது இந்தோனேஷியாவின் மாபெரும் கிறிஸ்தவ மக்கள் தொகை உள்ள இடம் சுமத்திரா தீவே ஆகும். நோம்மென்ஸன் அவர்களின் கனவு நனவானது. இறை சித்தம் நிறைவேறியது.

அன்பரே! ஆண்டவரிடமிருந்து சரீர சுகத்தைப் பெற்று ஊழியம் செய்ய முன்வருவீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவ அன்பின் அனலில் வாழப் பழகியவனை
உலகத்தின் நெருப்புகள் ஒன்றும் செய்வதில்லை.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் என் வாழ்வில் செய்த அதிசயங்களுக்காக
நான் என்றும் நன்றி கடன்பட்டிருக்கிறேன்.

தியானத்திற்கு : யாத். 13-14, சங்.68, மாற்கு.2.

இன்று...

மண்ணில் : 06.02.1834

விண்ணில் : 23.05.1918

ஊர் : நார்ட்ஸ்ட்ராண்ட் பெனின்சுலா

நாடு : டென்மார்க்

தரிசன பூமி : சுமத்திரா தீவு

ஹூட்விக் நோம்மென்ஸன் பிறந்த தினம்

ஜேக் ஹைல்ஸ் 2001

ஜெபிக்க :

புனித லாரன்ஸ்



ஏழ்மையில் தெரியும் இறைவன்

கி.பி. 257ஆம் வருடம், சக்ரவர்த்தி வலேரியன் கிறிஸ்தவ சபைகளைத் துன்புறுத்தத் தொடங்கினான். அதற்கு முதற்கட்டமாக ஆயர்களையும், அத்தியட்சர்களையும் பிடித்து சிறையிலடைத்து சித்தரவதை செய்தான். பலர் தூக்கில் தொங்கவிடப்பட்டனர்.

ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவ சபைக்கு அக்காலத்தில் அதிக சொத்துக்கள் காணப்பட்டன. இவைகள் விதவைகள் மற்றும் ஆதரவற்றவர்களை கவனிக்கும்படியாகச் செலவிடப்பட்டன. பரிசுத்த லாரன்ஸ் இப்பணியை மிகவும் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் செய்து வந்தார்.

ரோம அரசாட்சிக்குட்பட்ட பிரிப்கெட் என்ற அரசன் ஒரு நாள் லாரன்ஸை அழைத்தான். திருச்சபையின் சொத்துக்கள் அனைத்தும் தன்னைச் சேரவேண்டும் எனவும் மூன்று நாட்களுக்குள் அவைகளை ஒப்படைக்கவும் ஆணையிட்டான். லாரன்ஸ் உத்தமத்தில் நிலை நிற்பவரல்லவா? எனவே அன்றே திருச்சபையின் சொத்துக்கள் அனைத்தையும் விற்று அவைகளை முடவர்கள், பார்வையற்றவர்கள், விதவைகள் ஆதரவற்றோர் மற்றும் ஏழைகள் அனைவருக்கும் பகிர்ந்தளித்தார். பின்னர் அம்மக்களை அவ்வரசனிடம் அழைத்துச் சென்று இவர்களே திருச்சபையின் சொத்துக்கள் என்றார்.

இதனைக் கண்ட அவ்வரசன் கடும் கோபத்துடன் லாரன்ஸை பிடித்து, கை கால்களைக் கட்டி இரும்புக் கட்டிலில் படுக்க வைத்து கீழே தீமூட்டச் செய்தான். ஈவு இரக்கமின்றி கொடுமைபடுத்தப்பட்டார். சுடர்விட்டு எரியும் நெருப்பிலும் அவர் முகம் தேவ தூதனைப் போலக் காட்சியளித்தது. வெகுநேரம் சென்ற பின்பு இவர் அரசனை நோக்கி, எனது உடல் நன்றாக வெந்துவிட்டது. இப்போது நீர் இதை எடுத்து உண்ணலாம் என்று சாந்தமாக பதிலளித்தார். பக்தர்கள் இவர் சடலத்தை எடுத்து அடக்கம் செய்தனர்.

அன்பரே, உமது செல்வங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்துக் கொடுப்பதில் இன்பமடைகிறீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உன்னை அநேகத்தின் பேரில் அதிகாரியாக்குவேன்.
உன் எஜமானின் சந்தோஷத்துக்குள் பிரவேசி – இயேசு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஏழைகளின் மீது கனிவு கொண்டு,
அவர்கள் நலனுக்காக என்றும் உழைப்பேன்.

தியானத்திற்கு : யாத். 15, சங்.69, மாற்கு.3.

இன்று...

மண்ணில் :
விண்ணில் : 258
ஊர் : ஆல்கா, ஸ்பானியா
நாடு : ஸ்பெயின்
தரிசன பூமி : ரோம்

தாமஸ் மூரே 1478
பிரடெரிக் டக்ளஸ் 1817
மேய்ப்பர் சுந்தரம் 1909

ஜெபிக்க :

Scanned with CamScanner

பெர்ப்பெத்துவா

விசுவாசத்தில் வீரம்



181 - 203

செப்டிமஸ் செவேருஸ் என்ற கொடுங்கோலன் ரோமை ஆட்சி செய்து வந்த காலம். கி.பி. 3ம் நூற்றாண்டின் துவக்கம் அது. கிறிஸ்தவர்கள் மிகவும் துன்புறுத்தப் பட்டனர். சிறையில் தள்ளப்பட்டு சித்தரவதை செய்யப்பட்டனர். சிங்கங்களுக்கு இரையாகப் போடப் பட்டனர். பலர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

பெர்ப்பெத்துவா, உயர்ந்த குலத்தைச் சார்ந்த ஒரு பெண். பெலிசித்தாள் என்பவர் அவளுடைய அடிமை. இருவரும் கிறிஸ்துவின் மேல் மிகுந்த பற்று கொண்டு, தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாகக் காட்டி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். கொடுங்கோல் அரசனுக்கு இச்செய்தி எட்டியது. இருவரும் பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

பெர்ப்பெத்துவாவின் கைகளிலோ சிறு ஆண்குழந்தை. பெலிசித்தாள் ஒரு நிறைமாத கர்ப்பிணி. எனினும் இவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டு சித்தரவதைக்குள்ளாயினர். ஆனால், இருவரும் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து நின்றனர். பெர்ப்பெததுவாவின் தந்தை எவ்வளவோ கெஞ்சி மன்றாடிக் கேட்டுக் கொண்ட பின்பும் அவள் கிறிஸ்துவின் மேல் உள்ள அன்பை விட்டு விலகவில்லை.

அது ஒரு இருள் படிந்த நாள். வீரப் பெண்மணிகளின் உயிரைப் பறிக்கவே பிறந்த நாள். ஆயினும், இரத்த சாட்சிகளுக்கு மகுடம் சூட்டப்படும் நாள். அரசன் தன் வீரர்களுக்குக் கட்டளைக் கொடுத்தான். விசுவாசப் பெண்மணிகளின் தலைகள் துண்டிக்கப்பட வேண்டும் என்பதுவே அவன் கட்டளை. இதனால் கிறிஸ்தவர்கள் பயந்துவிடுவர் என அவன் எண்ணினான்.

தங்கள் உயிரைக் காப்பாற்றக் கொடுக்கப்பட்ட கடைசி தருணத்தையும் கிறிஸ்துவுக்காக குப்பையாக்கினர். கிறிஸ்தவர்கள் அவர்களுக்காக உருக்கமாக வேண்டுதல் செய்ய அனைவர் கண்களுக்கு முன்பாகவும் தலை வெட்டிக் கொல்லப்பட்டனர். கிறிஸ்துவின் வீராங்கனைகள் விண்ணில் மகிழ்ந்தனர்.

அன்பரே! மரணம் வரை கிறிஸ்துவுக்குள் உறுதியாக நிலைத்து நிற்பீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : வீரமுடனும் அஞ்சா நெஞ்சத்துடனும் கிறிஸ்துவுக்காக பாடுகளை ஏற்றுக்கொள்ளுங்கள் - பெர்ப்பெத்துவா

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உமக்குள் வீரத்துடன் வளரவும், இயலாமையை அகற்றவும் எனக்குப் பெலன் தாரும்.

தியானத்திற்கு : யாத். 16, சங்.70-71, மாற்கு.4.

இன்று...

மண்ணில் : 181

விண்ணில் : 203

ஊர் :

நாடு : **ரோம்**

தரிசன பூமி : **ரோம்**

ஜார்ஜ் போர்டுமேன்

அலெக்ஸாண்டர் மெக்கே 1890

ஜெபிக்க :

தாமஸ் உவாக்கர்

1859 - 1912

தேது நற்செய்தி அறிவிக்கும் நாள்

பண்ணைவிளை பங்களா. அங்கு செல்வதற்கோ பலருக்கு பயம். ஏனெனில் அங்கு சென்றவர் எவரும் தனி மனிதனாய்த் திரும்பியதில்லை.

வாழ்வின் ஒளியாம் கிறிஸ்துவை, மனிதருக்கு காட்டும் பங்களா அது. அங்கு சென்றவர்கள் கிறிஸ்துவை இதயத்தில் ஏந்தியப்படிதான் திரும்ப முடியும்.

அந்த பங்களாவிற்கு சொந்தக்காரராய் இருந்தார் தாமஸ் உவாக்கர். இயேசுவின் தொண்டராய் இங்கிலாந்து நாட்டைவிட்டு இந்தியா வந்தார் அவர்.

திருநெல்வேலியின் திருப்புமுனையாய் தன்னைத் தியாகம் செய்தார். பேராயர் சர்ஜென்ட் அவர்களுடன் இணைந்து பேரானந்தத்தை மக்களுக்கு அளித்தார். வாழ்வின் உண்மையை எடுத்துரைத்தார்.

கிறிஸ்தவர்களை எண்ணிக்கையில் உருவாக்காமல், நடமாடும் உண்மைக் கிறிஸ்தவர்களாக உருவாக்கினார். வலுவான திருச்சபைகள், வசீகரத் தோற்றத்துடன், வானளாவ எழும்பின; அநேகர் திருமுழுக்கு பெற்று கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர்; சிந்தையில் மகிழ்ந்தனர்; செயலில் உயர்ந்தனர்.

உவாக்கர், கிராமம் கிராமமாக நடந்தும், மாட்டு வண்டியில் சென்றும் ஊழியம் செய்தார். பண்ணைவிளை வட்டாரம் அசைந்தது; உயிர் பெற்றது; உயிர்த்து எழுந்தது; செழித்து வளர்ந்தது.

ஏமிகார்மைக்கல் அம்மையாரின் ஊழியம் நிலைத்து நிற்க வழி செய்தார் உவாக்கர். இதனால் டோனாவூரில் அனாதைப் பிள்ளைகளின் இல்லம் உருவானது.

அநேக ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தி, மக்களை விழிப்படையச் செய்தார். இந்தியர்களின் ஆன்மீக எழுச்சிக்கு அடித்தளமிட்டார். நற்செய்திக்கு உரமிட்டார்.

மிஷனெரிகளின் மிஷனெரியாக, நற்செய்தி வீரனாக, ஓயாமல் ஓடி உழைத்த, "திருநெல்வேலி உவாக்கர்" என்றழைக்கப்படும் இவர், 1859ஆம் ஆண்டு, இதே நாள் பிப்ரவரி மாதம் பிறந்தார்.

அன்பரே! இந்த நாளில் ஒருவருக்காவது சுவிசேஷம் கூறுவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உயர்ந்த கருத்துகளை உலகம் தர முடியும்.
உயர்ந்த வாழ்க்கையையோ இயேசு மட்டுமே தருவார்.

- ஜீவ நீரோடை

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! இந்த நாளில், நான் சந்திக்கும் நபர்களை, உமக்குள் வழிநடத்த, எனக்கு உதவி செய்யும்.

தியானத்திற்கு : யாத். 17-18, சங்.72, மாற்கு.5.

இன்று...

மண்ணில் : 09.02.1859
விண்ணில் : 24.08.1912
ஊர் :
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : திருநெல்வேலி, இந்தியா

தாமஸ் வாக்கர் பிறந்த தினம்

பிஷப் ஜான் ஹீப்பர் 1555

ஜோனத்தான் கோபோர்த்



1859 - 1936

ஆண்டவர் ஆற்றல் தருவார்

மிஷனெரிப் பணி, அது உயிரைப் பணயம் வைத்து செயல்படும், பாடுகள் நிறைந்த பணி; பிறர் உயிர் வாழ தன்னுயிர் கொடுக்கும் தியாகப் பணி; பெறுவதும், இழப்பதும் இதில் சகஜம். மிஷனெரிகள் ஒவ்வொருவரும் இழப்பிற்குப் பெயர் போனவர்கள்.

1888ஆம் ஆண்டு தன் மனைவியுடன் பயணத்தை ஆரம்பித்தார் யோனத்தான் கோபோர்த். கனடா நாட்டிலிருந்து சீன நாட்டை நோக்கிய பயணம் அது. மிகுந்த தாகத்துடனும், மாபெரும் தரிசனத்துடனும் சீனாவை அடைந்தார்.

சுவிசேஷப் பணிக்கான இடங்களை தெரிவு செய்தார். ஊர் ஊராக, தெருத் தெருவாகச் சென்று பிரசங்கம் செய்ய வேண்டும் என்பதே இவரின் திட்டமாகும்.

மிஷனெரிப் பணியில் வசதிகளைத் தேடி ஓட முடியுமா? சுகாதார சீர்கேடுகள் இவரையும், குடும்பத்தையும் தாக்க ஆரம்பித்தது. இரத்த பேதி நோயினால், முதல் குழந்தையை இழந்தார். இரண்டாவது குழந்தை, உடல் செயல்பாடு இழப்பினால் மரித்துப் போனது. ஓர் அறியப்படாத நோயினால், மூன்றாவது குழந்தையும் மரித்துப் போனது. ஒன்றன்பின் ஒன்றாகத் தனது ஆறு குழந்தைகளையும் இழந்தார்.

வாழ்க்கையின் இழப்புகளால் வேதனை அடைந்த அவரை வேத வசனங்களே ஆறுதல் படுத்தியது. தன் இழப்பைப் பெரிதுபடுத்தாமல் மீண்டும் இறைபணியைத் தொடர்ந்தார். பலமுறைகள் சீன மக்களால் தாக்கப்பட்டார். நோய் நொடிகளால் தன் பலத்தை இழந்தார். பல இடங்கள் மாறியதால் அவர் உடல் சோர்வு கொண்டது.

"பாக்சர் யுத்தம்" என்று சொல்லப்படும் சீனப் போரில் படுகாயம் அடைந்தார். எத்தனையோ உபத்திரவங்கள் ஏற்பட்டபோதும், ஆயிரக்கணக்கான மக்களை இரட்சிப்பிற்குள் நடத்தி, ஞானஸ்நானம் கொடுத்தார்.

அயராத உழைப்பினாலும், வயோதிபத்தினாலும் பார்வைகள் மங்கி இழந்துபோன நிலையிலும் பரமனின் பணி செய்த கோபோர்த் பிறந்த தினம் இன்றுதான்.

அன்பரே! ஆற்றல் தரும் ஆண்டவரை உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ளீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவனுக்கென்று பெருங்காரியங்களைச் செய்வதில், முதலில் அவரைப் பூரணமாக நம்ப வேண்டும்.

– மேக் டொனால்டு

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மிடத்திலிருந்து ஆற்றலைப் பெற்றுக் கொண்டு நான் உமக்காக செயல்பட உதவி செய்யும்.

தியானத்திற்கு : யாத். 19-20, சங்.73, மாற்கு.6.

இன்று...

மண்ணில் : 10.02.1859

விண்ணில் : 08.10.1936

ஊர் : ஆக்ஸ்போர்டு, ஆன்டாரியோ

நாடு : கனடா

தரிசன பூமி : சீனா

ஜோனத்தான் கோபோர்த் பிறந்த தினம்

சவரா குரியாகோஸ் 1805

ஜெபிக்க :

G.U. போப்



1820 - 1908

நீங்கள் நினைத்தால் சாதிக்கலாம்

தமிழ் மண்ணில் வியப்பூட்டும் பணி செய்தவர்களுள் ஒருவர் ஜி.யு.போப். அறிவியல் முன்னேற்றங்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் செய்யமுடியாத மாபெரும் பணிகளைச் செய்தவர் இவர். தமிழின் பெருமையை வளர்த்த தலைச்சிறந்த அறிஞர்.

ஒரு நாட்டின் மொழியை அறியாமல் அந்த நாட்டில் கிறிஸ்துவின் பணியைத் திறம்படச் செய்ய இயலாது என்பதை உணர்ந்து, இங்கிலாந்து நாட்டிலே தமிழ் மொழியைக் கற்கத் துவங்கினார்.

1839ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலுள்ள சென்னை வந்தார். பின் திருநெல்வேலியில் சாயர்புரம் என்ற இடத்தை மையமாக வைத்து ஊழியங்களை ஆரம்பித்தார். எபிரேயம், கிரேக்கு, லத்தீன், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளையும் திறம்படக் கற்றார்.

தமிழ்நாட்டு கிறிஸ்தவ மக்களுக்காக சாயர்புரத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவினார். இவரின் இடைவிடாத உழைப்பால் 96 ஊர்களில் சபைகள் ஏற்பட்டன. ஞானஸ்நானத்திற்காக ஆயிரத்து நூறு மக்கள் தயாராயினர். அக்கம் பக்கத்து கிராமங்களில் பாடசாலைகள் கட்டப்பட்டன.

நாட்டு மக்களுக்கு மாபெரும் பணிகளைச் செய்தபோதிலும் பல இன்னல்கள் ஏற்பட்டன. சில ஊர்களில் அவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஒருமுறை அவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு பெண் மாட்டு சாணத்தைக் கரைத்து அவர்மேல் ஊற்றினார். அத்தனை பாடுகளையும் கிறிஸ்துவின் பேரில் உள்ள விசுவாசத்தாலும், மக்கள் அவ்வன்பைக் கண்டு கொள்ளவும் தாங்கிக் கொண்டார்.

தமிழ் மொழியில் ஏராளமான நூல்களை எழுதினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தன் வாழ்நாள் முழுவதும் போதகராகப் பணியாற்றிய இவர் இதே நாள் பிப்ரவரி 11ஆம் நாள் தமது 88ஆம் வயதில் விண்ணிற்குச் சென்றார்.

அன்பரே! கிறிஸ்துவுக்குள் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களிடம் உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நல்லொழுக்கமுள்ளவனே உயர்ந்த நிலைகளில் உயர முடியும் - ஆஸ்வால்டு சேண்டர்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மை அறியா மக்களுக்கு உந்தன் செய்தி கூற தந்தேன் என்னை உம் கைகளில்.

தியானத்திற்கு : யாத். 21, சங்.74, மாற்கு.7.

இன்று...

மண்ணில் : 24.04.1820
விண்ணில் : 11.02.1908
ஊர் : பிரின்ஸ் எட்வர்ட் தீவு
நாடு : நோவா ஸ்காட்டியா
தரிசன பூமி : இந்தியா

ஜி.யு.போப் நினைவு தினம்

ஜார்ஜ் போர்டுமேன் 1831

ஜெபிக்க :

Scanned with CamScanner

அலெக்ஸாண்டர் டஃப்

சுவிசேஷ சுடராய் பற்றியெரிவோம்



1806 - 1878

பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பம். இந்தியாவின் வங்காள மாநிலம் கிறிஸ்துவை அறியும் வாய்ப்பினைப் பெற்றது. பல மிஷனெரிகள் வங்காளத்தை உயிர்மீட்சி அடையச் செய்தனர்.

கியாந்தர், ரிங்கல் தௌபே, வில்லியம் கேரி, மார்ஷ்மென், வார்டு ஆகியோர் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர் கனம் அலெக்ஸாண்டர் டஃப்.

ஸ்காட்லாந்து நாட்டிலிருந்து இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்தவர். வரும் வழியில் இருமுறை அவரும் அவரது மனைவியும் கப்பல் சேதத்தினின்று தப்பினார்கள். பின்னர் பல இன்னல்களுக்குட்பட்டு 1830ஆம் ஆண்டு கல்கத்தா வந்து இறங்கினார்.

இவர் சொற்திறனும், எதையும் சாதிப்பதற்கான ஆற்றலும் படைத்தவர். வங்காள மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணி, கல்லூரி ஒன்றை 1830ஆம் ஆண்டு ஆரம்பித்தார். ஆனால் அக்கல்லூரி திறக்கப்பட்டபோது வெறும் ஐந்து மாணவர்களே வந்து சேர்ந்தனர்.

அலெக்ஸாண்டர் டஃப்பின் அயராத உழைப்பினால் 300 மாணவர்கள் கல்லூரியில் இணைந்தனர். டஃப் பலவித கலைகளையும், ஆங்கிலம் மூலம் அவர்களுக்கு கற்பித்தார். மக்கள் கல்வியில் முன்னேற்றமடைந்ததால் தங்கள் சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை மறையச் செய்தனர். உடன்கட்டை ஏறுதலின் கொடூரமும், குழந்தைப் பருவ விவாகமும் விடை பெற்றன. நற்செயல்கள் அனைத்தும் சரியான முறையில் நடைபெற்றன.

ஆங்கிலத்தில் கிறிஸ்தவ நற்செய்திக் கூட்டங்களை டஃப் ஆரம்பித்து, அநேகரை கிறிஸ்தவ போதனையில் வளரச் செய்தார். இதனால் வங்காளத்தில் புது யுகம் தோன்றியது.

அன்பரே! அறியாமை என்னும் இருளை அகற்ற உங்களைப் போன்ற அர்ப்பணிப்புள்ளோர் தேவையல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பற்றியெரியும் பக்தி இல்லாத ஒரு சீடனை, மன்னிக்கவே முடியாது. – மேக் டொனால்டு

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! உமக்குள்ளாக பற்றியெரியும் மனிதனாக என்னை விளங்கச் செய்யும்.

தியானத்திற்கு : யாத். 22, சங்.75-76, மாற்கு.8.

இன்று...

மண்ணில் : 15.04.1806
விண்ணில் : 12.02.1878
ஊர் : பெர்த்ஷையர்
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : இந்தியா

அலெக்ஸாண்டர் டஃப் நினைவு தினம்

ஆபிரகாம் லிங்கன் 1809

ஃபேனி கிராஸ்பி 1915
பிரதர். லாரன்ஸ் 1691

ஜெபிக்க :

Scanned with CamScanner

ரீஸ் ஹவல்ஸ்

1879 - 1950

முழங்கால்கள் கண்களாகட்டும்

சுயத்தால் சாதிக்க முடியாததை, ஜெபத்தால் சாதிக்க முடியும். ஜெபத்தை விட அதிக பலம் பொருந்திய ஆயுதம் வேறொன்றும் இல்லை. இது உண்மை தானே? நிச்சயம் உங்களால் உண்மை என்றே சொல்ல முடியும்.

ரீஸ் ஹவல்ஸ், ஜெபத்தில் ஒரு புதிய பரிணாமத்தைக் கண்டவர். இவரின் ஜெபம் ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடங்கியதல்ல. தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் ஜெபிப்போர் பலர்; ஆனால் பிறருக்காக ஜெபிப்பதிலேயே பேரானந்தம் அடங்கியுள்ளது என்றார்.

பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட ரீஸ் ஹவல்ஸ், பிறருக்காக பரிந்து மன்றாடுவதில் சிறந்தவர். இடைவிடாமல் ஜெபத்திலே தரித்திருந்தவர். ஜெபத்தின் மூலமாக இறைவனுடன் இரண்டறக் கலந்திருந்தார்.

விசுவாசத்துடன் கூடிய ஜெபத்தினால் அநேகர் இவர் மூலம் சுகம் பெற்றார்கள். சரீர சுகத்தை விட ஆன்மீக சுகத்திலே மிகுந்த அக்கறை உள்ளவராயிருந்தார்.

இங்கிலாந்தின் சுற்றுப்புறங்களில் ஊழியம் செய்த ஹவல்ஸ், கடவுளின் அழைப்பை ஏற்று தென்னாப்பிரிக்கா சென்றார். எழுப்புதல் கூட்டங்கள் மூலம் மக்களின் ஆன்மீக வாழ்வைத் தட்டி எழுப்பினார்.

நாடோடிகளுக்கு மறுவாழ்வு கொடுத்தார்; ஆதரவற்றக் குழந்தைகளின் தந்தையானார். ஜெபமே இவரின் வெற்றிக்கு மூலதனமாயிற்று.

தாய்நாடு திரும்பிய ஹவல்ஸ் மாபெரும் வேதாகமக் கல்லூரியை நிறுவினார். ஜெபக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அநேக மிஷனெரிகள் எழுப்பப்பட்டார்கள்.

“பரிந்துரை ஜெபவீரன்” என்றழைக்கப்படும் ரீஸ் ஹவல்ஸ் இதே நாளில் ஜெபத்தை கேட்கும் ஜெய வீரரோடு இணைந்தார்.

அன்பரே! ரீஸ் ஹவல்ஸை போன்று ஜெப வீரனாக காணப்படுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஜெபத்தினால் இளைப்பாறுதலை பெறாதவன்
இன்னும் இறைவனிடம் வந்து சேரவில்லை. – ஜீவ நீரோடை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஜெபிக்கும் முழங்கால்களை
எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : யாத். 23, சங்.77, மாற்கு.9.

இன்று...

மண்ணில் : 10.10.1879

விண்ணில் : 13.02.1950

ஊர் : பிரனமன்

நாடு : வேல்ஸ்

தரிசன பூமி :

ரீஸ் ஹவல்ஸ் நினைவு தினம்

கிறிஸ்டியன் பிரடெரிக் ஸ்வார்ட்ஸ் 1798

ஜெபிக்க :

தவறுகளைக் கண்டிப்போம்

புனித சிரில்

376 - 444

தவறான உபதேசங்கள் இன்று மட்டுமல்ல, ஆதித் திருச்சபைகளிலும் மலிந்து காணப்பட்டன. இயேசு கிறிஸ்து கூறியது போல, பல கொள்ளையர்களும், கள்ளர்களும் திருச்சபைக்குள் புகுந்து, தங்கள் விருப்பத்திற்கு இணங்கி, புதுப் புது வியாக்கினங்களைக் கொடுத்து மக்களை தவறாக வழிநடத்திக் கொண்டிருந்தனர்.

கி.பி. 376ஆம் ஆண்டில் பிறந்த சிரில் இத்தீமைகளை அகற்றவே பிறந்தார் எனலாம். பரிசுத்த வேதாகமத்தைக் கற்றறிந்து தூய வாழ்க்கை வாழ ஆரம்பித்தார். வேதப் புரட்சிகளுக்கு இடங்கொடாமல் கிறிஸ்துவின் சிந்தனைகளை உடையவராகக் காணப்பட்டார்.

கி.பி. 412யில் இவரது மாமா தெயோப்பிலு என்ற பக்தன் மரித்தபோது, திருச்சபையின் தந்தையாக சிரில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றுமுதல் மக்களுக்கு நமது ஆண்டவரைக் குறித்து போதிக்கத் துவங்கினார். அனுதினமும் இவரது பிரசங்கத்தால் மக்கள் ஆன்மீக வாழ்வில் மறுபிறப்படைந்தார்கள்.

கி.பி. 428ஆம் ஆண்டில் குருவாக நியமிக்கப்பட்ட நெஸ்டோரியஸின் தவறான போதனைகளைக் கண்டித்தார். 431ஆம் ஆண்டு பொதுச் சங்கம் ஒன்றைக் கூட்டி நெஸ்டோரிஸை திருச்சபைக்குப் புறம்பாக்கினார். இது அவருக்குப் பல எதிராளிகள் உருவாகக் காரணமானது. அவர்களின் சூழ்ச்சியினால் அந்தியோகியா நாட்டிலிருந்து லிபியா நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார்.

இவர் தன்னுடைய தூய்மையான வாழ்வினால் அநேகரைக் கிறிஸ்துவின் பக்கம் ஈர்த்தார். கிறிஸ்துவின் பெலனையும், அருளையும் அனுதினமும் தன் வாழ்வில் அனுபவித்தார். இறுதிவரை சத்தியத்திற்குச் சாட்சியாக விளங்கி தன் ஓட்டத்தை முடித்தார்.

அன்பரே! புரட்டு உபதேசங்களைத் தகர்க்க உங்களின் முயற்சி என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : திருவிருந்தில் பங்கு பெறுகிறவன் கிறிஸ்துவோடு இணைகிறான். கிறிஸ்துவும் அவனில் வாசம் செய்கிறார் – சிரில்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! புரட்டு உபதேசங்களைப் புரட்டி போடும் நெம்புகோலாக என்னை மாற்றும்.

தியானத்திற்கு : யாத். 24-25, சங்.78, மாற்கு.10.

இன்று...

மண்ணில் : 376

விண்ணில் : 444

ஊர் :

நாடு : அலெக்சாண்டிரியா

தரிசன பூமி : அலெக்சாண்டிரியா

ரிச்சர்டு ஆலன் 1760

பிரடரிக் டக்ளஸ் 1818

ஜெபிக்க :

Scanned with CamScanner

அமந்தா ஸ்மித்

1837 - 1915

வரலாற்றில் செயல்படும் தேவன்

அடிமைத்தனம். பல நூற்றாண்டுகளாக, பல்வேறு சூழ்நிலைகளில், மக்கள் சிக்குண்டு அடிமைகளாக சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றனர். பேச முடியாதவர்களாக, சுயமாக எதையும் செய்ய முடியாதவர்களாக, தங்கள் கைகள் கட்டப்பட்டு, அடிமைகளாக நடத்தப்பட்டுள்ளனர்.

அமந்தா ஸ்மித். அடிமைகளாக வாழ்ந்த கருப்பு இன பெற்றோரின் மகளாக பிறந்தார். தனது குடும்பத்தை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்க முயன்ற தந்தையின் முயற்சி ஏதும் பலன் தரவில்லை. ஆனால், ஆண்டவரின் சித்தப்படி, அவரது எஜமாட்டியின் கண்களில் தயவு கிடைத்தது. குடும்பமானது அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றது.

1856ஆம் ஆண்டு, தேவனுக்கு தன்னை அர்ப்பணித்தார். 1863ஆம் ஆண்டு, ஜேம்ஸ் ஸ்மித் என்ற கர்த்தருடைய ஊழியரை மணந்தார். ஆண்டவர் தன்னை ஊழியத்திற்கு அழைப்பதை உணர்ந்தார். ஆராதனை ஒன்றில் தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார்.

தினமும் கைநிறைய சுவிசேஷ கைப்பிரதிகளை எடுத்துக்கொண்டு, வீதிதோறும் கொடுக்க ஆரம்பித்தார். தான் காணும் அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவித்தார். உயிர்மீட்சி கூட்டங்கள் நடத்தி, மக்களின் ஆன்மாக்களை உயிரடையச் செய்தார். அமந்தாவின் செய்திகள் ஆயிரமாயிரம் பேரைத் தொட்டது.

1878ஆம் ஆண்டு நண்பர்களின் உற்சாகமான தூண்டுதலினால், இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று, கெஸ்விக் கன்வென்ஷன் கூட்டங்களில் பிரசங்கிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். அயர்லாந்து, ஸ்காட்லாந்து மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்து, நற்செய்தியை அறிவித்தார்.

இந்தியாவிற்கு திரும்பிய இவர், ஏழை எளிய மக்களின் நலனுக்காக பாடுபட்டு, கோலார் என்ற இடத்தில் அனாதை குழந்தைகள் இல்லம் ஒன்றை அமைத்தார். ஆப்பிரிக்க நாட்டில் 8 ஆண்டுகள் பணிசெய்த இவர், கருப்பு இன மக்களுக்காக தொழிற்கூடம் ஒன்றை கட்டி, வேலை வாய்ப்பினை அளித்தார். மக்களின் உயர்வுக்காக தன்னை அர்ப்பணித்த இவர், ஒவ்வொரு மனிதரிலும் இறைவனைக் கண்டார்.

அன்பரே! உங்கள் நேரங்களை ஆண்டவர் பணிக்காக எவ்விதம் செலவிடுகின்றீர்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நாம் கர்த்தருக்கு கீழ்படியும்போது,
அதன் முழு பொறுப்பும் அவரைச் சார்ந்தது - ஹட்சன் டெய்லர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் ஜீவிய காலமெல்லாம்,
உந்தன் பணி செய்ய என்னைத் தருகின்றேன்.

தியானத்திற்கு : யாத்.26, சங்.79-80, மாற்கு.11.

இன்று...

பிறப்பு : 1837
இறப்பு : 15.02.1915
ஊர் : லாங்க் கிரீன், மேரிலாண்ட்
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : ஆப்பிரிக்கா, இந்தியா,

அமந்தா ஸ்மித் நினைவு தினம்

கலிலியோ கலிலி 1564
வில்லியம் மில்லர் 1782
ஜேம்ஸ் ரென்ஸ்விக் 1662

ஜெபிக்க :

Scanned with CamScanner

வேத மாணிக்கம்

- 1827

மனந்திரும்பினால் மறுவாழ்வு

இந்தியா மிகத் தொன்மையான வரலாறு கொண்டது. எனினும் மிகவும் சிக்கலான சமூக அமைப்பைக் கொண்டது. பல்வேறு சமயங்களும், ஜாதிகளும், எண்ணிக்கைக்கு அடங்கா சிறு கடவுள்களும் நிறைந்த நாடு.

19ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் கன்னியாகுமரி பகுதிக்கு வந்தபோதே சிக்கலான சமூக அமைப்புகள் சுமூகமான விடுதலையைக் கண்டது. நாகரீகமும், நலமான வாழ்வு முறையும் மக்களிடையே முளைத்து எழும்பின. குட்டி தெய்வங்களுக்கு முன் குனிந்துக் கிடந்த மக்கள், இயேசு கிறிஸ்துவுக்குள் தலை நிமிர ஆரம்பித்தார்கள்.

1750ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர், மகாராஜன் வேதமாணிக்கம். சிறுவயதிலேயே சிவ பக்தராகவும், உண்மை, ஆன்மீகம் ஆகியவற்றைத் தேடும் உயர்ந்த நாட்டம் உடையவராகவும் காணப்பட்டார். 1799ஆம் ஆண்டு சிதம்பரம் என்ற இடம் நோக்கி புண்ணிய பயணம் மேற்கொண்டார். அங்கு நடைபெற்ற வழிபாடுகள் அவருக்கு வெறுப்பையும், ஏமாற்றத்தையுமே தந்தன. இதனால் மனமுடைந்த அவர் ஓர் தூணில் சாய்ந்து தூங்கிவிட்டார். அப்போது வெண்ணங்கி தரித்த ஒரு தூதன் கனவில் தோன்றி, "நீ செல்ல வேண்டிய இடம் வேறு; புறப்படு, வழிகாட்டுகிறேன்" என்று கூற, உடனே அச்சத்தத்திற்குக் கீழ்படிந்து நடந்தார்.

தஞ்சாவூரில் கோலாப் போதகர் மூலம் கிறிஸ்துவின் சத்தியத்தை அறிந்த இவர் ஞானஸ்நானம் பெற்று புதிய மனிதனானார். தான் பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெறவேண்டும் என்ற வாஞ்சையில் தன் உறவினர்கள் அனைவருக்கும் கிறிஸ்துவைப் பற்றி அறிவித்து அவர்களும் ஞானஸ்நானம் பெறச் செய்தார்.

ரிங்கள் தௌபே மிஷனெரி மூலம் பல திருச்சபைகள் கட்டப்பட உதவினார். மயிலாடி என்ற ஊரானது வேதமாணிக்கத்தால் சுடர்விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்தது. தென்திருவிதாங்கூரின் முதல் கிறிஸ்தவரான இவர் சுவிசேஷத்தினிமித்தம் பாடுகள் பட்டு, பலரைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்.

அன்பரே! உங்கள் உறவினர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விட்டார்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கடவுள் நம்முடைய நண்பராக இருக்கவில்லையானால், எந்த ஒரு நண்பனும் நமக்கு உதவ முடியாது -மார்ட்டின் லூத்தர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னுடைய உறவினர்கள் அனைவரும் என் மூலம் இரட்சிக்கப்பட என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : யாத். 27, சங். 81-82, மாற்கு. 12.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : 1827

ஊர் : மயிலாடி

நாடு : இந்தியா

தரிசன பூமி : மயிலாடி, இந்தியா

பிலிப்பு மெலாங்தன் 1497

பெஞ்சமின் ஹாப்ஸன் 1873

ஜெபிக்க :

1909 - 2001

வேதனையில் வரும் வெற்றி

ருமேனியா நாடு. கம்யூனிச கொள்கை தலைவிரித்தாடிய சமயம். கிறிஸ்தவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவு சித்தரவதைகளை அனுபவித்தனர்.

பல கிறிஸ்தவ சபைகள் கம்யூனிச ஆட்சிக்கு இணங்கி செயலற்றுப் போயின. இக்கட்டான சூழ்நிலை எங்கும் நிலவியது. அச்சமயத்தில் சிங்கமெனச் சீறி எழுந்தார் ரிச்சர்ட் உம்பிராண்ட்.

திருச்சபையை பாதுகாக்கும் எண்ணத்திலும், மக்களை விசுவாசத்தில் நிலைக்கச் செய்யும் முயற்சியிலும் விறுவிறுப்பாகச் செயல்பட்டார். இரகசியமாக பாதாள ஆலயம் ஒன்றை ஏற்படுத்தினார். மக்கள் கூட்டம் நிறைந்தது. உலக பயங்கள் அனைத்தும் அவர்களை உதறிவிட்டு ஓடியது.

ரிச்சர்டு ஒரு போதகராக செயல்பட்டார். மக்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தை அனுதினமும் கொடுத்துக் கொண்டிருந்தார். அஞ்ஞானத்தின் கொடுமைகளும் அதிகமானது. கம்யூனிசவாதிகள் கிறிஸ்தவர்களின் நிலங்களை அபகரித்தனர். வீடுகள் சிதைக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் தங்க வீடின்றி வீதிகளில் அலையும் அபாயமான நிலை ஏற்பட்டது.

1948ம் ஆண்டு. ரிச்சர்டு தம் பாதாள ஆலயத்திற்கு போகும் வழியில் திடீரென ஒரு கும்பல் ரிச்சர்டை மடக்கிப் பிடித்தது. 8 ஆண்டுகள் சிறையில் கொடூரமான தண்டனைகளை அனுபவித்தார். அவர் இறந்து விட்டார் என்ற செய்தியே அவரின் மனைவிக்கு சொல்லப்பட்டது. அந்நிலையிலும் அவர்கள் தேவனைத் துதித்துப் பாடினார்கள்.

கம்யூனிசம் நல்லது, கிறிஸ்தவம் முட்டாள்தனமானது என்ற வார்த்தைகளையே நாள்முழுவதும் கேட்கவேண்டியதிருந்தாலும் ரிச்சர்டு இயேசுவை போற்றி பாடுவதிலேயே உறுதியாயிருந்தார். பல கொடூரத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் 25 வருடங்கள் சிறைத் தண்டனை பெற்றார்.

வேதப்புத்தகத்தை ருமேனியர்களுக்கு கொடுப்பதில் தீவிரம் காட்டி, கம்யூனிச வாதிகளுக்கு சிம்மச் சொப்பனமாக விளங்கிய ரிச்சர்டு தன் வாழ்நாளின் இறுதியில் இரத்தசாட்சியானார்.

அன்பரே! ரிச்சர்டு உம்பிராண்டை போல் விசுவாசத்தில் உறுதியாக நிற்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எங்களுடைய கருவிகளாகிய சுவிசேஷங்கள், வேதாகமங்கள், இலக்கியங்கள் முதலியவைகளைக் கொடுங்கள். நாங்கள் மற்றவைகளை பார்த்துக் கொள்கிறோம். - ரிச்சர்ட் உம்பிராண்ட்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! சோதனைகள் அனைத்திலும் வெற்றி காண எனக்கு உதவி செய்யும்.

தியானத்திற்கு : யாத். 28, சங்.83-84, மாற்கு.13.

இன்று...

மண்ணில் : 1909

விண்ணில் : 2001

ஊர் : புக்காரெஸ்ட், இஸ்தான்புல்

நாடு : துருக்கி

தரிசன பூமி : ருமேனியா

ஜாண் ஹைடு 1912

பிரான்சிஸ் விலார்ட் 1898

ஜேம்ஸ் ஹென்ஸ்விக் 1688

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஹென்றி மார்ட்டின்



1781 - 1812

உங்களால் முடியும்

மாபெரும் தேர் ஊர்வலம் அது. மக்கள் கூட்டம் அலைமோதியது. தேர்ச் சக்கரத்தின் அடியில் சிறுவன் ஒருவன் விழுந்தான். சிறிது நேரத்தில் துடிதுடிக்க இறந்தான். சில நிமிடங்களுக்குள் பலர் தானாகவே அச்சக்கரத்தினுள் விழுந்து தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

இதயம் வேகமாய் துடிதுடிக்க அச்செயலை தடுத்து நிறுத்த முடியாமல் திகைத்தான் 24 வயது நிரம்பிய ஒரு வாலிபன். இந்தியாவின் இதயங்களை கிறிஸ்துவுக்கு நேராக திசை திருப்ப, இங்கிலாந்திலிருந்து வந்த ஹென்றி மார்ட்டின் என்பவரே அந்த வாலிபர்.

கணவன் இறந்தவுடன் மனைவியும் எரிக்கப்படும் அகோரக் காட்சிகளையும் கண்டு ஆத்திரம் கொண்டார். மூடத்தனங்களினால் மக்கள் சிக்குண்டு இருப்பதைக் கண்டு வேதனை அடைந்தார். இதனை அகற்றும் வழி என்னவென சிந்திக்கலாயினார்.

வேதாகம புத்தகம் மட்டுமே இவர்களை மூடத்தனத்திலிருந்து விடுவிக்க முடியும் என்பதை வில்லியம் கேரி அவர்கள் மூலம் அறிந்துகொண்டார்.

ஹிந்தி, வங்காளம், பாரசீகம், சமஸ்கிருதம், அரேபியம் போன்ற மொழிகளைக் கற்று அம்மொழிகளில் வேதாகமத்தை மொழிப்பெயர்த்தார்.

இஸ்லாமியர்கள் மத்தியில் மிகவும் சிறப்பாக பணியாற்றினார். ஐந்து பள்ளிகளை ஆரம்பித்தார். அரேபிய மொழியில் வேதாகமத்தைக் கொண்டுவர அரும்பாடுபட்டார். சற்றும் ஓய்வில்லாமல் உழைத்ததால் அவர் உடல் பலவீனப்பட்டது.

இந்தியாவிலிருந்து பெர்சியா சென்று வேதாகமத்தை அரேபிய மொழியில் வெளியிட்டார். கால நிலைகள் அவர் உடலை முற்றிலும் காயப்படுத்தின. உள்ளத்திலோ உறுதியுடன் காணப்பட்ட இவர் தனது 31ம் வயதில் மரித்தார். இம்மாபெரும் மிஷனெரி இதே தினத்தில் பிறந்தார்.

அன்பரே! இளம் வயதில் இயேசுவுக்காக என்ன சாதனை புரிகிறீர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் தேவனுக்கென்று நெருப்பாய் எரிந்து போகட்டும் – ஹென்றி மார்ட்டின்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னையும் கொண்டு பெரிய காரியங்களைச் செய்ய இதோ அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : யாத். 29, சங்.85-86, மாற்கு.14.

இன்று...

மண்ணில் : 18.02.1781

விண்ணில் : 16.10.1812

ஊர் : ட்ரூரோ, கார்ன்வால்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இந்தியா, பெர்சியா

ஹென்றி மார்ட்டின் பிறந்த தினம்

மார்ட்டின் லூத்தர் 1546

ஜெபிக்க :

ஆபிரகாம் லிங்கன்



1809 - 1865

ஜெபம் ஜெயத்தைத் தரும்

கடின முயற்சிகளும் விடாமுயற்சிகளும் முன்னேற்றத்தைத் தரும். ஆனால் ஜெபமோ ஜெயத்தைத் தரும். வாழ்க்கையின் முன்னேற்றத்தோடு கூடிய ஜெபம் நமக்கு அவசியம். பாவத்தை வென்று மகிழ்ச்சியடைய ஜெபமே சிறந்த வழியாகும். ஜெபத்தின் இரகசியத்தை அறிந்துகொண்டதினால் உயர்வு பெற்றவரே அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தன்னை மாற்றிய ஆபிரகாம் லிங்கன்.

பிறப்பிலே இவர் ஏழ்மை. ஒரே ஒரு வருடம் மட்டுமே பள்ளிக்கு சென்றவர். சிறுவயதிலேயே வழக்கறிஞராக மாற வேண்டும் என்ற தீரா ஆசை கொண்டு வளரும் பருவத்தில் அதனை நிறைவு செய்தார். பல கால கட்டங்களில் பற்பல தோல்விகள், ஏமாற்றங்கள், பரிகாசங்கள், ஆனால் இவர் எவற்றையும் கண்டு துவண்டு விடாமல் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றிக் காட்டினார்.

1861ம் ஆண்டு அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களுக்காக உழைக்கத் தன்னை அர்ப்பணித்தார். ஆப்பிரிக்கர்களை அடிமைகளாகப் பயன்படுத்தி வந்த அநியாயச் செயலை அடியோடு ஒழித்தார். பிளவுபட்ட அமெரிக்காவை ஒன்றாக இணைத்தார்.

வேத வசனங்களின் மீது அபார நம்பிக்கை கொண்ட இவர், தன் பேச்சுக்கள் மூலம் வேத வசனங்களை மக்களிடம் பதியச் செய்தார். ஆண்டவருக்கு முதலிடம் கொடுத்த இவர் தன் அலுவலகத்தில் ஜெபத்திற்கென்று நேரம் ஒதுக்கினார்.

உள்நாட்டு, அயல்நாட்டுப் பிரச்சனைகள் நேர்ந்தபோது முழங்கால் மூலமாகவே அவற்றிற்கு வெற்றி கண்டார். தன் வாழ்நாளில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் மனிதராக வாழ்ந்து காட்டினார்.

இத்தகைய மாபெரும் விசுவாச வீரர் 1865ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் ஒரு நடிகனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் மறைந்தாலும் அவர் ஏற்றிய சுதந்திர தீபம் இன்னும் அணையவில்லை.

அன்பரே! ஆண்டவருக்குள் ஜெயம் பெற புறப்பட்டு விட்டீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இன்றைய கடமையை தள்ளி வைப்பதால்
நாளைய கடமையிலிருந்து தப்பித்துவிட முடியாது.
- ஆபிரகாம் லிங்கன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் கடமையை வெற்றியுடன் செய்து முடிக்க
உம்முடைய ஆற்றலை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : யாத். 30, சங்.87-88, மாற்கு15-16.

இன்று...

மண்ணில் : 12.02.1809

விண்ணில் : 14.04.1865

ஊர் : ஆர்டின் கவுன்டி, கென்டுக்கி

நாடு : அமெரிக்கா

தரிசன பூமி : அமெரிக்கா

வில்லியம் சாவ்ட்ரே 1401

மைல்ஸ் கவர்டேல் 1569

ஜெபிக்க : கென்னத் ஜெப தாஸ், சென்னை.

பிரடரிக் டக்ளஸ்



1818 - 1895

அடக்குமுறையை அழிப்போம்

அடிமைத்தனம் இது காலம் காலமாக சில சுயவர்களால் கட்டாயப்படுத்தப்பட்ட ஒன்று. தான் வாழப் பிறர் வாழ்வை அழிப்பது இது; எல்லோரும் இவ்வுலகில் வாழப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் நமக்கு வேண்டும்; அதுவே உயர்ந்த எண்ணம்.

ஆனால், சிலர் இதை புரிந்தாலும் புரியாதவர்கள் போல் நடிக்கிறார்கள். அவர்களுக்கும் புரிய வைப்பது நமது கடமையன்றோ!

பிரடரிக் டக்ளஸ் பல்வேறு அமெரிக்க வெள்ளையர்களிடம் அடிமையாக, பல கொடுமைகளை அனுபவித்தவர். காரணம்? இவர் ஒரு ஆப்பிரிக்க கருப்பு மனிதர். அந்நாட்களில் வாய்திறந்து பேச முடியாதவர்களாக இந்த ஆப்பிரிக்க கருப்பர்கள் அடிமைகளாக்கப்பட்டார்கள். சொல்லொணா வேதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இவரால் அடிமைத்தனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. பொங்கி எழுந்தார்; அங்கிருந்து தப்பித்து ஓடினார்; விடுதலை ஒன்றே அவர் நோக்கமாயிருந்தது.

இவர் பேச்சாற்றலில் சிறந்தவர். மிகுந்த புத்திக்கூர்மை உடையவர். அடிமை எதிர்ப்பு சங்கத்தில் இணைந்து பேச்சாளரானார். "ஆண் பெண் சமம், நாம் அனைவரும் சகோதரர்கள்" என வீர முழக்கமிட்டார்.

அடிமைத்தனத்தினின்று மக்களை விடுவிக்க பல பத்திரிக்கைகளைத் துவக்கி, அவற்றில் தம் கருத்துக்களை எழுதி மக்களை விழிப்படையச் செய்தார். கருப்பு இனத்தோரின் புரட்சி வீரனாக மாறினார். அனைத்திற்கும் மேலாக, இவர் ஒரு சிறந்த போதகராக தம் பணியை திருச்சபையில் ஆற்றினார். கிறிஸ்து காட்டிய பாதையில் அனுதினமும் மக்களை நடத்தினார். சத்தியமாகிய இயேசுவை மக்களுக்குக் கொடுத்து, அவர்கள் விடுதலை வாழ்வுக்கு வழி வகுத்தார். சத்தியம் தானே விடுதலை தர முடியும்?

ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் விடுதலைக்கு வித்திட்ட இவர், இதே நாள் பிப்ரவரி 20ல் வெற்றிவாகைச் சூடினார்.

அன்பரே! அடக்குமுறைகளை அடக்க அணி திரண்டு செயல்படுவோமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தன் முழுமையையும் ஈடுபடுத்தி சுயத்தை
வெறுத்து செய்யும் பணியே அன்பு – கிரிப் தாமஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் முழுமையையும் உமக்கு அர்ப்பணித்து
சமத்துவ சமுதாயம் படைக்க இதோ வருகிறேன்.

தியானத்திற்கு : யாத். 31-32, சங்.87-89, 1கொரி.1-2.

இன்று...

மண்ணில் : 14.02.1818
விண்ணில் : 20.02.1895
ஊர் : டால்பாட் கவுன்டி, மேரிலாண்ட்
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : அமெரிக்கா

பிரடெரிக் டக்ளஸ் நினைவு தினம்

கேத்தரின் குல்மேன் 1976

ஜெபிக்க :

Scanned with CamScanner



1902 - 1945

நீங்கள் தான் சாட்சிகள்

ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள அர்மடேல் பட்டணம். அங்கு ஓர் சுவிசேஷக் கூட்டம். மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தனர். அக்கூட்டத்தில் பேசப்போவது யார்? ஓட்டப் பந்தயத்தின் சாதனை வீரன் எரிக் லிட்டல் என்பவர் தான் அந்நாளின் பிரசங்கியார். 100 மீ. ஓட்டத்தில் உலக சாதனை செய்தவர்.

கிறிஸ்துவின் மீதுள்ள தன் பற்றை உலகம் அறிய வேண்டுமென ஆவல் கொண்டதோடு, தன் விசுவாசத்தையும், வெற்றியின் காரணத்தையும் மக்களிடம் பறைசாற்றிக் கொண்டிருந்தார். அந்த சாட்சி அநேகரை கிறிஸ்துவிடம் வழி நடத்தியது.

ஸ்காட்லாந்து மிஷனெரிப் பெற்றோரின் செல்ல மகனாக சீனாவில் பிறந்தார். எடின்பரோவில் கல்வி கற்றார். இளம் வயதிலேயே விளையாட்டுத் துறையில் வெற்றிகளைக் குவித்தார். விடா முயற்சியில் தொடர் வெற்றிகள் குவிந்தன.

1924ஆம் வருடம். பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாயின. அப்போட்டியில் பங்குபெற விரும்பிய அவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. 100 மீ. ஓட்டப் பந்தயத்திற்கான போட்டி, ஓய்வு நாளான ஞாயிற்றுக் கிழமையில் குறிக்கப்பட்டிருந்ததே அதற்குக் காரணம்.

உலகப் புகழா? தேவனுக்குக் கீழ்ப்படிவதா? சாட்சியாய் இருக்க வேண்டுமா? காட்சிப் பொருளாய் மாற வேண்டுமா? மனதிலே போராட்டம். ஆண்டவரின் நாளில் ஆகாத காரியங்களில் ஈடுபட அவர் மனம் இசையவில்லை.

சாட்சியாய் வாழ்பவர்கள் சாதிப்பார்கள். ஆம். எரிக் லிட்டல் சாதித்தார். 100 மீ. ஓட்டத்திற்கு பதிலாக மற்றொரு நாளில் நடந்த 400 மீ. ஓட்டத்தில் ஓடித் தங்கப் பதக்கம் பெற்றார். உலக சாதனை புரிந்தார்.

கிறிஸ்துவின் போர் வீரராக சீனாவுக்கு மிஷனெரியாக சென்று அநேகரை இரட்சிப்பின் பாதையில் நடத்திய எரிக் லிட்டல் இதே நாள் பிப்ரவரி மாதம், 1945ஆம் ஆண்டு தன் பூலோக ஓட்டத்தை முடித்தார்.

அன்பரே! சாட்சியான வாழ்வு வாழ இயேசு உங்களை அழைக்கிறாரல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்தவன் சாட்சியாக வாழாவிட்டால்,
காட்சி பொருளாய் மாறி விடுவான் - வேதா

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மைப் பின்பற்றி உமக்கு பணிசெய்து
உந்தன் சாட்சியாய் என்றும் வாழ்ந்திடுவேன்.

தியானத்திற்கு : யாத். 33-34, சங்.90-91, 1கொரி.3.

இன்று...

மண்ணில் : 26.01.1902
விண்ணில்: 21.02.1945
ஊர் : டைன்ஜின்
நாடு : சீனா
தரிசன பூமி: சீனா

எரிக் லிட்டல் நினைவு தினம்
ஜான் ஹென்றி நியூமன் 1801
மைல்ட்ரெட் கேபிள் 1878
ஆன்செல்ம் 1109

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஜான் கூட்டன்பர்க்



1398 - 1468

புதுமைகளைச் செய்யுங்கள்

15ஆம் நூற்றாண்டு சரித்திரம், பல சாதனைகள் நிகழ்ந்த ஆண்டுகளை உள்ளடக்கியது. அறிவியல் உலகம் தன் கண்களை அகலத் திறந்த வருடங்கள் இதில் உள்ளன. இறைவன் பேசிய இனிய வார்த்தைகள் உலகத்தில் அச்சடிக்கப்பட்டது.

ஜான் கூட்டன்பர்க் என்ற மாமனிதரை ஆண்டவர் தெரிந்தெடுத்தார். சாதிக்க வேண்டும் என்ற துணிவும், செயலில் பொறுமையும், விவேகமும் கொண்டவர் இவர். உலகிற்கு ஓர் உன்னத கொடையை வழங்கத் திட்டமிட்டார். இரவு முழுவதும் கண்விழித்தார். தூக்கத்தை தூரத்தில் விரட்டினார். சிந்தனைகளை சிதறவிடாமல் ஒருமுகப்படுத்தினார்.

தோல் சுருளில் எழுதிய வேதாகமத்தைக் கொண்டு ஆண்டவரிடம் பேசினார். அற்புதமான ஆலோசனையைப் பெற்றார். ஆம். அச்சுக்கலையை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

தோல் சுருளில் எழுதப்பட்ட வேத வசனங்களை கண்டுபிடித்து அவைகளை இறைவனின் பாதம் சமர்ப்பித்தார். மக்கள் ஒவ்வொருவரும் இவ்வேதாகமத்தை பெற்றிட வேண்டும் என்ற தணியா தாகம் கொண்டார். இவரின் கடின உழைப்பும், தரிசனப் பார்வையும் காண்போரை கவர்ந்திழுத்தன. பணப் பற்றாக்குறை அவரை பரிகாசம் செய்தது. ஏழ்மை மறுபுறம் இகழ்ந்தது. வேதாகமத்தை அச்சு வடிவில் வெளிக்கொணர வேண்டும் என்பதே அவர் நோக்கமாகக் காணப்பட்டது. மரத்துண்டுகளால் எழுத்துக்களை உருவாக்கினார்.

காலங்கள் நகர்ந்தன. உலோக எழுத்துக்களை உருவாக்கினார். வேதப் புத்தகத்தின் பக்கங்களை அச்சில் ஏற்றினார். ஆச்சரியமான அதன் பக்கங்கள் அழகழகாக வெளிவந்தன. ஆண்டவரின் சித்தத்தை உணர்வுடன் படிக்கத்தக்கதாக 1454ம் ஆண்டு கூட்டன்பர்க் வேதாகமம் வெளிவந்தது. பல வருட உழைப்பு பலனைத் தந்தது. பரிகாசம் செய்தவர்கள் பவ்யமாய் நின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் பரமனை அறிந்தனர்.

ஆண்டவர் உங்களையும் தமது பணியில் வித்தியாசமான செயல்களைச் செய்ய அழைக்கிறார். உங்களின் அர்ப்பணிப்பு உலகம் போற்றும் பல பணிகளைச் செய்யவும், அரும் பெரும் காரியங்களைச் சாதிக்கவும் வழிவகுக்கும். இது உண்மையன்றோ!

அன்பரே! கிறிஸ்து உங்களில் செயல்படும்போது சாதனைகள் மலருமல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்து வாழ்கிறார் என்பதை வாயினால் சொல். அவர் உன்னிடம் வாழ்கிறார் என்பதை வாழ்க்கையினால் சொல்

– ஜீவ நீரோடை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! புதுமையான காரியங்களை நான் செய்து உம் நாமத்தை என்றும் மகிமைப்படுத்துவேன்.

தியானத்திற்கு : யாத். 35, சங்.92-93, 1கொரி.4-5.

இன்று...

பிறப்பு : 1398

இறப்பு : 23.02.1468

ஊர் : மெயின்ஸ்

நாடு : ஜெர்மனி

தரிசன பூமி : ஜெர்மனி

அன்னையர் தினம்

சாரான் பிளவர் ஆடம்ஸ் 1805

ஜெபிக்க :

Scanned with CamScanner



69 - 156

விசுவாசத்தில் உறுதிபடுங்கள்

இதே நாள். பிப்ரவரி 23. கம்பத்தில் கட்டப்பட்டவராக விறகுகள் சூழ்ந்திருக்க, எரித்துக் கொல்லப்படுவதற்குத் தயார் நிலையில் நின்று கொண்டிருந்தார் 86 வயது முதியவர். உள்ளத்திலோ அவர் இளைஞர்.

விசுவாசத்தில் வீரம் நிறைந்தவர். தூய யோவானின் சீடர். மரணத்தைக் கண்டு பயப்படாதவர். கிறிஸ்துவினிமித்தம் துன்பப்படுவதை இன்பமாக எண்ணியவர். அவர்தான் சிமிர்னா பேராயர் போலிகார்ப்.

கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட காலம் அது! இராயனை கடவுள் என்று வணங்கக் கட்டளையிடப்பட்ட வேளை; இராயனை வணங்காதவர்கள் சிங்கத்திற்கு இரையாகப் போடப்பட்டனர்; கிறிஸ்துவைப் பின்பற்றியதால் பலவித சித்தரவதைகளுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாயினர்.

போர்வீரர்கள் போலிகார்ப்பைப் பிடித்தனர், தரதரவென இழுத்து வந்தனர். விசாரணைகள் விலாவாரியாக நடந்தன; கிறிஸ்துவைப் பின்பற்றியது மட்டுமே குற்றம்; கிறிஸ்துவை மறுதலித்தால் விடுதலை.

போலிகார்ப்பிடம் எந்த பயமுறுத்தல்களும் பயனளிக்கவில்லை. கிறிஸ்துவை மறுதலிக்கக் கூறியவர்களிடம் கிறிஸ்துவின் அன்பினை அழகுற எடுத்துக் கூறினார்.

தன் முடிவு நெருங்கிவிட்டதை உணர்ந்தார். கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியுடனும் தெளிவுடனும் இருக்கும்படி கேட்டுக் கொண்டார். மறைமுகக் கிறிஸ்தவர்கள் மனதுக்குள் அழுதனர். துயரத்தை எப்படி வெளிக்காட்டுவது என தயங்கினார். வெளிப்படையாகத் தெரிந்தாலோ அவர்களுக்கும் அதே கதிதான்!

பேராயர், தான் இரத்தசாட்சியாக மரிக்கும் முன் தனக்கு இப்படிப்பட்ட மரணத்தைத் தந்த தேவனைத் துதித்தார். சற்று நேரத்திற்குள் அவர் உடலை தீ சூழ்ந்து நின்றது. அவர் முகமோ தேவதூதரைப் போல ஜொலிக்க தேவலோகம் சென்றார்.

அன்பரே! போலிகார்ப்பைப் போன்ற விசுவாசம் உம்மிடம் உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எந்த ஒரு கிறிஸ்தவனும் தனது ஆவிக்குரிய நிலையைப் பற்றிய சுய திருப்தி கொள்ளக்கூடாது.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! விசுவாசத்தில் ஆழ வேரூன்றி உமக்குள் கனிதர என்னை உருவாக்கும்.

தியானத்திற்கு : யாத். 36, சங்.94-95, 1கொரி.6.

இன்று...

மண்ணில் : 69

விண்ணில் : 23.02.156

ஊர் :

நாடு :

தரிசன பூமி : சிமிர்னா

போலிகார்ப் நினைவு தினம்

ஜார்ஜ் பிரடெரிக் ஹாண்டல் 1685

ஜான் கூட்டன்பர்க் 1468

சீகன் பால்கு 1719

ஜெபிக்க : திரு. யோபு, HBI சென்னை.

கிளாடிஸ் அயில்வார்டு

தேவனுக்கு நீ தேவை



1902 - 1970

ஆண்டவருக்கென்று ஊழியம் செய்ய பலர் ஆசைப்படுகின்றனர். ஆனால் முயற்சி எடுப்பதில்லை. சோம்பேறிகளை ஆண்டவர் விரும்புவதில்லை. முயற்சி செய்பவர்களைத்தான் தேவன் நேசிக்கிறார். அவர்கள் முயற்சிகளையும் அங்கீகரிக்கிறார்.

1932ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து சீனா சென்றடைவதற்குள் எத்தனையோ தடைகள். வழியிலே ஏமாற்றங்கள். அத்தனையையும் தாண்டி, எதிர்நீச்சல் போட்டு வெற்றியுடன் சீனா வந்தடைந்தார் கிளாடிஸ்.

திருமதி. லாங்சன் அவர்கள் உதவியுடன், தன் பணியைத் தொடர ஆரம்பித்தார். சீன மொழியை கடினப்பட்டுப் படித்து முடித்தார். சீன மக்களுக்குப் புரியும் வண்ணம் செய்திகளைக் கதைபோல் கூறி, கிறிஸ்துவை அவர்கள் உள்ளத்தில் ஜொலிக்கச் செய்தார்.

ஆண்டவர் புதிய வாசல்களைத் திறப்பவர். ஆம்! கிளாடிஸ் பணிபுரிவதற்கு ஓர் பதவி அரசாங்கத்திடமிருந்து தேடி வந்தது. அந்நாட்டில் பெண்களுக்குச் சிறிய கால்கள் தான் மதிப்பு என்ற எண்ணத்தில் பெண்களின் பாதங்கள் வலுக்கட்டாயமாகக் கட்டப்பட்டன. இதனை நீக்கும் பணியில் "பெண் பாதப் பரிசோதகர்" என்ற பொறுப்பில் கிளாடிஸ் அம்மையார் வீடு வீடாகச் சென்று சுவிசேஷம் அறிவித்தார். ஆயிரக்கணக்கான மக்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டனர்.

சிறுவர் விடுதிகள், பெண்கள் விடுதிகள் மற்றும் அனாதை இல்லங்களில் அம்மையார் செய்த பணி அளவற்றது. அநேக குழந்தைகள் இவரால் சிறப்பான வாழ்வு பெற்றனர்.

ஜப்பானியர் சீனாவைத் தாக்கியபோது சிறப்பான பணி செய்து ஆயிரக்கணக்கான குழந்தைகளை பாதுகாப்பான இடத்திற்கு வழி நடத்தினார்.

"இங்கிலாந்தின் சிட்டுக்குருவி" என்றழைக்கப்படும் இவர் இதே நாள் பிப்ரவரி 24, 1902ல் பிறந்தார். அவர் பணி பூமியில் இன்றும் தொடர்கின்றது. நித்தியத்தில் ஜொலிக்கின்றது.

அன்பரே! கிறிஸ்துவுக்குள் நீங்கள் செயல்பட வேண்டுமென்று அறிவீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்துவின் சிறந்த பண்புள்ள விநோத மனிதனாயிரு.
மக்கள் உன்னைப்பற்றி யாது கூறினும் கூறட்டும் - டி.எல். மூடி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் அழைக்கும் சத்தத்தைக் கேட்டேன்.
என்னை உம் கரங்களில் ஜீவ பலியாய் அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : யாத். 37, சங்.96-99, 1கொரி.7.

இன்று...

மண்ணில் : 24.02.1902
விண்ணில் : 01.01.1970
ஊர் : எட்மண்டன்
நாடு : லண்டன், இங்கிலாந்து
தரிசன பூமி : சீனா

கிளாடிஸ் அயில்வார்டு பிறந்த தினம்

மத்திய சுங்கத்துறை தினம்

ஜெபிக்க :

Scanned with CamScanner



1513 - 1548

மனம் தளர வேண்டாம்

16ம் நூற்றாண்டு, ஸ்காட்லாந்து நாட்டில் டண்டீ என்னும் இடத்தில் மரணத்துக்கேதுவான பிளேக் நோய் தொற்றிக் கொண்டது. மரண ஓலம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி மனிதர்களைக் கலங்கச் செய்தது.

அவர்கள் மரிக்கும் முன் இயேசுகிறிஸ்து தரும் பாவமன்னிப்பைப் பெற வேண்டாமா? அவர்களும் பரலோகம் செல்ல வேண்டுமல்லவா? பிரபல நற்செய்தியாளரான ஜார்ஜ் விசார்ட் இக்கேள்விகளால் மனம் உடைந்தார்; டண்டீ பகுதிக்கு விரைந்து சென்றார்; மரணத்தருவாயிலிருந்த மக்களின் பாவம் நீங்கச் செய்ய மன்றாடி ஜெபித்தார்; மன்னிப்பைப் பெற்றுத் தந்தார்; மகிழ்ச்சியான மரணங்கள் அங்கு நடந்தன; பலர் அற்புத சுகங்களையும் பெற்றனர்.

ஜார்ஜ் விசார்ட்டின் சிறந்த பிரசங்கங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத சில மக்கள் அவரை வெறுத்தனர். எனவே அவர்கள் அவரைக் கொல்லவும் திட்டமிட்டனர். மான்ட்ரோஸ் என்ற இடத்தில் அவரைக் கொல்லுவதற்காக சுமார் 60 எதிரிகள் ஒளிந்திருந்தனர். ஆனால் ஆவியானவர் அவர்களின் திட்டத்தை அபத்தமாக்கினார். ஜார்ஜ் விசார்ட் கடவுள் தன்னைக் காப்பாற்றிய விதங்களை எண்ணி மகிழ்ச்சியுற்றார்.

ஆயினும் ஜார்ஜ் விசார்ட் மீது 18 குற்றங்கள் சுமத்தப்பட்டு சிறைபிடிக்கப்பட்டார். கிறிஸ்துவை மறுதலிக்குமாறு பலமுறை வற்புறுத்தப்பட்டார். ஆனால் எவ்வித கொடுமைகளைக் கண்டும் அவர் மனம் தளரவில்லை. இறுதியாக அவரைத் தூக்கிலிட்டுக் கொல்லும் முடிவுக்கு வந்தனர். கந்தகத்தூள் நிரம்பிய பாரமான பல பைகளை அவர் மீது கட்டினர். பாரம் தாங்க முடியாமல் அவரது முழங்கால்கள் முடங்கின. இயேசுவை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டு, எதிராளிகளை மன்னிக்கும்படி வேண்டினார். சற்று நேரத்தில் அவரை தீயிலிட்டு எரிக்கும் போதே தூக்கிலும் தொங்க விட்டார்கள். அவரது ஆவியோ மகிழ்ச்சியான இடம் நோக்கி விரைந்தது.

அன்பரே! கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிக்கவும் உழைக்கவும் முன்வருவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தூய ஆவியானவர் உன் ஆன்மாவை நெருப்பிலிட்டு, வடிவமைத்து, மெருகேற்றும்போது நீ அமர்ந்திரு. - லாரன்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தளராத மனதையும், உறுதியான உள்ளத்தையும் எனக்கு தாரும்.

தியானத்திற்கு : யாத். 38, சங்.100-101, 1கொரி.8-9.

இன்று...

மண்ணில் : 1513

விண்ணில் : 01.03.1548

ஊர் : மான்ட்ரூஸ்

நாடு : ஸ்காட்லாந்து

தரிசன பூமி : ஸ்காட்லாந்து

உலக காசநோய் தடுப்பு தினம்

மேரி மில்ஸ் பேட்ரிக்

ஜெபிக்க :

Scanned with CamScanner

இறைச் சிந்தனையில் இனிமை



160 - 225

ஆதித் திருச்சபையை திறம்பட நடத்தி வந்த தலைவர்கள் பல உண்டு. அவர்கள் திருச்சபைத் தந்தையர் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தெர்த்தூலியன் ஆவார்.

அந்நிய தெய்வங்களை வணங்கிக் கொண்டிருந்த பெற்றோருக்கு மகனாக துனிஷியா நாட்டில் ஏறத்தாழ 160ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை ஒரு போர்வீரர். தெர்த்தூலியன் சிறுவயதிலேயே சகல திறமைகளுடனும் வளர்க்கப்பட்டார். வழக்கறிஞர் படிப்பை முடித்து சிறந்த வழக்கறிஞராகச் செயல்பட்டார்.

ஏறத்தாழ 193ஆம் ஆண்டு அவர் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. கிறிஸ்துவின் சிந்தை அவருக்குள் வர, புது மனிதனாக மாற்றம் பெற்றார். அதுமுதல் கிறிஸ்துவின் சீரிய, சிறந்த தொண்டராகப் பணிபுரிய ஆரம்பித்தார். 197ஆம் ஆண்டு குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

இவர் சிறந்த சிந்தனையாளர். தர்க்கவாதி. அநேக புத்தகங்களை எழுதினார். சுமார் 31 புத்தகங்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. கத்தோலிக்க திருச்சபையை விட்டு பிரிந்து சென்ற இவர், புது வகையான சபையை உருவாக்கினார். 'தெர்த்தூலியர்கள்' என்று இவரைச் சார்ந்தவர்கள் அழைக்கப்பட்டனர்.

ஆண்டவரைப் பற்றி போதிப்பதில் சிறந்தவர். புரிந்து கொள்ள முடியாத காரியங்களை எளிதில் புரியச் செய்பவர். திரித்துவம் என்ற இறைச் சிந்தனையை திருச்சபையில் கொண்டு வந்தவர் இவரே.

புறமதத்தவர்களின் கேள்விகளுக்குத் தர்க்க ரீதியில் பதில் கொடுப்பதில் இவருக்கு இணை இவரே! ஆண்டவரிடமிருந்து அற்புதமான ஞானத்தைப் பெற்றவர். திருச்சபைக்கு கிடைத்த வரப்பிரசாதம் இவர். திருச்சபையை வழிநடத்துவதில் சிறந்த முன்மாதிரி.

திருச்சபை பணிகளில் நாம் இணைந்து செயல்படும்படி ஆண்டவர் விரும்புகிறார். ஆயினும், அவரின் சத்தத்திற்கு செவிகொடுக்காமல் தூர விலகிவிடுவது நியாயமோ? இன்றே ஆண்டவர் அழைக்கும் சத்தத்திற்குச் செவிகொடுப்பீர்களா?

அன்பரே! சத்தியத்தின் பாதையில் பிற மதத்தவரை வழிநடத்த முயற்சிக்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கர்த்தர் செய்ய சொல்லுகிற காரியங்களை செய்கிற எவனும் தவறு செய்வதில்லை – தாமஸ் கூக்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! அனுதினமும் நீர் சொல்லுகின்ற காரியங்களை செய்கின்றவனாக என்னை மாற்றும்.

தியானத்திற்கு : யாத். 39-40, சங்.102, 1கொரி.10.

இன்று...

பிறப்பு : 160	சார்லஸ் ஷெல்டன் 1857
இறப்பு : 225	
ஊர் : **கார்தேஜ்**	
நாடு : **துனிஷியா**	
தரிசன பூமி : **துனிஷியா**	

ஜெபிக்க :

கான்ஸ்டன்டைன்



272 - 337

தரிசனத்தை செயல்படுத்து

கி.பி.312. அரசன் ஒருவன் தன் படையைத் திரட்டிக் கொண்டு போருக்கு வந்தான். திடீரென திரண்ட படையைக் கண்டுத் திகைத்துப் போனார் கான்ஸ்டன்டைன். என்ன செய்வது? எந்தக் கடவுளின் உதவியை நாடுவது? அவரின் உள்ளம் அலைமோதியது.

இறுதியில் ஓர் ஞானோதயம் அவர் இதயத்தில் பளிச்சிட்டது. வெற்றி வேந்தர் இயேசுவால் மட்டுமே தனக்கு வெற்றியைத் தரமுடியும் என்பதைக் கண்டு கொண்டார்.

அன்றிரவு தூக்கத்தில் ஓர் தரிசனம். சூரியனுக்கு மேலே பிரகாசமுள்ள ஓர் சிலுவை. 'இந்த அடையாளத்தாலே நீ வெற்றி பெறுவாய்' என்ற வாசகம். காலையில் கண்விழித்தார். கண்ட தரிசனத்தை அனைவரிடமும் கூறினார். தன் படைவீரர்களின் கேடயங்களில் தரிசனத்தில் கண்ட சின்னத்தைப் பதிக்கச் செய்தார்.

போர் தொடங்கியது. கான்ஸ்டன்டைன் மாபெரும் வெற்றி வாகை சூடினார். கிறிஸ்துவின் மீது அபார பக்தி கொண்டார். கிறிஸ்தவர்களுக்கு சுதந்திரமாய் ஆராதிக்கும் உரிமையையும், ஏராளமான சலுகைகளையும் வழங்கினார். ஞாயிற்றுக்கிழமை அரசாங்க விடுமுறை நாளானது.

திருச்சபைகள் பல கான்ஸ்டன்டைன் மூலம் கட்டப்பட்டன. போதகர்கள் மதிப்பு மிகுந்தவர்களானார்கள். படை வீரர்களுக்கென தனி ஜெபப் புத்தகம் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

திருச்சபையில் காணப்பட்ட கள்ளப் போதனைகளைத் தகர்த்தெறிந்தார். சபையைப் புனிதமாக்கும் பணியாக கி.பி.325ல் நிசெயா பொதுக்குழுவைக் கூட்டினார். இதில் 300க்கும் அதிகமான பேராயர்கள் பங்கு பெற்றுத் திருச்சபையின் வளர்ச்சி குறித்த தீர்மானங்களை நிறைவேற்றினார்.

சுருங்கக்கூறின், கான்ஸ்டன்டைன் தன் நாட்டைக் கிறிஸ்தவ நாடாக மாற்றிப் பிற நாடுகளுக்குச் சிறந்த முன்மாதிரியானார்.

அன்பரே! தரிசனத்தைப் பெற்ற நீர் அதை எவ்விதம் செயல்படுத்துகிறீர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : செய்ய முடியாதது என்பதை செய்து முடிப்பதில்
ஆர்வம் கொள்ளுகிற மனிதன் மீது கடவுள்
சிறப்பு அன்பு செலுத்துகிறார். - வில்லியம் பூத்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் தருகின்ற தரிசனங்களை செயல்படுத்தும்
சிறப்பு மிக்கவனாக என்னை மாற்றும்.

தியானத்திற்கு : லேவி. 1-2, சங்.103, 1கொரி.11.

இன்று...

மண்ணில் : 27.02.272
விண்ணில் : 22.05.337
ஊர் : நைசியா
நாடு : ரோம்
தரிசன பூமி : ரோம்

கான்ஸ்டன்டைன் பிறந்த தினம்

எல். எஸ் சாஃபர் 1871

ஜெபிக்க :

மார்ட்டின் பியூசர்



1491 - 1551

ஒற்றுமையே உயர்வு

சீர்திருத்தம் என்ற வார்த்தையைக் கேட்ட உடன் நினைவுக்கு வருபவர்கள் மார்ட்டின் லூத்தர் மற்றும் ஜான் விக்ளிப். ஆனால் பலருக்கு மார்ட்டின் பியூசர் நினைவுக்கு வருவதில்லை.

மார்ட்டின் பியூசர் ஓர் சிறந்த சீர்திருத்தவாதி. அநேக ஆவிக்குரிய புத்தகங்களையும் விளக்க உரைகளையும் எழுதியவர். டொமினிக்கன் குழுவிலிருந்து தன்னுடைய ஆவிக்குரிய பயணத்தை ஆரம்பித்தவர். 1521ம் ஆண்டு புராட்டஸ்டண்டு திருச்சபையைத் தழுவினார். எனவே, 1522ம் ஆண்டு ரோமன் கத்தோலிக்கச் சபையிலிருந்து நீக்கப்பட்டார்.

அக்காலத்தில் ஒரு பெரிய குழப்பமானது புரட்டஸ்டாண்டு திருச்சபையில் காணப்பட்டது. எது புராட்டஸ்டண்டு திருச்சபை? மார்ட்டின் லூத்தரைப் பின்பற்றிய சபையா? அல்லது ஸ்விங்கிளியைப் பின்பற்றிய சபையா? ஏனெனில் பல கருத்து வேறுபாடுகள் மலிந்து கிடந்தன. ஆங்காங்கே சிறுசிறு சபைகள் தோன்றலாயின. புராட்டஸ்டண்ட் திருச்சபைக்குள்ளே பிளவுகள் பிறந்தன.

மார்ட்டின் பியூசர் இந்நிலைகளைக் கண்டு மிகவும் வேதனையடைந்தார். சிதறிக் கிடந்த புராட்டஸ்டண்ட் மக்களை இணைக்க விரும்பினார். ஆண்டவரின் உதவியுடன் செயல்பட ஆரம்பித்தார். முயற்சிகள் பல நடந்தும் ஒற்றுமை ஏற்படவில்லை. மனம் நொந்து போனார். ஆனால் இவருடைய கருத்துக்களால் கால்வின் மிகவும் கவரப்பட்டார்.

மார்ட்டின் தான் எழுதிய "இயேசு கிறிஸ்துவின் அரசு" என்ற நூலால் புகழ் பெறத் தொடங்கினார். இங்கிலாந்து அரசு இவரை அழைத்தது. அங்கு தாமஸ் கிராண்மர் என்ற பேராயர் இவரை கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் பேராசிரியராக அமர்த்தினார். கிறிஸ்துவின் ராஜ்யத்தை அங்கே கட்ட ஆரம்பித்தார்.

1551ஆம் ஆண்டு மரணமடைந்த இவரின் எலும்புகள் மேரி டியூடர் என்ற கத்தோலிக்க அரசியால் தோண்டி எடுக்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்டது. கல்லறையும் நாசமாக்கப்பட்டது. திருச்சபைகளுக்குள் ஒற்றுமை என்பது தகர்ந்து போனது.

அன்பரே! திருச்சபைகளுக்குள் ஒற்றுமை ஏற்படக் கைக்கோர்த்து செயல்படுவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆண்டவருக்காக அமைதியுடன் காத்திரு.
சீக்கிரத்தில் அவர் குரலை கேட்பாய்.
மரணம் வெற்றியால் விழுங்கப்படும் - ஜார்ஜ் மத்தீசன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஒற்றுமையுடன் செயல்பட்டு
உயர்ந்த காரியங்களைச் சாதிக்க என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : லேவி. 3, சங்.104, 1கொரி.12.

இன்று...

பிறப்பு : 11.11.1491
இறப்பு : 28.02.1551
ஊர் : ஷெல்ஸ்டெட், அல்ஷேஸ்
நாடு : பிரான்ஸ்
நரிசன பூமி : இங்கிலாந்து

மார்ட்டின் பியூசர் நினைவு தினம்

ஜெபிக்க :

Scanned with CamScanner

புனித யாக்கோபு

- 62

விசுவாசம் புதுப்பிக்கப்படட்டும்

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நான்கு சகோதரர்கள் உண்டு. யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்களே அவர்கள். இதில் யாக்கோபு என்பவரே மூத்தவர்.

இயேசுவின் சகோதரர்கள் அவரோடு தொடர்பு வைத்திருந்தாலும் அவரைப் பின்பற்றவில்லை. அவர் தேவ குமாரன் என்பதை விசுவாசிக்கவில்லை. ஆனால், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கண்ட அவர்கள் மனந்திரும்பி 'இயேசுவே மெய்யான இரட்சகர்' என்றும், 'மேசியா' என்றும் உறுதிபட நம்பினர்.

பவுல் அப்போஸ்தலனுக்கு இயேசுவின் தரிசனம் கிடைத்தது போல யாக்கோபுக்கும் தரிசனம் கிடைத்தது. இவர் எருசலேம் சபையோடு தன்னை ஐக்கியப்படுத்தினார். யூதர்கள் மெய்யான மேசியாவை அறிந்து கொள்ள வேண்டும் என்று அளவற்ற வாஞ்சை கொண்டிருந்தார். அவர்களது மன்னிப்புக்காகவும், இரட்சிப்புக்காகவும் தொடர்ந்து ஆண்டவரிடம் மன்றாடினார். முழங்காற்படியிட்டே அதிக நேரத்தைக் கழித்தபடியால் இவரது முழங்கால்கள் ஒட்டகத்தின் முழங்கால்களைப் போல கடினமானதாகக் காணப்பட்டன.

"யாக்கோபு கிறிஸ்தவர்களின் தலைமைச் சபையாகிய எருசலேம் சபையின் பேராயராக விளங்கினார்," என்று வரலாற்றாசிரியர் யூசிபஸ் கூறுகிறார். சபையில் பிரச்சனைகள் ஏற்பட்டபோது அதை சுமூகமாகத் தீர்ப்பவராகக் காணப்பட்டார். மேலும், மக்கள் கிறிஸ்துவுக்குள் வாழவும் யாக்கோபு என்ற நிருபத்தை எழுதினார்.

யூதர்களிடையே இவர் செல்வாக்கு பெற்றிருந்தது யூத மதத் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே, அவரைக் கொலை செய்ய சரியான தருணத்திற்காகக் காத்திருந்தார்கள். ரோம ஆளுநர் மரித்து போன தருணத்தில் இவர் பிடிக்கப்பட்டு தேவாலய உப்பரிகையினின்று கீழே தள்ளப்பட்டார். தன் ஜீவனை விட்டு கிறிஸ்துவில் சாட்சியானார்.

அன்பரே! உங்கள் விசுவாசத்தை அனுதினமும் புதுப்பித்துக் கொள்ளுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள்
அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார். - யாக்கோபு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் விசுவாசத்தை அனுதினமும்
புதுப்பித்து உமக்குள் வளருவேன்.

தியானத்திற்கு : லேவி. 4, சங்.105, 1கொரி.13.

இன்று...

மண்ணில் :
விண்ணில் : 62
ஊர் : பெத்லகேம்
நாடு : யூதேயா
தரிசன பூமி : எருசலேம்

பேட்ரிக் ஹாமில்டன் 1528

ஜெபிக்க :

ஜான் டி பிரிட்டோ

இரத்தம் பேசும்

1647 - 1693

போர்ச்சுக்கல் நாட்டு இளவரசனின் நண்பனாக இளமையை இன்பமுடன் கழித்து வந்தார் ஜான் டி பிரிட்டோ.

திடீரென வந்தது தீராத நோய். இறைவனிடம் வேண்டவே நோயினின்று விடுதலை பெற்றார். இறை பணியில் நாட்டம் கொண்டார். கத்தோலிக்க முறைப்படி குரு பட்டமும் பெற்றார்.

பிரான்சிஸ் சேவியரின் வழியைப் பின்பற்றி இந்தியா வந்தார். இந்தியர்களைப் போன்ற உடை உடுத்தி அவர்களைப் போல மாறினார். தன் பெயரை அருளானந்தர் என மாற்றினார்.

1684ம் ஆண்டு. இந்தியாவில் சாதி ஏற்றத் தாழ்வுகள் மலிந்து கிடந்தன. மக்கள் கிறிஸ்தவர்களானதால் சாதி பிரச்சனை தலைத் தூக்கியது. மக்களை கிறிஸ்துவின் பாதையில் நடத்தினதற்காக குற்றம் சாட்டப்பட்ட அருளானந்தர் சிறையில் அடைக்கப்பட்டு தடியால் அடிக்கப்பட்டார்.

அற்புதங்கள் நிகழ்த்தும் அதிசய ஆற்றலை இறைவனிடமிருந்து பெற்றதால் சேவகர்கள் அடித்த அடியில் கண்தெறித்து விழுந்த ஒருவரின் கண்களைப் பொருத்திப் பார்வையடையச் செய்தார்.

தடியத்தேவன் என்பவனை கிறிஸ்துவிடம் வழி நடத்தினார் அருளானந்தர். தன் தீய வழிகளை விட்டு மனந்திரும்பினார் அவர். இதனால் வெகுண்டெழுந்த சேதுபதி என்ற அரசன் மக்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றும் அருளானந்தரை கொல்ல திட்டமிட்டார்.

1693ஆம் ஆண்டு. பிப்ரவரி 4ஆம் நாள். 45 வயது நிரம்பிய அருளானந்தர் கை, கால் கட்டப்பட்டவராக கொண்டு வரப்பட்டார். விசுவாசத்தில் நிலைத்து நின்ற காரணத்தால் அவர் தலை கொடூரமாக வெட்டப்பட்டது. அவர் இரத்தம் சிந்திய இடமோ சிவப்பு மணலாக இன்றும் காட்சியளிக்கின்றது. இம்மாமனிதரின் பிறந்தநாளே இன்று.

அன்பரே, கிறிஸ்துவுக்காக உங்கள் உயிரைக் கொடுக்கவும் ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மகிமை பெற்ற மாபெரும் ஆன்மாக்கள், புயலால் தாலாட்டுப் பெற்று, பெரும் காற்றால் பாலூட்டப்பட்டவர்கள்.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! புதிய ஜீவியங்களை உமக்குள் ஆரம்பிக்கவும், சோதனைகளை தகர்த்தெரியவும் பெலனைத் தாரும்.

தியானத்திற்கு : லேவி. 5-6, சங்.106, 1கொரி.14.

இன்று...

மண்ணில் : 01.03.1647

விண்ணில் : 04.02.1693

ஊர் : லிஸ்பன்

நாடு : போர்ச்சுக்கல்

தரிசன பூமி : இந்தியா

ஜான் டி பிரிட்டோ பிறந்த தினம்

லையட் ஜோன்ஸ் 1981

ஜார்ஜ் விசார்ட் 1548

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஜான் வெஸ்லி



1703 - 1791

இன்றே இரட்சணிய நாள்

இங்கிலாந்து திருச்சபை. தந்தையைப் பின்பற்றி போதகரானார் ஜான் வெஸ்லி. "ஆவிக்குரிய மனந்திரும்புதலே சரியான கிறிஸ்தவ வாழ்க்கை" என்று போதிக்கத் தொடங்கினார்.

ஆனால் அவர் பணியாற்றிய திருச்சபை, வெஸ்லியை வேதப்புரட்டராகக் கண்டிக்கவே இங்கிலாந்து திருச்சபையை விட்டு வெளியேறினார். திறந்தவெளிப் பிரசங்கியானார்.

தெருத்தெருவாக இவர் செய்த பிரசங்கத்தால் திரளான மக்கள் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் அனுதினமும் வந்தனர். இப்புதிய விசுவாசிகளை பராமரித்து வளர்க்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததால் "மெதடிஸ்ட்" என்ற புதிய திருச்சபையை ஸ்தாபித்தார்.

நற்செய்தியை அறிவிப்பது இவருக்குத் தேன் சுவை போல் காணப்பட்டது. இங்கிலாந்து தேசம் முழுவதும் 2 லட்சத்து 50 ஆயிரம் மைல்கள் குதிரையில் சவாரி செய்து, 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரசங்கங்கள் செய்துள்ளார். 200க்கும் மேற்பட்ட ஆவிக்குரிய புத்தகங்களை எழுதியுள்ளார்.

சமயப்பணிக்கும், சமுதாயப்பணிக்கும் சம்பந்தமில்லை என்று கருதப்பட்டக் காலத்தில் சமுதாயப் புரட்சி செய்ததால் 'சமுதாயச் சிற்பி' என்று அழைக்கப்பட்டார்.

இங்கிலாந்தின் முதலாவது இலவச மருந்தகம், இலவச பள்ளிக்கூடம், இலவச ஆதரவற்றோர் இல்லங்கள் என ஏராளமான நன்மைகளைச் செய்துள்ளார்.

அடிமை முறைகளை அகற்றவும் அரும்பாடுபட்ட ஜான் வெஸ்லி தமது 88வது வயதில் இவ்வுலகை விட்டு விடை பெற்றார்.

அன்பரே! ஜான் வெஸ்லியைப் போன்று சுவிசேஷத்தை சுறுசுறுப்புடன் அறிவிக்க உங்களை அர்ப்பணிப்பீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உற்சாகத்துடன் எரிபந்தமாய் சென்றிடு. நீ எரிவதை கண்டிட மக்கள் பல மைல் தூரம் நடந்து வந்து கவனிப்பர்.
– ஜான் வெஸ்லி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! சமயப் பணியோடு சமுதாயப் பணிகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்.

தியானத்திற்கு : லேவி. 7, சங்.107, 1கொரி.15.

இன்று...

மண்ணில் : 17.06.1703
விண்ணில் : 02.03.1791
ஊர் : எப்வொர்த், லிங்கன்ஷயர்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இங்கிலாந்து

ஜான் வெஸ்லி நினைவு தினம்

ஜெபிக்க : Rev.சுரேஷ் ராஜன்.

Scanned with CamScanner

குளோரிந்தாள்

- 1806

தடைகள் தகரட்டும்

இந்தியாவைச் 'சமயங்களின் சங்கமம்' என்று அழைக்கலாம். ஏனெனில் பல சமயங்கள் இந்தியாவிலிருந்தே தோற்றுவிக்கப்பட்டன. அதே வேளையில் இந்தியாவை 'மூடத்தனங்கள் நிறைந்த நாடு' என்றுகூடக் கூறமுடியும். ஏனெனில் ஒரு காலத்தில் உலகத்தில் எவ்வித பாகங்களிலும் நடைபெறாத கொடிய சம்பவங்கள் இங்கே நடந்ததுண்டு.

சதி, உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், பெண்கல்வி மறுத்தல் இன்னும் பல இதற்கு உதாரணங்களாகும். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி இது.

ஒரு அழகிய இளம் பெண். கணவன் இறந்துவிட்டான். பிணத்தோடு சேர்த்து அவளையும் சுட்டெரிக்க இழுத்துச் செல்லப்பட்டாள். இதனை அறிந்த கர்னல் லிட்டில்டன் விரைந்து சென்று அவளை காப்பாற்றினார். ஆனால் ஊரார் அவளை ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் லிட்டில்டன் அவளைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அப்பெண்ணே கோகிலா என்ற குளோரிந்தாள் ஆவார்.

கிறிஸ்தவ சித்தாந்தங்களை லிட்டில்டன் பிரபு மூலம் அறிந்து கொண்ட குளோரிந்தாள் ஞானஸ்நானம் பெற விரும்பி சுவார்ட்ஸ் ஐயரிடம் புதுபிறப்பு அடைந்தாள். அன்றுமுதல் காண்பவரிடமெல்லாம் கிறிஸ்துவைப் பற்றிக் கூறி ஆத்தும ஆதாயப் பணியைச் செய்தார். 1780ஆம் ஆண்டு, 40 பேர் இவரால் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.

கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்ட விரும்பிய குளோரிந்தாள் அம்மையார் 1785ஆம் ஆண்டு நெல்லையில் முதல் ஆலயத்தைக் கட்டினார். சிறு பள்ளிக் கூடத்தையும் ஆரம்பித்தார்.

ஆசாரம் மிக்க பிராமணக் குடியில் பிறந்து, சாதி ஆசாரங்களைத் தகர்த்து, ஏழை எளியவர்களுடன் சமமாக பழகி, அவர்களுக்குப் பண உதவி அளித்து, அவர்கள் ஆன்ம முன்னேற்றத்திற்காக உழைத்து, தனக்கென ஒரு முத்திரையைத் திருச்சபை வரலாற்றில் பதித்த குளோரிந்தாள் நமக்கு ஓர் தூண்டுகோல்!

அன்பரே! சாதி மதங்களைக் கடந்து, கிறிஸ்துவை பிறர்க்கு அறிவிப்பவரா நீங்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உன் ஓய்வினை சீக்கிரம் எடுத்துக் கொள்ளாதே.
எடுத்துக் கொண்டால் உனது உண்மை ஓய்வினை
நீ அடைய முடியாது. - ஜான் பிரவுன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தடைகள் அனைத்தையும் தாண்டி,
தலை நிமிர்ந்தபடி உமக்கு ஊழியம் செய்வேன்.

தியானத்திற்கு : லேவி. 8, சங்.108, 1கொரி.16.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : 1806

ஊர் : தஞ்சாவூர்

நாடு : இந்தியா

தரிசன பூமி : இந்தியா

ஜெபிக்க :

Scanned with CamScanner

பிலிப்பு

- 58

சத்தியத்திற்கு செவிகொடு

கிரேக்க மொழி பேசும் விதவைகளின் அன்றாட உணவுத் தேவைகளை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்ட 7 பேர்களில் ஒருவரே பிலிப்பு. கிறிஸ்துவுக்காக சாட்சி பகிர்ந்து கிறிஸ்துவையே தன்னுடைய வாழ்க்கையில் வாழ்ந்துகாட்ட அழைக்கப்பட்டவர் இவர்.

பிலிப்பு என்ற கிரேக்கப் பதத்திற்கு 'குதிரைகளை நேசிப்பவன்' என்பது பொருளாகும். பிலிப்பு கிரேக்க மொழி பேசும் ஒரு யூதர். இவர் கிரேக்க நாட்டிலோ அல்லது எகிப்திலோ பிறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. முதல் இரத்தசாட்சியான ஸ்தேவானின் உடன் பணியாளராக ஊழியம் செய்தார்.

எருசலேமின் சபைக்கு மிகுந்த உபத்திரவம் வந்தபோது, அப்போஸ்தலர்கள் தவிர மற்ற அனைவரும் பல தேசங்களுக்கு சிதறிப் போனார்கள். அந்த இக்கட்டான வேளையில் பிலிப்பு மிகுந்த வைராக்கியத்துடனும், துணிச்சலுடனும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தார். அசுத்த ஆவிகளை விரட்டினார். அநேக நோயாளிகளைக் குணமாக்கினார். சமாரியா பட்டணத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாவதற்குக் காரணமானார்.

கர்த்தருடைய தூதன் ஒருநாள் இவருக்குத் தரிசனமானார். நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்திர மார்க்கமாய் போ. இதுவே அவருக்கு கொடுக்கப்பட்ட கட்டளை. உடனே கீழ்ப்படிந்து தன் பயணத்தைத் தொடர்ந்தார். தன் பயணத்திலே எத்தியோப்பிய மந்திரியை சந்தித்தார். அவரை இரட்சிப்பின் பாதையில் நடத்தி, ஞானஸ்நானமும் கொடுத்தார். இதனால், எத்தியோப்பியா நாடெங்கும் கிறிஸ்துவின் செய்தி பரவியது.

பவுல் அப்போஸ்தலரின் மிஷனெரி பயணங்களுக்கு முன்பதாகவே மத்தியத் தரைக்கடல் பகுதிகளில் ஊர் ஊராகச் சுற்றி நற்செய்தி அறிவித்த பெருமை இவரைச் சாரும். பல ஊழியர்களை உபசரிக்கும் உன்னத குணநலன்களையும் பெற்றிருந்தார். யூதரல்லாத புறஜாதி மக்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டுவந்த இவர் லீதியா என்ற இடத்தில் பேராயராகப் பொறுப்பேற்று, தன் வாழ்நாள் இறுதிவரை ஆண்டவரின் பணிகளை அயராமல் செய்து முடித்தார்.

அன்பரே! ஆண்டவரின் சத்தத்திற்கு உடனே கீழ்படியும் மனநிலை உங்களுக்கு உண்டா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : விசுவாச வாழ்க்கை என்பது ஆண்டவரை பயன்படுத்தும் வாழ்க்கையாகும் – ஹான்ட்லி மோல்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மையே சார்ந்து நிற்கும் விசுவாசமாக என் வாழ்வு அமையட்டும்.

தியானத்திற்கு : லேவி. 9-10, சங்.109, 2 கொரி.1-2.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : கி.பி.58

ஊர் : பெத்சாயிதா

நாடு : கலிலேயா

தரிசன பூமி: சிசேரியா

லேட்டி கௌமேன் 1870

ஜெபிக்க :

கிரகோரி

கிறிஸ்துவோடு கூட நடப்போம்

329 - 389

கி.பி. நான்காம் நூற்றாண்டு. வேதத்தைக் குறித்த அறிவற்றவர்கள் அங்கும் இங்கும் பரவி புரட்டு உபதேசங்களைப் பரப்பிக் கொண்டிருந்தனர்.

வார்த்தையில் தெளிவு இல்லை. வாழ்க்கையில் உண்மை இல்லை. சுருங்கச் சொன்னால் கிறிஸ்து அவர்களோடு இல்லை. இவ்வாழ்வில் பயன் என்ன?

திருச்சபையைச் சீர்திருத்தும் பணியில் இணைந்தார் நாசியன்சன்னைச் சேர்ந்த கிரகோரி. இவர் திருமறைப் புலவர்; அறிவு நிறைந்தவர்; கிறிஸ்துவோடு கூட அனுதினமும் நடந்தவர்.

கப்பல் பயணம் ஒன்றில் புயலில் சிக்கிய வேளை, பொருத்தனை ஒன்றைச் செய்தார். தன்னை இறைவனுக்குக் காணிக்கையாகத் தந்தார். எளிய வாழ்வை எண்ணி துறவு வாழ்வை மேற்கொண்டார்.

பரிசுத்த பேசில் என்ற பிரதம அத்தியட்சரின் நண்பரானார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க திருச்சபை பொறுப்பை ஏற்றார். கான்ஸ்டான்டி நோபிள் சபையை சீர்திருத்தம் செய்தார்.

ஜெபமும் தியானமும் கிரகோரியின் நண்பர்களாயின. நமதாண்டவரை முழு நேரமும் பற்றிச் சேவிக்க மக்களை உற்சாகப்படுத்தினார். ரொட்டியை உணவாகவும், தண்ணீரை பானமாகவும் உண்டு தூய்மையான இருதயத்துடன் மக்களை வழி நடத்தினார்.

இவரது தாழ்மை, தவ முயற்சிகள், எளிய வாழ்வு, கிறிஸ்துவோடு உள்ள உறவு ஆகியவை அநேகரைக் கிறிஸ்துவண்டை ஈர்த்தன. எதிரிகளும் நண்பர்களாயினர். மரணம் வரை மகத்தான பணிகளை மனப்பூர்வமாய் செய்து முடித்தார் கிரகோரி.

அன்பரே! ஆண்டவரோடு ஒரு பொருத்தனை செய்தபின் அதை நிறைவேற்றி முடிக்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நீ ஆண்டவரின் நண்பனானதால்
அவர் அரியணையில் உனக்கு பங்கு உண்டு.
- ஜே. ஜே. லின்ச்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஒரு நண்பரைப் போன்று
நீர் என்னோடு நடப்பதால் உமக்கு நன்றி.

திருவசனத்திற்கு : லேவி. 11, சங்.110-112, 2 கொரி.3-4.

இன்று...

மண்ணில் : 329
விண்ணில் : 389
ஊர் : ஏரியன்சம்
நாடு : கப்பதோக்கியா
தரிசன பூமி : கான்ஸ்டான்டி நோபிள்

அலெக்ஸாண்டர் கேம்ப்பெல் 1866

ஜெபிக்க :

Scanned with CamScanner

Rev. ஞானமுத்து

1816 - 1888

நற்செய்திப் பணியில் நாட்டம் தேவை

இந்தியாவிற்கு சுவிசேஷம் அறிவிக்க வெளிநாட்டிலிருந்து மிஷனெரிகள் வந்து கொண்டிருந்த காலம் அது.

இந்தியர்களுக்கு இந்தியரின் முறையில் நற்செய்தி அறிவிக்க ஆட்களோ குறைவு. அதிலும் குருத்துவ பட்டம் பெற்றவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

1816ஆம் ஆண்டில் பிறந்த ஞானமுத்துவுக்கோ உள்ளத்தில் வாஞ்சை; பத்து வயதிலே எழுப்புதல் தீ அவர் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது. பதினொன்றாம் வயதில் ரேனியஸ் ஐயர் நடத்திய செமினரியில் சேர்ந்தார். கற்றவர்களையும் மிஞ்சிய கல்வியறிவை அங்கே பெற்றார். ரேனியஸ் ஐயர் அவர்களால் 1833ம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்ற இவர், இறையியல் கல்வியை இனிதே முடித்தார்.

சென்னையில் பத்து ஆண்டுகள் பணி செய்த பின்னர், திருநெல்வேலியில் தன் பணியைத் தொடர்ந்தார். போனாவூர், நல்லூர், கோவிலூத்து போன்ற இடங்களில் இவர் செய்த பணிகளை இன்றும் காணலாம்.

அயராத உழைப்போ அவர் உடலை மிகவும் பாதித்தது. ஆஸ்துமா மற்றும் பக்கவாத நோய்கள் அவரைத் தொற்றிக் கொண்டாலும், நற்செய்திப் பணியே அவரின் முழு மூச்சாகக் காணப்பட்டது.

ஆங்கிலம், கிரேக்கம், லத்தீன், எபிரேயம், தெலுங்கு போன்ற மொழிகளில் புலமையடைந்த இவர் 'கடவுளின் பங்கு' என்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார். பேராயர் சர்ஜென்ட் ஐயரால் சிறப்பான பாராட்டையும் பெற்றார்.

'நாடார் குல இந்தியர்களில் முதல் குரு' என்ற பெருமையைப் பெற்ற இவர் இதே நாள் மார்ச் 6, 1888ஆம் ஆண்டு ஆயிரமாயிரம் மக்கள் சூழ மண்ணில் விதைக்கப்பட்டார்; விண்ணில் முளைத்தார்.

அன்பரே! நற்செய்திப் பணியில் உங்களின் நாட்டம் எப்படி உள்ளது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நாம் கிறிஸ்துவை நமக்குள் எவ்வளவு அனுமதிக்கிறோமோ அவ்வளவு தான் கிறிஸ்துவுக்குள் நாம் பிரவேசிக்க முடியும்.

- பி. ரோஜர்ஸ்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! உமக்குள் நிலைத்திருந்து நற்செய்திப் பணியைத் திறம்பட செய்ய என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : லேவி. 12-13, சங்.113-114, 2 கொரி.5-7.

இன்று...

மண்ணில் : 1816
விண்ணில் : 06.03.1888
ஊர் : காரங்காடு
நாடு : இந்தியா
தரிசன பூமி : திருநெல்வேலி, இந்தியா

ஞானமுத்து நினைவு தினம்

ஜெபிக்க : Dr. ராஜ் குமார் ஞானமுத்து, பாளையங்கோட்டை

Scanned with CamScanner

இறை ஞானம் வேண்டும்

1225 - 1274

1225ஆம் ஆண்டு, ஒரு அரச பரம்பரையின் அற்புத மகனாகப் பிறந்தார் தாமஸ் அக்வினாஸ். ஆடம்பரமான வாழ்க்கை அவருக்கு வெறுப்பைத் தரவே, சொத்து சுகங்களைத் துறந்து எளிய வாழ்வு நடத்தும்படி துறவறத்தை மேற்கொண்டார்.

ரோம் நகர் நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கும்போது குடும்ப சேவகர்களால் பிடிக்கப்பட்டு வீட்டினுள் அடைக்கப்பட்டார். வெளியே செல்ல முடியாமல் தவித்த போது தனது சகோதரியின் மூலம் அநேக புத்தகங்களை வாங்கி படித்தார். ஒருநாள் அனைவர் கண்களிலும் மண்ணைத் தூவி விட்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்.

துறவற சபையில் சேர்ந்த இவர், தியானங்களில் தன் மனதை நிலை நாட்டினார். 1520ம் ஆண்டு குருவாகப் பொறுப்பேற்றார். எழுத்துப் பணியே தனது பிரதானப் பணி என்று கருதிய இவரால் எழுதப்பட்ட 'இறையியல் சுருக்கம்' என்ற புத்தகமே இறையியல் படிப்பிற்கு ஓர் ஆணிவேர். இதனை அறிந்திராத இறையியல் அறிஞர்கள் இருக்கமாட்டார்கள்.

தனது இல்லத்தில் ஒரு நாள் தீவிர சிந்தனை செய்து கொண்டிருந்தார் இவர். சில சகோதரர்கள் அவரின் சிந்தனையைக் கலைத்து, "குதிரை பறக்கிறது, வந்து பாரும்" என்று அவரை அழைத்தார்கள். அவர் வெளியே வந்து எட்டிப் பார்க்கவே, "பொய் சொல்லி உம்மை முட்டாளாக்கி விட்டோம்" என்று கொக்கரித்தனர். அக்வினாஸ் அவர்களைப் பரிதாபமாகப் பார்த்து, "பொய் சொல்வதைக் காட்டிலும் முட்டாளாவது ஒன்றும் பெரிதல்ல" என்று கூறிச் சென்றார். சகோதரர்கள் வெட்கத்தால் தலைகுனிந்தனர். உண்மை பேசுவதையும், உத்தம குணங்களையும் கடைபிடித்தவர் அக்வினாஸ்.

தமது வாழ்நாளில் 49 வருடங்களில் சுமார் 60க்கும் மேற்பட்ட புத்தகங்களைக் கைப்பட எழுதியுள்ளார். இறைஞானம் மிகுந்த இவர், இறையியல் அறிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவதோடு, இறைஞானம் தேடும் அனைவருக்கும் குருவாக என்றுமே காணப்படுவார்.

அன்பரே! உமது ஞானத்தை இறைவனின் மகிமைக்காக பயன்படுத்துவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நாம் நிச்சயம் உள்ளவர்களாயிருந்தால்
நாம் ஆர்ப்பாட்டம் செய்ய அவசியமேயில்லை.
– மேரி இ. ஷானன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம் ஞானத்தைப் பெற்று,
அடக்கமுள்ளவனாக என்னை வாழச் செய்யும்.

தியானத்திற்கு : லேவி. 14, சங்.115-116, 2 கொரி.8-9.

இன்று...

மண்ணில் : கி.பி. 1225
விண்ணில் : 07.03.1274
ஊர் : அக்வினோ
நாடு : இத்தாலி
தரிசன பூமி : ரோம்

தாமஸ் அக்வினாஸ் நினைவு தினம்

பெர்பெக்ச்சுவா 203

ஜெபிக்க : Dr. மோனி குமார், சென்னை.

Scanned with CamScanner

1813 - 1892

தேவைகள் அதிகம்

நாம் வாழும் உலகில் எண்ணற்ற மொழிகள் பேசும் மக்கள் உண்டு. ஆனால், எல்லா மொழிகளிலும் வேதாகமம் வெளியிடப்படவில்லை. ஏனென்றால், சில மொழிகள் கற்றுக் கொள்வதற்கும், பேசுவதற்கும் மிகக் கடினமாக காணப்படுகின்றன. அம்மக்களைத் தேடிச் சென்று அவர்களோடு தங்கி அவர்கள் மொழியை கற்றுக் கொண்டு, வேதாகமத்தை மொழிபெயர்ப்பது என்பது மிக மிக சிரமம்தான்.

ஆயினும், கிறிஸ்துவின் அன்பால் ஏவப்பட்டவர்கள், அம்மக்களைத் தேடிச் சென்று அவர்கள் தாய் மொழியிலேயே வேதாகமத்தை மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

பிஜி தீவு, மக்கள் காட்டுமிராண்டிகளாகவும், நரமாமிச பட்சினிகளாகவும் வாழ்ந்தவர்கள். இம்மக்களைத் தேடி தன் மனைவி மேரி ஃபௌலருடனும், தன் நண்பர் ஜான் ஹண்டுடனும், 1838ல் பிஜி தீவுக்குப் பயணமானார் ஜேம்ஸ் கால்வர்ட். கடினமான மொழியாயினும், மிகுந்த ஆவலோடு அம்மக்களுக்கு வேதாகமத்தைக் கொடுக்க வேண்டும் என்ற தணியாத வாஞ்சையினாலும், வேகமாக அம்மொழியைக் கற்றுக் கொண்டார்.

ஏற்கனவே, புத்தக அச்சு துறையில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் வேதாகமத்தை வெளிக்கொணருவதற்காக 1856ல் இங்கிலாந்தை நோக்கி பயணமானார். 1857ல் பிஜி மொழி வேதாகமத்துடன் பிஜி தீவுக்குத் திரும்பி வந்தார். அத்தீவில் வாழ்ந்த மக்களுக்கு எழுதவும், வாசிக்கவும் கற்றுக் கொடுத்த பின்பு, வேதாகமத்தை அவர்கள் கையில் கொடுத்தார். 10 ஆண்டுகள் அங்கு பணிசெய்த பின் 1866ல் இங்கிலாந்து திரும்பினார்.

தென்னாப்பிரிக்காவை நோக்கி தன்னுடைய மிஷனெரி பயணத்தை துவங்கினார். 1872ம் ஆண்டு முதல் 1880ம் ஆண்டு வரை மாபெரும் ஆன்மீக புரட்சியை அங்கு ஏற்படுத்தினார். பல்வேறு இடங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்து கிறிஸ்துவின் அன்பை தன்னால் இயன்ற மட்டும் சுறுசுறுப்புடனும், உற்சாகத்துடனும் பறைசாற்றினார். பிஜி தீவு மக்களையே தன் சிந்தனையில் கொண்டிருந்த இவர், மீண்டுமாக பிஜி வேதாகமத்தை இருமுறை திருத்தம் செய்து வெளியிட்டார். பிஜி மக்களுக்காகவே வாழ்ந்த இவ்இறைத் தொண்டர் நம்மையும் இப்பணி செய்ய அறைகூவல் தருகின்றார்.

அன்பரே! வேதாகமத்தை பிற இன மக்களுக்கு கொடுப்பதில் உங்களின் பங்கு என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உன் செல்வத்தை பதுக்கி வைத்தல் அழிவே.
அதை இழத்தல் வாழ்வே. ஆதலால் கொடு.

- பேசன்ஸ் ஸ்ட்டிராங்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னால் இயன்றவரை பிறருக்கு வேதாகமம் கொடுப்பதில் உற்சாகம் காட்டுவேன்.

திருவசனம் : லேவி. 15, சங்.117-118, 2 கொரி.10-11.

இன்று...

பிறப்பு : 03.01.1813
இறப்பு : 08.03.1892
ஊர் : யார்க்ஷையர்
நாடு : இங்கிலாந்து
ஊ.பூமி : பிஜிதீவு, தென்னாப்பிரிக்கா

ஜேம்ஸ் கால்வர்ட் நினைவு தினம்
உலக மகளிர் தினம்

கடவுளின் யோவான் 1550

ஜெபிக்க :

புனிதராக வாழ்வோம்

1842 - 1857

மதிய உணவு நேரம், அனைவரும் தங்கள் உணவுகளை தட்டில் எடுத்துக் கொண்டனர். வேகமாக அதனை உண்ணத் தொடங்கினர்.

சிறுவன் டாமினிக் சாவியோ அதனைக் கண்டு ஆவேசமானார்; மிருகங்களை விடக் கேவலமானவர்கள் போல் ஜெபம் செய்யாமல் உணவு உண்பவர்களுடன் சேர்ந்து உணவு உண்ண அவருக்கு விருப்பமில்லை; கடந்து சென்றார் சாவியோ.

சிறு வயதிலேயே புனிதத்தையும், தவ வாழ்வையும் விரும்பியவர்; கடுஞ்சொற்களையும், கெட்ட சொற்களையும் பேசவோ, கேட்கவோ விரும்பாதவர்.

புனித டான்போஸ்கோவின் முதல் மாணவர்களில் ஒருவராக பக்தி நெறியில் களங்கமற்றவராய் வளர்ந்தார், வேதாகமத்தை தெளிவாகக் கற்றார். அனுதின வேதாகம வாசிப்பும், ஜெபமும் இவரது ஆவிக்குரிய வாழ்வுக்கு வளம் சேர்த்தது. நேர்மையையும், நிதானத்தையும் கடைபிடித்து, மற்றவர்களுக்கு சாட்சியான வாழ்வு வாழ்ந்தார்.

காற்றோ, குளிரோ, மழையோ எதையும் பொருட்படுத்தாது அதிகாலமே ஆலயம் செல்லும் வழக்கம் உடையவர். தீய சக்திகள் காட்டுத் தீப்போல பரவிக் கொண்டிருந்த காலத்தில் புனிதத்தை இளம் உள்ளத்தில் சுமந்து கொண்டு மற்றவர்களுக்கு அறைகூவலாய் வாழ்ந்தவர். தன்னை நாடி வந்த எவருக்கும் தாராளமாக உதவும் தியாக சிந்தை உடையவராக, அன்பில் செழித்து வளர்ந்தார்.

1857ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 9ம் நாள். அற்புதக்காட்சி ஒன்றைக் கண்டார். “ஆஹா என்ன இன்பமயமான அற்புதக்காட்சி!” என்று விண்ணகக் காட்சியை கண்டவராய் மண்ணகம் பிரிந்தார்.

கத்தோலிக்கத் திருச்சபையில் புனிதராக போற்றப்படும் சாவியோ உண்மையிலேயே புனிதராக வாழ்ந்தார்.

அன்பரே! உமது வாழ்வில் உள்ள தீமைகளைக் களைந்துவிட்டீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பாவத்தை விட சாவையே விரும்புகிறேன்.
– புனித தோமினிக் சாவியோ

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! புனிதமான சிந்தனையுடன் அனைவருக்கும் முன்மாதிரியாக வாழ கற்றுத்தாரும்.

தியானத்திற்கு : லேவி. 16, சங்.119:1-40, 2 கொரி.12-13.

இன்று...

மண்ணில் : 02.04.1842
விண்ணில் : 09.03.1857
ஊர் : பியட்மன்ட்
நாடு : இத்தாலி
தரிசன பூமி : இத்தாலி

புனித டாமினிக் சாவியோ நினைவு தினம்

ஞானப் பிரகாசம் 1568

ஜெபிக்க :

1805 - 1898

விசுவாசத்தில் வளருங்கள்

வேதாகமத்தை முழுமையாக நீங்கள் வாசித்தது உண்டா? விசுவாச வீரன் ஜார்ஜ் முல்லர் வாசித்திருக்கிறார். ஒன்று, இரண்டு முறை அல்ல. இருநூறு முறைகள். நம்பமுடியவில்லையல்லவா? அதிலும் நூறு முறைகள் முழங்கால் ஊன்றியே வாசித்திருக்கிறார்.

விசுவாசத்தினாலேயே வெற்றி கண்ட மாமனிதர்; ஆண்டவர் பயன்படுத்திய அற்புதப் பாத்திரம்; அனாதைகளின் அருமைத் தந்தை; ஜெபத்தில் சிறந்தவர்; ஆண்டவரின் நாம மகிமைக்காக அரும் பெரும் செயல்கள் செய்தவர் இவர்.

வாழ்வில் ஒளி இழந்தோர்க்கு வழி காட்ட அனாதை இல்லங்களைக் கட்டினார். ஆயிரமாயிரம் குழந்தைகள் இதனால் எதிர்காலம் பெற்றனர். விசுவாசத்தினால் அன்றாடத் தேவைகளை ஆண்டவரிடமிருந்தே பெற்றார்.

முல்லரின் பல்வேறுபட்ட நிறுவனங்களில் 1, 21, 683 மாணவ மாணவியர் பயின்றனர். வேத அறிவு நிறுவனங்களும், பள்ளிக் கூடங்களும் இவரால் நிறுவப்பட்டன.

தன்னுடைய 70 வயதிற்குப் பிறகு 17 மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். 42 நாடுகளைச் சுற்றி இருபது லட்சம் மைல்கள் நிலத்திலும், நீரிலும் கடந்து ஆயிரக்கணக்கான பிரசங்கங்கள் செய்து ஏறக்குறைய முப்பது லட்சம் மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார்.

தேவைகள் நிறைந்தபொழுது இவர் மனிதரை நாடியதில்லை. தேவனையே சார்ந்திருந்தார். உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்க 189 மிஷனெரிகளை, 'உலக நற்செய்தி மிஷன்' என்ற தமது நிறுவனத்தின் மூலம் தாங்கினார்.

அனாதைகளின் தந்தையாய், ஆதரவற்றோரின் அடைக்கலமாய் வாழ்ந்த ஜார்ஜ் முல்லர் தனது 93ஆம் வயதில் நித்திய வாழ்வைப் பெற்றார்.

அன்பரே! உமது விசுவாசம் மனிதரிடத்தில் உள்ளதா? இறைவனை சார்ந்து உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : அவர் உன்னை அழைக்கிறார். ஆதலால் பொன் திறவுகோல் கொண்டு அவர் காட்டும் தூய இடத்தில் பிரவேசி.

– ஜார்ஜ் முல்லர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஜார்ஜ் முல்லரைப் போன்ற மிஷனெரி தரிசனத்தை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : லேவி. 17-18, சங்.119:41-80, லூக்.1

இன்று...

மண்ணில் : 27.09.1805

விண்ணில் : 10.03.1898

ஊர் : குரோப்பன் ஸ்டாட்

நாடு : புருஷியா, ஜெர்மனி

தரிசன பூமி : உலகம் முழுவதும்

ஜார்ஜ் முல்லர் நினைவு தினம்

ஜெபிக்க :

தீமோத்தேயு

17 - 97

பொறுப்பு மிகுந்த வாழ்வு

தீமோத்தேயுவுக்கு வயது 20. இளம் பிராயம். உலக ஆசா பாசங்கள் உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும் வயது இது. ஆனால், தீமோத்தேயு தீய காரியங்களை தீயிலிட்டு இயேசுவை உள்ளத்தில் ஏற்று ஊழியராக தன்னை அர்ப்பணித்தார். மிகவும் இளம் வயதினராகிய தீமோத்தேயுவை ஊழியராக்கிய பெருமை பவுல் அப்போஸ்தலனையே சாரும். பவுலுக்கு நீண்ட காலமாக உதவியாளராக இருந்தவர் தீமோத்தேயு.

இவரது தகப்பனார் ஒரு கிரேக்கர். தாயார் ஒரு யூத பெண்மணி. பவுல் அப்போஸ்தலன் தனது முதல் மிஷனெரி பயணத்தின்போது லீஸ்திராவுக்கு வந்த வேளையில் தீமோத்தேயும் அவரது தாயாரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

தீமோத்தேயுவின் விசுவாசத்தையும், ஊழிய வாஞ்சையையும் கண்ட பவுல் இவரை தம்முடன் அழைத்து சென்றார். இவர் சிறந்த நற்சாட்சி பெற்றவர். மாயமற்ற விசுவாசம் கொண்டவர். விசுவ சத்தின் உத்தம குமாரனாக, அனைவரையும் விசுவாசத்திற்குள் வழி நடத்தியவர். தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பை மிகுந்த கவனத்தோடும், உண்மையோடும் நிறைவேற்றியவர்.

அன்று ஒரு நாள், தெசலோனிக்கேயா பட்டணத்தில் மிகுந்த கலகம் உண்டாயிற்று. பவுல் அப்போஸ்தலனுக்கு விரோதமாக யூதர்கள் கொதித்து எழுந்தார்கள். எனவே, பவுல் அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு சென்றார். கலகம் செய்த யூதர்களை சமாதானப்படுத்தவும், அவர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தவும், பவுல் தீமோத்தேயுவை நியமித்தார். ஆண்டவரின் துணையோடு மிகவும் நேர்த்தியாக கலகத்தைச் சீர்படுத்தினார். இதனால், பவுலால் 'எனக்கு பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரன்' என்று பாராட்டப்பட்டார்.

எபேசு சபையில் தனது பணியை தொடங்கிய இவர், நீண்ட காலமாக அச்சபையின் பேராயராக விளங்கினார். புற மதத்து நம்பிக்கை புறமுதுகு காட்டி ஓட, புது மனிதர்களாக மாற்றப்பட்டனர் அந்நாட்டு மக்கள். ஆயினும், தீய சக்திகளின் நாச வேலை அவரை சூழ்ந்து கொள்ள அவர் மீது தடிகளையும், கற்களையும் வீசினார்கள். நல்ல போராட்டத்தை போராடிய தீமோத்தேயு, பவுல் அப்போஸ்தலனைப் போன்றே இரத்த சாட்சியாகவே மரித்தார்.

அன்பரே! பிரச்சனைகள் ஏற்படும்போது சமாதானம் செய்பவராக காணப்படுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கடவுளுடைய வாகனங்களின் வெற்றிப் பயணத்தை தடைகள் எவையும் தடுக்க முடியாது – ஹானா ஸ்மித்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மை சார்ந்தே என் பயணத்தை ஆரம்பித்து வெற்றியுடன் தொடர உதவி செய்யும்.

தியானத்திற்கு : லேவி. 19, சங்.119:81-128, லூக். 2.

இன்று...

மண்ணில் : 17
விண்ணில் : 97
ஊர் : லீஸ்திரா
நாடு : லிகவோனியா
தரிசன பூமி: எபேசு

சாமுவேல் பவுல் ஐயர் 1900

ஜெபிக்க :

ஃபிளேவியஸ் யோசிபஸ்

37 - 100

தற்கொலை முடிவல்ல

இப்போதெல்லாம் தற்கொலை முயற்சிகள் பற்றிய செய்திககளை அதிகமாக செய்தித்தாள்களில் நாம் பார்க்க முடிகின்றது. ஏன் பலர் தற்கொலை முயற்சியில் இறங்குகிறார்கள்? பிரச்சனைகளும், வேதனைகளும் ஏற்படும்போது, தற்கொலைதான் தீர்வு என்று எண்ணுதல் மாபெரும் தவறு. வாழ்ந்துகாட்ட அழைக்கப்படும் நாம், விழுந்துவிடுவது சரியாகுமோ?.

கி.பி. 66 முதல் 70 ஆண்டுகளில் தனி நாடு வேண்டி, யூதர்கள் ரோமர்களுக்கு எதிராக போர் தொடுத்தனர். அப்போரில் வெற்றியும் பெற்றனர். இதனைக் கண்ட நீரோ மன்னன் கொதித்து எழுந்தான். வெஸ்பாசியான் என்னும் படைத்தலைவனை யூதாவுக்கு அனுப்பினான். மிகவும் சீற்றத்துடன் வந்த அவன், யூதர்களின் பட்டணங்களை ஒவ்வொன்றாக அழிக்க ஆரம்பித்தான். யோத்தப்பா என்று ஒரு பட்டணம். யூதர்களின் எஞ்சிய புரட்சியாளர்கள் இப்பட்டணத்திலே தான் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ரோமர்கள் கையில் சிக்கி, அடிமைகள் ஆவதைவிட, தற்கொலை செய்வது மேல் என்ற கொடூரமான முடிவுக்கு வந்தனர்

புரட்சியாளர்களின் கூட்டத்தில் மாட்டிக் கொண்ட யோசிபஸ், தற்கொலை முடிவை விட்டு விலகுமாறு அப்புரட்சியாளர்களை வேண்டினார். ஆயினும், அவர்கள் இவர் பேச்சைக் கேட்கவில்லை. தங்கள் முடிவின்படியே தற்கொலை செய்து கொண்டனர்.

இவர் கி.பி.67ஆம் ஆண்டு ரோமர்களிடம் சரணடைந்தார். இதனால் கைதியாக பிடிக்கப்பட்டு, ரோம் நகருக்கு கொண்டுபோகப்பட்டார். கி.பி. 70ஆம் ஆண்டு எருசலேம் தேவாலயத்தின் அழிவை நேரில் கண்ட சாட்சி இவர். தம்மை ரோம பிரஜையாக மாற்றிக் கொண்டு ஃபிளேவியஸ் என்னும் பெயரை தன் பெயருடன் இணைத்துக் கொண்டார். இவர் ஒரு மாபெரும் எழுத்தாளர். இயேசுகிறிஸ்துவின் சரித்திரத்தை ஆதாரத்துடனும் தெளிவுடனும் வாசிப்பவர்களை கிறிஸ்துவின்பால் வழிநடத்தும் முறையிலும் எழுதி வெளியிட்டார். 'யூதர்களின் யுத்த சரித்திரம்', 'பண்டைக்கால யூதேயா' போன்ற புத்தகங்களை எழுதிய இவர், ஓர் சிறந்த சரித்திர ஆசிரியராவார்.

அன்பரே! சரித்திரம் படைப்பதில் உங்கள் ஆர்வமும், தீவிரமும் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உமது நோக்கம் உயர்ந்ததாயிருப்பின் நீயும் உயர்வாய்
உன் மூலம் உலகம் வளமானதாகும். - பிலிப்ஸ் புரூக்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் தந்த வாழ்க்கையை
முழுமையாக வாழ்ந்து காட்டுவேன்.

தியானத்திற்கு : லேவி. 20 சங்.119:129-176, லூக். 3..

இன்று...

பிறப்பு : 37

இறப்பு : 100

ஊர் :

நாடு : எருசலேம்

த.பூமி : எருசலேம்

ஜேம்ஸ் ரீட் எக்கார்டு 1887

ஸ்மித் விக்கில்ஸ்வொர்த் 1947

ஜெபிக்க :

ஜேம்ஸ் ஹெப்பர்ன்

1815 - 1911

அறுப்பு மிகுதி

வேலை கிடைக்கவில்லை. இது பல இளைஞர்களின் மனக் குமுறல். "எத்தனையோ இடத்திற்கு விண்ணப்பம் கொடுத்தேன். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை," என்று தன்னையே நொந்து கொள்வார்கள். ஆனால், வேலை கிடைத்த பலருக்கோ தங்கள் பணியிடங்களில் நிம்மதி கிடைக்கவில்லை என்பார்கள். சரியான தெரிவு செய்தல் இதில் முக்கியமானது.

ஜேம்ஸ் ஹெப்பர்ன் ஒரு டாக்டர். தன்னுடைய வேலையை முழுவதுமாக ஆண்டவருடைய கரத்தில் அர்ப்பணித்தார். உலகப்பிரகாரமாக உழைப்பதைக் காட்டிலும், உன்னதருக்காக உழைக்க வேண்டும் என்பதில் மிகுந்த பாரம் உடையவராகக் காணப்பட்டார். மருத்துவ மிஷனெரியாக ஷியாம் என்ற இடத்திற்குச் செல்ல நினைத்தார். ஆனால், சூழ்நிலைகளின் சாதகமற்ற நிகழ்வுகளினால் 1841ம் வருடம் சிங்கப்பூர் சென்றடைந்தார்.

கடல் பயணத்தின்போது, ஜேம்ஸின் மனைவி கிளாரா கர்ப்பிணியாயிருந்தார். துரதிஷ்டவசமாக அக்கரு கலைந்துபோனது. மிகவும் வேதனைக்குள்ளானார் ஜேம்ஸ். எனினும், கிறிஸ்துவுக்குள் தன்னை தேற்றிக் கொண்டார். ஓபியம் போர் காரணமாக சீனாவில் இவர் அனுமதிக்கப்படாததால், இரண்டு வருடத்திற்குப் பின் சீனா சென்றார். 5 வருடங்கள் அங்கு கடினமாக பணி செய்து, கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார்.

1859ம் வருடம் ஜப்பான் நாட்டிற்கு மிஷனெரியாகத் தன்னுடைய பயணத்தை ஆரம்பித்தார். அங்கு மருத்துவமனை, பள்ளிக்கூடங்களைக் கட்டினார். ஜப்பான்-ஆங்கில அகராதியை வெளியிட்டார். ஜப்பானிய மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்ப்பதில் ஆர்வமுடன் ஈடுபட்டார். இவரின் இரண்டாவது குழந்தையும், பிறந்து சில மணிநேரங்களில் இறந்துபோனது. சொல்லொண்ணாத் துயரத்தில் ஆழ்ந்தார். எனினும், தன் அழைப்பில் நிலைத்து நின்று அங்கு தன் பணியை வெற்றிகரமாக செய்து, 96ஆம் வயதில் இறைவனுக்குள் இளைப்பாறினார்.

அன்பரே! ஊழியத்தினால் ஏற்படும் இழப்புகளை தாங்கிக் கொள்ள தயாரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நமது இழப்புகள் எவ்வளவு தான் பெரிதாக இருப்பினும், நம் எஜமானர் நம்மை அழைக்கும் வரை நமது பணிகளை விட்டுவிடுதல் கூடாது. –ஜே. ஆர். மில்லர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எத்தனை இழப்புகள் நேரிடினும், உம்மைவிட்டு விலகிடேன்.

தியானத்திற்கு : லேவி.21, சங்.120-124, லூக். 4.

இன்று...

பிறப்பு : 13.03.1815

இறப்பு: 11.06.1911

ஊர் : மில்டன்

நாடு : பெனிசில்வேனியா

ந.பூமி : சீனா, ஜப்பான்

ஜேம்ஸ் ஹெப்பர்ன் பிறந்த தினம்

பெர்க்மான்ஸ் 1599

நவமணி அன்னபாய் 1935

ஜெபிக்க :

Scanned with CamScanner

மாற்கு

- 68

விழித்தெழுங்கள்

வாழ்க்கையில் சோர்வுற்று மிகவும் வேதனையடைந்து பின்வாங்கி போனவரா நீங்கள்? அப்படியானால் மாற்குவின் வாழ்க்கையைப் பார்த்து சீர்படுத்திக் கொள்ளுங்கள்.

பவுலின் முதல் ஊழியப் பயணம் அது. பவுலும், பர்னபாவும் எருசலேமுக்கு வந்து தர்ம ஊழியத்தை நிறைவேற்றினப் பின்பு மாற்குவைக் கூட்டிக் கொண்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள். பின்னர் அங்கிருந்து சீப்புரு தீவு வழியாக தற்போது துருக்கி என்றழைக்கப்படும் நாட்டிற்கு வந்தார்கள். அங்குள்ள மக்கள் சற்றே முரடர்கள். சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்றபோது மாற்குவுக்கு என்ன ஆனதோ தெரியவில்லை. அவர் பின்வாங்கி விட்டார். ஒருவேளை அம்முரடர்களைக் கண்ட பயம்கூட காரணமாக இருக்கலாம். ஆண்டுகள் இரண்டு உருண்டோடின. தனது செயலுக்காக மிகவும் மனஸ்தாபப்பட்ட மாற்கு மீண்டுமாக பவுல் பர்னபாவுடன் சேர்ந்துக் கொண்டார்.

இரண்டாவது மிஷனெரிப் பயணம் அது. பவுல் தன் பயணத்தை துவங்கும் வேளையில், மாற்கும் உடன் செல்ல விரும்பினார். ஆனால், பவுல் அதற்கு சம்மதிக்க மறுக்கவே, பர்னபாவுடன் இணைந்து சுவிசேஷத்தை அறிவித்தார். பின்வாங்கிப் போன மாற்குவின் பணி வீரத்துடனும், சுறுசுறுப்புடனும் காணப்பட்டது.

பதினொரு ஆண்டு இடைவெளிக்குப் பின் பவுலை சந்தித்தார், 'மிகவும் சிறப்பாக பணி செய்த மாற்கு, ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமானவன்' என்ற பாராட்டைப் பெற்றார். பவுலுக்கு மட்டுமின்றி, பேதுருவுக்கும் உதவி புரிந்தார். கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் சிறப்பாக எழுதினார். இது மாற்கு சுவிசேஷம் என்ற பெயரில் வேதாகமத்தில் இடம் பெற்று, ஒவ்வொரு உள்ளத்திலும், இல்லத்திலும் கிறிஸ்துவை இடம் பெறச் செய்ய தூண்டுகின்றது.

அலெக்சாந்திரியாவில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, விக்கிரக ஆராதனைக் காரர்களால் பிடிக்கப்பட்டு, உயிருடன் தீ வைத்து கொழுத்தப்பட்டார். உடல் நெருப்பில் எரிந்து கொண்டிருக்கும் போதே, கனமழையும், காற்றும் வீச, உடல் கீழே விழுந்தது. உயிர் ஆண்டவருக்குள் இளைப்பாறுதலடைந்தது.

அன்பரே! மனதில் எழுச்சி பெற்று, வீரமுடன் செயல்பட அர்ப்பணிப்பீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மனசாட்சி என்னும் சிறு தீபம், தேவனால் ஏற்றி வைக்கப்பட்டிருக்குமேயானால் அதை எவரும் முழுவதும் அவித்து போட முடியாது. - மேத்யூ ஹென்றி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மால் ஏற்றி வைக்கப்பட்ட விளக்காக, பிரகாசித்து சுடர் கொடுக்க என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : லேவி. 22, சங்.125-127, லூக். 5.

இன்று...

பிறப்பு :

இறப்பு : 25.04.68

ஊர் : சிரேனே

நாடு : லிபியா

தரிசன பூமி : அலெக்சாந்திரியா

ஜெபிக்க :

இன்கிரிட் கவுஸ்கி

- 1995

தன்னலமில்லாத அன்பு

"அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."

"CMSன் அம்மா" என்று அழைக்கப்படும், இன்கிரிட் கவுஸ்கி அவர்கள், அவ்விதமே வாழ்ந்து காட்டியவர்கள். ஏழைகளின் தாயாராக, எளியவர்களின் நண்பராக, தன்னையே தியாகமாக்கினார்.

CMS என்பது சுமார் 30,000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு வாழ்வு கொடுத்து, அவர்களை இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்கச் செய்து, இன்றும் வழிகாட்டும் ஓர் சிறந்த, ஒப்பற்ற நிறுவனம்.

சமுதாயத்தில் ஆதரவற்று, அடைக்கலமில்லாமல், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வாழ வழி தெரியாமல் தவித்த ஏழைச் சிறுவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த (கிறிஸ்டியன் மிஷன் சர்வீஸ்) CMSன் முதுகெலும்பாய் திகழ்ந்தவரே, இன்கிரிட் கவுஸ்கி.

ஓர் நாள், சிறுவன் ஒருவன், உடல்நிலை சரியில்லாததால், வாந்தியெடுக்க ஆரம்பித்தான். அதனைக் கண்டார் இத்தாய்; ஓடிச் சென்றார்; அவன் அருகில் உட்கார்ந்தார், அவனை அரவணைத்தார்; தன் கைக்குட்டையை எடுத்து, அவன் வாந்தியை கைகளில் ஏந்தினார். அவனைக் கவனிப்பதற்கு தாதியர்கள் இருந்தும், கிறிஸ்துவின் அன்பு இவரை உந்தித் தள்ள, குழந்தைகளின் உற்றத் தாயாராக, தன் பணிகளைச் சிறப்புடன் செய்தார்.

பல இடங்களில் ஓய்வு நாள் பள்ளிகளை ஆரம்பித்தார். ஒவ்வொரு நிமிடமும் கிறிஸ்துவின் அன்பை, ஒருவருக்காவது கூற வேண்டும் என்ற ஏக்கம் கொண்டவர். அவ்விதமாகவே, அங்கும் இங்கும் சுற்றித் திரிந்து, பேச்சில் மட்டுமல்லாமல், செயலிலும் காட்டியவர். தன்னிடம் உள்ள எந்த பொருளையும், பிறருக்கு கொடுத்துவிட்டு, வெறுங்கையோடு வீடு செல்வார்.

CMSன் நிர்வாகி ஹார்ஸ்ட் கவுஸ்கி அவர்களின் செயல்பாட்டுக்கு, வேகத்தையும், ஆர்வத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தவர். இதனால் இந்திய நாடெங்கும் பல சிறுவர் இல்லங்கள் உருவாகின. இன்றும் 6,000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் படித்து வருகின்றனர்.

இப்புத்தகத்தின் ஆசிரியர் இந்நிறுவனத்தில் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பரே! கிறிஸ்துவின் சிந்தை உங்களில் செயல்படுகின்றதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நல்லவனாக இருப்பதும், நன்மை செய்வதுமே நமது நற்செய்தி பணியாக இருக்க வேண்டும்.

– சார்லஸ் தெ பூக்கோ

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஏழைகளுக்கு உதவும், இரக்கமுள்ள, கனிவுள்ள, அன்புள்ள இதயத்தை எனக்குத்தாரும்.

தியானத்திற்கு : லேவி. 23, சங்.128–130, லூக். 6.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : 15.03.1995

ஊர் :

நாடு : ஜெர்மனி

தரிசன பூமி : இந்தியா

இன்கிரிட் கவுஸ்கி நினைவு தினம்

உலக ஊனமுற்றோர் தினம்

பால் சுந்தரம் கடம்பவனம் 1980

1495 - 1550

தாராளமாய் கொடுங்கள்

கடவுளின் யோவானைப் பற்றிய புகழ் நாடெங்கும் பரவியிருந்த காலம் அது. மாகாணத்தின் பிரபு இவரைப் பற்றிக் கேள்விப்பட்டார். யோவானை சோதித்துப் பார்க்க எண்ணினார்.

என்ன செய்வது? ஏழையைப் போன்ற வேடம் அவர் மனதில் உதித்தது. ஏழையாக வேடம் பூண்டார். யோவானை தேடி வந்தார். தான் ஒரு ஏழை என்றும் தனக்கு உதவும்படியும் வேண்டினார்.

கொடுப்பதை தன் இன்பமாகக் கொண்ட யோவான் உதவிசெய்யாமலிருப்பாரோ? தன்னிடமிருந்த 25 பணங்களையும் அப்படியே அவருக்குக் கொடுத்தார். அப்பிரபு அப்பணங்களை பெற்றுக்கொண்டு தம் மாநிலம் திரும்பினார்.

யோவானின் தியாக மனதையும், அன்பான உள்ளத்தையும் கண்ட அப்பிரபு 150 தங்கச் சவரன்கள் அனுப்பியதோடு ஒவ்வொரு நாளும் 150 ரொட்டியும், 4 ஆடுகளும், 6 கோழிகளையும், யோவான் நடத்தி வந்த ஆதரவற்ற ஏழைகளின் விடுதிக்கு அனுப்பி வந்தார்.

கி.பி. 1540ல் ஏழைகளுக்காக விடுதியை ஆரம்பித்த யோவான், விறகு வெட்டி, அதனை விற்று அதில் வரும் ஊதியத்தைக் கொண்டே தன் விடுதியை நடத்தலானார். பின்னர் அவரின் தியாகச் செயலால் பலர் உதவிட பல விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டன.

'நன்மை செய்யும் சகோதரர்' என்ற அமைப்பின் மூலம் இன்றும் சுமார் நூறு மருத்துவமனைகள் யோவானின் தியாகத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

விடுதியில் தங்கிய மக்கள் மட்டும் அல்லாமல், அதனை சுற்றியிருக்கிற அத்தனை மக்களின் சரீர, ஆத்மீக நலனிலும் கரிசனையுள்ளவராகவே வாழ்ந்தார். கிறிஸ்துவின் அன்பு இவரை முற்றிலும் ஆட்கொண்டதால், தாராளமாய் கொடுக்கும் தியாக சிந்தை இவரில் செழித்தோங்கியது. இவரை அண்டி வந்தவர் அனைவருக்கும் அடைக்கலமானார்.

அன்பரே! கொடுக்கும் மனப்பான்மையைக் கடைபிடித்து வருகின்றீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் ஒரு அற்பன்; ஒரு நீச பாவி; எனினும் என்னால் இயன்ற உதவிகளை ஏழை மக்களுக்குச் செய்யாமலிருக்க முடியுமோ?
- கடவுளின் யோவான்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தாராளமாய் கொடுக்கும் தியாகச் சிந்தையை என்னுள்ளத்தில் பாயச் செய்யும்.

தியானத்திற்கு : லேவி. 24, சங்.131-134, லூக். 7.

இன்று...

மண்ணில் : 1495

விண்ணில் : 08.03.1550

ஊர் : மோட்டமோரோ நோவோ

நாடு : போர்ச்சுகல்

தரிசன பூமி: ஆப்பிரிக்கா

ஜெபிக்க :

புனித பேட்ரிக்

தீமைக்கு நன்மை

387 - 493

வயது 17, தெருவில் நின்றுகொண்டிருந்தார் பேட்ரிக். திடீரென வந்தது ஒரு முரட்டுக் கூட்டம். அவர்கள் கையில் சிக்கிக் கொண்ட இவர் அயர்லாந்து நாட்டிற்குக் கடத்தப்பட்டார். அங்கே ஒரு தலைவனிடம் ஒப்படைக்கப்படவே, ஆடு மேய்க்கும் தொழிலுக்கு உட்படுத்தப்பட்டார். ஆண்டுகள் ஆறு கடந்தன.

ஒருநாள், அவ்விடத்திலிருந்து தப்பித்துத் தன் தாயகமான பிரிட்டனுக்கு ஓடி வந்தார். எனினும், தான் அடிமையாக இருந்த அயர்லாந்து நாட்டினரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற ஆவல் இவரை உந்தித் தள்ளியது. அதற்கான நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

வயது 43. இவரின் கனவு நனவானது. அயர்லாந்து சென்றார் பேட்ரிக். ஆயராகச் சென்ற அவரை முதலில் மக்கள் விரட்டியடித்தனர். எனினும், 'டிச்சூ' என்ற பெயர்கொண்ட நாட்டுத் தலைவனை மனமாற்றம் அடையச் செய்தார். அத்தலைவன் திருமுழுக்குப் பெற்றதால் அங்கு ஒரு ஆலயத்தைக் கட்டினார். ஆயினும், பல உபத்திரவங்கள் அம்மக்களால் இவருக்குக் கொடுக்கப்பட்டது. பல பேய் வித்தைகளால் இவரை மிரட்டினர். ஆனால், அவரது ஜெபத்தின் வல்லமையினால் 'ட்ரூயிட்' என்ற இடத்தின் குருக்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

7 ஆண்டுகள் 'கன்நாட்' பகுதியில், கிறிஸ்துவின் ஒளிகொடுக்கும் சுடராகத் தன்னைப் பிரதிபலித்தார். இவரின் விசுவாச வாழ்க்கையினால் பலர் கவரப்பட்டு கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தனர். இருப்பினும், விரோதிகள் பலரால் பலமுறை சிறைக்குள் தள்ளப்பட்டார். இவர் உயிருக்குப் பலமுறை ஆபத்துக்கள் நேர்ந்தன. எல்லாத் துன்பங்களின் மத்தியிலும் ஆண்டவரையே சார்ந்திருந்ததால் வெற்றிகளைப் பெற்றார். "ஜெயமோ கர்த்தரால் வரும்" என்ற வாக்கு இவர் வாழ்வில் பலித்தது. ஆயிரக்கணக்கானோர், அங்கே திருமுழுக்குப் பெற்றனர். அயர்லாந்தில் பல இடங்களில் திருச்சபைகள் உருவாக்கப்பட்டன. இவரது அயராத உழைப்பினால் 'அயர்லாந்தின் அப்போஸ்தலன்' என்று இவர் அழைக்கப்பட்டார்.

அன்பரே! உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களும் இரட்சிக்கப்பட முயற்சி செய்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தான் சிலுவையில் அறையப்பட தயாராயிருந்தாலன்றி எந்த திருச்சபையோ அல்லது இயக்கமோ நீடித்து வாழ முடியாது.

– வின்செஸ்டர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் சிலுவையை நான் சுமக்கவும், அதினால் பிறர் வாழ்வு முன்னேறவும் என்னை வழி நடத்தும்.

தியானத்திற்கு : லேவி. 25, சங்.135-136, லூக். 8.

இன்று...

மண்ணில் : 387

விண்ணில் : 17.03.493

ஊர் : கம்பீரியா

நாடு : இங்லோந்து

தரிசன பூமி : அயர்லாந்து

புனித பேட்ரிக் நினைவு தினம்

தாமஸ் சால்மர்ஸ் 1780

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஜேம்ஸ் ரென்ஸ்விக்

1662 - 1688

நம்பிக்கையில் உறுதி

"அன்புமிக்க நண்பர்களே! தேவன் அதிக தயவாக நான் மரண பயத்தை எதிர்த்து நிற்க, அவருடைய பெலனை எனக்கு அளித்திருக்கிறார். எப்போது மரித்து, மகிமைக்குள் செல்லலாம் என்று ஆவலோடு காத்திருக்கிறேன். இவ்வுலகத்தில் உங்களைத் தவிர, மற்ற எந்த காரியத்தை விட்டு பிரியவும், நான் துக்கப்படவில்லை. உங்களிடத்தில் நான் விடைபெற்றுக் கொள்கிறேன். அருமையான உடன் ஊழியர்களே, ஆட்டுகுட்டியானவரைப் பின்பற்றுகிறவர்களே, உங்களுக்கு என் அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவை ஜேம்ஸ் ரென்ஸ்விக்கின் இறுதி வார்த்தைகள்.

ஸ்காட்லாந்து தேசத்தில் ஏழை பெற்றோருக்கு மகனாக, பிறந்தவர் ஜேம்ஸ். இளமையிலேயே, ஆண்டவரை உற்சாகமாக தேடுவதிலும், ஜெபிப்பதிலும் சிறந்தவராகக் காணப்பட்டார். படிப்பதற்கு வசதியற்றவராகப் காணப்பட்டதால், இவரின் தூய்மையான வாழ்க்கையை பார்த்த, உறவினர்கள் கல்லூரிக்கு அனுப்பி படிக்க வைத்தனர்.

அந்த காலத்தில் பட்டம் பெறும் ஒவ்வொருவனும், நான் அரசனை இந்த ராஜ்யத்தின் எல்லா காரியங்களிலேயும், ஆளுகை கர்த்தாவாக ஏற்றுக் கொள்கிறேன். அரசனின் ஆளுகைக்கும், வல்லமைக்கும் எந்தவிதத்திலும் கீழ்படியாமல் இருக்கமாட்டேன் என்று வாக்குக் கொடுக்க வேண்டும். ஆனால், ஜேம்ஸ் கிறிஸ்துவையே தன் ராஜாவாக ஏற்றுக் கொண்டதால், அரசனின் அராஜகத்தை வெறுத்தார். கத்தோலிக்க சட்டத் திட்டங்களிலிருந்து, தன்னை விடுவித்துக் கொண்டார். கிறிஸ்துவைப் பின்பற்றி, உபத்திரவங்களை சகித்து, உடன்படிக்கைக்குச் சொந்தகாரர்களாக விளங்கிய மக்களுக்கு போதகரானார்.

அரசனின் ஆட்களால் பிடிக்கப்பட்ட இவர், கிறிஸ்துவை மறுதலிக்கவும், அரசனை வணங்கவும் கட்டாயப்படுத்தப்பட்டார். ஆனால், இவர் அதனை மறுக்கவே, கொடுமையான தண்டனைகளை அனுபவித்தார். 1888ம் ஆண்டு, பலமுறை விசாரிக்கப்பட்ட இவர், இறுதியில் தன் விசுவாசத்தில் நிலைத்து நின்றதால், கருப்பு துணியால் உடல் மூடப்பட்டு, தூக்கிலிடப்பட்டார்.

அன்பரே! கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் ஏற்படும் உபத்திரவங்களை சகிக்கத் தயாரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மணவாளனை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறேன்.
நான் கூடிய சீக்கிரத்தில் அவரை சந்திப்பேன்.
– ஜேம்ஸ் ரென்ஸ்விக்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எவ்விதமான உபத்திரவங்கள் நேரிடினும்,
உம்மையே உறுதியாகப் பற்றிக்கொள்வேன்.

தியானத்திற்கு : லேவி. 26, சங்.137-139, லூக். 9

இன்று...

மண்ணில் : 15.02.1662
விண்ணில் : 17.02.1688
ஊர் : கிளென்கெயின், டம்பிரீஷயர்
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : ஸ்காட்லாந்து



சார்லட் எலியட் 1789
ஜான் ஜி. லேக் 1870

சிரில் 386

ஜெபிக்க :

பொறுப்பு காத்திருக்கிறது



1677 - 1720

இன்று கிரிண்ட்லர் மண்ணில் விதைக்கப்பட்ட நாள். தரங்கம்பாடி சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்ற மாணிக்கம் ஒன்று மண்ணில் வீழ்ந்த நாள்.

தரங்கம்பாடியில் முதல் தமிழ்க் கிறிஸ்தவர்களின் காலத்தில் சீகன்பால்குடன் திறம்பட பணியாற்றியவரே கிரிண்ட்லர். ஆழ்ந்த அறிவுத் திறன் உள்ளவர். ஓயாமல் உழைப்பதில் மகிழ்ச்சி காண்பவர்.

சீகன்பால்குவின் அன்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். "ஆயிரக்கணக்கானவர்களிலிருந்து ஒருவரைத்தான் தெரிந்தெடுக்க வேண்டியதிருந்தாலும், அவர்களுக்குள் கிரிண்ட்லரைத் தான் தெரிந்தெடுத்து, என் பொறுப்பை அவரிடமே கொடுப்பேன். அவரே என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்" என்று கிரிண்ட்லரைப் பற்றி சாட்சி பகர்ந்தார் சீகன்பால்கு.

ஜெர்மனி நாட்டில் தன் கல்வியை கற்றுக் கொண்டிருக்கும்போதே இந்தியாவைக் குறித்த தாகம் நிறைந்தவராகக் காணப்பட்டார் கிரிண்ட்லர்.

1709ம் ஆண்டு தரங்கம்பாடியை அடைந்த இவர், தமிழ் மொழியைக் கருத்தூன்றிப் படித்தார். மக்களிடம் தமிழில் பேச ஆரம்பித்தார். சீகன்பால்கைப் போன்று கால்நடையாகவே சுற்றித் திரிந்து பல கிராமங்களுக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கித்தார். குறுகிய காலத்தில் கிரிண்ட்லர் ஆற்றிய தொண்டு மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. அநேக மக்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

சீகன்பால்கு மரித்தபின் சபைகளின் பொறுப்பை கிரிண்ட்லர் ஏற்றார். சீகன்பால்குவின் மரணம், இவரை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது. ஆயினும் நம்பிக்கையுடனும், ஜெபத்துடனும் தன் பணியைத் தொடர்ந்தார். அயராத ஓட்டம் இவருக்கு உடல் நலக் கேட்டை வருவித்தது. தன் பொறுப்புகளை உடன் மிஷனெரிகளிடம் ஒப்படைத்து இதே நாள் தரங்கம்பாடி மண்ணில் தலையைச் சாய்த்தார்.

அன்பரே! உண்மையுடனும், உத்தமத்துடனும் உமது பணிகளை நிறைவேற்றுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இப்போது உயிரோடிருக்கும் நாம், இப்பணியின் பயனை ஒருவேளை காணமாட்டோம். ஆனால் நமக்கு பின்வரும் சந்ததியார் நிச்சயமாக அதனைக் காண்பார்கள் - கிரிண்ட்லர்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் தரும் பொறுப்புகளை, உத்தமத்துடன் நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறேன்.

தியானத்திற்கு : லேவி.27,சங்.140-142, லூக்.10

இன்று...

மண்ணில் : 1677
விண்ணில் : 19.03.1720
ஊர் : உசன்சி
நாடு : ஜெர்மனி
தரிசன பூமி : இந்தியா

கிரிண்ட்லர் நினைவு தினம்

டேவிட் லிவிங்ஸ்டன் 1813

ஜெபிக்க :

இசபெல் கூன்

1901 - 1957

ஏமாற்றம் ஏமாந்து போகும்

வாழ்க்கையிலே விரக்தி, ஏமாற்றங்கள்; நம்பியவர்கள் கைவிட்டனர். தனிமை வாட்டி எடுத்தது; தூக்கம் வரவில்லை. தற்கொலை செய்து கொள்ளலாமா?

இவ்வாறு பல்வேறு எண்ணங்களுடனும், மனப் போராட்டங்களுடனும் சிக்கித் தவித்த இசபெல் கூனை ஆண்டவர் தம் பணிக்கு அழைத்தார்.

தூசி படிந்து கிடந்த வேதாகமம் திறக்கப்பட்டது. அழுக்கடைந்த இசபெல்லின் வாழ்வும் அதனால் கழுவப்பட்டது. தன்னை ஓர் மிஷனெரியாக ஆண்டவரிடம் அர்ப்பணித்தார்.

1928ம் ஆண்டு சீன தேசத்திற்குப் புறப்பட்டார் இசபெல். கடினமான மொழிப் பிரச்சனை காணப்பட்டாலும் கனிவுடன் மக்களை நேசித்து அவர்களுடன் அன்புடன் பழகினார்.

திறந்த வெளிக்கூட்டங்கள் மூலம் அநேகருடைய இருதயங்களைத் திறந்தார். இயேசு கிறிஸ்துவின் அன்பு மக்களின் இருதயங்களை ஆட்கொண்டது.

லிசு மக்கள் மத்தியில் அவரின் பணி அளவிட முடியாத அளவு பெருகியது. கணவர் ஜானின் உற்சாகம் இன்னும் உத்வேகத்தையும், உறுதியையும் தந்தது. தன் மகளையும் மிஷனெரிப் பணிக்கு அர்ப்பணித்தார் இசபெல்.

வேதபாடப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. அநேக வாலிபப் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். பின்னர் ஆண்களுக்கெனவும் வேதபாடப் பள்ளிகள் நடத்தப்பட்டன.

நற்செய்திப் பணிக்கு நடுவே ஏற்பட்ட போர் பிரச்சனைகள் மத்தியிலும், அயராது அரும்பணியாற்றினார் இசபெல். சீனா கம்யூனிச நாடாக மாற்றப்பட்ட போதிலும், இசபெல் லிசு மக்களைக் கர்த்தரின் நாட்டிற்குச் சொந்தக்காரர்களாக மாற்றிய பணி சிறப்பானதாகும்.

அன்பரே, உங்கள் வாழ்வின் ஏமாற்றங்களை ஆண்டவர் ஜெயமாக மாற்றுவார் என நம்புகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மோட்சத்தின் பொன் மதில்களுக்கு வெளியே என் தலையை நீட்டி லிசு சபையை பார்த்துக்கொண்டிருப்பேன்.

-இசபெல் கூன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஏமாற்றங்களை நினைத்து கவலைப்படாமல் நீர் தரும் ஏற்றங்களில் வாழ உதவி செய்யும்.

திலாவத்திற்கு : எண்.1, சங்.143-144, லூக்.11

இன்று...

மண்ணில் : 17.12.1901

விண்ணில் : 20.03.1957

ஊர் : டொரண்டோ, அன்டாரியோ

நாடு : கனடா

தரிசன பூமி : சீனா

இசபெல் கூன் நினைவு தினம்

ஜெபிக்க :

பெர்க்மான்ஸ்

1599- 1621

சேவையே இன்றைய தேவை

பெல்ஜியத்திலுள்ள டியெஸ்டில் என்ற ஊர். சகரியா பெர்க்மான்ஸ் மற்றும் எலிசபெத் என்பவருக்கு மகனாக பிறந்தார் பெர்க்மான்ஸ். சிறு வயதிலேயே மிகுந்த ஒழுக்கத்துடனும், பக்தியுடனும் வளர்க்கப்பட்டார். வெள்ளிக்கிழமைதோறும் உபவாசத்துடன் ஜெபிக்கும் பழக்கம் கொண்டவர்.

14 வயதில் பள்ளிப் படிப்பை நிறுத்தி, தொழில் செய்யும்படி தந்தையால் வற்புறுத்தப்பட்டார். ஆயினும், இவரது அபார புத்திக்கூர்மையினால் தன் படிப்பை மீண்டும் தொடர்ந்தார். 17ஆம் வயதில் இயேசு சபையில் சேர்ந்தார். துறவற வாழ்வை விருப்பத்துடன் ஏற்று மக்களுக்கு சேவை செய்ய தன்னை அர்ப்பணித்தார்.

இவர் அபூர்வ பக்தியும், புத்தியும் உள்ளவராதலால் மேல் கல்வி கற்க ரோம் நகருக்கு அனுப்பப்பட்டார். நண்பர் ஒருவரோடு இணைந்து 900 மைல்கள் நடந்தே ரோம் நகருக்கு சென்றார். கல்வி கற்க வேண்டும் என்ற ஆவலும், பக்தியும் இவர் நடை பயணத்தில் உற்சாகத்தை தந்தன. தன் ஒழுக்கமான வாழ்வாலும், உதவி செய்யும் குணத்தாலும் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றார்.

தியானத்தில் அதிக நேரங்களை செலவிட்டார். உலகத்தின் ஆசா பாசங்களைத் துறந்து, உண்மையில் நாட்டம் கொண்டார். துறவற சகோதரர்களின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்து காட்டினார். "செய்வன திருந்த செய்" என்ற பழமொழிக்கேற்ப ஒவ்வொரு செயலிலும் பரிபூரணத்தை வெளிப்படுத்தினார். வார்த்தையை விட செயல் முக்கியம் என்பதில் மிகவும் கருத்துள்ளவராக இருந்தார். பிறரிடம் எப்பொழுதும் நற்குணங்களையே காண ஆரம்பித்தார்.

கழிவறையை சுத்தம் செய்யும் பணியானாலும், நோயுற்றோருக்கு உதவும் பணியானாலும் எளியவருக்கும், குழந்தைகளுக்கும் ஞான உபதேசம் கொடுக்கும் பணியானாலும் எல்லாவற்றையும் மனதார ஏற்று, சிறப்பாக நடத்தினார். உண்மை பக்தராக உலகில் வாழ்ந்து காட்டினார்.

அன்பரே! உலகில் வாழும் நம்முடைய வாழ்க்கை எவ்விதமாக காணப்படுகிறது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பாடுபட்டு பணம் சேர்த்து வைப்பதில் பயன் இல்லை.
நிறைந்த பயன் வேண்டுமெனில்,
கிறிஸ்துவுக்கு சேவை செய்யுங்கள் - பெர்க்மான்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எப்பொழுதும் எளியவருக்கு சேவை செய்யும் நல்மனதை தாரும்.

தியானத்திற்கு : எண்.2, சங்.145-147, லூக்.12.

பிறப்பு : 13.03.1599
இறப்பு : 13.08.1621
ஊர் : டயஸ்ட் இன் பிரோபன்ட்
நாடு : பெல்ஜியம்
ந.பூமி : ரோம்

இன்று...

உலக வன தினம்

தாமஸ் கிரான்மர் 1556
டேவிஸ் கிரிஃபித்ஸ் 1863
சார்லஸ் வெஸ்லி 1788

Scanned with CamScanner

ஜோனத்தான் எட்வர்ட்ஸ்

உயிர்மீட்சி ஏற்பட வேண்டும்

1703 - 1758

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, திருச்சபைகளுக்குள் தேவையற்ற வீணான சடங்காச்சாரங்கள் மலிந்து கிடந்தன. மக்கள் முட்டாளாக்கப்பட்டு குருட்டுத்தனமான நம்பிக்கைக்குள் தள்ளப்பட்டனர். படைப்பின் தேவனை விட்டுவிட்டு படைக்கப்பட்ட பொருளை நாடிச் சென்றனர். புதிய பொருட்கள் என்ற முறையில் பல புதுமைகள் புகுத்தப்பட்டன. மக்கள் பயமுறுத்தப்பட்டு, அவைகளில் நம்பிக்கை வைக்க கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆனால், ஆண்டவரின் அடியார்கள் அவ்வப்பொழுது தோன்றி திருச்சபையை சுத்தம் செய்கின்றனர். சீர்கேடுகள் மறைந்து, சிறப்பான முறையில் திருச்சபை வளர்கின்றது.

அவ்விதமாக இங்கிலாந்தின் திருச்சபையை சீர்திருத்தியவர்களுள் ஜோனத்தான் எட்வர்ட்சும் ஒருவர். இவர் சிறந்த ஓர் இறையியலாளர். எபிரேய, கிரேக்கு, லத்தீன் மொழிகளிலும் புலமைபெற்றவர். சிறந்த வேத போதனைகளின் மூலம் ஆண்டவரின் தெய்வீகத்தை முழுமையாக அறிந்து, தன் முழுமனதோடும், ஆண்டவரைப் பின்பற்றியவர்.

ஒருநாளில் 13 மணிநேரம் படிப்பில் கவனம் செலுத்தும் இவர், மற்ற நேரங்களில் ஜெபத்தில் தரித்திருந்தார். சபையின் தன்மைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்த இவர், வெறுமனே திருச்சபைக்கு வந்து, முழங்காற்படியிட்டு ஜெபிப்பதும், திருவிருந்தில் பங்கு கொள்வதும், முக்கிய பண்டிகைகளில் மட்டும் திருச்சபைகளுக்கு வருவதும் வாடிக்கையாக மக்கள் கொண்டதை எண்ணி உள்ளம் வருந்தினார். உள்ளத்தில் உயிர்மீட்சி இல்லாததை கண்டு, மக்களின் ஆன்மீக வாழ்வை முன்னேற்ற எண்ணினார்.

"பயங்கரமான தேவனின் கரங்களில் பாவி" என்ற தலைப்பில் இவர் ஆற்றிய பிரசங்கம் கேட்போரின் உள்ளத்தில் ஊடுருவி பாய்ந்தது. பலர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டதோடு, கதறி அழுது பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் பெற்றனர். ஒரே வருடத்தில் மட்டும் இவருடைய பிரசங்கத்தால் 3,000 பேர் இரட்சிக்கப்பட்டனர். தன்னை ஒரு மிஷனெரியாக அர்ப்பணித்த இவர், நியூ இங்கிலாந்து முழுவதிற்கும் சுவிசேஷத் தீயைப் பற்ற வைத்தார். உயிர் மீட்சியின் பிரசங்கியாக உலா வந்தார். மாபெரும் மாற்றத்தை இங்கிலாந்தில் ஏற்படுத்திய இவர் 1758ம் ஆண்டு விண்ணகம் சென்றார்.

அன்பரே! நீங்கள் வாழும் பகுதியில் மாற்றம் ஏற்படக் காரணமாக அமைகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கர்த்தரே உன்னை நடத்த வேண்டுமென்று நீ விரும்புவாயானால் உன்னுடைய முக்கிய வேலை கர்த்தருடைய வேலையாக இருக்க வேண்டும்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உயிர்மீட்சி பிரசங்கியாராக, என்னையும் மாற்றும்.

தியானத்திற்கு : எண்.3, சங்.148-150, லூக்.13-14.

இன்று...

பிறப்பு	: 05.10.1703
இறப்பு	: 22.03.1758
ஊர்	: கிழக்கு வின்ட்சர், கனெக்டிகுட்
நாடு	: இங்கிலாந்து
ந.பூமி	: நியூ இங்கிலாந்து, அமெரிக்கா

ஜோனத்தான் எட்வர்ட்ஸ் நினைவு தினம்
உலக நீர் தினம்

கான்ஸ்டன்டைன் 337

ஜெபிக்க :

Scanned with CamScanner

அடா லீ

உங்களோடு இருக்கும் தேவன்

1856 - 1948

அடைமழை, இடி, புயல் காற்று; தொடர்ந்தது நிலச்சரிவு. ஐயோ! ஒரே குடும்பத்தில் ஆறு குழந்தைகள் நிலச் சரிவினால் மண் அடியில் புதையுண்டு போயினர்.

அடா லீ செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர். மிஷனெரியாக அமெரிக்காவை விட்டு இந்தியாவிற்கு வந்தார். தன் கணவர் டேவிட் லீயுடன் வங்காளத்தில் பணியாற்றினார்.

லீ குடும்பத்தின் ஆறு குழந்தைகளும் டார்ஜிலிங்கில் தங்கி படித்துக் கொண்டிருக்கும் போது ஏற்பட்டதே அக் கொடூரத் துயரச் சம்பவம். அடா லீ தன் பிள்ளைகள் அனைவரையும் இழந்தார்.

வாழ்க்கையின் சோகம் அவருக்கு ஒரு வேகத்தைக் கொடுத்தது. கிறிஸ்துவிற்காகத் தான் செய்ய வேண்டிய பாகத்தை உணர்த்தியது. வங்காளத்தின் ஆதரவற்றக் குழந்தைகள் மீது கனிவான தாகம் ஏற்பட, நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளின் தாயாக மாறினாள்.

1943-44ம் ஆண்டுகளில் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது பசியினால் வாடிய 522 குழந்தைகளை அரவணைத்து ஆதரித்தார். அத்தனை குழந்தைகளுக்கும் உயர்வான கல்வியை அளித்தார்.

வங்கள காச நோய் தடுப்பு இயக்கத்தில், அதிக பொறுப்பு ஏற்று, தீவிரமாக செயல்பட்டதால் அடா லீக்கு அரசாங்கமே தங்கப் பதக்கம் பரிசளித்து அவரை கௌரவித்தது.

தன்னை அழைத்த தேவனுக்கு உண்மையுடன் உழைத்தார் அடா லீ. இவர் விடுதியில் படித்த ஒருவர் பேராயராக மாறினார். பலர் தலைமை ஆசிரியர்களாகவும் மற்றும் பலர் உயர் பொறுப்புகளையும் பெற்றனர்.

வங்காளத்தில் எழுப்புதல் ஏற்பட அடா லீயும் காரணமானார். 'லீ ஞாபகார்த்த மிஷன்' என்ற பெயரில் அவர் ஆரம்பித்த பணி இன்றும் தொடர்கின்றது.

அன்பரே! இழப்பிலும் இறைவன் உங்களோடு இருக்கின்றார் என்பதை உணர்கின்றீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இதுவரைக்கும் கர்த்தர் செய்த உதவிக்கு நன்றியுள்ளவனாயிரு. இனி அவர் செய்யப் போகும் உதவிக்கு நம்பிக்கையுள்ளவனாயிரு.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் என்னோடு இருப்பதை, நான் என்றும் உணர்ந்துகொண்டு உம்மோடு இருக்க அருள் செய்யும்.

தியானத்திற்கு : எண்.4, நீதி.1, லூக்.15.

இன்று...

மண்ணில் : 23.03.1856

விண்ணில் : 11.06.1948

ஊர் : சுவீடன்

நாடு : அமெரிக்கா

தரிசன பூமி : இந்தியா

அடா லீ பிறந்த தினம்
உலக வானிலை தினம்

ஜெபிக்க :

Scanned with CamScanner

1820 - 1915

மனமிருந்தால்...

8,000 பாடல்கள் ஒருவரே எழுதியுள்ளார். அவரோ கண்பார்வையற்றவர். இரவும், பகலும் இறைவனைப் புகழ்ந்து பாடுவதையே தன் நோக்கமாகக் கொண்ட ஃபானி கிராஸ்பி என்பவரே அவர்.

சிறு பிராயத்தில் கண் மருத்துவர் ஒருவர் அளித்த தவறான சிகிச்சையினால் கண் பார்வையை இழந்தார் ஃபானி. இந்நிகழ்ச்சியினால் அவர் ஒருபோதும் வருத்தப்படவோ, கலங்கவோ இல்லை.

கிறிஸ்துவின் மேல் உள்ள நம்பிக்கையால் மகிழ்ச்சியோடு வாழ ஆரம்பித்தார். கவிநயத்தோடு கவிதைகளை எழுதும் வரத்தைச் சிறுவயதிலேயே பெற்றதால் அத்திறமையைப் பயன்படுத்த ஆரம்பித்தார். ஆண்டவருடைய வழி நடத்துதலும், ஆற்றலும் இவருக்கு நிறைவாக காணப்பட்டதால், தன் பணிகளிளெல்லாம் சிறந்து விளங்கினார்.

பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே பாடல்களை எழுத ஆரம்பித்தார். இவர் பாடல்களால் அநேகர் பொய்யை மறந்தனர். மெய்யை பற்றிக் கொண்டனர். இவர் பாடல்களைக் கேட்ட ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அன்பால் ஈர்க்கப்பட்டனர். வாழ்வில் வழி தெரியாது திகைத்தவர்களுக்கு ஃபேனியின் பாடல்கள் வழிகாட்டும்படியாக அமைந்தன. புது உற்சாகத்தால் நிறைந்து புது வாழ்வைத் தொடங்கினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் புகழ்பெற்ற பிரசங்கியாராகக் கருதப்பட்டார். உயிர்மீட்சிக் கூட்டங்கள் அனைத்திலும், ஆராதனைகளிலும் இவரது பாடல்கள் பாடப்பட்டன.

"போற்றும், போற்றும்", "இயேசுவை நம்பி பற்றிக்கொண்டேன்" போன்ற காலத்தால் அழியாத எண்ணற்ற பாடல்கள் இன்றும் பாடப்பட்டு, அநேகரைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த ஏதுவாக அமைகின்றது.

அன்பரே! குறைகளை நிறைவாக்கும் இயேசுகிறிஸ்து உங்களோடு இருக்கின்றாரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் மோட்சத்திற்கு சென்றவுடன் என் முதற்பார்வை என் இரட்சகரின் முகத்தையே பார்க்கும் - ஃபானி கிராஸ்பி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் குறைகள் அனைத்தையும் நிறைவாக்கி உம் புகழ் பாட என்னை பயன்படுத்தும்.

தியானத்திற்கு : எண்.5, நீதி.2, லூக்.16.

இன்று...

மண்ணில் : 24.03.1820
விண்ணில் : 12.02.1915
ஊர் : புட்னம் கவுன்டி, நியூயார்க்
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : அமெரிக்கா

ஃபேனி கிராஸ்பி பிறந்த தினம்

லூத்தர் ரைஸ்

ஒற்றுமை வேண்டும்

1783 - 1836

லூத்தர் ரைஸ். இவருக்கு சொந்தமாக வீடு கிடையாது. திருமணம் செய்து கொள்ளவில்லை. சுவிசேஷ சுற்றுபயணங்களிலேயே தன் காலங்களை செலவிட்டார். கிறிஸ்தவ இயக்கங்களை இணைக்கும் முக்கியமான பாலமாக விளங்கினார் இவர்..

1783ம் ஆண்டு பிறந்த இவர் 1805ம் ஆண்டு கிறிஸ்துவின் அன்பால் ஆட்கொள்ளப்பட்டார். அதோணிராம் ஜட்சனுடன் 1812ம் ஆண்டு இந்தியாவிற்கு பயணம் வந்தார். அடுத்த வருடமே, அமெரிக்காவுக்குத் திரும்பினார். திருச்சபை திருச்சபையாக சுற்றுப்பயணம் செய்து, மிஷனெரி பணிகளின் முக்கியத்துவத்தை, மிகவும் ஆழமாகவும், வலியுறுத்தியும் பேசினார்.

திருச்சபைகள் மிஷனெரிப் பணியில் மிகுந்த ஆர்வம் காட்டின. ஒவ்வொரு வீட்டிலும் தங்கி அவர்களோடு வேத வாசிப்பிலும், ஜெபத்திலும் தன் நேரத்தை செலவழித்து, மிஷனெரிப் பணியின் வாஞ்சையை அவர்களிடம் உருவாக்கினார். இவர் பாப்டிஸ்ட் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தார். அச்சிடும் சங்கத்தையும், முதல் பாப்டிஸ்ட் வார பத்திரிக்கையும் ஆரம்பித்தார். சிதறிக்கிடக்கும் திருச்சபைகளை ஒன்றிணைக்க சிறந்த சிந்தனைகளை எழுதினார்.

திருச்சபை பிளவுகள் என்பது அன்று மட்டுமல்லாமல் இன்றும் நம் சமுதாயத்தில் காண முடிகின்றது. ஒவ்வொரு திருச்சபைக்கும் ஒவ்வொரு கொள்கைகள், வழிபாட்டு முறைகள், சட்ட திட்டங்கள் என பல்வேறு விதங்களில் தங்களை பிரித்து, கிறிஸ்துவில் ஒற்றுமையை காண விழைகின்றனர். எனினும், இது நடைமுறைக்கு சாத்தியமில்லாத சில காரியங்களால், திருச்சபைகள் ஒன்றுசேர முடியாத அவல நிலை காணப்படுகின்றது.

இப்படிப்பட்ட, முரண்பட்ட நிலைகளை அந்நாட்களில் கண்ட லூத்தர் ரைஸ் தனக்கு இறைவன் தந்த திட்டத்தை, திருச்சபைக்குள் ஒற்றுமை ஏற்பட செய்ததின் மூலம் நிறைவேற்றினார். இவருடைய தரிசனம் மிகவும் பரந்தது. அனைத்து திருச்சபைகளுக்கும் தன்னை பொதுவாக்கினார். இவருடைய போதனைகள் மூலம், அநேக மிஷனெரி சங்கங்கள் உருவாகின. நடைமுறை வாழ்க்கைக்கு, முன்மாதிரியாக வாழ்ந்த லூத்தர், நம்மையும் இப்பணிகளை செய்ய தூண்டுகின்றார்.

அன்பரே! திருச்சபைகளுக்குள் ஒற்றுமை ஏற்படச் செய்யும் தீவிரம் உங்களிடம் உண்டா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மனிதன் தனக்கு மேல்பூச்சு பூசிக் கொள்கிறான்.
ஆனால் அவனுடைய இருதயத்தை வெண்மையாக்க
தேவனால் மாத்திரமே கூடும்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! லூத்தர் ரைஸைப் போன்று
திருச்சபைகளை இணைக்க என்னை பயன்படுத்தும்.

தியானத்திற்கு : எண்.6, நீதி.3, லூக்.17.

இன்று...

பிறப்பு : 25.03.1783
இறப்பு : 25.09.1836
ஊர் : நார்த் பிரவ்ப்
நாடு : மசக்குசக்ஸ்
தரிசனபூமி : அமெரிக்கா

லூத்தர் ரைஸ் பிறந்த தினம்

ராபர்ட் மர்ரே மச்செயின் 1843
கிங் ஜேம்ஸ் 1 – 1625

ஜெபிக்க :

Scanned with CamScanner

1760 - 1831

நிற வேற்றுமை வேண்டாம்.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஆண்டவரை ஆராதிக்கும் வாஞ்சையுடன் ரிச்சர்ட் ஆலனும், அவரது நண்பர் அப்சலோம் ஜோன்சும், உடன் ஆப்பிரிக்க கருப்பு இன மக்களுமாக இணைந்து, அந்த ஆலயத்திற்குள் நுழைந்தனர்.

முழுங்கால்படியிட்டு ஆண்டவரை நோக்கி விண்ணப்பம் செய்து கொண்டிருக்கும் வேளையில் திடீரென சிலர் அவர்களை முரட்டுத்தனமாய் பிடித்து வெளியே தள்ளினர். கருப்பு இன மக்கள், அவ்வாலயத்தில் தொழுது கொள்ள அனுமதி அளிக்கப்படவில்லை. மிகுந்த மன வேதனையுடன் அவர்கள் அங்கிருந்து கடந்து சென்றனர்.

ரிச்சர்ட் ஆலன் ஒரு அடிமையின் பெற்றோருக்கு மகனாக பிறந்தார். இவர் பெற்றோரும், அவர்களது நான்கு குழந்தைகளும் டெலவர் விவசாயிக்கு அடிமைகளாக விற்கப்பட்டிருந்தனர். சிறுவயதிலேயே மிகவும் துடிதுடிப்பாகவும், உற்சாகமாகவும் காணப்பட்ட ஆலன், எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொண்டார். இதனால், வேதாகமத்தை படிக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. இவரின் எஜமான் நல்ல மனிதராக காணப்பட்டபடியால், திருச்சபைக்கு செல்வதை தடை செய்யவில்லை.

1786ம் ஆண்டு இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிறருக்கு அறிவிக்கவும், தன் வீட்டிலேயே கூட்டங்கள் நடத்தவும், அவருடைய எஜமான் தன் வீட்டை ஆலனுக்கு திறந்து கொடுத்தார். அடிமைத்தனத்திலிருந்த ஆலனையும் அவர் குடும்பத்தாரையும் விடுதலை செய்தார்.

விடுதலைப் பெற்ற ஆலன், 1815ம் ஆண்டிலிருந்து 1830ம் ஆண்டு வரை விடுதலையான கருப்பர்களின் தலைவராக செயல்பட்டார். ஆப்பிரிக்கன் சபையை உருவாக்கினார். தன்னை போன்ற கருப்பு இன மக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் அன்பை எடுத்துரைக்க, தன்னை ஒரு மிஷனெரியாக அர்ப்பணித்தார். ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அடிமைகளின் வாழ்வில் கிறிஸ்து தரும் விடுதலை வாழ்வை எடுத்துரைத்தார். 1816ம் ஆண்டு தாம் உருவாக்கிய திருச்சபையின் முதல் பேராயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிமையாக பிறந்து, அடிமைகளுக்காகவே வாழ்ந்த இவர் அடிமைகளின் விடிவெள்ளி.

அன்பரே! அடக்குமுறைகளை களைய துணிந்து செயல்படுவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நீ பிரசங்கிக்கிறவைகளை நீயே செய்யவில்லையென்றால்
நீ செய்கிறவைகளை இன்னொருவர் பிரசங்கிப்பார்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் மூலமாக அநேகர் பாவத்திலிருந்து
விடுதலையடைய என்னை பயன்படுத்தும்

தியானத்திற்கு : எண்.7, நீதி.4, லூக்.18.

இன்று...

பிறப்பு : 14.02.1760 இறப்பு : 26.03.1831 ஊர் : ஜெர்மன் டவுன் நாடு : பெனிசில்வேனியா தரிசன பூமி: ஆப்பிரிக்கா	ரிச்சர்டு ஆலன் நினைவு தினம் ஜான் வின்த்ராப் 1649

ஜெபிக்க :

வில்லியம் ஹண்டர்

நிலைத்து நில்

1536 - 1555

வில்லியம் ஹண்டருக்கு வயது 19. துள்ளித் திரியும் வாலிபப் பருவம். ஆனால், கை கால்கள் கட்டப்பட்டவனாக மக்கள் வேடிக்கைப் பார்க்கும்படியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தான்.

நீண்ட அங்கி அணிந்த ஒருவர் வந்தார். வில்லியத்தை மிகுந்த கோபத்துடன் முறைத்துப் பார்த்தார். அவருடைய உருவம் பார்ப்பதற்கு மிகுந்த பயமாயிருந்தது. சிங்கத்தின் கர்ஜனை போலக் கர்ஜிக்க ஆரம்பித்தார். இயேசுவை மறுதலித்து விடு. இல்லையானால் எரிந்து சாம்பலாகி விடுவாய்!

ஹண்டர் புன்முறுவல் செய்தான். தன்னுள் இயேசு இருப்பதை எண்ணி தைரியம் கொண்டான். கிறிஸ்துவுக்காக எத்துன்பத்தையும் ஏற்றுக் கொள்ள தயாரானான். இங்கிலாந்தை ஆட்சி செய்த மேரி அரசியின் சட்டப்படி திருவிருந்தில் பயன்படுத்தப்படும் திராட்சைரசமும் அப்பமும் ஹண்டரின் முன் வைக்கப்பட்டன. அவைகளின் முன் விழுந்து வணங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டான்.

ஆனால் ஹண்டரோ இயேசுவை மட்டுமே வணங்குவதாகவும் வேறே பொருட்களை வணங்குவதில்லை என்றான். பெற்றோர் அவனை நல்லொழுக்கத்திலும் விசுவாசத்திலும் வளர்த்திருந்ததால் தன் பக்தியில் உறுதியாகக் காணப்பட்டான். எனவே 9 மாதங்கள் கடும் சித்திரவதைகளைச் சிறைச்சாலையில் அனுபவித்தான். எனினும் அவன் விசுவாசம் எள்ளளவும் குறைந்து போகவில்லை.

இறுதியாக வில்லியத்தை சுட்டெரிக்கும் நாள் வந்தது. இரத்த சாட்சியாக மரிப்பதற்குச் சிறிதும் அஞ்சாமல் முகமலர்ச்சியுடனும், தைரியத்துடனும் கம்பத்தை நோக்கிச் சென்றான். கொடூரர்கள் அவன் உடலை தீ வைக்க ஆரம்பித்தனர். வில்லியம் வானத்தை அண்ணாந்து பார்த்து "தேவனுடைய குமாரனே என்மேல் பிரகாசியும்" என்று கூறும் வேளையிலே அவன் உயிர் மேகங்களுடனே மேலெழும்பியது.

அன்பரே! விக்கிரகங்களை வணங்கும் மக்களைக் குறித்து உங்கள் பாரம் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உலகம் தன் கால்களில் நின்று வெற்றியைத் தேட முயற்சிக்கிறது. உண்மை கிறிஸ்தவன் தன் முழங்காலில் நின்று அதைப் பெறுகிறான்.

இயேசுவின் கரங்களில் : ஆண்டவரே! உமக்குள் நிலைத்து நின்று வெற்றி பெற எனக்கு கற்றுத் தாரும்.

தியானத்திற்கு : எண்.8-9, நீதி.5, லூக்.19.

இன்று...

மண்ணில் : 1536

விண்ணில் : 27.03.1555

ஊர் : பிரண்ட்வுட்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

வில்லியம் ஹண்டர் நினைவு தினம்

ஜெபிக்க :

அந்தோணி

251 - 356

தியானமே சிறந்தது

கி.பி. 251, எகிப்தின் வட பாகத்தில் கோமா என்ற கிராமம். மிகவும் செல்வச் செழிப்பான குடும்பம் ஒன்று அங்கு வசித்தது. அக்குடும்பத்தில் தலை மகனாக பிறந்தார் அந்தோணி.

கிறிஸ்தவ பெற்றோர்கள் இவரை மிகவும் கண்டிப்புடனும் நல் நடத்தையுடனும் வளர்த்தனர். தீய நட்பினாலும், கெட்ட பேச்சுக்களாலும் கறைபட்டு விடாமல் காக்க சிறந்த இறையியல் அறிஞர்களைக் கொண்டு கல்வி கற்றுக் கொடுத்தனர். அந்தோணி தனது இருபதாவது வயதை அடையும் முன்பே அவர் பெற்றோர்கள் மரித்துப்போனது பரிதாபம்.

கடவுளையே தியானித்து தூய வாழ்க்கை வாழ நினைத்த இவர் தன் சொத்துக்கள் அனைத்தையும் ஏழைகளுக்கு கொடுத்து துறவற வாழ்வை மேற்கொண்டார். ரொட்டியையும், தண்ணீரையும் உணவாக உட்கொண்டார். கிராம மக்களுக்கு தொந்தரவு ஏற்படாதபடி மனித நடமாட்டமில்லாத காட்டிற்குச் சென்று ஜெபத்திலும், தியானத்திலும் தன் நாட்களைக் கழித்தார்.

ஒரு சமயம், சில திருடர்கள் அவரைப் பிடித்து, அடித்து குற்றுயிராய் விட்ட போதிலும் கிறிஸ்துவின் அன்பை நினைத்து தன் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்தார். அந்தோணியாரின் தூய வாழ்க்கையையும், சுய வெறுப்பையும், மக்கள் மீதுள்ள அன்பையும் கண்ட சுற்றுபுறத்தார் அவர்மீது அளவற்ற மதிப்பு கொண்டனர்.

ஜெப நேரத்தை தவிர மீதமுள்ள நேரத்தை நிலத்தைப் பண்படுத்தி பயிரிடும் வேலை செய்து வந்தார். அலெக்சாண்டிரியா பட்டணத்தில் இவரின் பிரசங்கத்தால் மனந்திரும்பியவர்கள் எண்ணற்றோர் ஆவர். வானத்திற்கு நேரே தன் கைகளை உயர்த்தி ஜெபிக்கும் பழக்கம் உடைய இவர். அதிகாலை ஜெபத்தை மக்களுக்கு கற்றுக் கொடுத்த இம்மகான் தனது 105வது வயதில் தனது மரண நாளை முன்னறிவித்து அவ்விதமே இறைபாதம் சரணடைந்தார்.

அன்பரே, உங்கள் ஜெப ஜீவியம் எப்படி உள்ளது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உலகத்தின் பேரில் பற்று வைக்காமல்,
வரப்போகும் நியாயத்தீர்ப்பை மனதில் கொண்டு,
தூய வாழ்க்கை நடத்த முயலுங்கள் – அந்தோணி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! அனுதினமும் உம்மையே தியானித்து
உமக்குள் வளர எனக்கு உதவும்.

தியானத்திற்கு : எண்.10, நீதி.6, லூக்.20.

இன்று...

மண்ணில் : 251
விண்ணில் : 356
ஊர் : ஹெராக்லியோபோலிஸ் மேக்னா
நாடு : எகிப்து
தரிசன பூமி : அலெக்சாண்ட்ரியா

தெரசா ஆப் ஆவிலா 1515

ஜான் தாமஸ் 1870

ஜெபிக்க :

Scanned with CamScanner

இசபெல்லா தோபர்ன்

1840 - 1901

கண்களைத் திறவுங்கள்

ஒரு இந்தியப் பெண்ணுக்குக் கற்பிப்பதைக் காட்டிலும் 50 அடி உயரமுள்ள சுவர் ஒன்றில் ஏறுவது மிகவும் சுலபம். ஆம், ஆண்களுக்கான முதல் கல்லூரியை இந்தியாவில் ஆரம்பித்த அலெக்ஸாண்டர் டஃப் என்பவரின் கூற்றுப்படியே இந்தியாவின் நிலமை காணப்பட்டது.

18ம் நூற்றாண்டு அது. ஜேம்ஸ் தோபர்ன் என்ற மெதடிஸ்ட் பிஷப் வட இந்தியாவுக்கு வந்தபோது எந்த பெண்ணுக்கும் எழுதப் படிக்க தெரியவில்லை. இந்துக்களின் மத்தியில் பெண்கல்வியைக் குறித்த ஆழ்ந்த தப்பான எண்ணங்கள் காணப்பட்டன. இந்நிலையை மாற்ற விரும்பிய அவர் தன் சகோதரியை இந்தியாவிற்கு அழைத்தார்.

அமெரிக்கா தேசத்தில் இறையியல் கல்வி கற்ற இசபெல்லா தோபர்ன், தான் செய்ய வேண்டிய காரியம் பெரியதென எண்ணி இந்தியா வந்தார். பெண்களுக்கென முதல் பள்ளிக்கூடத்தை லக்னோவில் தொடங்கினார். அப்பள்ளி லால் பாக் என அழைக்கப்பட்டது. அநேக பெண்கள் அங்கு கல்வி பயில ஆரம்பித்தனர். அங்கு படித்த பெண்கள் தொடர்ந்து படிக்க விரும்பியதால் அவர்களுக்காக ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டார். 1887ஆம் ஆண்டு பெண்களின் சிவப்புக்கல் தோட்டம் என்ற பகுதி இசபெல்லா தோபர்ன் பெண்களின் கல்லூரியாக மாறியது.

இசபெல்லா தோபர்ன் மிகவும் சிறப்பான, ஊக்கமூட்டும் ஆசிரியராகவும், மாணவர்களின் நண்பராகவும் காணப்பட்டார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை நேரங்களில் பெண்களுக்காக ஜெபக் கூட்டங்கள் நடத்தி, அவர்களை கிறிஸ்துவின் பணி செய்ய பயிற்றுவித்தார்.

லக்னோவில் 31 ஆண்டுகள் அயராது உழைத்து கிறிஸ்துவின் நற்செய்தியை பகிர்ந்து மக்களின் கல்விக் கண்ணைத் திறந்த இசபெல்லா அம்மையார் நம்மையும் இப்பணி செய்ய அறைகூவல் விடுகின்றார்.

அன்பரே! ஏழை எளியவர்களின் கல்விக் கண்ணைத் திறக்க நீவிர் முன்வருவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இன்று இயேசு கிறிஸ்து வருவார் என்ற சிந்தையோடு
ஆயத்தமாய் ஜீவிப்பவனே உத்தம கிறிஸ்தவன்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எளியவர்களின் கண்கள் திறக்கப்பட,
என்னால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு செய்வேன்.

தியானத்திற்கு : எண்.11, நீதி.7, லூக்.21.

இன்று...

மண்ணில் : 29.03.1840

விண்ணில் : 01.09.1901

ஊர் : கிளேர்ஸ்விலே, ஒஹையோ

நாடு : அமெரிக்கா

தரிசன பூமி : இந்தியா

இசபெல் தோபர்ன் பிறந்த தினம்

சார்லஸ் வெஸ்லி 1788

ஜெபிக்க :

Scanned with CamScanner

புனித சிப்பிரியன்

200 - 258

ஆவியில் அனல் வேண்டும்

டேசியஸ் என்ற அரசன், ரோமை ஆட்சி செய்தவன்; கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி கிறிஸ்தவத்தை அழித்துவிடத் திட்டம் தீட்டினான். கிறிஸ்தவர்கள் நியாயாதிபதிகளால் பிடிக்கப்பட்டு அரசனின் சிலையை வணங்கவும், அதற்கு தூபங்காட்டவும் பணிக்கப்பட்டனர்.

திருச்சபை அக்காலத்தில் உயிரற்ற நிலைமையிலும், ஆன்மீகக் காரியங்களில் பிற்போக்காகவும் காணப்பட்டது. எனவே கிறிஸ்தவர்களில் பலர் தங்கள் உயிருக்குப் பயந்து அரசனின் உத்தரவை நிறைவேற்றினர். சிலர் நாட்டை விட்டே ஓடினர்.

கிறிஸ்துவிற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்தார் சிப்ரியன். திருச்சபையின் அத்தியட்சராக இருந்த இவர், ஆவியில் அனல் கொண்டு, அனைவருக்கும் மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார்.

துன்புறுத்தப்பட்ட மக்களுக்குத் துணைநின்று, அவர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தினார். பாவங்களில் மூழ்கியிருந்த மக்களைப் பரிசுத்தத்தின் பாதையில் நடத்தினார்.

அக்காலத்தில் தொற்று நோயானது மத்தியத் தரைக்கடலைச் சுற்றி உள்ள நாடுகளில் பரவியது. ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். ரோமாபுரியில் மட்டும் ஒரே நாளில் ஐயாயிரம் பேர் மாண்டனர். இந்நோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்யக் கிறிஸ்தவர்கள் முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார் சிப்ரியன். சமய பேதமின்றி அனைவருக்கும் உதவிகளைச் செய்தார்.

கிறிஸ்தவர்களாலேயே இக்கொள்ளை நோய் பரவியதென்று சிப்பிரியன் மீது குற்றம் சாட்டினர். எதிரிகளின் பொய்ப் பிரச்சாரத்தால் அவர் பிடிக்கப்பட்டார். "ஆண்டவரே உமக்கு ஸ்தோத்திரம்" என்று கூறிக்கொண்டிருக்கும்போதே, நூற்றுக்கதிபதியால் தலை வெட்டப்பட்டு உடல் கீழே விழுந்தது. அவர் இரத்தசாட்சியானார்.

அன்பரே! கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் உமது உறுதி என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் மாறுதலடைந்தது என் சுய அறிவுத் திறமையல்ல. கடவுளே இதற்குக் காரணம் - சிப்ரியன்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஆவியில் அனல் பெற்றவனாக அனுதினமும் வாழ அருள் தாரும்.

தியானத்திற்கு : எண்.12-13, நீதி.8-9, லூக்.22.

இன்று...

மண்ணில் : 200

விண்ணில் : 14.09.258

ஊர் : கார்தேஜில்

நாடு : வட ஆப்பிரிக்கா

தரிசன பூமி : ரோம்

ஜெபிக்க :

மாதிரியான வாழ்வு

1745 - 1816

13 வயது இளைஞன் அவன். வேதாகமத்தைப் புரட்டி படிக்க ஆரம்பித்தான். கொஞ்சம் கொஞ்சமாக அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி நிறைய ஆரம்பித்தது. ஆம், நீங்கள் நினைப்பது போன்று அவன் உள்ளத்தில் இயேசு வந்துவிட்டார்.

இயேசு வந்த உள்ளம் ஆனந்தத்தால் ஆர்ப்பரிக்கும் அல்லவா? ஆனந்தக் கூத்தாடினார் பிரான்ஸிஸ் அஸ்பரி. 18 வயதிலேயே போதகருக்குரிய தகுதியைப் பெற்றுவிட்டார். 22 வயதில் அபிஷேகம் செய்யப்பட்டார்.

1771ம் வருடம் அது. மெதடிஸ்ட் சபையை ஆரம்பித்த ஜான் வெஸ்லி மூலம் தன்னார்வ ஊழியராக அமெரிக்கா நோக்கி பயணமானார். உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்த சுவிசேஷ வாஞ்சையை அமெரிக்காவில் பற்றி எரியச் செய்தார். 'மெதடிஸ்ட் எபிஸ் கோபல் சபையை' அங்கு ஆரம்பித்தார். சிறிதும் பெரிதுமான இடங்களில் நின்று சத்தமிட்டு பிரசங்கித்தார். ஆண்டவருக்கென ஆத்துமாக்கள் ஆயிரக்கணக்கில் ஆதாயமாக்கப்பட்டன.

ஒரு வருடத்திற்கு 6,000 மைல்களுக்கு மேல் சுற்றித் திரிந்து 300 முதல் 500 பிரசங்கங்கள் செய்தார். ஒவ்வொரு நாளும் ஆத்தும ஆதாயக் கூட்டங்களை நடத்தினார். இவருடைய தலைமையின் கீழ் 2,14,000 மக்களும், 700 போதகர்களும் பணியாற்றினர்.

1784ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள மெதடிஸ்ட் சபை அனைத்திற்கும் தலைவராக ஜான் வெஸ்லியால் நியமிக்கப்பட்டார். அமெரிக்கா முழுமைக்கும் மிகவும் பிரபலமானவராகக் காணப்பட்ட அஸ்பரி, பேராயராகவும் பொறுப்பை ஏற்றார்.

கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் இவரை உயர்வுக்கு அழைத்துச் சென்றன. மக்களின் சிறந்த மாதிரியாகத் தன் வாழ்வை அமைத்துக் கொண்டார். தன் மிஷனெரி பயணமாக 2,70,000 மைல்களுக்கு மேல் பயணம் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்த இவர் அமெரிக்காவின் அப்போஸ்தலனாவார்.

அன்பரே! கிறிஸ்துவுக்குள் மிகவும் சுறுசுறுப்பாக உழைக்க உங்களைப் பழக்கப்படுத்திவிட்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எந்த காரியத்திலும் தாழ்மையை கடைபிடிப்பவன் தன்னை அறியாமலேயே மேலான பதவிக்கு வந்துவிடுவான்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! மற்றவர்கள் பார்த்து பின்பற்றும்படியான மாதிரியான வாழ்வை வாழ எனக்கு உதவி செய்யும்.

தியானத்திற்கு : எண்.14, நீதி.10, லூக்.23.

இன்று...

மண்ணில் : 20.08.1745
விண்ணில் : 31.03.1816
ஊர் : ஹண்ட்ஸ்வொர்த்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : அமெரிக்கா

பிரான்சிஸ் அஸ்பெரி நினைவு தினம்

ராட்னி ஜிப்ஸி ஸ்மித் 1860

சேமிக்க :

Scanned with CamScanner

1867 - 1927

அறியாமையிலிருந்து விடுதலை

உண்மைக்கும், போலிக்கும் பலருக்கு வித்தியாசம் தெரிவதில்லை. நிழற்படங்களை நிஜமென்று நினைத்து, அழுபவர்கள் பலருண்டு. டி.வி. சீரியல்களிலே மூழ்கி கிடந்து, அதையே உண்மையென்று நினைப்பவர்களும் உண்டு.

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று வேதாகமம் கூறுகின்றது. ஆம்! உண்மையை அறிந்தால், நம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். இதைக் கருத்தில் கொண்டே களமிறங்கினார் சாலமோன் ஹின்ஸ்பர்க்.

யூதர்களின் அறிவு நிலைய சங்கமாக திகழ்ந்து கொண்டிருந்தது போலந்து. அது ஒரு கூடாரப் பண்டிகை தினம். யூத ரபிகள் கூடினர். வேதாகம சம்பவங்களின் அடிப்படையில் தர்க்கம் செய்தனர்.

ஏசாயா.53 தொடர் விவாதம் நீண்டது. சிறுவனான சாலமோன் ஹின்ஸ்பர்க் உள்ளே நுழைந்தார். இவர் ஒரு யூத ரபியின் மகன். தன் தந்தையிடம், "இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்படும் இறை மனிதர் யார்?" என்று கேட்டார். தந்தையின் முகம் கோபத்தால் சீறியது. பளீரென்ற சத்தம், கன்னத்தில் அடி விழுந்தது. அங்கிருந்து அழுது கொண்டே கடந்து சென்றார் ஹின்ஸ்பர்க்.

இரண்டு வருட இடைவெளி. தீர்க்கதரிசி ஒருவர் ஏசாயா 53ம் அதிகாரத்தின் அடிப்படையில் போதனை செய்வதை அறிந்து, அங்கு சென்றார். இயேசு கிறிஸ்துவே அதில் குறிப்பிடப்படும் இறைமைந்தர் என்று அறிந்து, அவரை உண்மை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்.

ஓர் நாள், தன் குடும்பத்தையும், வீட்டையும் விட்டு, இயேசுவின் சீடனாக புறப்பட்டு வந்தார். வேதாகம கல்லூரியில் இணைந்து, சத்தியங்களை தெளிவாகக் கற்றார். தன்னை ஒரு மிஷனெரியாக அர்ப்பணித்தார். பேப்டிஸ்ட் மிஷனெரியாக பிரேசில் நாட்டை நோக்கி பயணித்தார். 35 வருடங்கள் இவர் செய்த பணிகள் எண்ணற்றவை. மாயையான, போலியான காரியங்களில் சிக்குண்டிருந்த மக்களை சத்தியத்தின் பாதையிலே நடத்தி, அவர்களை பாவத்திலிருந்து விடுதலைப் பெற செய்தார்.

அன்பரே! போலி செய்திகளை அகற்றி, சத்தியத்தை நிலைநாட்ட நீங்கள் ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : சத்தியத்தை அறிந்து நீங்கள் விடுதலையாகாவிட்டால், பொய் உங்களை சிறைபிடிக்கும். - வேதாகம நண்பன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! அறியாமை என்னும் இருளை அகற்றி, ஞானம் என்னும் ஒளி பிறக்க என்னை பயன்படுத்தும்.

தியானத்திற்கு : எண்.15, நீதி.11, லூக்.24

இன்று...

மண்ணில் : 06.08.1867

விண்ணில் : 01.04.1927

ஊர் : சுவால்க்கி

நாடு : போலந்து

தரிசன பூமி : பிரேசில்



சாலமோன் ஹின்ஸ்வெர்க் நினைவு தினம்

முட்டாள்கள் தினம்

Scanned with CamScanner

1867 - 1952

அறிந்ததைக் கூறுங்கள்

இஸ்லாமியர்களின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட சாமுவேல் சுவேமேர் 1867ம் ஆண்டு பிறந்தார். கிறிஸ்தவ முறைப்படி வளர்ந்த இவர் சிறுவயதிலேயே மிஷனெரி தாகம் உடையவராகக் காணப்பட்டார். இவரது சகோதரி நெல்லி சுவேமேர் என்பவர் 40 வருடங்கள் சீனா தேசத்தில் மிஷனெரியாக பணி செய்தவர்.

கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது ராபர்ட் வில்டர் என்ற மிஷனெரியின் சவாலான செய்தியினால் தொடப்பட்டார். தன்னை ஆண்டவர் மிஷனெரிப் பணிக்காக அழைப்பதை உணர்ந்தார். எனவே, அரேபிய உலகிற்கு செல்ல தீர்மானம் செய்தார். ஆனால், இவரை பொருளுதவி செய்து தாங்கவும், உற்சாகப்படுத்தவும் எவரும் முன்வரவில்லை.

சுவேமர் தன் நண்பர் ஜேம்ஸ் கேண்டினுடன் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தார். இருவரும் ஒரே தரிசனம் உடையர்களாக ஒற்றுமையாக செயல்பட ஆரம்பித்தனர். 'அரேபியன் மிஷன்' என்ற இயக்கத்தை ஆரம்பித்து, அதற்கான உதவிகளை பலரிடமிருந்தும் கேட்டுப் பெற்றுக் கொண்டனர். தங்களின் மிஷனெரிப் பயணத்திற்கான உதவிகள் அனைத்தும் கிடைத்தவுடன், 1869ல் இருவரும் அரபியாவிற்கு மிஷனெரியாக சென்றனர்.

சாமுவேல் சுவேமர் பாரசீக வளைகுடா பகுதியில் தன் பணிகளை ஆரம்பித்தார். தெருக்களில் நின்றும், பொதுக்கூட்டங்கள் கூட்டியும், வீடு வீடாக சென்றும் மக்களை கிறிஸ்துவிடம் வழிநடத்தினார்.

ஊழியப் பாதையில் வரும் இன்னல்களோ ஏராளம். 1904ம் ஆண்டு ஸ்வேமேர் 4 மற்றும் 7 வயதான தன் இரு சிறு மகள்களையும் மரிக்கக் கொடுத்தார். வேதனையிலும் முன்வைத்த காலை பின் வைக்காமல் உறுதியுடன் பணிபுரிந்தார். 1912ம் ஆண்டு அனைத்து இஸ்லாமிய ஊழியங்களை வழிநடத்தும் பொறுப்பை பெற்றார். 17 வருடங்களாக காய்ரோவை மையமாக வைத்து உலகின் பல பாகங்களுக்கும் சென்று இஸ்லாமியர்களை இயேசுவுக்குள் நடத்திய இவர் மகத்தான தேவ மனிதர்.

அன்பரே! உங்கள் மூலம் எவ்வித மக்கள் கிறிஸ்துவைக் கண்டுகொள்ள போகிறார்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கர்த்தருடைய வேலையைச் செய்யும்போது, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நமது இலக்காயிருக்க வேண்டும்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மைக் குறித்து என் அயலகத்தாருக்கு எடுத்துரைக்க இன்றே புறப்படுகிறேன்.

தியானத்திற்கு : எண்.16, நீதி.12, கலாத்.1-2.

இன்று...

மண்ணில் : 12.04.1867

விண்ணில் : 02.04.1952

ஊர் : விசீலேண்ட், மிச்சிகன்

நாடு : அமெரிக்கா

தரிசன பூமி : அரேபியா

சாமுவேல் சுவேமர் நினைவு தினம்

டோமினிக் சாவியோ 1842

போப் 2ஆம் ஜான்பால் 2005

ஜெபிக்க :



1783 - 1826

ஆன்மீகம் தழைக்கட்டும்

"தூய, தூய, தூயா, சர்வ வல்ல நாதா.." இப்பாடல் உங்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். ஆன்மீக உணர்வுகளைத் தட்டி எழுப்பும் அற்புத பாடல் இது.

இப்பாடலை இயற்றியவர் பிஷப் ஹீபர். இளமையிலேயே கவி நயத்தை கடவுளின் நாம மகிமைக்காக பயன்படுத்தியவர். இவர் எழுதிய 11 பாடல்கள் ஆங்கிலத் திருச்சபையின் பாடல் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன.

சபை குருவாக பயிற்சி பெற்று நல்லதொரு ஆயராக ஐரோப்பாவின் பல இடங்களுக்கு சென்று அருமையான பிரசங்கங்களை செய்து அநேகரை ஆண்டவருக்குள் வழி நடத்தினார்.

1823ம் ஆண்டு இந்தியாவிற்கு பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்டு மிகுந்த ஆவலுடன் புறப்பட்டு வந்தார். 1823ம் ஆண்டு, ஜீன் மாதம் 1ஆம் தேதி லாம்பர்த் அரண்மனையில் அபிஷேகம் செய்யப்பட்டார். பின்னர், நாட்டின் பல பாகங்களுக்கும் சுற்று பயணம் மேற்கொண்டார். சென்ற இடங்களிலெல்லாம் திடப்படுத்தல் ஆராதனைகளை நடத்தி அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

சென்னையில் வேப்பேரி என்ற இடத்தில் ஆலயம் ஒன்றைக் கட்டினார். தமிழ் மொழியிலேயே யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார். குறைந்த நாட்களில் மிகுந்த சாதனைகளைச் செய்தார். சிறந்த கிறிஸ்தவ பக்தராக, சுவிசேஷ வாஞ்சை படைத்தவராக, சிறந்த கவிஞராக, மக்கள் உள்ளத்தை கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்தும் நல்ல ஆயராக, தனது பணிகளை செவ்வனே நிறைவேற்றினார்.

வயது 44. ஏப்ரல் 3 இதே நாள். 1826ஆம் வருடம். அகிலமெங்கும் சென்று அற்புதமான பாடல்களால் அரும்பணியாற்ற ஆவல் கொண்டிருந்த ஹீபரின் இதயம் துடிக்க மறுத்தது. மக்களை துக்கத்தினுள் ஆழ்த்தி தூயாதி தூயவரின் சர்வ வல்ல நாதரின் பாதம் சேர்ந்தார். திருச்சிராப்பள்ளியில் இவர் நினைவு கல்லூரியும், உயர்நிலை பள்ளிகளும், சென்னையில் விடுதியொன்றும் இவர் புகழை அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

அன்பரே! காலம் முடிவதற்குள் உம் பணி பெருக வேண்டாமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பாவ கண்ணால் உந்தன் மாண்பை காண யார் வல்லோர்?
நீரே தூயர் தூயர் – ரெஜினால்டு ஹீபர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் உமக்குள் வளரவும், பிறரையும் உமக்குள் கொண்டு வரவும் ஆயத்தமாயிருக்கிறேன்.

தியானத்திற்கு : எண்.17-18, நீதி.13, கலாத்.3-4.

இன்று...

மண்ணில் : 21.04.1783
விண்ணில் : 03.04.1826
ஊர் : மால்பாஸ், செஸ்ஷயர்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இந்தியா

பிஷப் ஹீபர் நினைவு தினம்

ஜார்ஜ் ஹெர்பர்ட் 1593

புனித அம்புரோஸ்

உலகப் பற்றை உதறித் தள்ளுங்கள்

330 - 397

அப்போஸ்தலர்கள் காலத்திற்கு பின் ஆதித் திருச்சபையை திறம்பட நடத்தி வந்த பக்தர்களுள் அம்புரோஸ் மிகவும் புகழ் பெற்றவர். இவர் கால் என்னும் நாட்டில் பிறந்தவர். சிறு வயதிலிருந்தே கிரேக்கு, லத்தீன் ஆகிய மொழிகளை கற்று கவிஞராகவும், சொற்பொழிவாளராகவும் தேர்ச்சியும் புலமையும் பெற்றவர். சிறந்த அறிஞர்கள் இவரை தேடி வந்து நட்பு பாராட்டினார்கள்.

கி.பி. 374ம் ஆண்டு, மிலான் நகர அத்தியட்சர் இறந்து போகவே அப்பதவிக்காக போட்டியும், குழப்பமும் ஏற்பட்டது. அச்சமயம், அம்புரோஸ் குழப்பம் அதிகமாகாதபடி சொற்பொழிவாற்றினார். இதைக் கேட்ட அனைவரும் தம் குழப்பங்களை மறந்து அம்புரோஸை அத்தியட்சராக்க வேண்டுமென்று விரும்பினர். ஆனால் இவர் அப்பணிக்குத் தாம் தகுதியற்றவர் என்று எண்ணி, அந்நகரை விட்டு யாரும் அறியாமல் புறப்பட எண்ணினார்.

அந்நாட்டு மக்கள் இவர் மேலுள்ள அன்பினாலும், பற்றுதலினாலும் இவரை இழக்க மனமில்லாமல் காவலரை அமர்த்தி இவர் ஊரை விட்டு போகாத வண்ணம் தடுத்து விட்டனர். மேலும் அந்நாட்டு அரசனின் உதவியை நாடி அம்புரோஸை அத்தியட்சராகத் தேர்ந்தெடுத்தனர்.

அத்தியட்சர் பதவியை ஏற்ற அம்புரோஸ் உலக பற்றுக்களை உதறித் தள்ளிவிட்டு, தம் சொத்துக்கள் அனைத்தையும் ஏழைகள் பராமரிப்புக்கு கொடுத்து விட்டார். மேலும், கடுமையான உபவாசத்தால் உடலை ஒடுக்கி தம்மை மறந்து சமயப் பணிக்காகவே உழைத்தார். பொறுமை, இரக்கம் முதலிய தெய்வீக குணங்கள் உடையவராகக் காணப்பட்டார்.

இவர் மூலம் அநேகர் இறைபக்திக்குள் வளர்க்கப்பட்டனர். குறிப்பாக, அகஸ்டின் என்பவர் இவர் மூலமாக இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார். வேத வாசிப்பும், தியானமுமே தன் வாழ்வின் பெரும்பகுதியாக கொண்ட இவர், ஆதித் திருச்சபையின் மாபெரும் தூணாக விளங்கினார்.

அன்பரே! பதவியை விட பக்தியில் தீவிரம் காட்ட முன்வருவீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தரிசனமற்ற ஊழியம், ஜெபமற்ற வாழ்வு,
திடனற்ற விசுவாசம், அன்பற்ற ஊழியர் இவைகளே
இன்றைய ஊழியத்தின் தடைக் கற்கள்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உலகத்தைக் காட்டிலும் உம்மை நேசிக்கவே,
என்னை நான் தத்தம் செய்கிறேன்.

தியானத்திற்கு : எண்.19, நீதி.14, கலாத்.5-6.

இன்று!...

மண்ணில் : 340
விண்ணில் : 04.04.397
ஊர் : ட்ரயர்
நாடு : ஜெர்மனி
தரிசன பூமி : இத்தாலி

அம்புரோஸ் நினைவு தினம்

மார்ட்டின் லூத்தர் கிங் 1968

ஜெபிக்க :

Scanned with CamScanner

பண்டித ராமாபாய்

1852 - 1922

அடைக்கலம் கொடுங்கள்

முக்தி மிஷன். ஆதரவற்ற பெண்களின் அடைக்கலப்பட்டணம் இது. திக்கற்ற பெண்களின் உறைவிடம். தேவதாசிகளின் தெய்வீக நிலையம்.

இந்திய நாட்டின் வரலாற்றில் சுமார் 150 வருடங்களுக்கு முன், குழந்தைத் திருமணம் நடைமுறையிலிருந்தது. இளம் வயதில் கணவர் மரித்துவிட்டால் மனைவி தீயில் எரித்துக் கொல்லப்படும் துயரச் சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. தாழ்ந்த குல சாதியினர் மிகவும் இழிவுப்படுத்தப்பட்டனர்.

இந்நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆண்டவர் ஓர் விடுதலைப் போராட்ட வீராங்கனையைத் தேர்ந்தெடுத்தார். அவர்தான் பண்டித ராமாபாய்.

இளம் வயதிலேயே பல இன்னல்களை வாழ்வில் அனுபவித்திருந்தாலும், அவைகளைப் பொருட்படுத்தாது சமூகத் தீமைகளை வேருடன் அகற்ற தன்னை அர்ப்பணித்தார்.

பூனாவில் “சாரதா சதன்” என்ற அமைப்பை ஏற்படுத்தி, ஒதுக்கப்பட்ட இந்திய விதவைகளுக்கும், அனாதை பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கொடுத்தார். அப்பெண்களுக்கு கைத்தொழில்களை கற்றுக் கொடுத்தார். தேவதாசி முறைகளை அகற்ற பாடுபட்டார். இதனால் இந்து பூசாரிகள் ராமாபாயின் விரோதிகளாக மாறினர். சமுதாயக் கொடுமைகளுக்கு எதிராக பல நூல்களை எழுதினார்.

வாழ்வில் சறுக்கி விழுந்த பெண்களுக்கு அடைக்கலம் கொடுத்த இந்தியப் பெண் இவர். இந்தியாவிலேயே முதன் முதலாக பாலர் பள்ளியையும் ஆரம்பித்தார். கண்ணொளி இழந்தவர்களுக்கு 'பிரெய்லி எழுத்து' முறையைக் கற்றுக் கொடுத்தார்.

பண்டித ராமாபாய் ஜெபத்தையே தனது சக்தி நிலையமாகக் கொண்டிருந்தார். மராட்டிய மொழியில் வேதாகமத்தைத் தந்து, ஆயிரமாயிரம் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றினார். அடைக்கலமற்றோரின் அன்னையான ரமாபாய் இதே நாள் ஏப்ரல் 5, 1922இல் நிலையான அடைக்கலத்தில் பிரவேசித்தார்.

அன்பரே! கிறிஸ்துவின் அன்பினால் மாபெரும் பணிகளைச் செய்ய ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : என்னைப் பயன்படுத்தியவர்,
உன்னையும் பயன்படுத்த வல்லவர் - பண்டித ராமாபாய்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னை தேடி வரும் அனைவருக்கும் அடைக்கலம் கொடுத்து உந்தன் பிள்ளையாக மாற்ற உதவியருளும்.

தியானத்திற்கு : எண்.20-21, நீதி.15, எபே.1-2.

இன்று...

மண்ணில் : 24.04.1852
விண்ணில் : 05.04.1922
ஊர் : கங்கமுலா, மகாராஷ்டிரா
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

பண்டித ராமாபாய் நினைவு தினம்
இந்திய கடல் வாணிப தினம்

கே.எஸ். ஆபிரகாம் 1978
வின்சென்ட் ஃபெரர் 1419

ஜெபிக்க : திருமதி. ராணி ஜரன் தாமஸ், JLM ஊழியங்கள், சென்னை.

Scanned with CamScanner

ஜெரால்ட் மஜெல்லா

1726 - 1755

கடவுளின் சித்தமே செயல்படட்டும்

கடவுள் விரும்புவதை, கடவுள் விரும்புவதுபோல் கடவுள் விரும்பும் வரை இங்கு செய்யப்படுகிறது? ஜெரால்ட் மஜெல்லா வீட்டு அறைக் கதவில் எழுதி வைக்கப்பட்டுள்ள வாசகம் இது.

கடவுள் இவருக்குப் பல அரிய வரங்களை கொடுத்திருந்தார். ஒரே நேரத்தில் இரு இடங்களில் இருந்து வரும் காரியங்களை முன்னறிவிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். உடலை ஒடுக்கி கடுந்தவ முயற்சிகளை மேற்கொண்டவர். கடவுளின் ஆலயத்திலேயே எப்பொழுதும் தங்கியிருந்து தியானம் செய்பவர்.

1752ஆம் ஆண்டு கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற வாழ்க்கை கட்டுப்பாடுகளுடன் எப்போதும் இறைவனுக்கு விருப்பமானதையே செய்வேன் என்ற சிறப்பு கட்டளையையும் அறிமுகப்படுத்தினார். இரட்சகர் சபையில் துணைச் சகோதரராக இணைந்து மிகவும் கீழ்படிந்து நடந்தார். தோட்டம் கவனித்தல், கிழிந்த துணி தைத்தல், உணவு சமைத்தல், பாத்திரம் கழுவுதல், வாயிற்காத்தல் போன்ற எளிய பணிகள் செய்து எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார்.

திருவிருந்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். வாரத்திற்கு மூன்று முறை திருவிருந்தில் பங்கு கொண்டார். பிறர் தவறுகளை மிகுந்த கனிவுடன் சுட்டிக் காட்டினார். கடவுளின் விரோதியாக இருக்கும் நீங்கள் எவ்வாறு அமைதியில் வாழ முடியும் என்று மக்களிடம் கேட்பார். ஜெபத்தினால் பல தேவைகளுக்கு பதில்களை ஆண்டவரிடமிருந்து பெற்று பலரது சாட்சிக்கு பாத்திரமானார். ஏழையர் நலம் பெற எதனையும் இழக்க ஆயத்தமானார்.

கடவுளின் சித்தத்தை என்றும் மகிழ்ச்சியோடு நிறைவேற்றிய மஜெல்லா இந்நாளில் 1726ம் ஆண்டு பிறந்தார்.

அன்பரே! எளிமையும், தூய்மையும் உம்மிடம் நிறைவாக உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கடவுளுக்காகவே வேதனையை அனுபவி; அப்படியானால் பூமியிலேயே மோட்சத்தை அனுபவிப்பாய்.

– ஜெரால்ட் மஜெல்லா

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மோடு இணைந்து உம் பணியில் நிலைக்க எனக்குக் கற்றுத்தாரும்.

தியானத்திற்கு : எண்.22-23, நீதி.16, எபே.3-4.

இன்று...

மண்ணில் : 06.04.1726

விண்ணில் : 16.10.1755

ஊர் : முரோ லுக்கானோ

நாடு : கான்ஸ்டாண்டி நோப்பீள்

தரிசன பூமி : கபோசெல்

ஜெரால்ட் மஜெல்லா பிறந்த தினம்

ஜோன் ஆப் ஆர்க் 1412

ஐவன் புரோக்னாவ் 1924

ஜெபிக்க :

1772 - 1806

ஜாதி வேண்டாம்

இன்றைய உலகில் இயேசு கிறிஸ்துவின் ராஜ்யம் நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருப்பது ஒருபுறம் உண்மையாக இருந்தாலும், இன்னொருபுறம் வேதனையளிக்கும் செயல்பாடுகள் அதனுள்ளே காணப்படுவது கிறிஸ்தவர்களிடையே விசுவாச சீர்குலைவை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகின்றது.

இனப் பிரச்சனைகள்! சாதி பிரச்சனைகள்! இவை எல்லாம் ஒழிந்தால் தான் கிறிஸ்தவம் தழைக்கவும் செழிக்கவும் முடியும்.

அனைவரும் சமமாகவும், அன்பாகவும் வாழ்வதை விட்டு விட்டு உயர்வு தாழ்வுகளை உடன்பிறப்பாக்கினால் உபத்திரவங்கள் நிச்சயம் பெருகவே செய்யும். ஜாதிப் பிரச்சனைகள் ஊழியர்களிடமும் காணப்படுவது மிகவும் வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கக் கூடியது.

தாவீது சுந்தரானந்தம், இனப் பிரச்சனைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஊழியத்தையே பிரதானமாகக் கொண்டு மக்களுக்கு இரட்சிப்பின் செய்தியைக் கூறலானார். இனப் பிரச்சனையால் சுவிசேஷத்தை விசுவாசியாமல் இருந்த மக்களை இவர் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்.

முதலூர் என்ற முதல் கிறிஸ்தவ கிராமத்தை உருவாக்கினார். தென் திருநெல்வேலியில் திருச்சபைகள் உருவாக தேவனால் பயன்படுத்தப்பட்டார். இவரால் கிறிஸ்தவர்களான 5372 பேரை சத்தியநாதன் ஐயர் 1802, 1803ம் ஆண்டுகளில் திருமுழுக்கு கொடுத்தார். புற மதத்தவரின் கொடுமைகள், உபத்திரவங்கள் வேதனைகள் மத்தியிலும் ஆயிரமாயிரம்பேர் கிறிஸ்தவர்களானார்கள்.

முதலூர் ஆலயம் பிற மதத்தவரால் தாக்கப்பட்டது. ஆயினும், இவரால் மக்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியானார்கள். பெத்லகேம் என்னும் ஊரில் அவர் சென்றபோது சிலரால் விஷம் கொடுத்து கொல்லப்பட்டார் என்ற செய்தி திகைப்பை ஏற்படுத்துகின்றது. 34 வயதில் திருநெல்வேலியின் இரத்தசாட்சியாக மரித்த தாவீதின் ஊழியம் மிக மிகச் சிறந்ததே.

அன்பரே! ஜாதிப் பிரச்சனைகளை உங்களை விட்டு அகற்றிவிட்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஜாதி, மத பேதங்கள், இறைவனிடமிருந்து நம்மை பிரிக்கும் சாத்தானின் ஆயுதங்கள் - வேதாகம நண்பன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உயர்வு தாழ்வு என்று பாராமல் அனைவரிடமும் சமமாக பழக நல் மனதை தாரும்.

தியானத்திற்கு : எண்.24-25, நீதி.17, எபே.5-6.

இன்று...

பிறப்பு	: 1772
இறப்பு	: 1806
ஊர்	: விஜயராமபுரம்
நாடு	: இந்தியா
தரிசன பூமி	: இந்தியா

உலக நலவாழ்வு தினம்

பிரான்சிஸ் சேவியர் 1506

ஜெபிக்க :

ஜாண் ஃபாக்ஸ்

பெயர் எழுதப்படட்டும்

1516 - 1587

இங்கிலாந்தில் சீர்திருத்தம் ஏற்பட்ட காலம். ஒவ்வொரு திருச்சபைகளும் புதுப்பொலிவுடன் செயல்பட ஆரம்பித்தன. வேதாகமம் பார்த்திராத மக்கள், புதிய வேதாகமத்தை தங்கள் கைகளில் பெற்றுக் கொண்டனர்.

ஏராஸ்மஸ் என்பவர் கிரேக்க மொழியிலிருந்து புதிய ஏற்பாட்டை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார். இதனால், வேதப் புத்தகத்தின் சத்தியங்களை அறிந்து கொண்ட மக்கள், தவறான கோட்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும் எதிர்த்து நின்றனர். சபை சீர்படத் தொடங்கியது.

மார்ட்டின் லூத்தர் கத்தோலிக்க கோட்பாடுகளுக்கு எதிராக, 95 சட்ட திட்டங்களை விட்டன்பர்க் தேவாலயத்தில் அறைந்து வைத்தார். அக்காலக்கட்டத்தில், வாழ்ந்தவரே ஜான் ஃபாக்ஸ். 1534ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இறைப்பட்டம் பெற்ற இவர், சீர்திருத்த சிந்தனைகளை உடையவராகக் காணப்பட்டார்.

இவர் லேட்டிமர் மற்றும் வில்லியம் டிண்டேல் என்பவர்களை சந்தித்து, அவர்களின் தரிசனங்களோடு தன்னையும் சேர்த்துக் கொண்டார். லண்டனில் சிறந்த போதனை ஆசிரியராக விளங்கிய இவர், துண்டு பிரதிகள் மூலம், தனது கருத்துகளை மக்கள் உணரச் செய்தார். இயேசுகிறிஸ்துவும்-அந்திகிறிஸ்துவும் என்ற தலைப்பிலும், நன்மை-தீமை என்ற கருத்திலும், உண்மை-பொய் என்ற சிந்தனையிலும் பல கட்டுரைகளை எழுதி மக்கள் கைகளில் கொடுத்தார். இதனால் மக்கள் உண்மையை அறிந்து தீமையான காரியங்களை விட்டு விலகி, இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

அப்போதைய அரசுக்கு எதிராக இவர் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பல சீர்திருத்தவாதிகளின் மரணம், இவருக்குள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் வாழ்வைக் குறித்ததான, மிகச்சிறந்த நூலை எழுதினார். "ஃபாக்ஸ் புக் ஆப் மார்டையர்ஸ்" என்பதே அச்சிறந்த நூல். இதில், இயேசுகிறிஸ்துவுக்காக தங்கள் உயிரை பணயம் செய்த உத்தம மனிதர்களின் உண்மை வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. வாசிப்போரை கிறிஸ்துவுக்குள் ஈர்க்கும், சிறந்த கருவூலத்தை உலகிற்கு தந்தவர் இவர்.

அன்பரே! உமது பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும்படி செயல்படுகிறீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கர்த்தர் தம்முடைய ஊழியத்துக்கு உன்னை அழைத்து அனுப்பும்போது யார் உன்னை பின்பற்றுகிறார்கள் என்று திரும்பிப் பார்க்காதே.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் ஜீவனுள்ள நாளளவும், உமது சத்தியத்தை விட்டு விலகாமல் அதில் நிலைத்திருப்பேன்.

தியானத்திற்கு : எண்.26, நீதி.18, பிலிப்.1-2.

இன்று...



மண்ணில் : 1516	ஜான் ஃபாக்ஸ் நினைவு தினம்
விண்ணில் : 8.04.1587	
ஊர் : போஸ்டன், லிங்கன்ஷயர்	
நாடு : இங்கிலாந்து	ஜேம்ஸ் சால்மர்ஸ் 1901
தரிசன பூமி : இங்கிலாந்து	

ஜெபிக்க :

Scanned with CamScanner

1906 - 1945

தீய சக்திகளை தகர்த்தெறியுங்கள்

ஹிட்லரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வரலாற்றுப் பாட புத்தகத்தில் படித்திருக்கக் கூடும். கொடுங்கோலன் இவன். ஒரே சமயத்தில், 6,00,000 யூதர்களை ஈவு, இரக்கமின்றி கொன்று குவித்தவன். நாசிச கொள்கைகளை வலியுறுத்தி, மக்களை நாசம் செய்தவன்.

டைட்ரிச் போன்ஹோபர், ஹிட்லர் அரசாண்ட ஜெர்மனி தேசத்தில், பிரஸ்லூ என்னும் நகரில் பிறந்தவர். சிறு வயதிலேயே போதகராக வேண்டும் என்ற ஆசை இவருக்கு இருந்தது. ஆயினும், ஆண்டவர் அழைத்தாலன்றி இப்பணிக்கு செல்லக் கூடாது என்பதில் கவனமாய் இருந்தார்.

ஆண்டவரின் அழைப்பை உணர்ந்த இவர், பெற்றோரின் உதவியால், இறையியல் படிப்பை தொடர்ந்தார். பின்னர், முதுநிலைப் பட்டமும் பெற்றார். தாம் படித்த கல்லூரியிலேயே ஆசிரியரானார். அப்பொழுது பரவி வந்த நாசிச கொள்கைகளைக் குறித்து, ஆழமாக சிந்தித்தார். மக்களை தவறாக வழிநடத்தும் இப்போதனைகளை முறியடிக்க வீரம் கொண்டார். நியோமுல்லர், மார்க்ஸ் என்பவர்களுடன் இணைந்து அக்கொள்கைகளை எதிர்த்தார்.

1933ம் வருடத்திலிருந்து 1935ம் வருடம் வரை இலண்டனில் ஜெர்மன் மொழி சபைகளின் போதகராக செயல்பட்ட இவர், தன் தாய் நாடாகிய ஜெர்மனி திரும்பினார். பல புத்தகங்களை எழுதி, மக்களை விழிப்புணர்வின் பாதையிலே வழி நடத்தினார்.

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நேரம் அது. ஹிட்லரின் சதிகளை முறியடிக்க, மக்களை திரட்டினார். இதனால், இவர் பெருந்துன்பத்துக்கு உள்ளானார். மறைவாக தங்கியிருந்து கிறிஸ்துவின் தொண்டர்களை பெலப்படுத்தினார். எனினும், இவர் தங்கியிருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது. 1943ம் ஆண்டு கைது செய்யப்பட்டார். கிறிஸ்துவுக்குள் தன் கொள்கைகளை வலியுறுத்தியதை விரும்பாத அதிகாரிகள் 1945ம் ஆண்டு இதே நாளில் இவரைத் தூக்கிலிட்டனர். எனினும், இவர் பற்ற வைத்த சிந்தனைகள் இன்றும் எரிந்து கொண்டிருக்கின்றன.

அன்பரே! தீய சக்திகளுக்கு எதிராக உங்களின் குரல் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவனோடு இரகசியமாய் நடக்கக் கற்றுக் கொண்டவன் தனது துன்பங்களை விளம்பரம் செய்வதில்லை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தீய சக்திகளை தகர்த்தெறிந்து உம்மோடு வாழ என்னை வழி நடத்தும்.

தியானத்திற்கு : எண்.27, நீதி.19, பிலிப்.3-4.

இன்று...

மண்ணில் : 04.02. 1906
விண்ணில் : 09.04.1945
ஊர் : பிரஸ்லூ
நாடு : போலந்து
தரிசன பூமி : ஜெர்மனி

டைட்ரிச் போன்ஹோபர் நினைவு தினம்

வில்லியம் கௌடி 1922
வில்லியம் பார்டன் 1913

ஜெபிக்க :

மாபெரும் சாதனை



1829 - 1912

உலகம் கண்ட மிகப் பெரிய சமூக சீர்திருத்தவாதிகளில் வில்லியம் பூத் என்பவர் ஒருவர். இவரே "இரட்சண்ய சேனை" என்ற இயக்கத்தை ஆரம்பித்தவர்.

இராணுவ வீரர்களைப் போன்ற உடை, பதவிகள் போன்றவை இரட்சண்ய சேனை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. ஒரு சேனை அணிவகுத்து எதிரியின் மீது போர் தொடுக்க செல்வது போல் ஒரு பட்டணத்தில் நற்செய்தி ஊழியம் செய்ய இவர்கள் புறப்படுவார்கள்.

ஆரம்பத்தில் "கிறிஸ்தவ மிஷன்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம், இரட்சண்ய சேனையாக மாறி, வில்லியம் பூத் காலத்திலேயே 71 தேசங்களில் பரவியது. லட்சக்கணக்கான கிறிஸ்துவை அறியாத மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினர்.

ஏழை, எளிய மக்களின் கஷ்டங்களைக் கண்ட வில்லியம் பூத் அவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்தார். விழுந்து போன சமுதாயத்தை சீர்தூக்கவும், வாழ்க்கையில் புறக்கணிக்கப்பட்ட ஏழை மக்களை உயர்த்தவும், "இருளடைந்த இங்கிலாந்து" என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

1855ம் ஆண்டு கேத்தரினை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டு, அவர் கொடுத்த ஊக்கத்தினால் ஆத்தும ஆதாய வீரராகவும், இங்கிலாந்தின் சிறந்த எழுப்புதல் வீரராகவும் மாறினார். திறந்தவெளி ஊழியம், தொழிற்சாலை ஊழியம், குடிசைப் பகுதி ஊழியம், குடிகாரர்கள் மத்தியில் ஊழியம் என பலவகையான ஊழிய முறைகளை மேற்கொண்டார்.

வில்லியம் பூத் அவர்களால் 27 மில்லியன் மக்களுக்கு உணவும், 11 மில்லியன் ஏழை குடும்பங்களுக்கு வீடுகளும், 9 ஆயிரம் பேருக்கு வேலைகளும் கிடைத்தன.

இரட்சண்ய சேனையின் ஒப்பற்ற தளபதியாகவும், ஏழைகளின் தலைவனாகவும் வாழ்ந்த ஜெனரல் பூத் உண்மையிலேயே வியத்தகு மனிதர். இவர் பிறந்தது இதே நாளில் தான்.

அன்பரே, கிறிஸ்துவின் திட்டத்தில் உமது சாதனை சிறப்பானதாக உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எந்த அளவுக்கு ஒருவரின் அர்ப்பணிப்பு உள்ளதோ,
அந்த அளவுக்கு ஒருவரின் ஆற்றலின் அளவும் இருக்கும்
- வில்லியம் பூத்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் அர்ப்பணிப்பை பெரிதாக்கி
உந்தன் பணி செய்ய அடிபணிகின்றேன்.

திருவசனத்திற்கு : எண்.28, நீதி.20, யோவான்.1.

இன்று...

மண்ணில் : 10.04.1829

விண்ணில் : 20.08.1912

ஊர் : ஸ்னைமின்டன், நோட்டிங்கம்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

வில்லியம் பூத் பிறந்த தினம்

ஜான் கெடி 1815

ஜெபிக்க :

Scanned with CamScanner

டேவிட் சீஸ்பெர்கர்



1721 - 1808

விடாமுயற்சியே வெற்றி

உழைப்பின் விளைச்சல் தான் வெற்றி. முன்னேற்றமும் கூட. முன்னேறி கொண்டிருக்கும் எவரிடமும் தொடர்ந்து கடமைகளும், பொறுப்புகளும் கூடிக் கொண்டே இருக்கும். இவர்கள் தங்கள் கடமையிலேயே மிகவும் கருத்தாக இருப்பார்கள். உலகப் பிரகாரமாக மக்கள் முன்னேற துடிப்பதற்கு பல முயற்சிகளையும், வாய்ப்புகளையும் உருவாக்கும்போது கிறிஸ்தவ பணி செய்யும் வீரர் இன்னும் அதிகமாக தன்னுடைய உழைப்பில் தீவிரம் காட்டுதல் மிகவும் அவசியமானது.

டேவிட் சீஸ்பெர்கர், வாலிபப் பிராயத்தில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர். இரட்சிக்கப்படாத மக்கள் உலகில் அதிகம் உண்டு என்று கேள்விப்பட்டவுடன், அம்மக்களின் ஆன்மீக இரட்சிப்புக்காக தன்னையே அர்ப்பணம் செய்தார். ஹாலந்தில் தன்னுடைய ஊழியத்தை உற்சாகமாக செய்த இவர் லண்டன் திரும்பினார். அங்கு சின்சென்டார்ப் பிரபுவை சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றார். 1739ம் ஆண்டு, இருவரும் இணைந்து மொரேவியன் காலணிகளில் உள்ள ஜார்ஜியா பகுதிகளில் சுவிசேஷத்தை அறிவித்தனர்.

சுமார் 60 வருடங்கள் டெலவர் பகுதி இந்தியர்களிடம் பணியாற்றினார். அவர்கள் மொழியை மிகவும் கடினப்பட்டு படித்து, அவர்கள் மொழியிலேயே சுவிசேஷம் அறிவித்தார். இவர் ஒற்றர் என சந்தேகிக்கப்பட்டு, அந்நாட்டு அரசாங்கத்தால் சிறையிலடைக்கப்பட்டார். இரண்டு மாதங்களுக்கு பிறகு விடுதலை செய்யப்பட்ட இவர், புது உற்சாகத்தோடு கிறிஸ்துவின் திருத்தொண்டை இன்னும் வேகமாக செய்ய ஆரம்பித்தார். 1600 மைல்களுக்கு மேல் நடந்தே சென்று சுவிசேஷப் பணி செய்தார்.

இன்றைய காலக்கட்டங்களில் நடந்து ஊழியப் பணிகளை கிராமங்களில் செய்ய பலர் தயங்கும்போது, இவரின் வாழ்வு நாம் செய்துவரும் பணியை சிந்தித்து பார்க்கவும், சீர்தூக்கி பார்க்கவும் அறைகூவல் தருகின்றது.

இவர் அன்றாட வாழ்வு குறிப்புகளை எழுதும் பழக்கமுடையவர். ஆண்டவர் தன் வாழ்வில் செய்த மகத்தான காரியங்களை திட்டமும், தெளிவுமாக எழுதினார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். அநேக புத்தகங்களையும், இலக்கண புத்தகங்களையும் எழுதினார்.

அன்பரே! கிறிஸ்துவின் நற்செய்தியைக் கூற நீவிர் எவ்விடம் புறப்பட்டு செல்கிறீர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நமக்கு வரும் ஆயிரமாயிரமான துன்பங்களில் சில மட்டுமல்ல ஒவ்வொன்றும் விசுவாசியின் வாழ்க்கையில் நன்மையை நடப்பிக்கிறது - ஜார்ஜ் முல்லர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் காட்டும் இடங்களில் பணி செய்ய இதோ வருகிறேன்.

தியானத்திற்கு : எண்.29-30, நீதி.21, யோவான்.2-3.

இன்று...

பிறப்பு : 11.04.1721

இறப்பு : 17.11.1808

ஊர் : சுமிட்செந்தால்

நாடு : மொரேவியா

தரிசன பூமி : ஊஹையோ

டேவிட் சீஸ்பெர்கர் பிறந்த தினம்

அலெக்ஸாண்டர் சில்வர் 1954

ஜெபிக்க :

அதோனிராம் ஜட்சன்

பயணங்கள் துவங்கட்டும்

1788 - 1850

வயது 20. வாழ்க்கையை ரசிக்கவும், ருசிக்கவும் நினைக்கும் பருவம். அதோனிராம் ஜட்சன் வாழ்வை அனுபவிக்க புறப்பட்டார்.

இரவு நேரம். சத்திரம் ஒன்றில் இடம் கேட்க, காலியாயிருந்த ஒரே அறை கிடைத்தது. நிம்மதியாய் தூங்க நினைத்தவரின் நிம்மதியை பக்கத்து அறையில் தங்கியிருந்த நோயாளி கலைத்துப் போட்டான். நோயாளியின் மரண ஓலங்கள் தூக்கத்தை வர விடாமல் தடுத்தது..

மறுநாள். காலையிலேயே ஒரு துக்க செய்தி. நோயாளி மரித்துவிட்டான் என்பதே அது. ஜட்சன் தன் பயணத்தை துவங்கும் முன் அந்நோயாளியைப் பற்றி அறிய மிகுந்த ஆவல் கொண்டார். அந்தோ! அதோனிராமுக்கு உலகமே ஒரு நிமிடம் தாறுமாறாக சுற்றியது. தன் உயிர் நண்பனே அவன் என்பதை அறிந்ததும் அதிர்ந்து போனார். "கடவுள் இல்லை" என்ற கொள்கையுடைய அவனின் கதை முடிந்து போனதை எண்ணி கண்ணீர் விட்டார்.

1808ல் ஜட்சன் தன்னை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தார். மேரி ஹசில்டைன் என்பவரை மணந்தார். இருவருமாக இறைப்பணி செய்ய இந்தியா வந்தனர்.

இந்தியாவின் இருண்ட காலம் அது. ஒளியை ஏற்றுக் கொள்ள முடியாததால் ஜட்சன் பர்மா நோக்கி தன் பயணத்தை தொடர்ந்தார். பர்மிய மொழியை கற்கலானார். பர்மாவில் நடைபெற்ற கொடுங்கோல் ஆட்சியால் இரண்டு வருட கடுங்காவல் தண்டனை பெற்றார் ஜட்சன். மீண்டும் விடுதலையடைந்து பர்மிய மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்து பர்மா மக்களின் வாழ்வில் ஒளியேற்றினார்.

தன் குழந்தைகளையும், மனைவியையும் மண்ணில் விதைத்த ஜட்சன், கடல் யாத்திரையின் போது மரித்து கடலில் அடக்கம்பண்ணப்பட்டார். ஜட்சன் ஏற்றிய தீபம் இன்றும் பர்மாவில் சுடர்விட்டு பிரகாசிக்கின்றது.

அன்பரே, நற்செய்தியை அறிவிப்பதில் உமது நாட்டம் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஒரு குறுகிய காலக் கட்டத்திற்கு மட்டுமே என்றில்லாமல்
ஒரு வாழ்க்கை முழுவதற்குமாய் என்றெண்ணி புறப்படுங்கள்.
– அதோனிராம் ஜட்சன்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் ஜீவிய காலம் முழுவதும்
உம்மோடு ஊழியஞ் செய்யவே இதோ புறப்படுகிறேன்.

தியானத்திற்கு : எண்.31, நீதி.22, யோவான்.4.

இன்று...

மண்ணில் : 09.08.1788
விண்ணில் : 12.04.1850
ஊர் : மசாசுசெட்ஸ், மல்தேன்
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : பர்மா

அதோனிராம் ஜட்சன் நினைவு தினம்

சாமுவேல் சுவேமர் 1867
சாமுவேல் ஜான் மில்ஸ் 1783

ஜெபிக்க :

Scanned with CamScanner

புனித மார்டின்

316 - 397

தியாக சிந்தை

அது ஓர் குளிர் காலம். எங்கும் பனிக்கட்டிகள். சாலை ஓரத்தில் ஓர் ஏழை மனிதன். குளிரினால் மிகவும் நடுங்கிக் கொண்டிருந்தான். அவன் அரை நிர்வாணத்துடன் பரிதாபமாகக் காட்சியளித்தான்.

காலாட்படையின் சத்தம் கேட்க, போர்வீரர்களை உற்று நோக்கினான். உதவி செய்வாரற்று குளிரினால் நடுங்கிக் கொண்டிருந்த அந்த ஏழை மனிதனுக்கு தம் போர்வையை இரண்டாகக் கிழித்து ஒன்றை அவன் உடலில் போர்த்தினார் பரிசுத்த மார்ட்டின்.

இளகிய மனம். பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு சகியாதவர். ஆண்டவரின் மேல் அதிகப் பற்றுக் கொண்டவர். இதனால் தன் போர்வீரர் தொழிலை விட்டு துறவியானார். தன் வருமானங்கள் அனைத்தையும் ஏழைகளுக்குக் கொடுத்தார்.

கி.பி. 353ம் ஆண்டு. ஆல்ப்ஸ் மலையைக் கடக்கும் பொழுது கொள்ளைக்காரர்களிடம் சிக்கிக் கொண்டார். உடமைகளைப் பறித்தனர். பொறுமையையும், நிதானத்தையும் உடைய அவர், கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு செயலில் காட்டினார். தன்னைக் கொல்ல சதி செய்த கொள்ளையர்களை மனந்திரும்பச் செய்தார்.

மக்களின் வேண்டுகோளுக்கும், தேவைகளுக்கும் இணங்கி ஆயரானார். அநேக சீடர்களை உருவாக்கினார். அவர்களுடன் மரக்குடிசைகளை அமைத்து அங்கேயேத் தங்கினார். 80 துறவிகள் இவருடன் இணைந்தனர்.

அற்புதங்கள் நிகழ்த்தும் ஆற்றலால் மரித்தவர்களையும், நோயாளிகளையும் உயிர்பெறச் செய்தார். விசுவாசத்தில் தளர்ந்தவர்களைத் திடப்படுத்தினார்.

உண்மை கிறிஸ்தவராய் ஏழைகளின் வாழ்வை வளமடையச் செய்தார். இவரின் கல்லறையின் மேல் தேவாலயம் ஒன்று கட்டப்பட்டு அவர் புகழைப் பறைசாற்றுகின்றது.

அன்பரே! ஏழைகளின் வாழ்வு உயர உமது தியாகம் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உயிருடன் இருக்கும் போதும், மரணத் தருவாயிலும் ஆண்டவரின் பாதுகாப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்டு

- புனித மார்ட்டின்

இயவனின் கரங்களில் : ஆண்டவரே! தியாக சிந்தையான உள்ளத்தோடு உம் பணி தொடர என்னை நடத்தும்.

தியானத்திற்கு : எண்.32, நீதி.23, யோவான்.5.

இன்று...

மண்ணில் : 316

விண்ணில்: 08.11.397

ஊர் : சபேரியா

நாடு : ஹங்கேரி

தரிசன பூமி: இத்தாலி

ஜாலியன் வாலாபாக் தினம்

ஜெபிக்க :

ஜான் ஹார்ப்பர்

கடைசி நிமிடம்

1872 - 1912

டைட்டானிக் கப்பல் நினைவிருக்கிறதா? இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய கப்பல். "மூழ்கடிக்க முடியாத கப்பல்" என்று அதை உருவாக்கியவர்களே பெருமையுடன் அறிவித்தார்கள்.

அதன் முதற் பயணம். வட அட்லாண்டிக் கடலில் கப்பல் சென்று கொண்டிருந்தது. வேகமாக சென்ற கப்பல் மறைவாயிருந்த பனிப்பாறையில் மோதியது. அபாயக் குரல் பறந்தது. ஒரு சிலரை மட்டுமே மீட்க முடிந்தது. 2,223 பேர் தண்ணீரில் மூழ்கி மரணத்தை சந்தித்தனர்.

அக்கப்பலில் பயணம் செய்தவர்களுள் ஒருவர்தான் ஜான் ஹார்ப்பர். இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சுவிசேஷகர். கப்பல் உடைந்த வேளையில் தன் கையில் கிடைத்த மரப் பலகையைப் பிடித்தபடி தத்தளித்துக் கொண்டிருந்தார். அருகிலோ ஒரு வாலிபன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தான்.

"நண்பனே நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா?" என்று ஜான் ஹார்ப்பர் கேட்டார். இல்லை என்றான் அவன். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்" அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே அலை ஒன்று அவர்களைப் பிரித்தது.

சற்று நேரத்தில் மீண்டும் இணைந்தனர். "உன் இருதயத்தில் சமாதானம் வந்துவிட்டதா? இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்..." வார்த்தைகள் முடியுமுன்னே அவர் உடல் தண்ணீருக்குள் சென்றது.

ஆண்டுகள் கடந்தன. கனடா நாட்டில் நடந்த எழுப்புதல் கூட்டத்தில் அவ்வாலிபன், ஜான் ஹார்ப்பர் இயேசுவுக்குள் வழி நடத்திய கடைசி ஆத்துமா நான் தான் என்று அக்கடைசி நிகழ்ச்சியை உருக்கமாக கூறினான்.

ஹார்ப்பர் தனது 17 வயதில் தொடங்கிய நற்செய்தி ஊழியம், அவரது வாழ்வின் கடைசி மூச்சு வரைக்கும் தொடர்ந்தது. பலர் வாழ்வை மாற்றியது.

அன்பரே! நீங்கள் பெற்ற இரட்சிப்பை எந்நிலையிலும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உன்னை உற்றுப் பார்த்தால் துன்பங்கள் பெருகும்.
தேவனை நோக்கிப் பார்த்தால் துன்பங்கள் மறையும்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எந்த நிலையிலும் நீர் தரும் இரட்சிப்பை
பிறரோடு பகிர்ந்து கொள்ள எனக்கு உதவி செய்யும்.

தியானத்திற்கு : எண்.33, நீதி.24, யோவான்.6.

இன்று...

மண்ணில் : 29.05.1872
விண்ணில் : 14.04.1912
ஊர் : ஹவுஸ்டன் ரென்பஷயர்
நாடு : ஸ்காட்லாந்து
நற்சேவை பூமி : இங்கிலாந்து

ஜான் ஹார்ப்பர் நினைவு தினம்
தீயணைப்பு படையினர் தினம்

ஆபிரகாம் லிங்கன் 1865

ஜெபிக்க : Mrs & Mr. Roy festus, Chennai.

Scanned with CamScanner

- 1983

அடியவருக்கு அடைக்கலம்

1940ம் ஆண்டில் ஹாலந்து தேசம் ஜெர்மானியப் படைகளிடம் சரணடைந்தது. ஹிட்லரின் கொடுமைகளுக்குத் தப்பி ஹாலந்து தேசத்திற்கு வந்த யூதர்கள் பிடித்துக் கொல்லப்பட்டனர். சிலர் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

காரி டென் பூம் குடும்பம், ஹாலந்து தேசத்தில் கடிகாரம் செய்யும் தொழிற்கூடம் ஒன்றை நடத்தி வந்தனர். உயிருக்கு பயந்து ஓடி ஒழிந்த யூதர்களுக்கு அடைக்கலம் கொடுக்க தங்கள் வீட்டைத் திறந்து கொடுத்தனர். நூற்றுக்கணக்கான யூதர்கள் காரியின் குடும்பத்தினரால் சாவுக்குத் தப்பினார்கள்.

1943ம் ஆண்டு ஹிட்லரின் ரோந்து படை குடும்பத்தை குறிவைத்தது. கூண்டோடு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்; சித்தரவதைகளினால் காரியின் தந்தையும், தங்கை பெத்சியும் மரித்துப் போனார்கள்.

காரி சிறைக்குள்ளே ஆராதனைகளை நடத்தி மக்களை ஆண்டவருக்குள் நடத்த ஆரம்பித்தார். தினமும் மறைவிடத்தில் இரண்டு ஆராதனைகள் நடத்தப்பட்டன. காரியின் டச்சு வேதாகமம் சிறைச்சாலையிலுள்ள அனைவருக்கும் மிகுந்த ஆறுதலாகக் காணப்பட்டது.

ஆண்டவரின் அநாதி தீர்மானத்தின்படி காரி டென் பூம் விடுதலை செய்யப்பட்டார். தேவன் தனக்கு செய்த மகத்துவங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

இரண்டாம் உலகப்போரில் அனாதைகளான மக்களுக்காக இல்லம் ஒன்றைக் கட்டி அவர்களுக்கு உதவினார். பல நாடுகளுக்குச் சுற்றுபயணம் செய்து தனது சிறைச்சாலை அனுபவங்களை எடுத்துரைத்து மக்களை விசுவாசத்தில் நிலைபெறச் செய்தார்.காரி டென் பூம் ஓர் சிறந்த எழுத்தாளரும் ஆவார். "மறைவிடம்" என்ற நூல் பிரபலமானது. பின்னர் அது படக்காட்சியாகவும் தயாரிக்கப்பட்டது.

பிறருக்காகவே வாழ்ந்த காரி டென் பூம் தனது பிறந்த தினத்திலேயே ஏப்ரல் 15, 1983ல் விண்ணுலகம் சென்றார்.

அன்பரே! பாடுகள் வரும்போது பரமனின் பணியை எவ்விதம் செய்கிறீர்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்து மார்க்கத்தின் வேலை ஒருவனை துன்பத்திலிருந்து காப்பாற்றுவதல்ல, மாறாக துன்பத்திற்குள்ளேயே காப்பாற்றுவதாகும் - ஸ்டான்லி ஜோன்ஸ்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! பிறர் துன்பத்தில் பங்குபெற்று அவர்களோடு வாழ என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : எண்.34, நீதி.25, யோவான்.7.

இன்று...

மண்ணில் : 15.04.1892

விண்ணில் : 15.04.1983

ஊர் : ஹார்லெம்

நாடு : நெதர்லாந்து

தரிசன பூமி : ஹாலந்து

காரி டென் பூம் நினைவு தினம்

அலெக்ஸாண்டர் டஃப் 1806

டாமியன் 1889

ராக்லாந்து

1815 - 1858

இயேசுவிற்காக...

அது ஓர் கிராமம். இயேசுவைப் பற்றி அறியாதவர்கள். அறியவும் விரும்பாதவர்கள். மூடப்பழக்க வழக்கங்களுக்குள் மூழ்கி கிடந்தவர்கள்.

இந்தியரின் இழிவு நிலையை மாற்ற இங்கிலாந்திலிருந்து வந்தார் ராக்லாண்ட். கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர், ஆயராகவும், கேம்ப்ரிட்ஜ் கல்லூரியின் மேற்பார்வையாளராகவும் பணியாற்றியவர்.

வட திருநெல்வேலியில் அமைந்திருந்த கிராமங்களுக்கு நற்செய்தியைப் பறைசாற்ற உள்ளே நுழைந்தார். நுழைந்தது தான் தாமதம். கற்களும், தூசிகளும் அவரை நோக்கி வீசப்பட்டன. பிராமணன் ஒருவன் தடியால் தலையில் அடித்தான், இடம் விட்டு நகரும் முன்னே சரமாரியாக அடிகள் விழுந்தன. நடக்கக் கூட தெரியாத சிறு பையனும் கூட கல்லைத் தூக்கி எறிந்ததுதான் பரிதாபம்.

எதிர்ப்புகளைக் கண்டு பழகிப்போன ராக்லாண்ட், அவர்களையும் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார். பல ஆலயங்கள் சிவகாசி மற்றும் சுற்றுப்புறங்களில் கட்டப்பட்டன.

மழை, வெயில், பசி, அவமானப் பேச்சுக்கள், சரீர துன்பங்கள் எதையும் பொருட்படுத்தாது தன் ஊழியப் பணியைத் தொடர்ந்தார். அதிகாலையில் எழுந்து ஜெபிக்கும் பழக்கமுடையவர். அதிகாலை 4 மணிக்கே ஊழியத்திற்கு சென்று விடுவார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்த சுவிசேஷச் செம்மல்.

பசியின் களைப்பினால் தொப்பியில் கூழ் வாங்கிக் குடித்து விட்டு, மீண்டும் அலைந்து நற்செய்தி அறிவித்தவர். ஓயாத அலைச்சலினால் அவர் உடல் நலிந்தது. காச நோய் அவரைத் தாக்கியது. இரத்த வாந்தி எடுத்தார். விக்கிரக வணக்கத்தாரை இயேசுவின் பாதையில் நடத்திய ராக்லாண்ட் தமது 44வது வயதில் மரணத்தைத் தழுவினார்.

நற்செய்தி செம்மலாக வாழ்ந்து காட்டிய ராக்லாந்தின் பிறந்த நாள் இன்றே.

அன்பரே! பிரச்சனைகளைக் கண்டு ஓடுபவரா நீங்கள்? ராக்லாண்டை போல உறுதியுடன் செயல்படுவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நற்செய்தி பணியில் வெற்றியடைய தீட்டும் திட்டங்களில் மிகச் சிறந்த வழி இயேசு காட்டிய வழியே. அது கோதுமை மணிபோல் நிலத்தில் விழுந்து சாவதே – ராக்லாந்து

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ராக்லாந்தை போல நானும் செயல்பட என்னை உம் கரங்களில் அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : எண்.35, நீதி.26, யோவான்.8.

இன்று...

ராக்லாந்து பிறந்த தினம்

மண்ணில் : 16.04.1815

விண்ணில் : 22.10.1858

ஊர் : ஜிப்ரால்டர்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

ஜெபிக்க :

Scanned with CamScanner

நாராயணன் வாமன் திலக்



1861 - 1919

விடை கிடைக்கும்

இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர் நாராயணன் வாமன் திலக். நாராயணக் கடவுள் மேல் பக்தி கொண்ட இவரது தாத்தா இவருக்கு நாராயணன் என்று பெயரிட்டார். சிறு வயதிலேயே அத்தெய்வ நம்பிக்கையில் மிகவும் கண்டிப்புடன் வளர்க்கப்பட்டார்.

கிறிஸ்தவ மதம் என்றாலே இவருக்குப் பிடிக்காது. தேசப்பற்றின் காரணமாக கிறிஸ்தவ மதத்தை அந்நியரின் மதம் என்று பேசி, கிறிஸ்தவ நற்செய்திப் புத்தகங்களையெல்லாம் கிழித்தெறிந்தார். இளம் வயதிலேயே திருமணம் புரிந்தாலும், துறவறத்தில் அதிக நாட்டம் கொண்டார். தான் சார்ந்திருந்த இந்து சமயத்தில் பிரியம் கொள்ளாமல் புதிய கொள்கைகளை உருவாக்கி, அவைகளை மக்கள் பின்பற்றும்படி அழைத்தார்.

ஓர் நாள் தன் பணியினிமித்தமாக வேறொரு இடத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. ரயிலில் தன் பயணத்தை ஆரம்பித்தார். அப்பொழுது ஒரு ஐரோப்பியரை சந்தித்தார். முதலில் அவருடன் பேசத் தயங்கிய திலக், அவரின் மாறுபட்ட தன்மையைக் கண்டும், சமஸ்கிருதத்தின் மீது அவ் ஐரோப்பியர் கொண்ட பற்றின் காரணமாகவும் நீண்ட நேரம் உரையாடினார்.

இறுதியில் அந்த ஐரோப்பியர் புதிய ஏற்பாடு ஒன்றை திலக்கிடம் கொடுத்து அதை வாசிக்கும்படி சத்தியம் வாங்கிக் கொண்டார். கட்டாயத்தின் பேரில் அப்புதிய ஏற்பாட்டை வாசித்த திலக்கின் உள்ளத்தில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. இதுவரைக்கும் தான் தேடிக் கொண்டிருந்த கேள்விகளுக்கு விடைகளை அப்புதிய ஏற்பாட்டில் கண்டு கொண்டார்.

1895ம் ஆண்டு அநேக எதிர்ப்புகளுக்கும் பிரச்சனைகளுக்கும் மத்தியில் தன்னை முழுமையாக கிறிஸ்துவுக்கு ஒப்புகொடுத்து ஞானஸ்நானம் பெற்றார். 798 மராத்தி கிறிஸ்தவப் பாடல்களை எழுதி மஹாராஷ்டிராவில் மாபெரும் எழுப்புதலை உண்டு பண்ணினார்.

அன்பரே! கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதினால் உங்கள் மூலம் கிடைக்கும் நற்கனிகள் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவனுக்கு நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல தேவனுக்குரியதை நாம் எவ்வளவு வைத்திருக்கிறோம் என்பதே.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னைச் சார்ந்தவர்களுக்கு நற்கனிகளைத் தர என்னை வழி நடத்தும்.

தியானத்திற்கு : எண்.36, நீதி.27, யோவான்.9-10.

இன்று...

மண்ணில் : 1861

விண்ணில் : 09.05.1919

ஊர் : மஹாராஷ்டிரா

நாடு : இந்தியா

தரிசன பூமி : இந்தியா

ஜெபிக்க :

Scanned with CamScanner

I.R.H. ஞானதாசன்



1915 - 1973

மிஷனெரி தாகம்

ஓய்வு நாள் பள்ளி பிள்ளைகள்; வசனத்தைக் கேட்பதிலும், செயல்படுத்துவதிலும வாஞ்சை உள்ளவர்கள்; கற்றுக் கொடுப்பதை செயல்படுத்த துடிப்பவர்கள்.

பேராயர் ஞானதாசன் இச்சிறுவர்களை தம் ஊழியத்தில் பயன்படுத்திய விதம் அனைவருக்கும் சிறந்த எடுத்துகாட்டாகும். அவர் பிரைமரி பிள்ளைகளை அழைத்தார், அவர்களுக்கு "மிஷனெரி டேமியன் வீட்டினர்" என்று பெயரிட்டார். தொழுநோயாளிகளை இப்பிள்ளைகள் தாங்கினர். குளச்சல் தொழுநோய் இல்லம் இவர்களால் குதூகலமானது.

ஜுனியர் மாணவர்களுக்கு "மிஷனெரி சத்தியா வீட்டினர்" என்று பெயரிட்டார். இவர்கள் பாப்புவா தீவில் நடைபெற்ற ஊழியத்தை உற்சாகப்படுத்தினர்.

சீனியர் மாணவர்கள் "லீச் வீட்டினர்" என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நெய்யூர் மிஷன் பணியை வளரச் செய்தனர்.

சிறுபருவத்திலேயே குழந்தைகளுக்கு மிஷனெரி தாகத்தை ஏற்படுத்தியவரே பேராயர் ஞானதாசன். பிள்ளைகளை நடக்க வேண்டிய வழியில் நடத்திக் காட்டினார்.

1959ம் வருடம். திருவிதாங்கூர் பேராயம் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டபோது, குமரி திருச்சபையின் முதல் பேராயராக தனது 44வது வயதில் அபிஷேகம் செய்யப்பட்டார். இவர் பிரிவினைகளை அழித்து ஐக்கியத்தை உருவாக்கினார். ஒற்றுமை நிலைத்தது. 1972ம் ஆண்டு தென்னிந்திய திருச்சபைகளின் பிரதமப் பேராயராகவும் உயர்த்தப்பட்டார்.

வீண் ஆடம்பரம் இல்லாதவர், எளிமையானவர், பழகுவதற்கு இனிமையானவர், சமுதாய அக்கறையில் மிகுந்த ஈடுபாடு உடையவர். காது கேளாதவர், பார்வையற்றவர் போன்றவர்களுக்கு பள்ளிகளை ஏற்படுத்தினார். இவருடைய காலம் திருச்சபைகளின் பொற்காலம் என்றே கூறலாம். இன்று அவரின் பிறந்த நாள்.

அன்பரே! மிஷனெரிப் பணியின் தாகம் உங்களுக்குள் கொழுந்துவிட்டு எரிகின்றதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் பணி செய்யும் இடமும், என் ஊதியமும் கடவுள் நிர்ணயிப்பவை. அதில் என் சுயசித்தத்திற்கு இடம் இல்லை

- I.R.H. ஞானதாசன்

தூயவரின் கரங்களில் : ஆண்டவரே! ஒவ்வொரு நாளும் உம் பணி செய்யும் நல்ல சிந்தையை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : உபா.1, நீதி.28, யோவான்.11.

இன்று...

மண்ணில் : 18.04.1915
விண்ணில் : 16.07.1973
ஊர் : திட்டுவிளை, கன்னியாகுமரி
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

ஞானதாசன் பிறந்த தினம்
உலக மரபுரிமை தினம்

ஜான் ஃபாக்ஸ் 1587
டேவிட் ஹில் 1896

ஜெபிக்க :



1882 - 1969

உருவாக்குங்கள்

கிறிஸ்து குல ஆசிரமம். இது இந்தியாவில் தோன்றிய முதல் கிறிஸ்தவ ஆசிரமமாகும். துறவு வாழ்வை ஏற்றுக் கொண்டு, தனக்கென தனியாக எந்த சொத்தும் வைத்துக் கொள்ளாமல், எளிமை, தூய்மை, தாழ்மையோடு இயேசு கிறிஸ்துவின் அன்பு வழியைப் போதித்து, அதின்படி நடந்து பணி செய்பவர்களே, இவ் ஆசிரமத்தின் உறுப்பினர்கள்.

1882ம் ஆண்டு பிறந்த சவரிராயன் என்பவரும் அவரது நண்பர் பேட்டன் அவர்களும் இணைந்து ஆரம்பித்த ஆசிரமமே கிறிஸ்து குல ஆசிரமம்.

இளமைப் பருவத்திலேயே முதியவர்களிடமும், ஏழைகளிடமும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார் சவரிராயன். தெய்வ பக்தி நிறைந்த பெற்றோரின் கண்காணிப்பு இவரை ஆன்மீகத்தில் அதிக நாட்டம் பெறச் செய்தது. மருத்துவராக வேண்டும் என்று விரும்பிய இவர் 1910ம் ஆண்டு இங்கிலாந்தில் மருத்துவப் படிப்பை முடித்து இலங்கை அரசுத்துறையில் மருத்துவராகப் பணியாற்றினார். மீண்டும் மேற்படிப்பை இங்கிலாந்தில் தொடர்ந்தார். அங்கே சகோதரர் பேட்டனை சந்தித்தார்.

ஓர் நள்ளிரவு. இருவரும் கூடி ஜெபித்தனர். இறைவனுக்கென்று தங்களை தொண்டர்களாக ஒப்படைக்கும்படி தூண்டும் இறையருளை உணர்ந்தனர். இந்தியா வந்தனர். இறைப்பணியைத் தொடர்ந்தனர். மருத்துவமனைகள் கட்டப்பட்டன. ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

ஆண்டவரின் சேவைக்காக வாழ்க்கையில் எல்லாவற்றையும் துறந்து முழு நேரப்பணி புரிந்த இவர் பெரியண்ணன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். உலக நாடுகள் பலவற்றிற்கு சுற்று பயணம் செய்து கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றியவர். அநேக சீடர்களை உருவாக்கியவர். ஆத்தும ஆதாய வீரர். தமிழ் புலமை மிக்கவர். சிறந்த எழுத்தாளர். அநேக பாடல்களை இயற்றி பாடியுள்ளார். இன்றும் அவை திருச்சபைகளில் பாடப்பட்டு வருகின்றன. திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆசிரமம் இவர் புகழை என்றும் பறை சாற்றும். இவர் இதே நாளில் 1969ல் விண்ணகம் சென்றார்.

அன்பரே! உங்கள் வாழ்வு பிறர்க்கு முன்மாதிரியாக உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நம் ஜனங்கள் வெளிச்சம் அடையும்படி நாம் நம்மையும் நம்முடையவைகளையும் தத்தம் செய்ய வேண்டும். - சவரிராயன் இயேசுதாசன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! பிறரை உமக்குள் உருவாக்க என்னையும் என் பொருளையும் உமக்கு அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : உபா.2, நீதி.29, யோவான்.12.

இன்று...

மண்ணில் : 31.08.1882	சவரிராயன் ஏசுதாசன் நினைவுதினம்
விண்ணில் : 19.04.1969	
ஊர் : பாளையங்கோட்டை	
நாடு : இந்தியா	அல்பீக் 1012
தரிசன பூமி : இந்தியா	ஜான் ஹோல்ம்ஸ் 1934

Scanned with CamScanner

டேவிட் பிரெய்னார்டு



1718 - 1747

உலகம் உங்கள் கையில்

செவ்விந்தியர்கள் கூட்டம். ஆவேசத்துடனும், ஆரவாரத்துடனும் ஓடிக்கொண்டிருந்தனர். கண்களிலே கோபம். கைகளிலே கூர்மையான ஆயுதங்கள். அடர்ந்த காடு. நடுவிலே ஒரு கூடாரம்; உள்ளே ஓர் மனிதன். முழங்கால் ஊன்றியவனாகத் தன் பரலோக தேவனை நோக்கி செவ்விந்தியர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தான்.

ஆ! என்ன இது? அருகில் ஒரு பெரிய நச்சுப்பாம்பு தன் நாக்கை வெளியே நீட்டி அம்மனிதன் முகத்தருகில் சென்றது. என்ன நினைத்ததோ தெரியவில்லை.

அது சுருண்டு, மருண்டு, மிரண்டு, உருண்டு, புரண்டு தன் வழியே திரும்பிப் போனது. இக்காட்சியை கண்விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருந்த செவ்விந்தியர்களுக்கு ஒரே ஆச்சர்யம். "இவன் தேவ மனிதன்" என்று கத்தினர். அம்மனிதனின் நண்பராயினர். யார் அவர்? அவர் தான் டேவிட் பிரெயினார்டு.

குறுகிய வாழ்நாள் 29 வருடங்கள். ஆம் 29 வயதிற்குள் மாபெரும் பணியைச் செய்து முடித்தார். தேவனுடைய சித்தத்திற்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்து பசி, பட்டினி, வறுமை, வியாதி எதையும் கண்டு அஞ்சாமல் அச்செவ்விந்தியர்களின் நலனுக்காக உழைத்தவர்.

உபவாசமும், ஜெபமும் இவர் ஊழியத்தை ஊக்கப்படுத்தின. தேவ ஆவியானவரின் அபிஷேகத்தை மக்களுக்கு அருளியவர். உடலிலே வியாதியின் கொடூரப்பிடி அவரை கொடுமைப்படுத்தியது. சிலுவையின் அன்போ அவரை சிறப்புடன் நடத்தியது.

மிகக்குறைந்த ஆரோக்கியத்திலும், மிகக்குறைந்த ஆயுளிலும் மாபெரும் இரட்சிப்பை செவ்விந்தியர்களுக்கு அருளியவர் என்பதை உலகம் என்றும் போற்றும். செவ்விந்தியர்களுக்காகவே வாழ்ந்த டேவிட் பிரெய்னார்டு இதே நாள் ஏப்ரல் 20, 1718ல் இம்மண்ணில் மலர்ந்தார்.

அன்பரே, நீங்கள் எந்த மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க விரும்புகிறீர்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : முழு உலகத்திற்கு என் வாழ்வைக் கொடுக்காமல், என் வாழ்வை இழக்கமாட்டேன். – டேவிட் பிரெய்னார்டு

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! டேவிட் பிரெய்னார்டை போன்று தியாகமுள்ள வாழ்வை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : உபா.3, நீதி.30, யோவான்.13-14.

இன்று...

மண்ணில் : 20.04.1718

விண்ணில் : 09.10.1747

ஊர் : ஹாடம், கனெக்டிகட்

நாடு : அமெரிக்கா

தரிசன பூமி : கௌநாமீக்

டேவிட் பிரெய்னார்டு பிறந்த தினம்

சாமுவேல் போலார்டு 1864

ஜோசுவா மார்ஷ்மேன் 1768

ஜெபிக்க :



1033 - 1109

துணிவே துணை

"ஆண்டவரே! இறைவா! மூவொரு கடவுளானவரே! எனது நினைவெல்லாம் உம்மையே சிந்திப்பதாக. எனது நாவு உம்மையே புகழ்வதாக. எனது இதயம் உம்மை மட்டுமே அன்பு செய்வதாக. எனது ஆன்மா உம்மீது வேட்கை கொள்வதாக. எனது உடல் முழுவதும் உம்மைப் பற்றிக் கொள்வதாக". இவ்வாறு இறைவனிடம் ஜெபித்து அவ்விதமே நடந்தவர் தான் ஆன்செலம்.

27வது வயதில் துறவறம் பூண்டு துறவற சபையின் தலைவராக மாறினார். மேலும் காண்டர்பரி நகரின் பேராயராக உயர்த்தப்பட்டார். இவர் ஆண்டவரின் சிறப்பான அருள்வரங்களைப் பெற்றவர். தாழ்மை, எளிமை போன்ற குணங்களால் கல்மனதினரையும் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்.

இவர் காலத்தில் இங்கிலாந்தை ஆண்டு வந்த மன்னன் திருச்சபைகளுக்குப் பெருத்த அநீதிகளை விளைவித்தான். இதனால் இவர் மன்னனை எதிர்த்தார். எனவே மன்னனின் கடுங்கோபத்திற்கும் ஆளானார்.

திருச்சபை மீது மிகுந்த பற்றும் கரிசனையும் கொண்டதால் அங்கு நடக்கும் அதிகார துஷ்பிரயோகங்களை அடியோடு அழித்தார். உயர்வு, தாழ்வுகளை உடைத்தெறிந்தார். நேரத்தை வீணாக்காமல் சீர்திருத்தச் சிந்தனைகள் கொண்ட பல புத்தகங்களை எழுதினார். பல இடங்களுக்கு பிரயாணம் செய்து கிறிஸ்துவுக்குள் ஆயிரமாயிரமானவர்களை வழி நடத்தினார்.

கடின உழைப்புகள் மத்தியிலும், ஆண்டவரின் பிரசன்னத்தை அனுதினமும் உணர்ந்தார். திருச்சபையின் உரிமைகளைப் பறிக்க நினைத்தவர்களை பகிரங்கமாக எதிர்த்தார். ஏனெனில், திருச்சபையின் மீது அளவுகடந்த பாசம் கொண்டிருந்தார். முழு உள்ளத்தோடு இறைவனைத் தேட மக்களை வழி நடத்திய இவர் சிறந்த வழிகாட்டியவர்.

அன்பரே! திருச்சபைக்குள் காணப்படும் அதிகாரப் போராட்டங்களை அகற்ற பிரயாசப்படுவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்துநாதர் தம் இரத்தத்தை சிந்தி
திருச்சபைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்.
அந்த சுதந்திரத்தை அவர் மிகமிக நேசிக்கிறார் - ஆன்செலம்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! திருச்சபையின் தூணாக நானும் காணப்பட என்னைத் தகுதிபடுத்தும்.

தியானத்திற்கு : உபா.4, நீதி.31, யோவான்.15-16.

இன்று...

மண்ணில் : 1033
விண்ணில் : 21.04.1109
ஊர் : ஹாஸ்டா
நாடு : பர்கண்டி
தரிசன பூமி : இங்கிலாந்து

ஆன்செலம் நினைவு தினம்

பிஷப் ஹீபர் 1783
டோசர் 1897
ஹார்வுட்ரா 1871

ஜெபிக்க :

லூக்கா

இறை வார்த்தையை எழுதுங்கள்



- 84

இழந்துபோனதை தேடவும், இரட்சிக்கவுமே இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார் என்று அறிமுகப்படுத்தியவரே லூக்கா. இவர் புறஜாதியைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர். மருத்துவக் கல்வியை மட்டுமின்றி மொழிகளையும், இலக்கியங்களையும் நன்கு அறிந்தவர். அந்தியோகியாவில் பிறந்த இவர், தீத்துவின் சகோதரன்.

கிறிஸ்தவ உலகின் முதல் மருத்துவ அருட்பணியாளர் இவர். இயேசுவானவரை நேருக்கு நேர் சந்தித்தவர் இல்லையெனினும் இயேசுவைக் குறித்து மிகவும் சிறப்பாக உலகிற்கு எடுத்துக் காட்டியவர் லூக்கா. 'பிரியமான வைத்தியன்' என்று அன்போடு அழைக்கப்பட்டவர். பவுல் அப்போஸ்தலனோடு ஊழியப் பயணத்தை மேற்கொண்டு சுவிசேஷத்தை மிகவும் வாஞ்சையுடன் பிரசங்கித்தார்.

உலகத்தின் முதல் கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர் என்ற பெருமைக்குரிய இவர், கிறிஸ்துவின் வரலாற்றை சரித்திர சான்றுகளுடன் தெள்ளத் தெளிவாக கூறுகின்றார். கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ச்சி, சமுதாய வாழ்க்கை என விவரித்துக் கூறும் இவர், இயேசு கூறிய 23 உவமைக் கதைகளில் 16 கதைகளை அழகுற விவரிக்கின்றார்.

இவர் எழுதிய லூக்கா சுவிசேஷம் வெறும் வரலாற்று நூலாக மட்டுமல்லாமல் அதை வாசிக்கும் அனைவருக்கும் விசுவாச வாழ்வை பெலப்படுத்துவதாகவும், கிறிஸ்துவின் இறைத் தன்மையில் நம்பிக்கை கொள்ளச் செய்வதாகவும் அமைகின்றது. மேலும் அப்போஸ்தலர் நடபடிகள் நூலானது இறைப் பணியில் நம்மை நாட்டம் கொள்ளச் செய்வதாகவும், அதற்கான துணிவையும் உற்சாகத்தையும், செயல்படும் விவேகத்தையும் கற்றுத் தருகின்றது.

மக்கதோனியா, கிரேக்கப் பகுதிகளில் இவர் செய்த ஊழியம் மகத்தானது. தனது 84வது வயதில் முதுமையடைந்த நிலையில் மகிழ்வுடன் மண்ணுலக வாழ்வை முடித்து இறை ராஜ்யம் சென்றார்.

அன்பரே! கிறிஸ்துவின் ஊழியத்தில் எழுத்துப் பணிகளை உற்சாகப்படுத்துகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.

- லூக்.1:37

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் எனக்குச் செய்த நன்மைகளை அனுதினமும் நினைக்கவும், பேசவும், எழுதவும் உதவி செய்யும்.

தியானத்திற்கு : உபா.5, பிரச.1, யோவான்.17-18.

இன்று...

பிறப்பு :

இறப்பு : 84

ஊர் : அந்தியோகியா

நாடு : சீரியா

தரிசனபூமி : மக்கதோனியா

புவி தினம்

ஜெபிக்க :

Scanned with CamScanner

நான்காம் பிரடெரிக்

1671 - 1730

நீங்கள் தான் தூதுவர்கள்

அதிகாரங்களையும், பதவிகளையும் அனைவரும் விரும்பக்கூடும். ஆனால் விரும்புகிற எல்லா அதிகாரங்களையும், எல்லா பதவிகளையும் அனைவரும் பெற்றுக் கொள்வது கூடாத காரியம். நாம் விரும்பிய பதவிகள் நமக்கு கிடைக்காவிட்டாலும் கிடைத்த பதவிகளில் நாம் எப்படி செயல்படுகிறோம் என்பது மிக மிக முக்கியம்.

நாம் பெறும் பதவிகளை முறையாகவும், பிறர் நன்மைகளுக்காகவும் பயன்படுத்துதல் மிகவும் அவசியம். அவ்விதமாக தனக்கு கிடைத்த அரசர் பதவியை அற்புதமாகப் பயன்படுத்தினார் டென்மார்க் அரசர் நான்காம் பிரடெரிக்.

டேனிஷ்காரர் வசமாயிருந்த டென்மார்க்கை 225 ஆண்டுகளில் 9 அரசர்கள் ஆண்டனர். ஒருவர் கூட தன் வசமாயிருந்த இந்தியாவின் தரங்கம்பாடியில் நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டதில்லை. இதில் வித்தியாசமாக செயல்பட்டார் நான்காம் பிரடெரிக். ஏனெனில் நற்செய்தியின்மீது அதிக நாட்டம் கொண்டிருந்தார்.

இந்தியாவிற்கு நற்செய்தியை அறிவிக்க துடிப்புள்ள, வீரமிக்க, அர்ப்பணிப்புள்ள, சாதனை சிகரங்களை தன் நாடெங்கும் தேடினார் இவ்வரசன். மிகுந்த தேடுதலுக்குப் பின் இளம் இதயங்கள் இரண்டைக் கண்டுபிடித்தார். அவர்களே தமிழ்மொழியில் முதன்முதலில் வேதாகமத்தை தந்த சீகன்பால்கு மற்றும் அவரது நண்பர் புளுச்சோ என்பவர்கள்.

அரசரின் ஆணைப்படி இவர்களுக்கு குருத்துவப் பட்டம் கொடுக்கப்பட்டு, மிகுந்த மரியாதையுடன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். டென்மார்க் அரசனின் இதயத்தில் இந்த நற்செய்தி ஆர்வம் எழுந்திருக்கவில்லையானால் நாம் சீகன்பால்குவை இழந்திருப்போம்.

நான்காம் பிரடெரிக் மன்னனால் நற்செய்தி நம் இதயத்திற்குள் வந்தது. இந்தியாவும் தலை நிமிர்ந்தது.

அன்பரே! உங்கள் பதவிகளை பயன்படுத்தி எவ்விதத்திலாவது நற்செய்தி அறிவிக்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படியாதவர்கள் அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு உரிமை கோர முடியாது.

– ஜான் கால்வின்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உந்தன் பணி செய்யும் தூதுவனாக என்னை அனுப்பும்.

தியானத்திற்கு : உபா.6-7, பிரச.2, யோவான்.19.

இன்று...

மண்ணில் : 11.10.1671
விண்ணில் : 12.10.1730
ஊர் :
நாடு : டென்மார்க்
தரிசன பூமி :

பொன் இலாசரசு 1947
தேவசகாயம் பிள்ளை 1712
பண்டித ராமாபாய் 1852
கிருஷ்ணப்பிள்ளை 1827

புனித ஜார்ஜ் 303
ககாவா 1960
வில்லியம் கேமரான் டவுன்செண்ட் 1982

ஜெபிக்க :

விசுவாசக் கண்கள் எங்கே?



1581 - 1660

பிரான்ஸ் நாட்டில் பிறந்த வின்செண்ட் தெ பால் ஒரு திருச்சபை ஆயர். ஏழைப் பெற்றோருக்குப் பிறந்ததால் சிறுவயதிலேயே பிணி, வறுமை, எளிய வாழ்வு ஆகியவற்றை அறிந்திருந்தார்.

1605ம் ஆண்டில் இவர் ஆப்பிரிக்க கடலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டார். சங்கிலிகளால் கட்டப்பட்ட இவர் முதலில் மீனவனுக்கும் பின்னர் சாராய வியாபாரிக்கும் விற்கப்பட்டார். இவரின் ஜெப, தவ வாழ்வால் இரண்டாண்டுகள் கழித்து விடுதலையாக்கப்பட்டார்.

பிரான்ஸ் நாடு திரும்பிய இவர், 1617ல் ஊர் ஊராகச் சென்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். 'பரோபகாரிகளின் இயக்கம்' என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். ஏழைகளை சந்தித்து உணவூட்டி உதவுவதே இவரின் நோக்கமாகக் காணப்பட்டது. 1625ம் ஆண்டு 'வின்சென்சியன்' என்ற துறவற சபையை ஆரம்பித்து இறை போதனைகளை வழங்கினார். 'பிறரன்பு சகோதரிகள்' என்ற பெயரில் பெண்களுக்கான துறவற சபையையும் ஆரம்பித்தார். ஏழைகளின் முன்னேற்றமே இவர் வாழ்வின் குறிக்கோளாகக் காணப்பட்டது.

"விசுவாசக் கண்ணால் ஏழைகளைப் பார்க்கும்போது, எளிமைத் தனத்தை தெரிந்து கொண்ட இறைமகன் இயேசுவின் வடிவத்தை அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பது தெரிய வரும். எனவே இயேசுவைப் பின்பற்றி ஏழைகளைப் பேணுவோம், ஆறுதல் அளிப்போம். உதவி புரிந்து அவர்களை ஆதரிப்போம். கடவுள் ஏழைகளை அன்பு செய்கிறார். ஏழைகளை அன்பு செய்வோரையும் அவர் அன்பு செய்கிறார்."

மேற்கண்ட வார்த்தைகள் வின்செண்ட் அவர்கள் ஏழைகள் மீது வைத்திருந்த அன்பையும், தியாகத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றது. தம் வாழ்நாளில் 1200க்கும் மேற்பட்ட அடிமைகளை மீட்ட இவர் ஏழைகளின் நண்பர் என்றால் மிகையாகாது.

அன்பரே! ஏழைகளின் உயர்வுக்கு உங்கள் உதவிகள் என்ன? முயற்சிகள் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கடவுளின் அருள் எனக்கு இருந்திராவிடில்
நான் இறுதிவரை கல் மனிதனாக
எல்லோருக்கும் சுமையாகவே இருந்திருப்பேன் – வின்செண்ட்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தூரப்பார்வையுடனும் விசுவாச தரிசனத்துடனும் உலகினைப் பார்க்க எனக்குத் கற்றுத் தாரும்.

தியானத்திற்கு : உபா.8-9, பிரச.3, யோவான்.20-21.

இன்று...

மண்ணில் : 24.04.1581
விண்ணில் : 27.09.1660
ஊர் : போய், காஸ்கனி
நாடு : பிரான்ஸ்
தரிசன பூமி : பிரான்ஸ்

வின்செண்ட் தெ பால் பிறந்த தினம்
உலக புத்தக தினம்

ஜி.யு. போப் 1820
பண்டித ராமாபாய் 1852

ஜெபிக்க :



- 1848

கடவுள் பாதை காட்டுவார்

"ஜான், நீ உலகத்திலேயே மிக மோசமான காட்டுமிராண்டிகள் வாழும் பீஜி தீவுகளுக்கு மிஷனெரி பணி செய்ய போக வேண்டும். அதற்கு நீ ஆயத்தமா?" ஜானின் மிஷனெரி இயக்கத் தலைவர் இக்கேள்வியைக் கேட்டார்.

ஆப்பிரிக்கா செல்ல வேண்டும் என்று எண்ணிய ஜாண், ஆண்டவரின் திட்டத்தை உணர்ந்து பிஜி தீவுகளுக்கு செல்ல தன்னை அர்ப்பணித்தார்.

பசுபிக் மகா சமுத்திரத்தில் ஆஸ்திரேலியா கண்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள சிறு சிறு தீவுக் கூட்டங்களே பீஜீ.

ஒவ்வொரு தீவையும் குறுநில மன்னன் ஆண்டு வந்ததால் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதிலும், மக்களை கொன்றுக் குவிப்பதிலுமே நாட்களை கடத்தி வந்தனர். கணவன் இறந்தவுடன் மனைவியும் உயிருடன் புதைக்கப்பட்டாள். இல்லையெனில் கணவனின் தீய ஆவிகள் உலவும் என்பது அவர்களின் மூட நம்பிக்கை.

இப்படிப்பட்ட மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப் புறப்பட்டார் ஜான் ஹண்ட், ஆனால் கப்பல் லாகம்பா தீவை அடைந்த போது அங்குள்ள மிஷனெரியின் சரீர சுகமற்ற நிலையினால் அவருக்கு உதவியாக இருந்து தன் பணியினைத் தொடர்ந்தார்.

ஆறு வாரத்தில் அம்மக்களின் மொழியினைக் கற்றுக் கொண்ட ஹண்ட், வேத கதைகளை பிஜீ மொழியில் எழுதினார். கூடி வந்த மக்களுக்கு அவைகளைப் போதித்தார். இதனால் விசுவாசிகளின் எண்ணிக்கைப் பெருகிற்று. அவருடைய உடல் பெலவீனப்பட்டாலும் பிஜீ தீவை விட்டுச் செல்ல அவர் விரும்பவில்லை. ஹண்ட்டின் ஊழியத்தினால் அத்தீவு மக்கள் மூடப் பழக்கவழக்கங்களை விட்டனர். பலர் ஞானஸ்நானம் பெற்றனர்.

36 வயது நிரம்பிய ஜான் ஹண்ட், உடல் பலவீனத்தால் இதே நாள் 1848ம் ஆண்டு தன் உடலை பிஜீ தீவு மக்களுக்காக கொடுத்தார். இவர் உடல் இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இன்று 90 சதவீதத்தினர் பிஜீ தீவில் கிறிஸ்தவர்கள்.

அன்பரே! கடவுள் காட்டும் பாதையை நோக்கி செல்ல ஆயத்தப்படுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : சோதனைகளும் வேதனைகளும் வரும்போதுதான் இருதயத்தின் பெருமை குணமாகிறது. - ஜார்ஜ் ஒயிட்பீல்டு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் காட்டும் பாதையில் அனுதினமும் நடந்து, உலகின் மக்களை உமக்கு ஆதாயப்படுத்த உதவியருளும்.

தியானத்திற்கு : உபா.10-11, பிரச.4, அப்.1.

இன்று...

மண்ணில் :
விண்ணில் : 09.10.1848
ஊர் : லின்கோலன்சிர்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : பிஜீ தீவு

எப்ராயீம் வெஸ்டன் கிளார்க் 1799
ஜான் ஜி. பேட்டன் 1824
மாற்கு 68

பியோ 1887

ஜெபிக்க :

Scanned with CamScanner

வாசல்கள் திறக்கட்டும்



அது ஒரு கல்லறை. வாசல் மூடப்பட்டிருந்தது. நான்கு நாட்களான உடல் உள்ளே வைக்கப்பட்டிருந்தது. ஒரு கூட்டம் மனிதர்களோடு இயேசு அக்கல்லறையின் முன்பு நின்றுகொண்டிருந்தார். அவர் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. சுற்றி நின்றவர்கள் வேதனையோடு விம்மி விம்மி அழுதனர். மரித்தவனின் சகோதரிகள் அழுவதற்குக்கூட சக்தியற்றவர்களாக, தளர்ந்த நிலையில் தள்ளாடி நின்றனர். இயேசு முன்னே வந்தார். வானத்தை அண்ணாந்து பார்த்தார். தந்தையிடம் ஜெபித்தார். கட்டளை பிறந்தது. "லாசருவே வெளியே வா." கற்கள் புரண்டன; கட்டுகள் அவிழ்ந்தன; கண நேரத்தில் முன்னே வந்தான் லாசரு. கவலைகள் பறந்தன, கண்ணீர் மறைந்தது. களிப்பு மலர்ந்தது.

லாசரு என்பதற்கு "தேவன் உதவிசெய்தார்" என்பது பொருள். இவருக்கு இரண்டு சகோதரிகள். மார்த்தாள், மரியாள் என்பது அவர்களுடைய பெயர். இம்மூவருமே கிறிஸ்துவால் நேசிக்கப்பட்டவர்கள். இயேசுகிறிஸ்து பெத்தானியாவுக்கு வரும்போதெல்லாம் இவர்கள் வீட்டில் தான் தங்குவார். சற்று வசதி படைத்தவர்களாகவும், செல்வாக்கு மிக்கவர்களாகவும் திகழ்ந்தனர். அன்று மரித்த லாசருவை, இயேசு உயிரோடு எழுப்பிய சம்பவம் அநேகரை விசுவாசத்திற்குள் வழி நடத்தியது. இது அதிசயம். இயேசுவை நம்புகிறவர்களுக்கு அற்புதங்களை ஆண்டவர் செய்கின்றார் என்பது உண்மையே.

இயேசுவை நம்பியதால் ஏற்பட்ட உபத்திரவத்தின் காரணமாக, பாய்மரமோ, துடுப்போ இல்லாத படகு ஒன்றில் ஏற்றி கடலில் விடப்பட்ட லாசரு அதிசயத்தக்க விதமாக மார்செயில்ஸிஸ் என்ற நாட்டில் போய் கரை சேர்ந்தார். அங்கு 7 ஆண்டுகள் பேராயராக பணி செய்து, சபையை நிறுவினார். இவரது சகோதரிகளும் ஊழியராக பணி செய்தனர். யூதர்கள் தொடர்ந்து லாசருவை கொலை செய்ய முயன்றபடியால், கித்தீம் என்ற ஊரில் தமது சபையை துவக்கி, அங்கே 30 வருடங்கள் பேராயராக பணிபுரிந்து, அவ்விடத்து மக்களை கிறிஸ்துவுக்குள் சாட்சி பகர செய்தார். லாசருவின் கல்லறை மீது எழுப்பப்பட்ட பேராலயம் அநேகரின் ஆவிக்குரிய வாழ்வை தட்டி எழுப்புவதாக காணப்படுகிறது.

அன்பரே! தேவனுடைய மகிமையை அனுதினமும் உம்முடைய வாழ்க்கையில் காண்கிறீர்களா? பிறருக்கும் காட்டுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்து இருந்தால் கிடங்கும் சிங்காசனமாகும்.
கிறிஸ்து இல்லையேல் கிடங்கும் நரகமாகும்– மார்ட்டின் லூத்தர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உந்தன் மேலுள்ள விசுவாசத்தை
என்றுமே விடாமல் பற்றிக் கொள்ளுவேன்.

தியானத்திற்கு : உபா.12-13, பிரச.5, அப்.2.

இன்று...

பிறப்பு :

இறப்பு :

ஊர் : பெத்தானியா

நாடு : பாலஸ்தீனா (எருசலேம்)

தரிசன பூமி : நித்தியம்

ஜெபிக்க :

முழங்காலே திறவுகோல்



1852 - 1908

காலரா. இப்பெயரைக் கேட்டதும், உள்ளத்தில் பீதி எழும்புவது நிச்சயம். ஆம். உயிரை பறிக்கும் ஆட்கொல்லி நோய் இது.

1902ம் ஆண்டு இக்கொள்ளை நோய் திருநெல்வேலியின் நாசரேத்தை தாக்கியது. மக்கள் செத்து மடிந்தனர். பலர் அனாதைகளாக்கப்பட்டனர். ஆற்றுவாரும், தேற்றுவாரும் இல்லாமல் மக்கள் அழுது புரண்டனர்.

மார்காஷியஸ் ஐயர், மக்களின் மன நிலையை அறிந்தவர். மன வருத்தம் அடைந்தார். மனிதரை காப்பாற்றும் வழிமுறையை யோசித்தார். அவசரம் அவசரமாய் ஆலயத்தினுள் நுழைந்தார். அழுது, அழுது ஜெபித்தார். ஆண்டவர் மட்டுமே குணமாக்க முடியும் என்பதையறிந்து மணிக்கணக்காய் மன்றாடி நின்றார்.

வேண்டுதல் கேட்கப்பட்டது. தினசரி திருவிருந்து ஆராதனை நடத்த தீர்மானம் செய்தார். அம்முறைகளை கடைபிடிக்கச் செய்தார். மக்கள் மத்தியில் காணப்பட்ட மரண பயத்தையும், மரித்தோரின் ஆவிகளைப் பற்றிய பயத்தையும் களைந்தார்.

ஆதரவற்றோர் பிள்ளைகளுக்காக ஆதரவற்றோர் இல்லத்தை ஏற்படுத்தினார். ஆசிரியர் பயிற்சி பள்ளியையும் ஆரம்பித்தார். மருத்துவமனையை கட்டினார். உபதேசிமார்களுக்காக இறையியல் கல்லூரி ஒன்றையும் ஆரம்பித்து நடத்தினார்.

நாசரேத் தபால் அலுவலகத்திற்கு தந்தி வசதியைப் பெற்று தந்தார். மக்களின் நன்மைகளுக்காக செயல்பட்டதால் 'கைசர்-இ-ஹிந்த்' எனற விருதை அரசிடமிருந்து பெற்றார்.

'நாசரேத் நகரின் தந்தை' என்றழைக்கப்படும் மார்காஷியஸ் இதே நாள் 1908ஆம் ஆண்டு விண்ணக தந்தையிடம் தஞ்சம் புகுந்தார். நாசரேத்தில் காணப்படும் ஆலயம் அவரின் கனவின் செயல் வடிவமாகும்.

அன்பரே, மக்களின் முன்னேற்றத்திற்காக எப்பணிகளை செய்து வருகின்றீர்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எவ்வளவுக்கதிகமாக எழுப்புதலுக்காக ஜெபிக்கிறோமோ அவ்வளவுக்கதிகமாய் எழுப்புதலை வாஞ்சிப்போம்.

– லியோனார்டு ரேவன் ஹில்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! மக்களின் முன்னேற்றத்திற்காக உம்மிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்று அவர்களுக்கு அருள உதவியருளும்.

தியானத்திற்கு : உபா.14, பிரச.6, அப்.3-4.

இன்று...

மண்ணில் : 24.12.1852

விண்ணில் : 27.04.1908

ஊர் : லெமிங்டன்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இந்தியா

மார்காஷியஸ் நினைவு தினம்

பீட்டர் வெளலர் 1775

ஜெபிக்க :

Scanned with CamScanner

தெரிந்தெடுக்கும் தேவன்

1846 - 1937

தொழுநோயாளிகளைக் குறித்த கரிசனை உங்களுக்கு உண்டா? நம்மைச் சுற்றி இவர்கள் சாதாரணமாக நடமாடுவதைக் காண்கின்றோம். ஆனால் ஒரு கால கட்டத்தில் இவர்களைக் காண முடியாது. ஏனெனில் சமுதாயம் இவர்களை ஊருக்கு வெளியே தள்ளி வைத்திருந்தது.

ஆனால் இன்று அன்புள்ளம் கொண்ட நல்லுள்ளங்கள் இவர்களை ஊருக்குள் வரவும், மக்களோடு சரிசமமாகப் பேசவும், வாழவும், அவர்களை அன்பர்களாகவும், நண்பர்களாகவும் ஏற்றுக் கொண்டுள்ளது. உண்மையாகவே நமது சமுதாயம் நல்ல மாற்றம் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

இம்மாற்றத்திற்கு காரணம் யார்? இயேசுவின் அன்பால் ஈர்க்கப்பட்ட மிஷனெரிகளே காரணம் என்றால் மிகையாகாது.

அயர்லாந்தில் பிறந்த வெல்லஸ்லி பெய்லி உலகப்பிரகாரமாகவும், உல்லாசமாகவும் வாழ ஆவல் கொண்டவராக வாழ்ந்து வந்தார். ஆஸ்திரேலியா நாட்டிற்கு சுற்றுபயணம் செய்தார். வாழ்க்கையை முன்னேற்ற அவர் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்தன. அப்பொழுது ஆண்டவர் பெய்லியை நோக்கிப் பார்த்தார். அவரின் வாழ்வுக்கான திட்டத்தை உணர்த்தினார். செயல்படத் தூண்டினார்.

ஆத்துமபாரம் உள்ளத்தில் பாய ஆரம்பித்தது. இந்தியாவை நோக்கி தன் பயணத்தை ஆரம்பித்தார். தன்னைச் சுற்றி வாழ்ந்த ஏழ்மையான மக்களை பார்த்து வேதனையடைந்தார். தொழுநோய் தொற்றிக் கொண்ட மனிதர்களின் வாழ்வை சீர்படுத்த ஆண்டவர் தன்னைத் தெரிந்தெடுத்ததை எண்ணி ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்.

1873ம் ஆண்டு அயர்லாந்து சென்று பண உதவிகளைப் பெற்று மீண்டும் 1875ம் ஆண்டு இந்தியா வந்தார். 'லெப்ரஸி மிஷனை' ஆரம்பித்து தொழுநோயாளிகளின் வேதனைகளை நீக்கி மனமகிழ்வைக் கொடுத்தார். ஜப்பான், பர்மா, தென்ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, சுமத்ரா தீவுகள் மற்றும் கொரியா நாடுகளில் இவர் பணி விரிவடைந்து, இறை நாமம் மகிமையடைந்தது. இவர் இதே நாள் 1846இல் பிறந்தார்.

அன்பரே! தொழுநோயாளிகளின் நலனுக்காக உதவிகளை செய்ய முன்வருவீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : திருச்சபையானது மேம்பட்ட முறைகளை தேடுகிறது.
திருவுள்ளமோ மேம்பட்ட மனிதரைத் தேடுகிறது.
– இ. எம். பௌண்ட்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் என்னை தெரிந்தெடுப்பதை உணர்ந்து உம் பணி செய்யவே என்னை தருகிறேன்.

தியானத்திற்கு : உபா.15, பிரச.7, அப்.5-6.

இன்று...

பிறப்பு : 28.04.1846	வெல்லஸ்லி வெய்லி பிறந்த தினம்
இறப்பு : 1937	
ஊர் : அபேலெய்க்ஸ்	
நாடு : அயர்லாந்து	
தரிசன பூமி : இந்தியா	

ஜெபிக்க :

1868 - 1933

ஆண்டவர் அழைக்கிறார்

கிறிஸ்துவின் நற்செய்தி ஆழம் பொருந்தியது. ஆற்றல் மிக்கது. அனைவருக்கும் உரியது. அன்பைத் தெரிவிப்பது. அறைகூவல் தருவது. இதை உணர்ந்தவர் அருள்திரு. ஜார்ஜ்.எஸ்.வேதநாயகம். கிறிஸ்தவ சிற்றிலக்கியம் தந்த அருட் கவிஞர் இவர். தன்னுணர்வு பாடல்களால் தமிழகத்திற்கு அறிமுகமானவர். இசையுடன் பாடல்கள் இயற்றும் ஈடில்லா வரம் கொண்டவர். எளிய, இனிய சொற்களால் இறை உணர்வை தூண்டியவர்.

கிறிஸ்துவுக்குள் வாழ்ந்துவிட வேண்டும் என்ற துடிப்பும், கிறிஸ்துவோடு இணைந்துவிட வேண்டும் என்ற ஆசையும், கிறிஸ்துவை அறிவித்துவிட வேண்டும் என்ற ஏக்கம் கொண்டவர். "பாவ சுமையால் நொந்து சோர்ந்து உழல்வோரே, பாதை தெரியாது பதறி விழுந்து அழுவோரே, உங்கள் தீவினை தீர்த்திடும் திருத்தலப் பேராற்றில் குளித்திட வாருங்கள்" என்று கிறிஸ்துவிடம் மக்களை அறைகூவி அழைத்தார். "ஜீவனோ, மரணமோ, செல்வமோ, வறுமையோ, வசையோ, இசையோ, பகையோ, நேசமோ, ஐயா உமது சித்தமே என் வாழ்வில் ஆகிட வேண்டும்" என்று தன்னை அர்ப்பணித்தார்.

உந்தன் திருப்பணியை உறுதியுடன் புரிய உதவாத பாவி நான் என்று தன்னை நொந்துகொண்ட இவர், கிறிஸ்து காட்டிய ஆன்மீக நெறிகளையும், அருள்நெறி பண்பாடுகளையும், திருமறை கருவூலங்களையும், பாடல்களாக மக்கள் மனதில் பதியச் செய்து தற்பரிசோதனை செய்ய அவர்களைத் தூண்டினார். "கிறிஸ்தவரே ஒளியும், இருளும் மாறி மாறி வருவது போல, உங்கள் இயல்புகளும் மாறுகின்றனவே! முரண்பட்ட இரு தலைவர்களுக்கு பணியாற்றுகிறவர்கள் போல் உள்ளீரே! உங்கள் குற்றத்தை துரும்பாகவும், பிறர் குற்றத்தை இமயமாகவும் எண்ணுகிறீரே! பொய் பக்தி உடையவராய் மனசாட்சிக்கு கீழ்படியாது வாழ்ந்து வருகிறீரே!" என்று மாய்மாலத்தில் உழலும் மனிதரை நினைத்து வருந்தினார்.

எவரும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய உவமைகளால் போதித்த இவர், கிறிஸ்துவின் சித்தத்தை அனுதினமும் தன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டி பிறரையும் அவ்விதமே வாழச் செய்த மாபெரும் இறைத் தொண்டர் ஆவார்.

அன்பரே! உம் வாழ்க்கையால் பிறர் கிறிஸ்துவைக் கண்டு கொள்கிறார்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உப்பெடுக்க போனால் உப்பாயிரு.
விளக்கெடுக்க போனால் விளக்காயிரு - வேதநாயகம்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் காட்டிய வழியில் நான் என்றும் நடக்க எனக்கு அருள்செய்யும்.

தியானத்திற்கு : உபா.16, பிரச.8, அப்.7.

இன்று...

பிறப்பு : 1868
இறப்பு : 1933
ஊர் :
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

ஜான் நெல்சன் டார்பி 1882

மைல்ட்ரெட் கேபிள்

1878 - 1952

கூடினால் கோடி நன்மை

குழு முயற்சி பல வெற்றிகளைத் தரும். இதை நம் வாழ்க்கையில் கண்கூடாக பார்க்க முடிகின்றது.

முப்புரி நூல் சீக்கிரமாக அறாது என்று வேதாகமம் கூறுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக பணி செய்தவர்களே மைல்ட்ரெட் கேபிள், ஈவா பிரெஞ்ச் மற்றும் பிரான்செஸ்கா பிரெஞ்ச்.

இம்மூன்று பெண்மணிகளும் வீரப் பெண்மணிகள். கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டு தங்களை ஊழியத்திற்கு அர்ப்பணித்தவர்கள். அழிந்து போகும் ஆன்மாக்களை நினைத்து அனுதினமும் அவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தவர்கள். தங்கள் வாழ்வையே தியாகம் செய்தவர்கள்.

மைல்ட்ரட் கேபிள் 1878ம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தவர். ஊழிய பாரத்தை சிறுவயதிலேயே பெற்றதால் இந்தியாவிற்கு வர விரும்பினார். ஆனால் கடவுளின் திட்டம் வேறுவிதமாக அமைந்தது. தன்னுடைய ஆசைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஆண்டவரின் சித்தத்திற்கே முதலிடம் கொடுத்தார்.

1902ம் ஆண்டு சீன தேசத்திற்கு அழைப்பை பெற்று மிஷனெரியாக சென்றார். அங்கு ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருந்த ஈவா பிரெஞ்ச் என்பவருடன் தன்னை இணைத்துக் கொண்டு ஊழியம் செய்ய ஆரம்பித்தார். பின்னர் ஈவாவின் தங்கையும் இவர்களுடன் வந்து சேர குழுவாக செயல்பட ஆரம்பித்தனர். தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் கூடாரங்களை அமைத்து அவ்விடங்களிலுள்ள மக்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தனர். பள்ளிக் கூடங்களை அமைத்து மக்களின் கண்களை திறந்தனர்.

1923ம் ஆண்டு காஞ்சோ என்ற இடம் நோக்கி பயணம் செய்தனர். பின்னர் கோபி பாலைவனத்திற்கு சென்று நாமெடிக் பழங்குடிகள் மத்தியில் எட்டு வருடங்கள் அம்மக்களின் துணைவர்களாக வாழ்ந்தனர்.

36 வருடங்களுக்குப் பின் இங்கிலாந்து திரும்பிய அவர்கள் இங்கிலாந்தில் மாபெரும் எழுப்புதல் நடைபெற காரணமானார்கள்.

அன்பரே! தனித்து செயல்பட முடியவில்லையாயினும் குழுவாக செயல்படலாமல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நீ சத்தியத்தை பேசுவது சிலருக்கு கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அதுவே உன் இஷ்டமாக இருக்க வேண்டும்.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னைப் போன்ற ஒரே சிந்தனையுள்ளவர்களுடன் இணைந்து பணி செய்து உம் நாமத்தை உயர்த்துவேன்.

தியானத்திற்கு : உபா.17, பிரச.9, அப்.8.

இன்று...

மண்ணில் : 21.02.1878

விண்ணில் : 30.04.1952

ஊர் : கில்ட்போர்ட்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : சீனா

மைல்ட்ரெட் கேபிள் நினைவு தினம்

Scanned with CamScanner



1813 - 1873

இருளிலே ஒளிருங்கள்

ஆப்பிரிக்கா. ஆம், நீங்கள் நினைப்பது போல் ஒரு காலத்தில் அது இருண்ட கண்டம். ஆனால் இப்போது...

டேவிட் லிவிங்ஸ்டன் அங்கே நுழைந்து விட்டார். இருண்ட கண்டத்தை வெளிச்சமாக்கிவிட்டார். ஆப்பிரிக்காவில் பணியாற்றிய மிகச்சிறந்த முன்னோடி மிஷனெரி இவர். 33 வருடங்கள் அயராது உழைத்தார்.

அடிமை வாணிபத்தில் பெயர் பெற்று விளங்கியது ஆப்பிரிக்கா. அதை அடியோடு ஒழித்தார் லிவிங்ஸ்டன். அட்டூழியங்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்தினார். ஆப்பிரிக்காவை வாழ்வித்தார். உயிர் கொடுத்தார்.

டேவிட் லிவிங்ஸ்டன் ஒரு டாக்டர். மக்களின் உபகாரி, ஆராய்ச்சியாளர், அனைத்திற்கும் மேலாக கிறிஸ்துவைப் போன்று வாழ்ந்து காட்டியவர்.

29,000 மைல்கள் நடந்து திரிந்தே பல பேருண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தினார். ஆப்பிரிக்காவின் பல பகுதிகள் இவரால் கண்டுபிடிக்கப்பட்டவையே. ஆப்பிரிக்காவின் மூலை முடுக்கெல்லாம் சென்று விலங்கினங்களையும், தாவர இனங்களையும் ஆராய்ச்சி செய்தவர்.

எளிமையும், உறுதியும் வாய்ந்த இவர், எடுத்த காரியத்தில் வெற்றி பெற்றவர். ஆபத்துக்களும், தடைகளும் இவரின் வேகப்பயணத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் தவித்தன. என்ன செய்வதென முழித்தன.

ஆப்பிரிக்காவின் பழங்குடியினர் டேவிட் லிவிங்ஸ்டனை நடமாடும் இயேசுவாகவே கண்டனர். வெள்ளையர், கருப்பர் என்று வித்தியாசம் இல்லாமல் அனைவருடனும் பாசத்துடன் பழகியவர். சமத்துவத்தைப் புகுத்தியவர்.

உலகில் எந்தப் பகுதியிலும் இல்லாத அளவு ஆப்பிரிக்காவில்தான் தற்பொழுது மிஷனெரி ஸ்தலங்கள் உருவாகி வருகின்றன. இதற்கு முன்னோடி, டேவிட் லிவிங்ஸ்டன் என்ற அர்ப்பணிப்புள்ள அருட்பணியாளரே! அவர் இதே தினத்தில் இறைவனில் இணைந்தார்.

அன்பரே! நற்செய்தி பணியில் தூய்மையும், செயல்களில் உறுதியும் உம்மிடம் உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கடவுள் தம் ஒரே குமாரனையும்
மிஷனெரியாகத் தந்து விட்டார். - டேவிட் லிவிங்ஸ்டன்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் செய்யும் பணிகளில் தூய்மையும்
செயல்களில் உறுதியும் காணப்பட எனக்கு அருள் தாரும்.

தியானத்திற்கு : உபா.18, பிரச.10, அப்.9.

இன்று...

மண்ணில் : 19.03.1813
விண்ணில் : 01.05.1873
ஊர் : பிலேன்டையர்
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : ஆப்பிரிக்கா

டேவிட் லிவிங்ஸ்டன் நினைவு தினம்

ஷீ மேயு 1873

ஹென்றி நாட் 1844

ஜெபிக்க : திரு. ராஜாமோனி குடும்பம், சென்னை.

Scanned with CamScanner

அதநேஷியஸ்

293 - 373

திடமனதே திரவியம்

கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்திற்காக நீங்கள் எப்பொழுதாவது நாடு கடத்தப்பட்டிருக்கின்றீர்களா? தன் வாழ்நாளில் ஐந்து அரசர்களால் 5 முறை நாடு கடத்தப்பட்டார் அதநேஷியஸ்.

கிரேக்க சபையில் சிறந்த வேத அறிஞர்களில் ஒருவர் அதநேஷியஸ். வேதப்புரட்சியும், சபைப் பிரிவினைகளும் கடவுளின் பெயரால் கொடுமைகளும் நடைபெற்று வந்த காலத்தில் அனைத்து துன்பங்களின் மத்தியிலும் கிறிஸ்தவ விசுவாசங்களைத் தொகுத்து விசுவாசிகளை பலப்படுத்தி கிறிஸ்தவ சபைக்குச் சிறந்த தொண்டாற்றியவரே இம்மாமனிதர்.

பலமுறைகள் இவர் பெயரில் அவதூறான குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. ஆரியஸ் என்பவரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள் இவருக்கு எதிரியானார்கள்.

சக்கரவர்த்திகளுக்குச் சரியான வேத அறிவு இல்லாததால் இவர் அடிக்கடி நாடு கடத்தப்பட்டார். சபைகள் விசுவாசத்தில் தழைத்தோங்க வேண்டும் என்ற காரணத்தால் சகலவித துன்பங்களையும் அவர் மன நிறைவோடு ஏற்றுக்கொண்டார்.

அலெக்சாண்டிரியா நாடு பலமுறை அவரை இழந்து தவித்தது. ஐந்தாவது முறை நாடுகடத்தப்பட்ட போது அலெக்சாண்டிரியாவில் பெரும் குழப்பம் ஏற்படவே அவர் மீண்டும் தன் நாடு திரும்பினார்.

90 அத்தியட்சர்களை ஒன்றாக கூட்டி 'விசுவாச சத்தியங்களை' தொகுத்து எழுதி அவைகளை சபைகளுக்கு அனுப்பி மக்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார்.

அவரின் வேத அறிவும், சுயநலமின்மையும், ஜெப ஜீவியமும், தூய வாழ்க்கையும் மக்கள் மனதைக் கவர்ந்தன. அதன் பலனால் திருச்சபைகள் வளர்ந்து பெருகின.

அன்பரே! அசைக்க முடியாத விசுவாசம் உங்களிடையே உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மற்றவர்களுக்காக உன்னை நீ மறந்து விடு. மற்றவர்கள் ஒருக்காலும் உன்னை மறவார்கள்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! திட மனதோடு, உந்தன் பணி செய்ய என்னை வழி நடத்தும்.

தியானத்திற்கு : உபா.19, பிரச.11, அப்.10.

இன்று...

மண்ணில் : 293
விண்ணில் : 02.05.373
ஊர் : அலெக்சாண்டிரியா
நாடு : எகிப்து
தரிசன பூமி : அலெக்சாண்டிரியா

புனித அதநேஷியஸ் நினைவு தினம்
வில்லியம் டெய்லர் 1797

தாமஸ் கூக் 1814
பேட்டன் 1970

ஜெபிக்க : J. Raja Kumar - Eben Wedding Anniversary, Avadi

யாக்கோபு அல்பேயு

- 63

உண்ணாவிரதம்

இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் யாக்கோபு என்பவர்கள் 2 பேர். ஒருவர் செபதேயுவின் மகன். மற்றொருவர் அல்பேயுவின் மகன். யாக்கோபு என்ற சொல்லுக்கு "பிறர் உடைமையைப் பறிப்பவன்" என்று பொருள்படும்.

அல்பேயுவின் மகன் யாக்கோபுவை 'சின்ன யாக்கோபு' என்று அழைப்பர். ஏனெனில் இவர் உயரத்தில் குள்ளமானவர். யூதா ததேயுவின் சகோதரராவார். இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு நெருங்கிய உறவினர். யூத மதநெறியில் மிகுந்த பற்று உடையவர். யூத சட்டங்களை மிக நுணுக்கமாகக் கடைபிடிப்பவர்.

இயேசு கிறிஸ்து இறந்தபின் அவரைப் பார்க்காமல் உணவு உண்ணமாட்டேன் என விரதம் இருந்ததாகவும், அவரை மீண்டும் உயிர்த்தெழுந்தபின் தனியே தரிசனம் கண்ட பின்னரே உண்ணாவிரதத்தை முடித்ததாகவும் சொல்லப்படுகிறது. உயிர்த்தெழுந்த இயேசுவும் அவருடன் உணவு உண்டதாகக் கூறப்படுகிறது.

பெந்தேகொஸ்தே நிகழ்வுக்குப் பின் இவர் எருசலேமிலே ஆயராக நியமிக்கப்பட்டார். அதன் முதல் ஆயர் இவரே. உவமைகளால் போதிப்பதில் சிறந்தவர். இவர் அடிக்கடி முழந்தாளிட்டு முகங்குப்புற விழுந்து ஜெபித்தமையால் இவரது முழங்கால்களும் நெற்றியும் மரத்துப்போயின என்று புனித எரேணிமஸ் கூறுகிறார். இவர் விசுவாசம், செயல், சோதனைகள், ஏழைகளை மதித்தல், நாவடக்கம், மெய் ஞானம், பண ஆசை, சண்டைகள் போன்ற அன்றாட பிரச்சனைகளை பற்றி தெளிவாக போதித்தார்.

அப்போஸ்தலர்கள், கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி யூத விசுவாசிகளிடமும் நன்மதிப்பும் பெற்றவராக விளங்கினார். ஆனால் யூத குருவான அன்னா என்பவர் இவருக்கு எதிராக எழும்பி, ஒரு கூட்டத்தினரைக் கூட்டி வந்து அவரைப் பிடித்து ஆலயத்தின் உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டு பின்பு கல்லால் எறியச் செய்து கொடூரமாகக் கொலை செய்தான். இவரின் மரணத்தைக் கண்ட மக்கள் இன்னும் அதிகமாக கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்தார்கள்.

அன்பரே! எதிரான காரியங்கள் எது வந்தாலும் எழுந்து பிரகாசிக்க முடியுமல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். - யாக்கோபு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எனக்கு வரும் சோதனைகளை ஜெயித்து உமக்குள் பாக்கியவானாக வளர உதவி செய்யும்.

தியானத்திற்கு : உபா.20, பிரச.12, அப்.11-12.

இன்று...

மண்ணில் : விண்ணில் : 63 ஊர் : நாடு : கலிலேயா தரிசன பூமி : எருசலேம்	உலக சூரிய தினம் பத்திரிக்கை சுதந்திர தினம்

ஜெபிக்க :

மனந்திரும்பும் வரை...

331 - 387

அவள் ஒரு தாய். கணவர் மிகவும் கோபக்காரர். மகனோ ஊதாரி. இறை பக்தி இல்லாதவன். விருப்பம் போல் வாழ ஆசை கொண்டவன்.

தலைகால் புரியாமல் நடந்த மகனுக்காக வேதனைப்பட்டார் அத்தாய். மோனிகா எனபது அவர் பெயர். தினம் தினம் கணவரின் தொந்தரவுகளினாலும், மகனின் பொறுப்பற்ற தன்மையினாலும் உள்ளம் உடைந்தார்.

காலை மாலை ஆராதனைகளில் தன் மகன் அகஸ்டினுக்காக கருத்தாய் ஜெபம் செய்தார் மோனிகா.

அவனுக்கு வயது 29. வீட்டை விட்டு புறப்பட்டு விட்டான். ரோமாபுரியை சுற்றிப்பார்க்க அவனுக்கு ஆசை. ஆனால் தாய்க்கோ தன் மகன் உபயோகமற்றவனாகி விடுவானோ என்ற கலக்கம். மகனின் மேல் அத்தனை பாசம்.

மகனுடன் புறப்படட்டு விட்டார் தாய். எங்கு சென்றாலும் உடன் வருவதாக மகனிடம் கூறினார். அகஸ்டினோ சிறிது சுதாரித்துக் கொண்டான். தாயை ஏமாற்றிவிட்டு ரோமை நோக்கி சென்றுவிட்டான்.

அங்கே அடிமேல் அடி விழுந்தது போல வியாதிகள் அகஸ்டினை தொற்றிக் கொண்டன. செய்வதறியாது திகைத்தான் அகஸ்டின். அம்புரோஸ் என்பவரின் போதனையால் மனம் மாறினான். தாயின் ஜெபத்திற்கு விடை கிடைத்தது. மோனிகா பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மோனிகா ஒரு சிறந்த ஜெப வீரர். பரிசுத்தவான்களின் வாழ்க்கையை வாசிப்பது அவருக்கு மிகப் பிரியம். அவரது சாந்தமும், தூய வாழ்வும் அனைவருக்கும் மாதிரியாக மோனிகாவை மாற்றியது. தன் மகன் இரட்சிக்கப்பட ஆண்டவரிடம் விடாமல் வேண்டுதல் செய்த மோனிகா, தாய்மார்களுக்கெல்லாம் சிறந்த ஒரு முன்மாதிரி.

அன்பரே! நம்முடைய ஜெப வாழ்வு எப்படி உள்ளது? யாரை மாற்றுகிறது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நரகத்தின் காட்சியை ஒரு நொடி பார்த்துவிட்டால்
நாம் மக்களது மீட்பிற்காக அங்கலாய்ப்பதை யாரும்
தடுக்க முடியாது - வில்லியம் பூத்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னை சார்ந்தவர்களை மட்டுமல்லாமல். நான் காணும் அனைவரையும் உம்மண்டை ஈர்க்க உதவியருளும்.

தியானத்திற்கு : உபா.21, உன்னத.1, அப்.13.

இன்று...

மண்ணில் : 331
விண்ணில் : 04.05.387
ஊர் : தாகஸ்தே
நாடு : நுமிடியா
தரிசன பூமி : நுமிடியா

மோனிகா நினைவு தினம்

நிலக்கரி சுரங்க தொழிலாளர்கள் தினம்

ஜெபிக்க :

Scanned with CamScanner

1803 - 1882

வேதாகமம் வேண்டும்

இந்தியாவிற்கு சமய பணிகள் செய்ய வந்த திருத்தொண்டர்களில் பலர் தமிழின் மீது தீராத பற்றுக் கொண்டிருந்தனர். மொழிபெயர்ப்பு துறையிலும், இலக்கிய துறையிலும் மாபெரும் மகத்தான பணிகளை அவர்கள் செய்துள்ளனர். தமிழை தலை நிமிரச் செய்த பெருமை கிறிஸ்தவ திருத்தொண்டர்களைச் சாரும். இதனை வரலாற்றுச் சான்றுகள் நிரூபிக்கின்றன.

பீட்டர் பெர்சிவல் தமிழ் மீது கொண்ட பற்றுதலால் இங்கிலாந்து நாட்டிலிருந்து இந்தியாவை நோக்கி தன் பயணத்தை ஆரம்பித்தார். முதலில் 1826ம் ஆண்டு இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்திற்கு வந்த இவர், 3 ஆண்டுகளில் தமிழ் மொழியைக் கற்றார்.

அந்நாட்களில் பிறநாட்டு சமயக் குழுவுக்கு இலங்கையே இந்தியாவின் நுழைவாயிலாக இருந்தது. அமெரிக்க மெதடிஸ்ட் சபையை சார்ந்த இவர், இலங்கை யாழ்ப்பணத்து சபைகளின் தலைவராக பொறுப்பேற்றவர். 4 ஆண்டுகள் மட்டுமே இலங்கையில் பணியாற்றிய பெர்சிவல், 1829ம் ஆண்டு இந்தியாவிலுள்ள பெங்கால் பகுதிக்கு வந்தார். வங்காள மொழியையும் கற்றுத் தேர்ந்தார். மீண்டும் இலங்கை சென்ற இவர், இலங்கை வேதாகம சங்கத்தின் பொது மொழிபெயர்ப்பு குழுவின் தலைவராகவும் செயல்பட்டார்.

சென்னை மாநில கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றிய இவர் 1870ம் ஆண்டு அப்பொறுப்பிலிருந்து விலகி, தமிழ் பழமொழிகளை தொகுப்பதில் முழு நேரத்தையும் செலவிட்டார். 15,000க்கும் மேற்பட்ட பழமொழிகளை இவர் சேகரித்தார். அயல்நாட்டை சேர்ந்த ஒருவர் தன்னுடைய வாழ் நாட்களில் பெரும் பகுதியை செலவு செய்து இந்த பழமொழிகளை உருவாக்கியிருப்பதாகவும், எல்லா அயல்நாட்டவரைப் போலவும் தாம் எண்ணாமல் செயல்முறைக்கு எது உதவும் என்று நினைத்து இத்தொகுப்பை செய்ததாலும், இது தனக்கு மிகவும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது என்று பெர்சிவல் குறிப்பிட்டார்.

இவர் மொழிபெயர்த்த வேதாகமம் யாழ்ப்பாண தமிழ் மொழியில் காணப்பட்டதாலும், அது இந்திய தமிழ் இலக்கண முறைக்கு இணையாகாததாலும், இன்று அவை நடைமுறையில் இல்லை. எனினும், இவர் செய்த சமயப் பணிகளும், சமுதாயப் பணிகளும் இந்திய திருநாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்களித்தன.

அன்பரே! புதிய காரியங்களை செயல்படுத்துவதில் உங்களின் முயற்சி என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவனுக்கென்று உங்களை அர்ப்பணிக்கவில்லையெனில் குழப்பத்திற்கு நீங்கள் உங்களை அர்ப்பணித்திருக்கிறீர்கள்.

– ஸ்டேன்லி ஜோன்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! வேதாகமத்தின் இரகசியங்களை பிறருக்கு எடுத்துசொல்லும் நற்சாட்சியாக என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : உபா.22, உன்னத.2, அப்.14-15.

இன்று...

மண்ணில் : 1803

விண்ணில் : 1882

ஊர் :

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இலங்கை, இந்தியா

சோரன் கியர்கிகார்ட் 1813

வில்லியம் கௌடி

துன்பத்திலும் ஆசீர்வதியுங்கள்

1857 - 1922

இன்று வில்லியம் கௌடியின் பிறந்த தினம். இறைப்பற்றுமிக்க அன்னையின் அரவணைப்பில் அற்புதமாக வளர்ந்தவர். தந்தை ஒரு இறை பணியாளர்.

1882ம் ஆண்டு இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்தார். சென்னையில் ஜார்ஜ் டவுன் மற்றும் புனித தாமஸ் மலையின் வெஸ்லி சபைகளில் பணிபுரிந்தார்.

1883ம் ஆண்டு திருவள்ளூர் பகுதியில் தன் ஊழியத்தை ஆரம்பித்தார். ஏழைகளின் மீது பரிவு கொண்டு தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட தலித் மக்கள் மீது பாசம் கொண்டார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சுவிசேஷம் சொன்னபோது உயர்ஜாதி மக்கள் கற்களையும், நாற்றமடிக்கும் சேற்றையும் அவர்மீது அள்ளி வீசினர். கல்லெறிந்த மக்களைப் பார்த்து, “நீங்கள் என்மீது கல்மழை பொழிந்தீர்கள்; ஆனால் ஆண்டவர் உங்களுக்கு அரிசி மழையை பொழிவார்” என்று அவர்களை ஆசீர்வதித்தார். அப்போது அப்பகுதி மிகுந்த பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிலப்பிரபுக்களால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த ஏழை மக்களை விடுவித்தார். அவர்களின் நிலங்களை அவர்களுக்கே திரும்ப கிடைக்கும்படி செய்தார்.

ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்கு தனியாகவும் பள்ளிகளை ஏற்படுத்தினார். விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டது. ஈக்காடு என்ற கிராமம் கௌடியால் செழிப்பைப் பெற்றது. கடும் பிரயாசத்தின் பலனாக ஈக்காட்டில் வெஸ்லி ஆலயத்தையும் கட்டினார்.

முதல் உலகப்போரில் தன் மகன்கள் இருவரை இழக்கக் கொடுத்தும், சோர்ந்து போகாமல் தன் கடைசி மூச்சு வரை இந்தியர்களுக்காகவே வாழ்ந்த கௌடி உலகிற்கு ஓர் வரப்பிரசாதம்.

அன்பரே! உங்களை பகைக்கிறவர்களுக்கும் நன்மை செய்கின்றீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : என்மீது கல்மாரி பொழிந்த இந்த ஈக்காடு கிராமத்தில்
ஆண்டவருக்கென ஒரு கற்கோட்டையை நான் கட்டுவேன்
– வில்லியம் கௌடி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னை துன்படுத்துகிறவர்களுக்கும்
நன்மை செய்து உமக்குள் வழிநடத்த உதவியருளும்.

தியானத்திற்கு : உபா.23, உன்னத.3, அப்.16-17.

இன்று...

மண்ணில் : 06.05.1857
விண்ணில் : 09.04.1922
ஊர் : சென்னர்வில்
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : இந்தியா

வில்லியம் கௌடி பிறந்த தினம்

வழக்குரைஞர்கள் தினம்

ஜெபிக்க :

கால்டுவெல்



1814 - 1891

ஊழியத்திற்கு அனுப்புங்கள்

மகனே, என் சிந்தையில் கூட முறுமுறுப்பில்லாமல் உன்னை கர்த்தருக்கு மனப்பூர்வமாக ஒப்புக் கொடுக்கிறேன். தன் மகனை இந்தியாவிற்கு மிஷனெரியாக அனுப்பும்போது நெற்றியில் முத்தமிட்டு மகிழ்வுடன் இவ்வார்த்தைகளைக் கூறி அனுப்பி வைத்தார் கால்டுவெல்லின் தாயார்.

சங்ககாலப் பெண்கள் தங்கள் பிள்ளைகளை போருக்கு அனுப்பும்போது வாழ்த்தி அனுப்புவதைப் போல சரித்திரம் போற்றும் மிஷனெரியை வாழ்த்தி அனுப்பினாள் அத்தாய். என்னதொரு தியாகம்? இப்படிப்பட்ட பெண்களல்லவா நம் நாட்டில் எழும்ப வேண்டும்?

1838ஆம் ஆண்டு இந்தியா வந்த கால்டுவெல் முதலில் LMS மிஷனெரியாகவும், பின்னர் SPG யின் மிஷனெரியாகவும் பணியாற்றினார்.

இடையன்குடி. கால்டுவெல்லின் கரிசனையில் வளர்ந்த ஊர். அங்கும் இங்குமாக, கோணல்மாணலாக இருந்த வீடுகளை வரிசைப்படுத்தினார். அதனை அழகான முன்மாதிரியான கிராமமாக மாற்றினார்.

தேவாலயம் கட்டப்பட்டது. பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. மிஷன் பங்களா எழுப்பப்பட்டது. சாலைகள் போடப்பட்டன. வழியெங்கும் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டது. கால்டுவெல் சாதனைகள் புரிந்தார். துன்பங்களும் தொடர்ந்தது.

கால்டுவெல் பல குருவானவர்களைத் தோற்றுவித்தார். மர்காஷியஸ் ஐயர் இவரால் ஊழியத்திற்கு அழைத்து வரப்பட்டவரே. கால்நடையாகவே பல கிராமங்களை, நகரங்களைச் சுற்றியவர்.

இலக்கண நூல்களையும், சரித்திர நூல்களையும் எழுதியதோடு, வேதாகமத்தைத் திருத்தும் பணியிலும் ஈடுபட்டார். 'கீழ்நெல்லை அப்போஸ்தலன்' என்று அழைக்கப்பட்ட இவர் இதே நாள் மே 7, 1814ம் ஆண்டு பிறந்தார்.

அன்பரே, திருச்சபை நிறுவும் பணிக்கு உங்களை எப்பொழுது அர்ப்பணிக்க போகிறீர்கள்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இத்தனை காலமும் இந்தியர்களுக்காகவே வாழ்ந்தேன்.
உயிர் உள்ள அளவும் அவர்களுக்காகவே உழைப்பேன்.
அவர்கள் நாட்டிலேயே உயிர் துறப்பேன் - கால்டுவெல்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! கால்டுவெல்லைப் போன்று நானும் செயல்பட என்னையும் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : உபா.24, உன்னத.4, அப்.18-19.

இன்று...

மண்ணில் : 07.05.1814
விண்ணில் : 28.08.1891
ஊர் : அன்றிம்
நாடு : அயர்லாந்து
தரிசன பூமி : இந்தியா

கால்டுவெல் பிறந்த தினம்

ஜெபிக்க : Mr. A. John Chandran.

Scanned with CamScanner

அகஸ்டின் ஆப் ஹிப்போ

354 - 430

காலத்தை பயன்படுத்து

பாவ வாழ்வை விட்டு மன்னிப்படைந்து இரட்சிப்பைப் பெற தருணமானது மீண்டும் மீண்டும் கிடைப்பதில்லை. எனவே, தருணம் கிடைக்கும் காலத்தை பயன்படுத்தி புதிய வாழ்வை மேற்கொள்ள வேண்டும்.

அகஸ்டின். இவர் ஒரு ஆயர். வேத வல்லுநர். ஏறத்தாழ நூறு நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இளமைக் காலங்களில் தீய வழிகளில் நடந்தவர். புரட்டு உபதேசங்களுக்குச் செவி கொடுத்து, இறைவனை விட்டு தூரம் சென்றவர்.

பூங்கா ஒன்றில் தனிமையில் மன குழப்பங்களுடன் அமர்ந்திருந்த இவருக்கு "எடுத்துப்படி" என்ற குரல் கேட்க, வேதப் புத்தகத்தைத் திறந்து வாசித்தார். இரவு முடியப்போகிறது. பகல் அண்மையிலுள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக. ரோமர்.13:12 என்ற வாசகத்தால் தொடப்பட்டு தன் தீய குணங்களை விட்டு இறைவனில் சரணடைந்தார்.

தன் வாழ்க்கையில் செய்த தவறுகளை மன்னிக்க 'பாவ அறிக்கை' என்ற நூலை எழுதினார். அதில் "என்றுமே அழகின் முழுமையானவருமான அருட்பெரும் சோதியே! இறைவா, உம்மை நான் புரிந்து கொண்டு அன்பு செய்வதற்கு எவ்வளவு பின் தங்கிவிட்டேன். நீர் என்னில் குடியிருந்தீர். ஆனால், நானோ வெளியுலகத்தில் அலைந்து திரிந்து விட்டேன். வெட்ட வெளியில் உம்மை வீணாகத் தேடித் திரிந்தேன். நீர் என்னோடு இருக்க நான் உம்மோடு இல்லாதிருந்தேன். இப்போது உம்மீது மட்டுமே எனக்கு பசியும், தாகமும், உள்ளது. நீர் தரும் பேரமைதிக்காக நான் உருகி நிற்கிறேன்" என்று அகஸ்டின் இறைவனில் உருகிக் கூறுகின்றார்.

ஆண்டவரே, எப்பொழுதும் என்மேல் கோபமாயிருப்பீரோ? நான் செய்த குற்றங்களை மன்னிக்க மாட்டீரோ? என்று அழுது புலம்பிய இவர், அநேக பாவிகளை கிறிஸ்துவிடம் கொண்டுவர காரணமானார். இவரின் தாயார் புனித மோனிகா என்பவராவார்.

அன்பரே! உமது தீய வழிகளை விட்டு நீர் மனந்திரும்பிவிட்டீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நம்பிக்கை ஒளிவெள்ளம் என் இதயத்தில் பாய்ந்து, சந்தேகம் என்னும் இருளை அடித்துச் சென்றது – அகஸ்டின்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! காலத்தை பயன்படுத்தி, உமக்குள் கனிகொடுக்கும் ஜீவியம் செய்ய என்னை பக்குவப்படுத்தும்.

தியானத்திற்கு : உபா.25, உன்னத.5, அப்.20.

இன்று...

மண்ணில் : 13.11.354
விண்ணில் : 28.08.430
ஊர் : தாகஸ்தே
நாடு : நுமிடியா
தரிசன பூமி : ஆப்பிரிக்கா

ஜான் எலியட் 1604
கார்லொட்டி டக்கர் 1821

உலக செஞ்சிலுவை தினம்

Scanned with CamScanner

மேரி ஜோன்ஸ்

மாபெரும் மகிழ்ச்சி

வேல்ஸ் நாடு. சிறுமி மேரி ஜோன்ஸ்க்கோ கொள்ளை ஆசை. சொந்தமாக ஓர் வேதாகமம் வாங்க வேண்டும்.

அந்நாட்களில் வேதாகமம் கிடைப்பது மிகவும் அரிது. அப்படியே கிடைத்தாலும் ஏழைகள் அதை வாங்க முடியாது. விலையோ மிக அதிகம். மேரி ஜோன்ஸோ பரம ஏழை. அப்படியானால் வேதாகமத்தை எங்ஙனம் வாங்க முடியும்?

ஆறு ஆண்டுகள் கடந்தன. உள்ளத்தின் வாஞ்சை வளர வளர தான் சேமித்து வைத்திருந்த பணமும் உயர்ந்தது. ஆவலும் வளர்ந்தது.

1784 -

ஓர் நாள். மகிழ்ச்சி பொங்க துள்ளிக் குதித்தாள் மேரி ஜோன்ஸ். வேதாகமத்திற்கான பணம் சேர்ந்துவிட்டது. 25 மைல்கள் தூரத்திலுள்ள ஒரு போதகரிடம் வேதாகமம் இருப்பதை அறிந்து அதிகாலமே உற்சாகத்துடன் தன் நடை பயணத்தை துவங்கினாள்.

பெரும் மகிழ்ச்சியில் இடி விழுந்தது போல் மேரிக்கு ஏமாற்றம் அங்கே காத்திருந்தது. வேதாகமம் இல்லை என்ற பதிலை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தேம்பி, தேம்பி அழ ஆரம்பித்தாள். போதகரின் மனம் உடைந்தது.

வேதாகமத்திற்காக ஓர் சிறுமியின் வாஞ்சையும், அவளின் பிரயாசமும் போதகரின் உள்ளத்தை அசைத்தது. தான் உபயோகப்படுத்துவதற்காக வைத்திருந்த அழகிய வேதாகமம் ஒன்றை எடுத்து வந்தார். மேரியின் கைகளில் கொடுத்தார்.

தன் கண்களையே நம்பமுடியாதவளாய் போதகரையே உற்றுப் பார்த்தாள். அவள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஊரை நோக்கி ஓடோடி வந்தாள். உறவினரை அழைத்தாள். உற்சாகத்தால் நிறைந்தாள். வேதாகமத்தை உரக்க வாசித்தாள். மேரியின் வாஞ்சையும், ஆர்வமுமே சர்வதேச வேதாகமச் சங்கம் தோன்ற காரணமானது.

அன்பரே! வேதமாகமத்தின் மீது உமது வாஞ்சை என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இறைவன் எனக்குத் துணைபுரிந்தார்.
அவர் என் ஜெபத்தைக் கேட்டார் – மேரி ஜோன்ஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! வேதாகமம் வெளிவராத மொழியில், வேதாகமத்தை வெளிக்கொண்டு வர என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : உபா.26, உன்னத.6, அப்.21-22.

இன்று...

மண்ணில் : 1784
விண்ணில் :
ஊர் : நீண்டோல்
நாடு : வேல்ஸ்
தரிசன பூமி : வேல்ஸ்

வேதாகம தினம்

ஆன்ட்ரு முர்ரே 1828
கேத்தரின் குல்மேன் 1907

வில்லியம் பூத் 1912
சின்சென்டார்ப் 1760
நாராயணன் வாமன் திலக் 1919

Scanned with CamScanner

தீத்து

உத்தமம் உன்னை உயர்த்தும்

- 107

அந்தியோகியா பகுதியில் பவுல் அப்போஸ்தலரின் ஊழியத்தின் காரணமாக அநேக புறஜாதி மக்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களில் ஒருவரே தீத்து. பவுலால் 'உத்தமகுமாரன்' என்று அழைக்கப்பட்டவர்.

தீத்து என்ற பெயருக்கு கனவான் என்பது பொருளாகும். இவர் சீரிய நாட்டின் அந்தியோகியா பட்டணத்தைச் சார்ந்த ஒரு கிரேக்கர். இவர் லூக்காவின் சகோதரர் என்று கருதப்படுகிறார்.

கொரிந்து சபையில் பல சீர்கேடுகளும், மன கசப்புக்களும் ஏற்பட்டிருந்த படியால் அச்சபை பிளவுபட்டிருந்தது. ஒருவருக்கொருவர் விரோதமாக காணப்பட்டனர். நீதிமன்றத்தில் வழக்காடும் வழக்குகள் குவிந்து கிடந்தன. விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசித்து, வேற்று மத போதனையில் சிக்குண்டு காணப்பட்டனர். பவுலின் ஊழியத்திற்கு எதிராக கேள்விகள் கூட எழும்பின. இந்நிலைகளை மாற்றி திருச்சபையை புதுப்பிக்க, பவுல் அப்போஸ்தலனால் அனுப்பப்பட்டவரே தீத்து.

கிறிஸ்துவின் அதிகாரத்துக்கு கீழாக அச்சபையை கொண்டு வந்து ஒழுங்குபடுத்தினார் இவர். இந்த வெற்றியினால், மேலும் பல பொறுப்புகள் அவருக்கு கொடுக்கப்பட்டன. மத்தியத் தரைக்கடலில் இருக்கும் கிரேத்தா தீவில் அநேக சபைகள் இருந்தன. ஒழுங்கான அமைப்பு இல்லாமல் வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்த திருச்சபைகளை ஒன்றிணைத்து, புத்துயிர் கொடுத்தார் தீத்து. சபைகளை விசுவாசத்தினாலே ஆரோக்கியமுள்ளதாக மாற்றி, கிறிஸ்துவின் மேல் உள்ள பற்றுதலை ஆழப்படுத்தினார் இவர்.

யூதர்களிடமிருந்தும், புறஜாதிகளிடமிருந்தும் வந்த தாக்குதலை சமாளித்து, கிறிஸ்துவின் ராஜ்யத்தை அங்கே நிலை நாட்டினார். தீத்து தன்னை முன்நிறுத்தாமல் கர்த்தரையே மகிமைப்படுத்தியதினால், சபையின் உட்பூசல்கள் அனைத்தும் நீங்கின. திருமணம் செய்து கொள்ளாமல் சபை பணிகளையே தனது முழு லட்சியமாகக் கொண்ட தீத்து, கிரேத்தா தீவு சபைகளின் பேராயராக சேவை செய்து, கி.பி. 105ம் ஆண்டு மரித்தார். சுய பெருமையை நாடாமல் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் பணி செய்ததால், மேலான நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

அன்பரே! உத்தமகுணங்களோடு உங்கள் வாழ்க்கையை வாழ்ந்து காட்டுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : விசுவாசமும், கீழ்ப்படிதலும் ஒரே கட்டில் கட்டப்பட்டவை.

– ஸ்பர்ஜன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உத்தமமான குணங்களோடு உந்தன் பணியில் உற்சாகமாக ஈடுபட என்னை வழி நடத்தும்.

தியானத்திற்கு : உபா.27, உன்னத.7, அப்.23-24.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : 107

ஊர் : அந்தியோகியா

நாடு : அந்தியோகியா

தரிசன பூமி : கொரிந்து

கார்ல் பார்த் 1886

Scanned with CamScanner

1579 - 1639

உன்னைப் போல்...

"உன்னைப் போல் பிறனை நேசி," என்றார் இயேசு. உயிர்கள் அனைத்தையும் நேசிக்க வேண்டும் என்பதே இதன் உள்ளான அர்த்தம். உலகத்திலே வாழ்ந்தாலும், உலகத்தின் உயிர்களிடத்தில் அன்பு பாராட்டாதிருந்தால் நாம் வாழ்வதில் எந்த பிரயோஜனமும் இல்லை.

மார்ட்டின் தெ போரஸ், தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டில் 1579ல் பிறந்தார். அடிமைப் பெண்ணின் மகனாகப் பிறந்ததால் தந்தையார் இவரை கைவிட்டுச் சென்றார். ஏழ்மையும், வறுமையும் இவர் வாழ்க்கையை மிகவும் இக்கட்டுக்குள் மாற்றின. நிற வேற்றுமையாலும், அடிமைத்தன வழக்கத்தினாலும் இவர் மிகவும் பாதிக்கப்பட்டார். எனினும், சிறு பிராயத்திலேயே ஆண்டவர் மீது அளவற்ற அன்பும், நம்பிக்கையும் வைத்திருந்ததினால், எல்லோரிடமும் சகஜமாக பழகும், நல்ல பண்பை பெற்றிருந்தார். கடவுள் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற வாசகம் இவரை மிகவும் கவர்ந்த ஒன்று.

ஒருமுறை இவர் மடத்தில் வறுமை நிலவியது. பொருட்கள் அனைத்தையும் விற்று வாழ்க்கை நடத்தவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டார். அப்போது மார்ட்டின் மட அதிபரிடம் சென்று இந்த எளிய அடிமையை விற்று, அதில் கிடைக்கும் பணத்தினால் ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள் என்று தன்னை அர்ப்பணித்தார். ஆனால் அதிபர் அதை மறுத்துவிட்டார். ஏழைகளின் மீது அளவற்ற அன்பு கொண்ட இவர் ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 160 ஏழைகளுக்கு உணவளித்தார்.

பணக்காரர்களிடம் உதவி பெற்று, வாரந்தோறும் பல ஆயிரம் டாலர் மதிப்புள்ள பொருட்களை வழங்கினார். மக்கள் இவரை "இரக்கத்தின் சொந்தக்காரர்" என்றும், "சமாதானத்தின் தூதர்" என்றும் அழைத்தனர். நோயாளிகளைத் தொட்டு சுகப்படுத்தும் சிறந்த ஆற்றலை பெற்றிருந்தார். மனிதரின் உள்ளங்களின் இரகசியங்களை அறிந்து அவர்களது விருப்பங்களுக்கு உதவி செய்யும் சிறந்த பண்பையும் பெற்றிருந்தார். துறவற சபையிலே அனைத்து பணியாளர்களுக்கும் முன்மாதிரியாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்ந்து காட்டினார். இதனால், "அருட்செயல்களின் தந்தை" என்றும் அழைக்கப்பட்டார்.

அன்பரே! உங்களைப் போல் பிற உயிர்களையும் நேசிக்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : சிலரது ஆவல் பொன். இன்னும் சிலரது ஆவல் புகழ்.
எனது ஆவலோ, ஆன்மாக்களே - வில்லியம் பூத்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னைப் போல் பிறரை நேசித்து
அனைவரிடமும் உம் புகழ் கூற என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : உபா.28, உன்னத.8, அப்.25-26.

இன்று...

மண்ணில் : 09.12.1579	பிரதர் ஆன்ட்ரு 1922
விண்ணில் : 03.11.1639	
ஊர் : பெரு	
நாடு : தென் அமெரிக்கா	மேத்தியூ ரிச்சி 1610
தரிசன பூமி : தென் அமெரிக்கா	

ஜெபிக்க :

சாமுவேல் மாரீஸ்

விடுதலை உண்டு

1872 - 1893

ஆப்பிரிக்க காட்டுவாசி இனங்கள் இரண்டினிடையே கடுமையான சண்டை. தோல்வியடைபவர் வெற்றி பெறுபவர்களுக்கு அடிமையாக வேண்டும். க்ரு இனம் இச்சண்டையால் அடிமையாக்கப்பட்டது.

15 வயது இளவரசன் காபு, அடிமையாக பிடித்துச் செல்லப்பட்டான். கொடுமையான சித்ரவதைகள். தாங்கமுடியாத வேதனைகள். காபுவை அவன் தலை மட்டும் தெரியும்படி மண்ணிற்குள் புதைத்து எறும்புகளை கடிக்க விட்டு எலும்புக்கூடு தெரியும்படிச் செய்ய ஏற்பாடுகள் நடந்தன.

அன்று இரவு. திடீரென ஓர் பிரகாசமான ஒளி, "எழுந்து ஓடு" சத்தம் மட்டும் கேட்டது. மறு நிமிடமே அவன் கட்டுகள் அறுந்தன. புதிய பலத்தை தேகத்தில் பெற்றான். அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடித்தான்.

'கருப்பு தேவதூதன்' என்று அழைக்கப்பட்ட சாமுவேல் மாரீஸின் வாழ்வில் நடந்த சம்பவமே அது. இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதால் அவர் வாழ்வு மாற்றம் பெற்றது. தன்னை வழிநடத்தும் இயேசுவை தன் இனமக்களுக்குப் பறைசாற்றினார்.

ஆப்பிரிக்காவில் பிறந்த கல்வியறிவு சிறிதும் இல்லாத சாமுவேல் மாரீஸ், அமெரிக்காவில் டெய்லர் பல்கலைக்கழகத்தில் பயின்றார். அங்கு ஞாயிறு வகுப்பு ஒன்றில் பேசியபோது பரிசுத்த ஆவியானவர் மாரீஸ் மூலம் கிரியை செய்ய ஆரம்பித்தார். ஞாயிறு வகுப்பு ஆசிரியர்களால் சாமுவேல் மாரீஸ் மிஷனெரி சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டது.

சாமுவேல் மாரீஸின் வார்த்தைகள் அநேகரை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தியது. ஆண்டவரின் பணிக்காக பலர் தங்களை அர்ப்பணித்தார்கள்.

ஓர் நாள். ஆண்டவரின் திட்டம் அவர் வாழ்வில் முற்று பெற்றது. ஆம், 21 வயது நிரம்பிய சாமுவேல் மாரீஸ் இதே நாள் மே 12, 1893ஆம் ஆண்டு தேவதூதர்களோடு சேர்ந்து தேவனை துதிக்க சென்றுவிட்டார்.

அன்பரே! உங்கள் வாழ்வில் ஆண்டவரின் திட்டத்தை கண்டு கொள்வீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவன் உனது தந்தை, கிறிஸ்து உன் சகோதரர்,
பரிசுத்த ஆவியானவர் உன் சூரியன். – சாமுவேல் மாரீஸ்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! நீர் தரும் விடுதலையை பிற மக்களும்
பெற்றுக் கொள்ள என்னை ஓர் கருவியாக பயன்படுத்தும்.

தியானத்திற்கு : உபா.29, ஏசா.1, அப்.27.

இன்று...

மண்ணில் : 1872
விண்ணில் : 12.05.1893
ஊர் : மேற்கு ஆப்பிரிக்கா
நாடு : ஆப்பிரிக்கா
தரிசன பூமி : ஆப்பிரிக்கா

சாமுவேல் மாரீஸ் நினைவு தினம்
உலக தாதியர்கள் தினம்
பிளாரன்ஸ் நைட்டிங்கேல் 1820

டோசர் 1963
சாமுவேல் மார்ஷ்டன் 1838

Scanned with CamScanner

அழைப்பில் உறுதி

1840 - 1896

சீனாவில் வியூசங் என்ற ஒரு பட்டணம். இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட விரோதம் காரணமாக, அந்நியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இப்பட்டணம் தடைசெய்யப்பட்ட பகுதியாக காணப்பட்டது. எனவே, பிற மக்கள் இப்பட்டணத்திற்குள் செல்லமுடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை.

1804ம் ஆண்டு, குருத்துவ அபிஷேகம் பெற்று சீனாவுக்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார் டேவிட் ஹில். ஆனால் அவருடைய எண்ணமெல்லாம் வியூசங்கை மையமாகவே கொண்டிருந்தது. வியூசங் என்ற இடத்திற்கு செல்லும் வாஞ்சையிலேயே சீன மொழியை வேகமாக கற்றுக் கொண்டார்.

1805ம் வருடம், திபெத்திலிருந்து உருகிய பனி, யாங்ட்சே ஆற்றில் கலந்து பெருவெள்ளமாக உருவெடுத்தது. அதின் பாதிப்பினால், ஹேங்கோவில் மலேரியா காய்ச்சல் தொற்றிக் கொண்டது. அது ஹில்லையும் விட்டுவைக்கவில்லை. வியாதியின் கொடுமைஒருபுறமிருந்தாலும், ஊழிய பாரம் அவரை இங்கிலாந்திற்கு செல்ல மறுக்க செய்தது. எனவே சிறிய படகு மூலம் ஜப்பான் சென்றார்.

குணம் பெற்றபின் மீண்டும் சீனா திரும்பிய இவர் உற்சாகமாக தன்னுடைய பணியை தொடர்ந்தார். 1876ல் பஞ்சத்தினால் தேசம் அவதிப்பட்டபோது, மீட்புப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். சீன மத பாரம்பரியத்தின்படி, பரலோகத்தின் வழி என்ற தலைப்பில் கட்டுரை போட்டியை நடத்தினார். அநேகர் இதில் கலந்துகொண்டு உண்மை சத்தியத்தை அறிந்து கொண்டனர்.

இடைவிடாத மிஷனெரிப் பயணங்கள், பள்ளிக்கூடங்கள் கட்டும் பணி, மருத்துவ சேவை, பார்வையற்றோர் ஊழியம், அச்சுத்துறை ஊழியம் போன்றவற்றில் முழு கவனம் செலுத்தினார். தன்னோடு 200 மிஷனெரிகளை இணைத்துக் கொண்டு இரவும் பகலும் அழிந்து போகின்ற ஆத்துமாக்களை ஆண்டவரின் பக்கம் திருப்பினார். கைவிடப்பட்டு தெருக்களில் கிடந்த அனாதை பிணங்களையும் எடுத்து அடக்கம் செய்தார். நீல நிற உடை அணிந்து சிரித்த முகத்துடன் காட்சியளிக்கும் இத்திருத்தொண்டர் என்றுமே அணையா சுவிசேஷத் தீயை சீனாவில் பற்றவைத்தார்.

அன்பரே! சுவிசேஷப் பணிக்காக நீங்கள் தேர்வு செய்யும் இடம் எது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆத்துமாக்களை காப்பாற்ற பாடுகளை சகிக்கும் மிஷனெரிகள் வந்தால் போதும் – ஹட்சன் டெய்லர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! டேவிட் ஹில்லைப் போன்று நானும் சுவிசேஷ வாஞ்சை உடையவராக திகழ என்னை மாற்றும்.

தியானத்திற்கு : உபா.30, ஏசா.2, அப்.28.

இன்று...

பிறப்பு : 1840

இறப்பு : 18.04.1896

ஊர் : நியூயார்க்

நாடு : அமெரிக்கா

தரிசன பூமி : சீனா

தேசிய ஒருமைப்பாட்டு தினம்

ஜெபிக்க :

மத்தியா

நீங்களே பதிலாள்

- 80

மத்தியா என்ற பெயருக்கு கடவுளின் பொருள் என்று அர்த்தம். இவர் 12 அப்போஸ்தலர்களில் ஒருவர் அல்ல. ஆனால், ஜோசிபஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி, 72 சீடர்களில் ஒருவர். இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்து தற்கொலை செய்து கொண்ட பின்னர், அப்போஸ்தலர்கள் அவனுக்குப் பதிலாக மத்தியாவைத் தேர்ந்தெடுத்தனர்.

ஒருநாள். ஏறக்குறைய 120 சகோதர, சகோதரிகள் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள். அப்போது பேதுரு அவர்கள் நடுவே எழுந்து நின்று கூறியதாவது, "இயேசுவானவர் யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் அவர் நம்மிடத்தில் சஞ்சரித்த காலங்களிலெல்லாம், எங்களுடனே கூட இருந்த மனுஷர்களில் ஒருவன், அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து எங்களுடனே கூட சாட்சியாக ஏற்படுத்தப்பட வேண்டும்" என்றார். அதன் அடிப்படையிலேயே, சீடர்கள் சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்ததில், மத்தியாவின் பெயரில் மகத்தான சீட்டு விழுந்தது. மத்தியா அப்போஸ்தலர்களில் ஒருவரானார். மகத்தான பணி செய்ய தயாரானார்.

எத்தியோப்பியா நாட்டில் சுவிசேஷப் பணியை மேற்கொண்டு, ஏராளமானோருக்கு இயேசுகிறிஸ்து அருளும் இரட்சிப்பை எடுத்துக் கூறினார். மேலும், இவர் பாலஸ்தீனா, சிரியா, அர்மீனியாவில் இயேசுவின் நற்செய்திகளைப் போதித்தார். புனித அந்திரேயா, 'மத்தியா பணி' என்ற நூலில் இவர் காட்டுமிராண்டிகளுக்கு நற்செய்தி அறிவித்ததாகவும், அங்கு கண்கள் குருடாக்கப்பட்டதாகவும் செய்தி தெரிவிக்கின்றார்.

இறைபணி என்பது நம் விருப்பத்தினால் செய்வது அல்ல. பணம் இருப்பதாலோ, இடம் இருப்பதாலோ அல்லது மக்கள் கூட்டம் இருப்பதாலோ ஊழியத்தை ஆரம்பிப்பது சரியான செயல் அல்ல. நாம் ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட வேண்டும். மத்தியா ஆண்டவரின் சித்தப்படி அப்போஸ்தலர்கள் மூலம் தெரிந்துகொள்ளப்பட்டதினால் ஊழியப் பணியை மேற்கொண்டார். தன் ஆயுளின் கடைசி வரை தன் அழைப்பில் நிலைத்து நின்றார்.

அன்பரே! உங்களை ஆண்டவர் ஊழியப் பணிக்கென்று அழைத்துள்ளதை உணர்ந்து உள்ளீர்களா? புறப்பட ஆயத்தமாகிவிட்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உங்கள் ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன். - பவுல்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம் அழைப்பிற்கு, இன்றே நான் அடிபணிகின்றேன்.

தியானத்திற்கு : உபா.31, ஏசா.3-4, கொலே.1.

இன்று...

மண்ணில் :

விண்ணில் : கி.பி. 80

ஊர் :

நாடு : யூதேயா

தரிசன பூமி : எத்தியோப்பியா

பச்சோமியஸ் 346

இராபர்ட் சிங்களேயர்

1883 - 1946

செயல்படுங்கள்

ஸ்காட்லாந்து நாடு. அநேக மிஷனெரிகளை இவ்வுலகத்திற்கு வழங்கியுள்ளது. அவர்களில் ஒருவர் தான் சிங்களேயர். தந்தை ஒரு கல்தச்சர். இவருடைய குடும்பம் இறைப்பற்றுடன் வாழ்ந்து வந்த நல்லதொரு குடும்பம்.

இராபர்ட் இளைஞனாக இருக்கும்போது தந்தை காலமாகிவிட்டார். எனவே 14 வயது முதல் 17 வயதுவரை கொல்லப் பணி செய்து தனது குடும்பத்தை காப்பாற்றும் பொறுப்பான பணிக்கு தள்ளப்பட்டார். கொல்லப் பணி செய்யும்போதே ஆலய காரியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இரண்டு ஆண்டுகள் வேதபாட கல்வி நிலையத்தில் கல்வி கற்றார்.

ஆண்டவரின் அழைப்பை உணர்ந்த இவர், இந்தியாவில் பணியாற்றும் வாய்ப்பை நாடினார். இந்திய மக்களின் மீது ஆழ்ந்த அன்பு கொண்டார். 1909ம் ஆண்டு தென்னிந்தியாவில் நாகர்கோவில் என்ற பகுதியில் ஊழியத்தை ஆரம்பித்தார்.

1910ல் எலிசபெத் சிமித் அம்மையாரை மணந்த இவர், 1919ல் மார்த்தாண்டம் என்ற பகுதியில் தலைமைபொறுப்பை ஏற்றார். எல்.எம்.எஸ் ஊழியத்தின் மூலம் மாபெரும் திட்டங்களைச் செயல்படுத்தினார். ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தையல் கூடங்களும், ஆசிரியர் பயிற்சி பள்ளிகளையும் ஆரம்பித்தார். 1932ல் மாணவர் தங்கி பயில விடுதி ஒன்றையும் கட்டினார். கிறிஸ்தவ மக்களுக்காக கல்லறைத் தோட்டம் ஒன்றையும் ஏற்படுத்தினார்.

இராபர்ட் சிங்களேயர் ஓர் சிறந்த சிற்பி. கலையில் அதிக ஈடுபாடு கொண்டவர். 1924-1933 ஆண்டுகளில் அவரால் கட்டப்பட்ட எழில் நிறைந்த மார்த்தாண்டம் ஆலயமே இதற்கு சான்றாகும். மக்களின் நண்பராகவும், அவர்களின் ஆவிக்குரிய தகப்பனாகவும் விளங்கிய சிங்களேயர் தேவன் தனக்கு கொடுத்த திட்டத்தை சீரும் சிறப்புடனும் செய்து முடித்தார்.

அன்பரே! உங்கள் வாழ்வுக்குப் பின்னும் பேசும்படியான செயல்களைச் செய்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உலகப் பொருட்கள் நம்மிடமிருந்து எடுக்கப்படும் வரை நாம் அவைகளோடு ஒட்டிக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாது.
- அகஸ்டின்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உலகப் பொருளை உதறிவிட்டு, உமக்குள் செயல்பட எனக்கு வழி செய்யும்.

தியானத்திற்கு : உபா.32, ஏசா.5, கொலே.2.

இன்று...

பிறப்பு : 15.11.1883
இறப்பு : 12.09.1946
ஊர் : கிளாஸ்கோ
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : இந்தியா

உலக குடும்ப தினம்

பிரான்சிஸ் ஸ்கேபஃர் 1984

ஜெபிக்க :

Scanned with CamScanner

பிலிப்பு

உங்களைப் பார்த்தால்

இயேசு கிறிஸ்துவின் சீடராகிய பிலிப்பு இயேசுவால் அழைக்கப்பட்டவர். தன்னுடைய அழைப்பின்போது அவரது நண்பரான பார்த்தலோமியுவையும் உடன் அழைத்து வந்தார்.

ஒருமுறை தன் தந்தையை அடக்கம் செய்துவிட்டு வர விடை தரவேண்டும் எனக் கேட்டபோது இயேசு அதற்கு இடம் தரவில்லை என அறிகின்றோம். எனினும் விசுவாசத்தில் உறுதியாக அவரைப் பின்பற்றிச் சென்றார். இயேசு கிறிஸ்துவுக்கும் அவரது சீடர்களுக்கும் உணவு தயாரிக்கும் பொறுப்பு பிலிப்புவுக்கு கொடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

ஒருநாள், இரவு உணவு வேளை. பிலிப்பு இயேசுவிடம் ஒரு கேள்வியைக் கேட்டார், "ஆண்டவரே பிதாவை எங்களுக்கு காட்டும், அது போதும்." இயேசுவோ, "பிலிப்புவே இவ்வளவு காலம் என்னோடு இருந்தும் என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றார். பிலிப்பு அவ்வுண்மைகளை அறிந்துக் கொண்டார்.

அப்போஸ்தலர் பிலிப்புவும் மற்ற சீடர்களைப் போலவே நற்செய்தி அறிவிக்க உலகின் பிற பாகங்களுக்கும் சென்றார். எருசலேமிலிருந்து காசா ஊருக்குப் போகும் பாதையில் ஓர் அண்ணகனைச் சந்தித்து அவருக்கு கிறிஸ்துவைக் குறித்து அறிவித்து ஞானஸ்நானமும் கொடுத்தார்.

பிலிப்பு இறுதியாக பிரிஜியா நாட்டிலுள்ள ஹியாராப் போலஸ் என்ற பட்டணத்தில் பணி செய்தார். இந்நகரத்தார் சர்ப்பத்தை கடவுளாக வழிபட்டிருந்தனர். எனவே அவைகளை சுத்தப்படுத்தி கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார். எதிர்ப்புகள் அதிகமானதால் ஆலயப் பூசாரிகள் இவர் மேல் பொறாமைக் கொண்டு ஒரு சிலுவை மரத்தில் கட்டி பின் அவரை கல்லால் எறிந்து கொன்றார்கள். இரத்த சாட்சியான அவர் இன்றும் நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்.

அன்பரே! உம்மில் இயேசு கிறிஸ்துவை பிறர் பார்க்க முடியுமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இயேசுவின் அன்புக்கீடாய் என்ன காணிக்கை ஈந்திடுவேன்.
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன். – சந்தியாகு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என்னைப் பார்க்கிறவர்கள் உம்மை கண்டுகொள்ள என்னை உம் கைகளில் தத்தம் செய்கிறேன்.

தியானத்திற்கு : உபா.33-34, ஏசா.6, கொலே.3-4.

இன்று...

மண்ணில் :

விண்ணில் :

ஊர் :

நாடு :

தரிசன பூமி : பிரிஜியா

ஜீலியஸ் வெல்ஹாசன் 1844

Scanned with CamScanner

1873 - 1960

காலத்தை பயன்படுத்துவோம்

"காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விடுவாயே. ஞானத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தை சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்." இப்பாடல் வரிகளை நீங்கள் பாடியிருக்கக் கூடும். உண்மையாகவே இப்பாடல் வரிகளும் உங்கள் உள்ளத்தில் ஊடுருவி பாய்ந்திருக்கக் கூடும். அவ்வளவு வல்லமையாய் இப்பாடலை எழுதினார் ஒரு போதகர்.

போதகர்கள் பலர் திருச்சபைகளில் பணியாற்றி மறைந்துள்ளார்கள். அவர்களில் மக்கள் மனதில் நீங்காமல் இடம் பெற்றவர்கள் ஒரு சிலரே. அவர்களில் வாழ்க்கையாலும், வார்த்தையாலும் சான்றாக விளங்கி இசைப் பாடல்களால் நீங்கா இடம் பெற்ற சிறந்த ஜெப வீரர் பரமானந்தம் ஐயர் ஆவார். இவர், தாமஸ் உவாக்கர் மிஷனெரியோடு இணைந்து பணியாற்றியவர். மேலும் சாது சுந்தர் சிங் அவர்களோடு ஐந்தாம் ஆவிக்குரிய கூட்டத்தில் பேசினார்.

1906ம் ஆண்டு சென்னையில் இறை பணி ஆற்றினார். தமது 36வது வயதில் குருவாக அபிஷேகம் பண்ணப்பட்ட இவர், பல இடங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து, இறைவனின் அருட்பணியை வல்லமையாக செயல்படுத்தினார். இவர் ஒரு ஒப்பற்ற கிறிஸ்தவ வீரர். ஆன்மஎழுப்புதல் பிரசங்கி. இறையியல் கொள்கைகளை வலியுறுத்தி விசுவாசக் கோட்பாடுகளை நிலைநிறுத்த வேண்டுமென்று தீவிரமாக உழைத்தவர். அதற்காக ஜெபித்தவர். உரைநடை பொழிவதில் இவர் ஒரு அருவி; ஓயாது பாடும் குருவி; திருமறையை விளக்கும் கருவி.

இவர் 13 நூல்களை எழுதியுள்ளார். இவை யாவும் இறை உணர்வை வளர்ப்பதாகவும், மறையுணர்வைப் பெருக்குவதாகவும், நல்லொழுக்க நெறியில் வளர்ப்பதாகவும் அமைகின்றது. இவர் எழுதிய 11 கீர்த்தனைகள், ஆண்டவரின் அருளைப் பெறவேண்டி ஜெபிக்கும் ஜெபங்களாக அமைந்துள்ளது. "எந்நாளுமே துதிப்பாய்", "என் ஆத்துமாவே நீ எந்நாளுமே துதிப்பாய்" என்ற பாடலும், இவர் எழுதியதே. தமது போதனைகளாலும், சாதனைகளாலும் தமிழ்நாட்டு மக்களின் அறிவுக் கண்களையும், ஆன்மீகக் கண்களையும் அகலத் திறந்த இவர், இதே நாள் 1960ல் இறைவன் புகழ்பாடச் சென்றார்.

அன்பரே! இவ்வுலக மக்களுக்கு நீங்கள் அருளும் அருட்கொடை என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இரட்சிப்பு வேண்டும், மோட்சம் வேண்டும் என்று கேளாமல், கிறிஸ்துவைத் தேடி அவர் வழியில் நடப்பதே முக்கியம்.

– பரமானந்தம் ஐயர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம் திருப்பணி செய்ய எந்தனை ஒப்புவிக்கிறேன்.

தியானத்திற்கு : யோசுவா.1, ஏசா.7, 1தெச.1-2.

இன்று...

பிறப்பு : 1873

இறப்பு : 17.05.1960

ஊர் : மதுரை

நாடு : இந்தியா

தரிசன பூமி : இந்தியா, இலங்கை

பரமானந்தம் ஐயர் நினைவு தினம்

உலக தொலை தொடர்பு தினம்

ஜெபிக்க :

போப் 2ஆம் ஜான்பால்

உயர்வு உங்களைத் தேடி வரும்

1920 - 2005

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக விளங்கும் போப் வரிசையில் இதுவரை 264 பேர் பதவி வகித்து வந்துள்ளனர். இவர்கள் அனைவரிலும் சிறந்தவராகவும், மிகவும் புகழ் பெற்றவராகவும் விளங்கியவர் போப் 2ம் ஜான்பால்.

1920ம் ஆண்டு போலாந்து நாட்டில் பிறந்தார். இறையியலில் பயிற்சி பெறும்போது ஹிட்லரின் நாசிப் படைகள் போலந்து நாட்டை கைப்பற்றியக் காரணத்தால் இவர் படித்த பல்கலைக்கழகம் மூடப்பட்டது. எனவே ஒரு சுரங்கத் தொழிலாளியாக தன் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

ஆண்டவரின் திட்டப்படி கத்தோலிக்கச் சபையில் குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். பின்னர், சரித்திரம் பேசும் சாதனைகளை படைக்கும்படியாக போப்பாக தெரிந்தெடுக்கப்பட்டார். தனது ஆன்மீக பலத்தை கொண்டு பல மாற்றங்களை கொண்டு வந்தார். ஜனநாயக உரிமைகளுக்காக போராடி வந்த தொழிற்சங்க அமைப்புகளுக்கு ஆதரவு கரம் நீட்டினார். ஒவ்வொரு மனிதனின் உரிமைகளும், மத உணர்வுகளும் மதிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தார். இஸ்ரவேல் நாட்டுடன் வாட்டிகனுக்கு நெருங்கியத் தொடர்பை ஏற்படுத்தினார்.

சமுதாயத்தில் உள்ள அநீதிகளைக் களைய முற்றிலும் பாடுபட்டார். கருத்தடை செய்வதைச் சட்டமாக்கும் செயலை எதிர்த்துப் போரிட்டார். கருவுற்றிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ உரிமையுண்டு என்று முழங்கினார். ஓரினச் சேர்க்கைகளைக் கண்டித்தார். நோயாளி சாகும் முன் உயிரைப் பறிக்கும் கருணைக் கொலை முறையை அகற்றப் பாடுபட்டார். தன்னைத் துப்பாக்கியால் சுட்ட இளைஞனையும் சிறையில் சந்தித்து மன்னிப்பு அருளினார். அவர் கத்தோலிக்கத் தலைவர் மட்டுமின்றி நல்லதொரு ஆன்மீகத் தலைவராகவே வாழ்ந்து மறைந்தார். இவர் பிறந்தது இதே நாளில் தான்.

அன்பரே! உங்கள் பதவிகளை மக்கள் நலனுக்காக பயன்படுத்துகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : சிறையில் நாங்கள் இறையியலை களைந்து
இறைவனைக் கற்றுக் கொண்டோம். – ரிச்சர்டு உம்பிராண்ட்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! உயர்வுகள் வரும்போது
தாழ்மையாயிருக்க எனக்குக் கற்றுத் தாரும்.

தியானத்திற்கு : யோசுவா.2, ஏசா.8, 1தெச.3-4.

இன்று...

பிறப்பு : 18.05.1920
இறப்பு : 02.04.2005
ஊர் : வேடோவெய்ஸ்
நாடு : போலந்து
தரிசன பூமி : ரோம்

போப் 2ஆம் ஜான்பால் பிறந்த தினம்

ஷெல்டன் ஜாக்சன் 1834

ஜாக்வாஸ் மார்குட்டி 1675

Scanned with CamScanner

சின்ன யோவான்

339 - 405

வாழ்க்கையில் வெளிப்படும் வார்த்தை

கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் 5ஆம் நூற்றாண்டு வரை எகிப்து நாட்டில் அநேக துறவிகள் வசித்து வந்தார்கள். புலன்களை அடக்கி, துறவு பூண்டு, ஜெபமும் தியானமுமாக அவர்களின் வாழ்க்கை காணப்பட்டது. அவர்களில் ஒருவரே சின்ன யோவான்.

உடலமைப்பில் சிறியவராகவும், குள்ளமாகவும் காணப்பட்டதால் சின்ன யோவான் என்று அழைக்கப்பட்டார். அமைதியும், சாந்தமுமே இவரின் குணநலன்கள். விரும்பாத சம்பவங்கள் நடைபெற்றதால் அதற்காக பல மணி நேரங்கள் ஜெபிக்கும் பழக்கமுடையவர்.

ஒரு நாள். ஆலயத்திற்கு சென்று கொண்டிருந்தார் யோவான். வழியில் கொடூரமான மனிதன் ஒருவன் இடை மறித்தான். 'நீர் விஷமான இதயம் உள்ளவர்' என்று அவரை இழிவாய் பேசினான். அதற்கு சின்ன யோவான், "நீர் சொல்வது முற்றிலும் உண்மை. ஆண்டவரின் முன்பு நான் ஒரு நீச பாவி; நீர், நினைப்பதைக் காட்டிலும் அதிகமாகவே இதயத்தில் விஷமுள்ளவனாக இருக்கலாம்" என்று பதிலுரைத்தார்.

கிறிஸ்துவின் போதனைகளைப் பேசிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் அதை வாழ்க்கையாகவே வாழ்ந்து காட்டினார் சின்ன யோவான். உலகப் பற்று சிறிதேனும் இல்லாதவராக வாழ்ந்தவர்.

கிறிஸ்தவ பக்தர்கள் எப்பொழுதும் விழித்திருக்க வேண்டும் எனவும், கடவுளைப் பற்றிய எண்ணம் அவர்கள் உள்ளத்தை விட்டு ஒரு நிமிடமும் பிரிந்திருக்கக் கூடாது என்பதும் அவர் கொள்கையாக காணப்பட்டது.

மக்களுக்கு சேவை செய்வதையே தன் எண்ணமாக கொண்டிருந்த அவர் அநேக சீடர்களை உருவாக்கி அவர்கள் மூலம் கிறிஸ்துவின் அன்பை உலகறியச் செய்தார்.

அன்பரே! உமது நற்குணங்கள் பிறரால் போற்றப்படுகின்றனவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கடவுளின் கிருபைக்கும், அன்புக்கும் அளவேயில்லை.
– சின்ன யோவான்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் பேசும் வார்த்தைகள்
உம் அன்பை சொல்வதாகவே அமையட்டும்.

தியானத்திற்கு : யோசுவா.3-4, ஏசா.9, 1தெச.5.

இன்று...

மண்ணில் : 339
விண்ணில் : 405
ஊர் : பாஸ்டா
நாடு : எகிப்து
தரிசன பூமி : எகிப்து

ஐ. ஜே. ஐயாத்துரை 1890

ஜெபிக்க :

ஜோசப் பெஸ்கி

அழைப்பிற்கு அடிபணியுங்கள்

1680 - 1747

இத்தாலி நாட்டிலிருந்து இந்தியா வந்து தமிழ் மொழியைக் கற்று, தமிழ் நாட்டை தாய் நாடாகப் போற்றி, தமிழ் மக்களை தமது மக்களாகப் பாராட்டி, திருமறைச் செல்வராக, செந்தமிழ் அறிஞராக, பன்மொழிப் புலவராக, ஓவியக் கலைஞராக, இசை ஆர்வம் மிகுந்தவராக, கலையறியும் குண நலமும் பொருந்தியவராக கிறிஸ்துவின் சேவையை வாழ்நாள் முழுவதும் உற்சாகமாக செய்தவரே ஜோசப் பெஸ்கி.

மதுரை மாவட்டத்திற்கு 1711ம் ஆண்டு வந்தார். தமிழரோடு தமிழராய் வாழ்ந்தார். உணவிலும், உடையிலும், பழக்கத்திலும், வேறுபாடின்றி வாழ்ந்தார்.

ஜோசப் பெஸ்கி என்ற பெயரை 'தைரிய நாதர்' என மாற்றிக் கொண்டார். மக்கள் இவருடைய துணிவைக் கண்டு "வீரமாமுனிவர்" என்று வியந்து போற்றினர். ஆங்கிலம், பிரெஞ்சு, லத்தீன், தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆரியம், இந்துஸ்தானி போன்ற மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தமிழ் மொழியில் உன்னத அனுபவங்களை அடைந்தார்.

கிறிஸ்தவ ஆலயங்கள் மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களும் சீர்குலைந்து கிடந்ததைக் கண்டு மனம் வருந்தினார். எனவே, புதிதாக ஆலயங்களைக் கட்டினார். இவரின் எளிய வாழ்வால் பலர் கிறிஸ்துவைக் கண்டு கொண்டனர்.

தமிழ் மொழிக்கு மாபெரும் அருட்கொடைகளை வழங்கியவர் வீரமாமுனிவர். கவிதைகள், இலக்கணப் புத்தகங்கள், உரை நடைகள், அகராதிகள், ஆய்வு நூல்கள் என பல நூல்களை வெளியிட்டார். 'பரமார்த்த குரு கதைகள்' என்பது இவரின் அற்புத படைப்பு.

கிறிஸ்துவின் அன்பை எளிமையாகவும், இனிமையாகவும் போதிப்பதில் சிறந்தவர். உவமானங்களினால் உண்மைச் செய்தியை திறம்பட கூறி அநேகரை கிறிஸ்துவின் தொண்டராக மாற்றினார். சமயத் தொண்டிலும், தமிழ்த் தொண்டிலும் 37 ஆண்டுகள் திறம்பட பணியாற்றிய இவர் ஒரு பல்துறை வித்தகர்.

அன்பரே! உங்கள் திறமைகள் அனைத்தும் திருச்சபை வளர்ச்சிக்கு பயன்படுகின்றதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்,
என்னை நாடிய என்னருள் நாதனே - பெஸ்கி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! திருச்சபையின் வளர்ச்சிக்கு என் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்த தீர்மானிக்கிறேன்.

தியானத்திற்கு : யோசுவா.5-6, ஏசா.10, 2 தெச.1-2.

இன்று...

மண்ணில் : 08.11.1680
விண்ணில் : 04.02.1747
ஊர் : வெனிஸ் மாநிலம்
நாடு : இத்தாலி
தரிசன பூமி : இந்தியா

கிறிஸ்டோபர் கொலம்பஸ் 1506
ஜான் எலியட் 1690

ஜெபிக்க :

ராபர்ட் மர்ரே மச்செயின்

1813 - 1843

பாடுகளோ படிகற்கள்

கடுமையான வெப்பம். சிறிய காற்று கூட இதமாக வீசவில்லை. உடல்முழுவதும் வியர்வைத் துளிகள். பாலைவனத்தில் மிகவும் களைத்துப் போய் காணப்பட்டனர் அந்த நான்கு பேர்.

ராபர்ட் மர்ரே மச்செயின் தன் நண்பர்களுடன் அந்த பயணத்தைத் துவங்கியிருந்தார். பாலஸ்தீனத்திற்கு நற்செய்தி அறிவிக்கும் மகிழ்ச்சிகரமான பயணம் அது. ஐரோப்பாவைத் தாண்டியதும் எங்கு பார்த்தாலும் பாலைவனங்கள். ஒட்டகங்களிலும், கழுதைகளிலுமாக அவர்கள் பயணம் தொடர்ந்தது. கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது பாலஸ்தீனத்திற்குப் போய் சேர்ந்தார். ஸ்காட்லாந்து தேச சபை இவர்களின் வரவால் மகிழ்ச்சியடைந்தது. பாலஸ்தீன யூதர்களுக்கு இயேசு கிறிஸ்துவே மேசியா என்பதை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறினார்.

வேத சாஸ்திரமும் கல்லூரியில் கற்ற இறையியலும், அனுபவத்தோடு கூடிய விசுவாசமும் யூதர்களிடம் ஆணித்தரமாக நற்செய்தியைப் போதிப்பதற்கு உதவியாக அமைந்தது. அநேக யூதர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தி தாய் நாடு திரும்பினார் ராபர்ட்.

ராபர்ட் மர்ரே மச்செயின் சிறந்த இசைஞானம் பெற்றவர். தேவ நாம மகிமைக்காகப் பாடும் வரத்தையும் பெற்றிருந்தார். சிறந்த ஓர் மாணவராக விளங்கியதால் பல பரிசுகளை எடின்பரோ சர்வ கலா சாலையில் பெற்றிருந்தார்.

ஸ்காட்லாந்து திருச்சபையின் போதகரான இவர் சிறந்த ஓர் பிரசங்கியார். "நான் பரிசுத்த ஆவியானவரால் முற்றும் நிரப்பப்பட்டிருந்தால் தேவனுடைய வார்த்தைகளை அதிகமாக வாசிக்கவும், அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவிடவும், பாவத்திற்கு எதிராக என் ஆத்துமாவை பரிசுத்தமாகக் காத்துக் கொள்வதிலும் மிகுந்த விழிப்புடையவனாக இருந்தேன்" என்ற இவர் ஸ்காட்லாந்து தேசத்தின் ஒப்பற்ற தேவ மனிதனாவார்.

அன்பரே! உமது வாழ்வில் எத்தனை இடங்களில் சுவிசேஷம் அறிவித்திருக்கிறீர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உனது பரிசுத்தத்திற்குத் தக்கதாக உனது கிறிஸ்தவ வாழ்வின் வெற்றி அமையும் - ராபர்ட் முர்ரே

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! பரிசுத்தமான வாழ்க்கை வாழவும், அதின் மூலம் மக்களை ஆதாயப்படுத்தவும் எனக்கு உதவிசெய்யும்.

தியானத்திற்கு : யோசுவா.7, ஏசா.11, 2 தெச 3.

இன்று...

மண்ணில் : 21.05.1813
விண்ணில் : 25.03.1843
ஊர் : எடின்பரோ
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : பாலஸ்தீனா

ராபர்ட் மர்ரே மச்செயின் பிறந்த தினம்

ஹட்சன் டெய்லர் 1832
எலிசபெத் ஃபிரை 1780

ஜேம்ஸ் கில்மோர் 1891
ஜோஹன்னா வின்ஸ்ட்ரா 1909
ஜான் எலியட் 1690

மறுமலர்ச்சி பெறட்டும்

1917 - 1992

பிஷப் ஹீபர் கல்லூரி. 1934ஆம் ஆண்டு பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்பட்டது. சைமன் கமிஷன் பரிந்துரைப்படி அது மூடப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் தலையில் இடி விழுந்தாற் போல் தடுமாறி நின்றனர்.

1964ம் ஆண்டு திருச்சி-தஞ்சை திருமண்டலப் பேராயராகப் பொறுப்பேற்ற சாலமோன் துரைசாமி, அக்கல்லூரியை மீண்டும் தழைக்கச் செய்தார். புத்துயிரும், புதுவாழ்வும் அக்கல்லூரிக்குக் கிடைத்தது. இருபது ஏக்கருக்கும் அதிகமான கட்டிடங்கள் கட்டப்பட்டன.

கண்டோர் வியந்து போற்றும் வகையில் அதனை உருவாக்கி, படிப்போரைப் பெருமையடையச் செய்தார் பேராயர் துரைசாமி. மக்களின் ஆன்மீக வாழ்விலும், பொருளாதார வளர்ச்சியிலும், கல்விப்பணியிலும் அக்கறை கொண்டு தமது செயற் திட்டங்களுக்கு சிறப்பான வடிவம் கொடுத்தார்.

திருச்சபை தன்னிறைவு பெற்றுக் காணப்பட வேண்டும் என்பதற்காகப் பல வணிக வளாகங்களை உருவாக்கினார். மேற்கு ஜெர்மனியின் உதவியுடன் ஏழைச் சிறுவர் சிறுமியர் இலவசமாகத் தங்கிப் பயில நாற்பதுக்கும் மேற்பட்ட விடுதிகளை ஏற்படுத்தினார். கல்விப் பணியில் பெரும் முன்னேற்றங்களை மக்கள் பெற்றிடச் செய்தார்.

பேராயர் துரைசாமி, தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் மீது நீங்காப் பற்றுடையவர். 1981ஆம் ஆண்டு உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை என்ற அமைப்பைத் தொடங்கித் திறம்பட நடத்தினார். பேராயர் ஒரு சிறந்த எழுத்தாளர். கிறிஸ்தவக் கல்வி, இந்தியாவில் கிறிஸ்தவம், "என் கண்கள் அவரது மகிமையைக் கண்டன" போன்ற அழியா நூல்களைப் படைத்தார்.

மாபெரும் தலைவனாக வாழ்ந்த பேராயர் இதே நாள் மே 22, 1992ஆம் ஆண்டு கடவுளின் அழைப்பை ஏற்று, பிஷப் ஹீபர் கல்லூரி வளாகத்திலுள்ள சிற்றாலயத்தில் விதைக்கப்பட்டார்.

அன்பரே! உமது பெயரைச் சொல்லும்படி மக்களுக்காக எதனைச் சாதித்திருக்கின்றீர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : சிலுவையை சுமந்து வாழ்பவரே இரட்சகரின் திருமுக பிரகாசத்திற்குள் நடந்து செல்வர் - சாது சுந்தர் சிங்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம் திருமுகத்தை அனுதினமும் கண்டு மறுமலர்ச்சி பெற்றவனாக வாழ எனக்கு அருள்தாரும்.

தியானத்திற்கு : யோசுவா.8, ஏசா.12, 1தீமோ.1-3.

இன்று...

மண்ணில் : 17.06.1917
விண்ணில் : 22.05.1992
ஊர் : **அரக்கோணம்**
நாடு : **இந்தியா**
தரிசன பூமி : **இந்தியா**

சாலமோன் துரைசாமி நினைவு தினம்

காான்ஸ்டன்டைன் 337

ஜெபிக்க :

ஸ்வர்ணரோலா

1452 - 1498

பாவங்கள் கழுவப்பட்டும்

இத்தாலியில் பிளாரன்ஸ் என்ற பட்டணம். அங்குள்ள தேவாலயத்தில் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. ஜனங்கள் உட்கார இடமின்றி அங்குமிங்கும் கம்பிகளைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே நுழைந்தார் ஸ்வர்ணரோலா. பாவத்தைக் குறித்த அவரது பிரசங்கம் அனைவரது உள்ளத்திலும் அம்பு போன்று பாய்ந்தது. வல்லமையான வார்த்தைகள் அவர்களது வாழ்வைக் கழுவ ஆரம்பித்தது. கதறி அழுது தங்கள் பாவங்களை அறிக்கை செய்தனர். இரட்சிப்பின் சந்தோஷத்தினால் நிறையப் பெற்றனர்.

இக்காலங்களில் பாவத்தைக் குறித்த பிரசங்கங்களைப் பலர் விரும்புவதில்லை. போதகர் பிரசங்கம் செய்ய ஆரம்பிக்கும்போதே இருக்கையை விட்டு நழுவி விடுகின்றனர். பாவம், பாவத்தைக் குறித்து பிரசங்கம் செய்யும் போதகர் மட்டுமே அங்கு இருப்பார். மற்றவர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருப்பர்.

1500ஆம் ஆண்டுகளிலும் அப்படித்தான் காணப்பட்டது. இந்நிலைமையை மாற்றினார் ஸ்வர்ணரோலா. அடிக்கடி உபவாசிப்பதும், முழங்காலில் மணிக்கணக்காக நின்று ஜெபிப்பதுமே அவருக்கு மிகுந்த தைரியத்தையும், மக்கள் பேரில் கரிசனையையும் தந்தது.

ஆவியானவர் ஸ்வர்ணரோலா மூலம் பல காரியங்களைத் தீர்க்கதரிசனமாக அறிவித்தார். திருச்சபையின் மூடத்தனங்களையும், சீர்கேடுகளையும் கண்டித்தார். இதனால் போப்பானவரால் சபைக்குப் புறம்பாக்கப்பட்டார்.

1498ஆம் ஆண்டு ஆறாம் அலெக்சாண்டர் என்ற போப், ஸ்வர்ணரோலாவைத் தீயிலிட்டு எரித்துக் கொல்லும்படி கட்டளையிட்டார். தன் முடிவை ஏற்கனவே அறிந்திருந்த ஸ்வர்ணரோலா மரிக்குந் தருணத்தில் தனக்காக ஆண்டவர் பட்ட பாடுகளை எண்ணியபடியே பரலோகம் சென்றார்.

அன்பரே! பாவ வாழ்க்கை அனைத்தையும் சிலுவையில் அறைந்து விட்டீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் பல பட்டணங்களை விட்டு விடைபெறும்போது
ஆண்களும், பெண்களும் எனது வார்த்தையைக் கேட்டு,
கண்ணீர் விட்டு அழுகின்றனர். – ஸ்வர்ணரோலா

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் பாவங்களை முற்றிலும் கழுவி,
உம் பிள்ளையாக பரிசுத்தப்படுத்தும்.

தியானத்திற்கு : யோசுவா.9, ஏசா.13, 1தீமோ.4-5.

இன்று...

மண்ணில் : 14.09.1452
விண்ணில் : 1498
ஊர் : பராரா
நாடு : இத்தாலி
தரிசன பூமி : இத்தாலி

ஹாட்விக் இன்க்வேர் நோம்மென்சன் 1918

ஜெபிக்க :

உயிர் தரும் வாழ்வு

1870 - 1960

அது ஓர் நள்ளிரவு. யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு கதவைத் திறந்தார் ஐடா ஸ்கடர். ஓர் பிராமண மனிதன் தன் மனைவியின் பிரசவ வேதனையை காணச் சகியாதவனாக ஐடா ஸ்கடரின் உதவியை நாடி நின்றான்.

ஐடா ஸ்கடருக்கோ மருத்துவம் பற்றி அப்பொழுது ஏதும் தெரியாது. அவள் தனது தந்தையை அழைத்து உதவும்படி வேண்டினாள். ஆனால் ஒரு ஆண் மகனின் உதவியை விரும்பாதவனாய் வேதனையோடு திரும்பிச் சென்றான்.

மீண்டும் இருவர் அதே உதவிக்காக வந்தனர். ஐடாவின் பதிலால் அழுது கொண்டே திரும்பினர்.

இரவு மறைந்தது. பகல் மலர்ந்தது. மேள தாளச் சத்தம் காதில் விழ எட்டிப் பார்த்தார் ஐடா ஸ்கடர். மூன்று பிணங்கள் வரிசையாக கொண்டு செல்லப்பட்டன. தான் உதவி செய்ய முடியாத நிலையில் அப்பெண்களின் உயிர் மாய்ந்ததை எண்ணி உள்ளம் உடைந்தார் ஐடா ஸ்கடர். அன்றே ஓர் தீர்மானம். "இந்திய மக்களின் நலனுக்காக நான் ஒரு மருத்துவராகுவேன்" என்று உறுதி கொண்டார். தன் மிஷனெரி பெற்றோர்களை விட்டு அமெரிக்கா சென்றார்.

1900ஆம் வருடம் ஜனவரி 1. டாக்டர் ஐடா ஸ்கடரின் வருகையை இந்தியா ஆவலோடு எதிர் நோக்கியது. இந்தியரின் இதயக் கவலைகளை நீக்கி இயேசுவின் இரட்சிப்பை இலவசமாகக் கொடுக்க வந்தார் டாக்டர் ஐடா ஸ்கடர்.

கிராமப்புற சுகாதார மையங்களை ஏற்படுத்தி, மக்களின் வாழ்வை தூய்மையாக்கியதோடு கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு கொடுத்தார். இவரால் தாதியர் பயிற்சி பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டு அநேக பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் அநேக மருத்துவர்கள் உருவாக்கப்பட்டார்கள்.

இன்று புகழ்பெற்று விளங்கும் வேலூர் C.M.C மருத்துவமனையைக் கட்டி ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றினார். மருத்துவக் கல்லூரி மூலம் அநேக மருத்துவர்களை உருவாக்கினார். அவர் பணியை அளவிட முடியுமா?

அன்பரே! ஐடா ஸ்கடரைப் போன்று பிறர் வாழ்வு மலர உங்களை அர்ப்பணிப்பீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆண்டவரே! இந்தியாவிலே நான் இருந்திட வேண்டுமென நீர் விரும்பினால், என்வாழ்நாளெல்லாம் இந்த மகளிருக்கு உதவி செய்திட முயற்சிப்பேன். – ஐடாஸ்கடர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஐடா ஸ்கடரைப் போன்று சேவை நிறைந்த மனதை எனக்குத் தாரும்

தியானத்திற்கு : யோசுவா.10, ஏசா.14, 1தீமோ.6.

இன்று...

மண்ணில் : 09.12.1870
விண்ணில் : 24.05.1960
ஊர் :
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : இந்தியா

ஐடா ஸ்கடர் நினைவு தினம்

ஜான் ஜி. பேட்டன் 1824
மேரி மொஃபிட் 1795

Scanned with CamScanner

1862 - 1935

புகழ் அனைத்தும் இயேசுவுக்கே

பேஸ்பால் என்பது ஒருவகை விளையாட்டு. இது இங்கிலாந்தின் தேசிய விளையாட்டு ஆகும். கிரிக்கெட் எவ்வளவு பிரபலமடைந்துள்ளதோ, அதுபோலவே பேஸ்பால் விளையாட்டும் பிரபலமானது.

பில்லி சண்டே ஒரு விளையாட்டுப் பிரியர். 1800ம் ஆண்டுகளுக்குப் பிறகு பேஸ்பால் விளையாட்டு பிரபலமடைந்தபோதிலும் திறமைமிக்க முன்னணி வீரராக விளங்கினார் பில்லி. இவர் புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது.

ஒருநாள் தற்செயலாக ஒரு சுவிசேஷக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார் பில்லி. சுவிசேஷகர் கர்னல் கிளார்க் என்பவர் ஆவியின் அபிஷேகத்துடன் இறை செய்தியைப் பகிர்ந்து கொண்டார். பில்லியின் உள்ளத்தில் ஆண்டவர் கிரியை செய்ய ஆரம்பித்தார். அன்றே தன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார். பில்லியின் வாழ்வு மாற்றம் பெற்றது.

அறிவர் சாப்மென் என்பவருடன் ஊழியத்தில் இணைந்தார். சொற்ப வருமானம் மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது. அன்றாடம் திண்டாட வேண்டிய அவல நிலை. அச்சமயம் பேஸ்பால் கிளப்புகள் பல அவரை அழைத்தன. அதிக சம்பளம் தருவதாக ஆசை வார்த்தை கூறினர். பில்லியோ ஊழியத்தில் முன்வைத்த காலைப் பின்வைக்கவில்லை.

பில்லியின் உத்தம குணத்தை ஆண்டவர் அங்கீகரித்து அவரைப் பயன்படுத்த ஆரம்பித்தார். விரைவிலேயே அமெரிக்க தேசத்தின் பிரபலமான ஒரு பிரசங்கியாராக மாறினார். இவரின் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் பல பாகங்களிலிருந்தும் திரண்டு வந்தனர்.

அந்நாட்களில் அமெரிக்காவில் மதுக்கடைகள் எங்கு பார்த்தாலும் நிரம்பியிருந்தன. குடிவெறியினால் பல குடும்பங்கள் சீரழிந்தன. இந்நிலையை மிகுந்த வன்மையாகக் கண்டித்தார் பில்லி. இதனால் மதுபான தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டு மக்கள் புதுவாழ்வு வாழத் தொடங்கினர். ஆசரிப்புக்கூடாரம் என்ற பெயரில் பல திருச்சபைகளைக் கட்டிய பில்லி, மக்களின் ஆத்மீக வாழ்வை வளப்படுத்தினார் என்றால் மிகையாகாது.

அன்பரே! உங்கள் புகழ் அனைத்தையும் இயேசுவின் பணிக்கு செலவிட முடியுமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மனிதன் வெற்றியை விரும்புகிறான்
ஆனால் தேவன் நம்மிடம் உண்மையை எதிர்பார்க்கிறார்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் வெற்றிகள் அனைத்தையும்,
உம் பாதம் அர்ப்பணித்து உந்தன் சேவை செய்திடுவேன்.

தியானத்திற்கு : யோசுவா.11, ஏசா.15, 2 தீமோ.1.

இன்று...

மண்ணில் : 19.11.1862
விண்ணில் : 06.11.1935
ஊர் :
நாடு : **இங்கிலாந்து**
தரிசன பூமி : **அமெரிக்கா**

ஜான் ஆர் மாட் 1865

பிலிப்பு நேரியார் 1595

சின்செண்டார்ப் பிரபு

1700 - 1760

வார்த்தைக்குச் செவிகொடுங்கள்

"உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?".

இவ்வாக்கியத்தை நீங்கள் அடிக்கடி பார்த்திருக்கவும், கேட்டிருக்கவும் கூடும். ஆனால், இது ஒரு மிஷனெரி சங்கத்தை ஏற்படுத்தி அநேக மிஷனெரிகளை உருவாக்கி அனுப்பியதை குறித்து உங்களுக்குத் தெரியுமா?

மொரோவியன் சகோதர ஐக்கிய கூட்டத்தார். இது ஒரு மிஷனெரி ஸ்தாபனம். பலவிதமான துன்பங்களும், பாடுகளும் நிறைந்த, மிகவும் கடினமான, தேசங்களுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருபவர்கள் இவர்கள்.

இம்மிஷனெரி ஸ்தாபனத்தை ஆரம்பித்தவர் ஓர் பெரிய பிரபு. இளமையில் தெய்வ அன்பு இல்லாதவராக வளர்ந்து வந்தார். ஆனால் ஒரு நாள் தன் ஊரிலிருக்கும், ஓவியக் கண்காட்சிக்கு சென்றார். அங்கே பற்பல படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. திடீரென்று ஒரு படம், இவரின் கண்ணில் பட்டது. அதிகமாக இவர் இதயத்தை அப்படம் ஊடுருவி பாய்ந்தது. அது சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவப்படம். அப்படத்தின் கீழ் இந்த வாசகம். "இவையெல்லாவற்றையும் உனக்காக சகித்தேன். நீ எனக்காக என்ன செய்திருக்கிறாய்?"

இதைப் பார்க்கப் பார்க்க, அப்பிரபுவின் உள்ளம் உருகியது. இதயம் இளகியது. கண்களில் கண்ணீர் வழிந்தது. சிந்தனையில் சிறப்பான திட்டம் மலர்ந்தது. தன்னை இயேசுவுக்கு கையளித்தார் அவர்.

சின்செண்டார்ப் பிரபு என்பவரே அவர். தன் சொத்துக்கள் அனைத்தையும், ஊழியப் பணிக்காக செலவிட்டார். மொரோவிய மிஷனெரி சங்கம் உருவானது. பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் சென்று தனக்கு புதுவாழ்வு தந்த கிறிஸ்துவை மக்களுக்கு அறிவித்தார்.

மொரேவிய சங்கத்தால் பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்ட இவர், 1741ஆம் ஆண்டு, அமெரிக்காவுக்கு சென்று அங்கு பெரும் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமானார்.

அன்பரே! இயேசுவின் வார்த்தைகள் உங்களை எதைச் செய்ய தூண்டியிருக்கிறது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! சின்செண்டார்ப் பிரபுவைப் போன்று என்னை உம் பணி செய்ய அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : யோசுவா.12, ஏசா.16, 2 தீமோ.2.

இன்று...

மண்ணில் : 26.05.1700

விண்ணில் : 09.05.1760

ஊர் : டிரஸ்டன்

நாடு : ஜெர்மனி

தரிசன பூமி : அமெரிக்கா

சின்செண்டார்ப் பிறந்த தினம்

ஜெபிக்க :

நீங்களே சமாதான தூதுவர்கள்



1844 - 1900

ராவ் சாஹிப். இது ஓர் கௌரவப் பட்டம். பொது நலத்தொண்டை பாராட்டி அரசு வழங்கும் பட்டம். 1899ம் ஆண்டு சாமுவேல் பவுல் ஐயருக்கு வழங்கப்பட்டது.

அப்படி என்னச் செய்தார்? சிவகாசி. அங்கே இனக்கலவரம், பிரச்சனைகள் தலைவிரித்தாடியது. தலைவர்கள் தலைகீழாய் நின்றனர். தலைநிமிரச் செய்தார் பவுல் ஐயர். கைகள் கோர்க்கப்பட்டன. சமரசம் ஆனது. சமாதானம் வந்தது.

சாமுவேல் பவுல் ஐயர், சர்ஜெண்ட் ஐயரிடம் வேத சாஸ்திரங்கள் கற்றவர், குரு அபிஷேகம் பெற்று உதகையில் ஒன்பது ஆண்டுகள் பணி செய்தார். மத வேறுபாடின்றி அனைவரையும் அழைத்து ஒன்றாக உட்கார வைத்து கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார்.

சந்தைகளிலும் சத்தியத்தை சாதாரண மொழி நடையில் கூறினார். சிறைக் கைதிகளைச் சந்தித்து அவர்களுக்கு நல்லொழுக்கங்களைக் கற்பித்தார். மாதம் ஒருமுறை கதாகாலட்சேபமும் நடத்தினார்.

சென்னையில் நான்கு வருடங்கள் பணி செய்தபின் சிவகாசி அருகேயுள்ள சாட்சியாபுரத்தில் தலைமைக் குருவாகப் பணியாற்றினார். நல்ல இசைக் கருவிகளுடன் கூடிய பாடகர் வரிசையை ஏற்படுத்தி, சபையிலே பெரும் எழுப்புதலை உண்டுபண்ணினார். இப்பொழுது சபைகளில் கொண்டாடப்படும் தவச உற்சவ பண்டிகையை முதன் முதலில் ஆரம்பித்தவர் இவரே.

1890ம் ஆண்டு நற்போதக பத்திரிக்கைக்கு ஆசிரியராகவும், பேராயரின் உதவி குருவாகவும் பணியாற்றியவர். 42 நூல்கள் எழுதிய பெருமைக்குரியவர். 'ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்' என்ற அவரது நூல் ஆத்துமாவை அசையச் செய்வதாகும். 'ஜான் பன்யனின் மோட்ச பிரயாணம்' என்ற நாவலை தமிழில் தந்த சிறப்புக்குரிய இவர், மார்ச் 11, 1900ஆம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்பரே! இவ்வுலக வாழ்வில் உமது பொறுப்பை அறிந்து கொண்டீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மிஷனெரிகளை அனுப்பாத சபை செத்த சபை
நற்செய்திப் பணியில் உற்சாகமற்ற சபை உறைந்து போகும்
- ஆஸ்வால்டு ஸ்மித்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நற்செய்திப் பணி செய்ய,
என்னை உயிருள்ளவனாக மாற்றும்.

தியானத்திற்கு : யோசுவா.13, ஏசா.17-18, 2 தீமோ.3-4.

இன்று...

மண்ணில் : 15.06.1844
விண்ணில் : 11.03.1900
ஊர் : மெஞ்ஞானபுரம்
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

ஜான் ஆண்டர்சன் 1805

ஜான் கால்வின் 1564
மார்கரெட் போல் 1541

ஜெபிக்க :

புனித பெனடிக்ட்

480 - 543

சுறுசுறுப்பு தேவை

"உங்களுக்குள் சிலர் எவ்வேலையும் செய்யாமல் இங்கும் அங்கும் சோம்பித் திரிந்துப் பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப்படுகிறோம். இத்தகையோர் தங்கள் உணவுக்காக உழைக்க வேண்டும் என்று கட்டளையிட்டு அறிவுறுத்துகிறோம்". இது பவுலின் கூற்று. இக்கூற்றின் படியே, மக்களுக்குள் சிறந்த முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார் புனித பெனடிக்ட்.

வயது 20. சுபியாகோ மலைக்குச் சென்று, தியானத்தில் ஈடுபட்டு இறைவனைத் தேடினார். 3 வருடங்கள் தனிமையில் வாழ்ந்த இவருடைய ஒழுக்கமான வாழ்வைக் கண்ட பலரும், தங்களை இவருடன் இணைத்துக் கொண்டனர்.

புனித பெனடிக்ட் தனிமையை நாடினாலும், அடிக்கடி மக்களைச் சந்திக்கும் பழக்கத்திலும் இருந்தார். நோயாளிகளைக் குணமாக்கினார். வறுமையில் உழன்றவர்களுக்குப் பொருளுதவி செய்தார். ஏழைகளுக்கு உணவு வழங்கினார். பிறரது உள்ளங்களைத் திறந்த புத்தகமாகப் பார்க்கும் அற்புத ஆற்றலை இறைவனிடமிருந்து பெற்றிருந்தார். ஐரோப்பாவின் தந்தை என்று பட்டம் சூட்டப்பட்ட இவர், பெனடிக்ட் துறவற சபையை ஆரம்பித்தார்.

1964ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இவரது துறவற சபையில் 12,000 துறவிகளும், 13,000 சிஸ்டேர்சியன் துறவிகளும் காணப்பட்டனர். இவர் காலத்தில் அடிமைகள் மட்டுமே வேலை செய்ய வேண்டும் என்ற ஒழுக்கமற்றச் செயலை முற்றிலும் அழித்தார். ஜெபமும், உழைப்பும் என்பதே இவருடைய கொள்கையும், கோட்பாடுமாகக் காணப்பட்டது.

"திருவழிபாட்டு முறையில் இயேசுகிறிஸ்துவே தமது குருத்துவப் பணியை நிறைவேற்றுகிறார். நாம் அனைவரும் அதில் உறுப்பினர்கள். எனவே ஒவ்வொரு திருவழிபாட்டு நிகழ்ச்சியும், மற்றெல்லா நிகழ்ச்சிகளையும் விட மேலானது" என்று வலியுறுத்திய இவர், சரியான ஆராதனை முறைக்கு அடித்தளமிட்டார். இவரின் சபை துறவிகள், கிறிஸ்துவிடம் மாறாத எவராலும் பிரிக்க முடியாத ஆழமான நட்பை கொண்டிருந்தனர். மேலும், ஞானத்துடன் நடந்து கொண்டு, அனுதினமும் உழைத்துத் தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தனர்.

அன்பரே! அனுதினமும் இவ்வுலகில் நமது உழைப்பு எப்படி உள்ளது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : அண்ட சராசரங்களைப் படைத்த
இறைவனைப் பார்க்கும் அருள் பெற்ற ஆன்மாவுக்கு
மற்றெல்லா படைப்புகளும் ஒரு துரும்பே – பெனடிக்ட்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! அனுதினமும் உமக்காக உழைக்கவும்,
அதிலே நான் பிழைக்கவும் எனக்கு கற்றுத் தாரும்.

தியானத்திற்கு : யோசுவா.14, ஏசா.19, தீத்து.1-3

இன்று...

பிறப்பு	: 480
இறப்பு	: 543
ஊர்	:
நாடு	: இத்தாலி
தரிசன பூமி :	கசினோ

ராபர்ட் லாஸ் 1851

ஜெபிக்க :



1903 - 1972

துன்பத்தில் இன்பம்

கம்யூனிச நாடான சீனா கிறிஸ்தவர்களை துன்புறுத்திய காலம். 1949ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுவுடமைப் புரட்சியால் ஆயிரக்கணக்கான விசுவாசிகள் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையோர் சிறையில் அடைக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டனர்.

"சீன நாட்டின் கிறிஸ்தவ தந்தை" வாட்ச்மேன் நீ என்பவரும் இதற்குத் தப்பவில்லை. சிறையில் அடைக்கப்பட்டார். சித்ரவதைகள் அவர் உடலைக் காயப்படுத்தின. சீன அரசாங்கம் அவர் அறிவுத்திறனைப் பயன்படுத்தி அறிவியல் சம்பந்தமான ஆங்கிலப் புத்தகங்களைச் சீன மொழியில் மொழி பெயர்த்ததே தவிர அவரை விடுதலை செய்ய முன்வரவில்லை.

வாட்ச்மேன் நீ சிறையிலிருக்கும்போதே அவர் மனைவி மரித்துவிட்டச் செய்தி அவரை பெரும் துயரத்திற்குள் ஆழ்த்தியது. 1972ஆம் ஆண்டு இதே நாள் மே, 30ல் வாச்மேன் நீயும் தனது ஆண்டவர் பாதம் தனது உயிரைக் கொடுத்தார். சிறையே அவரின் மரணவீடாய் மாறினது.

வாச்மேன் நீ ஓர் சிறந்த விசுவாச வீரர். கல்லூரி வாழ்வின் போதே தான் கண்டு கொண்ட இரட்சகரை அனைவருக்கும் அறிவிக்கலானார். "எழுப்புதல்" என்ற பத்திரிக்கையை வெளியிட்டு அநேகரை கிறிஸ்துவுக்குள் எழும்பச் செய்தார்.

எழுப்புதல் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்த வாச்மேன் நீ, சபைகளை நிறுவும் பணிகளை ஆண்டவர் தனக்குத் தருவதை உணர்ந்தார். 1949க்குள் 400க்கும் மேற்பட்ட சபைகள் எழுப்பப்பட்டது. ஒவ்வொரு சபையிலும் "மேற்கொள்வோர் ஐக்கியம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி சபைகளை உயிருள்ள சாட்சியாக நிலைக்கச் செய்தார்.

அனுதினமும் தனது தேவைகளுக்காக ஆண்டவரையே சார்ந்திருந்து ஆண்டவரின் மகிமைக்காக இதே நாளில் வாழ்ந்து மடிந்த வாச்மேன் நீ நமக்கு ஓர் முன்மாதிரியன்றோ!

அன்பரே! எதிர்ப்புகளின் மத்தியிலும் இடைவிடாமல் அன்பரின் பணி செய்ய ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எனக்கு இரண்டு தலைகள் இருந்தால் கிறிஸ்துவுக்காக அவை இரண்டுமே வெட்டப்பட வேண்டுமானாலும் நான் விட்டுவிடுவேன். - ஹென்றி வாஸ்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! எதிர்ப்பிலே நீர் எனக்கு தைரியத்தையும், மன அமைதியையும் தருவதற்காக உமக்கு நன்றி!

தியானத்திற்கு : யோசுவா.15, ஏசா.20-21, பிலோ.1.

இன்று...

மண்ணில் : 04.11.1903
விண்ணில் : 30.05.1972
ஊர் : பூசௌ
நாடு : சீனா
தரிசன பூமி : சீனா

ஜான் ஹார்ப்பர் 1872

ஜெபிக்க : திரு. ஜேஸ்பர் குடும்பம், சென்னை.

Scanned with CamScanner

சாமுவேல் பாக்கிய நாதன்

கிறிஸ்துவை நம்புங்கள்

ஆந்திரா மாநிலம். தோர்ணக்கல் என்ற பகுதி. சரியான பாதைகள் இல்லாதிருந்தது. சிறுத்தையும், புலியும் நடமாடிய காட்டுப் பகுதிகளாகக் காணப்பட்டது. கோடைக் காலங்களில் பகலில் பயணம் செய்வது மிகக் கடினம். ஏனெனில் அது வெப்பம் மிகுந்த பகுதி. இரவில் பயணம் செய்தாலோ திருடர்கள் கைவரிசை அட்டகாசமாகக் காணப்படும்.

அப்பகுதியில் சுவிசேஷம் அறிவிப்பதற்கு யார் முன் வரக்கூடும்? 1903ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்திய மிஷனெரிச் சங்கம் அக்கேள்விகளை மக்கள் முன் வைத்தது. குடும்ப சூழ்நிலைகளால் பலர் முன்வரத் தயங்கியபோது மருதகுளம் பாக்கியநாதன் தன்னை மிஷனெரியாக அர்ப்பணித்தார். இவரே, அச்சங்கத்தின் முதல் மிஷனெரி என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தோர்ணக்கல் சென்று பணியாற்றிய மூன்று ஆண்டுகளில் 23 பெரியவர்களும், 33 குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றனர். உவைட்ஹெட் பேராயர் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். 300க்கும் அதிகமானவர்கள் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக இருந்தனர்.

திருச்சபையை உண்மையிலும், உத்தமத்திலும் வழி நடத்தினார். தமது திருச்சபையைப் பற்றி இவர் கூறும்போது, "இது பலமான திருச்சபை. ஏனென்றால் கிறிஸ்தவர்களாக மாறுகிறவர்களுக்கு உலகப் பிரகாரமான நன்மையை வழங்கும் சக்தி எங்களுக்கு இல்லை. கடனாகக் கொடுக்கும் வசதியும் இல்லை. மேல் நாட்டு மிஷனெரிகளைப் போன்று நாங்கள் உதவி செய்ய முடியாது. நாங்கள் செய்யக் கூடியது ஜெபம் தான். கிறிஸ்துவையே நம்பி வாழ அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறோம்." இவரின் வார்த்தைக்கேற்ப மக்கள் விசுவாசத்தில் பெலப்பட்டுத் தங்கள் ஏற்றத் தாழ்வுகளை மறந்து கிறிஸ்துவில் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

பேராயர் V.S.அசரியாவால் தோர்ணக்கல் மிகவும் சிறப்புப் பெற்றது. அப்பணிக்கு அடித்தளமிட்டவர் சாமுவேல் பாக்கியநாதன் அவர்களே. இவர் விட்டுச் சென்ற பணியை அவருடைய குடும்பத்தினர் செய்து ஆண்டவரை மகிமைப்படுத்தி வருகின்றனர்.

அன்பரே! கிறிஸ்துவை அறியாதவர்களிடம் துணிவுடன் நற்செய்தியைக் கூற ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இறை சித்தம் ஒன்றையே இதய ஏக்கமாக கொண்டுள்ள மனிதரே முழு சுதந்திரம் அடைந்தவர் ஆவார்.

– ஏ. டபிள்யு. டோசர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! அனுதினமும் உம் சித்தத்தை என் வாழ்வில் செயல்படுத்த என்னை ஒப்புக் கொடுக்கிறேன்.

தியானத்திற்கு : யோசுவா.16, ஏசா.22, எபிரே.1-2.

இன்று...

மண்ணில் :

விண்ணில் :

ஊர் :

நாடு : மருத குளம்

தரிசன பூமி : இந்தியா

எசூபியஸ் 339

ஜெரோம் ஆப் பிராகே 1416

வாட்ச்மென் நீ 1972

1412 - 1431

ஆற்றல் தரும் ஆண்டவர்

1431ம் ஆண்டு. இதே நாள் மே 31. பத்தொன்பது வயது இளம் பெண். மரத்தில் கட்டப்பட்டவளாய் தீயில் உயிருடன் கொளுத்தப்பட்டாள். கொடுங்கோலர்கள் வேடிக்கை பார்க்க, அத்தீயின் நடுவே அவள் உதடுகள் இயேசுவே... இயேசுவே என்று முணுமுணுக்க உடல் எரிந்தது. உயிர் பிரிந்தது.

16 வயதில் ஆண்டவரிடமிருந்து இறைச் செய்தியை பெற ஆரம்பித்தாள் ஜோன் ஆப் ஆர்க். அசரீரியான தொனிகளைக் கேட்டு மக்களிடம் கூறுவது அவள் வழக்கம்.

அன்று "உடனே போய், பிரான்ஸ் நாட்டு மன்னருக்கு உதவி செய். அவர் தம் நாட்டை திரும்பப் பெறத் துணை புரிவாயாக"! கட்டளை வந்ததும் வீரமுடன் எழும்பினாள் ஜோன். தன் தலை முடியைக் கத்தரித்தாள். போர் வீரர் போன்று உடையணிந்தாள். மன்னரைச் சந்தித்து நடந்ததை விளக்கினாள்.

திருச்சபைத் தலைவர்கள் கூட்டம் ஜோனைப் பரிகாசம் செய்தது. இப்பெண்ணால் என்ன செய்ய முடியும்? என்று ஏளனம் செய்தனர். மன்னர் யோசித்தார். சிறு படை ஒன்றைக் கொடுத்தார். அதன் உதவியால் ஆர்லியன்ஸ் என்ற நகரைக் கைப்பற்றினாள்.

நான்கு வெற்றிகளைக் குவித்தாள் ஜோன். மதவாதிகள் ஜோனை சந்தேகித்தனர். கடவுள் தங்களிடம் பேசாது சிறு பெண்ணிடம் பேசியதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் புரட்டுக்காரி என்று தீர்ப்பிட்டனர். திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டாள்.

தனக்கு எதிராகக் கூறப்பட்ட அத்தனை அவதூறுக்கும் சரியான பதிலை ஆணித்தரமாகக் கூறினாள். இது மதவாதிகளை நடுங்கச் செய்தது. எனினும் ஜோனுக்கு மதவாதிகள் மரண தண்டனை விதித்தனர்.

ஜோன் தன் வாழ்வைப் பரிபூரணப்படுத்தினாள். கடவுள் தனக்கு இட்ட பணியை நிறைவேற்றி முடித்தாள். புனிதர் என்ற பட்டமும் பெற்றாள்.

அன்பரே, கடவுள் உங்களுக்குக் கொடுக்கும் பணியை அடையாளம் கண்டு கொண்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : எனக்காக கிறிஸ்து மரித்திருப்பாரானால், அவருக்காக நான் செய்யும் தியாகம் எதுவுமே பெரியதல்ல. - சி.டி. ஸ்டட்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம் பணியினிமித்தம் வரும் இடர்பாடுகளை தகர்த்தெறிந்து உம் பணியை என்றும் செய்வேன்.

தியானத்திற்கு : யோசுவா.17, ஏசா.23, எபிரே.3-5.

இன்று...

மண்ணில் : 06.04.1412
விண்ணில் : 31.05.1431
ஊர் : தொமரெமி
நாடு : பிரான்ஸ்
தரிசன பூமி : பிரான்ஸ்

ஜோன் ஆப் ஆர்க் நினைவு தினம்

புகையிலை எதிர்ப்பு தினம்

தாமஸ் சால்மர்ஸ் 1847

Scanned with CamScanner

பில்லி பிரே

மகிழ்ச்சி புறப்பட்டும்

1794 - 1868

ஒருமுறை ஹமிக்ஸ் என்ற இடத்தில் இருந்த ஒரு தேவாலயத்தில் போதகர் ஒருவர் செய்தியளித்துக் கொண்டிருந்தார், அவர் ஜனங்களைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டார். யாராவது எழுந்து நின்று, தேவன் என் சகல பாவங்களையும் மன்னித்து என்னைச் சுத்திகரித்துவிட்டார் என்று கூறமுடியுமா?

இச்செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்த பில்லி, இதயத்தில் மிகவும் குத்தப்பட்டார். நான் பரிபூரணமாகச் சுத்திகரிக்கப்பட்டேன் என்று என்னால் கூறமுடியாதா? தன்னுள்ளே கேள்விக் கணைகளைத் தொடுத்தார். பின்னர் மிகவும் தீர்க்கமான குரலில் போதகரைப் பார்த்து நான் பரிபூரணமாகச் சுத்திகரிக்கப்பட்டேன் என்று கூறினார். இப்பதிலைக் கூறியபின் சொல்லி முடியாத சந்தோஷத்தினால் அவர் நிறைந்து தேவனை துதித்துக் கொண்டே தன் வீட்டிற்குச் சென்றார்.

அன்றுமுதல் ஒவ்வொரு நொடியும் ஆண்டவருக்குள் பரிசுத்தமாக வாழ ஆரம்பித்தார். மக்களால் பிரசங்கி என்று அழைக்கப்பட்டார். எப்பொழுதும் சந்தோஷத்தினால் நிரம்பி நடனமாடும் வழக்கமுடையவர். தன்னுடைய சந்தோஷமான நடனத்திற்கான காரணங்களையும் தன் நண்பர்களிடம் கூறினார். நான் துக்கப்பட முடியாத அளவிற்கு தேவன் என்னை சந்தோஷப்படுத்திவிட்டார். "எவ்விதச் சந்தேகமுமில்லாமல் நான் குதித்து ஆடிப்பாடுகிறேன். என் பாதங்களை யாரும் கீழே பிடித்து வைக்க முடியாது. அப்படி யாராவது என் பாதங்களை வெட்டிவிட்டாலும் அவை மீண்டுமாக வளர்ந்து விடும்". உண்மையிலேயே தான் பெற்ற சந்தோஷத்தை செயலில் காட்டியவர் இவர்.

ஆடம்பரமான வாழ்வு வாழாமல் மிகவும் எளிய வாழ்வையே மேற்கொண்டார். தன்னைக் காணவரும் அனைவரையும் சிரிக்கவைத்து அனுப்புவது இவருக்கு கை வந்த கலை.

பில்லி, வியாதிபட்டிருந்தபோது மரித்துவிடுவார் என்று மருத்துவர் கூறிவிட்டார். பில்லி அவரிடம் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். நான் சீக்கிரம் பரலோகத்திலிருப்பேன். அங்கு உங்களைப் பற்றி கூறுவேன். நீங்களும் அங்கு வந்து சேருங்கள் என்று நகைச்சுவையுடன் கூறிய இவர் அநேகரைக் கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்தினார்.

அன்பரே! உம்மால் பிறர் மகிழ்ச்சியைப் பெறுகின்றார்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இறக்கும் வரை நமக்கு இன்பம் ஆத்தும ஆதாயமே.
- சின்சென்டார்ப்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் பிழைத்திருக்கும்போதும் இறக்கும்போதும் உம்மிலே என்றும் மகிழ்ந்திருப்பேன்.

தியானத்திற்கு : யோசுவா.18, ஏசா.24, எபிரே.6-7.

இன்று...

மண்ணில் : 01.06.1794
விண்ணில் : 1868
ஊர் : கார்ன்வால்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இங்கிலாந்து

பில்லி பிரே பிறந்த தினம்

ஹெலன் கெலர் 1968
ஜஸ்டின் மார்ட்டையர் 165

ஜெபிக்க :

Scanned with CamScanner

1883 - 1954

ஏழைகள் மத்தியில் இறைவன்

இறை பணி என்பது வெறும் வேதாகமத்தைப் போதிப்பது மட்டுமல்ல. அது சமூகப்பணிகளையும் சார்ந்தது. சமூகத்தைப் பாராமல் கடவுளையே சார்ந்திருப்பது என்பது ஏமாற்றுத்தனம். கண் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமல் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூர முடியும்? வசனம் நம்மைத் தெளிவுப்படுத்துகின்றது.

ஸ்காட்லாந்தில் பிறந்த அலெக்சாண்டர் சில்வர் இந்தியாவின் மீது இருந்த அன்பினாலும் இறைவன் மீது இருந்த பற்றினாலும் ஏழை மக்களைத் தேடி இந்தியா வந்தார்.

உயர் ஜாதி மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதன் மூலம் தாழ்ந்த ஜாதி மக்களையும் மாற்றி விடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த ஸ்காட்லாந்து மிஷனெரிகள் மத்தியில் அலெக்ஸாண்டர் வித்தியாசமாகச் செயல்பட்டார். ஏழை, எளிய மக்களுடன் ஒரு சாதாரண மனிதனாக இணைந்து வாழ ஆரம்பித்தார்.

அரக்கோணம் என்ற பகுதியில் வாழ்ந்த மக்கள் அறியாமையிலும், வறுமையிலும் மிகவும் இழிவான நிலையில் வாழ்ந்தனர். தீண்டாமைக் கொடுமையில் சிக்கித் தவித்தனர். அடிமை வாழ்வு மலிந்து கிடந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிராம மக்களுக்குக் கல்வி தந்து அவர்களின் வழிகாட்டியாக விளங்கினார் அலெக்ஸாண்டர்.

அனைத்து சமயத்தவரையும் பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு வேதாகமத்தையும், பாடங்களையும் சொல்லிக் கொடுத்தார். பல பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தனித்தனியே விடுதிகளைக் கட்டி அனைவரும் சமமுடன் தங்கிப் படிக்க வழி செய்தார்.

குதிரை மீதே சவாரி செய்து நற்செய்தி பரப்புவதில் சோர்ந்திடாமல் உழைத்த அலெக்ஸாண்டர் பிறந்தது இன்றுதான் என்பது மகிழ்ச்சியையும், புது முயற்சிகளையும் தருகின்றது.

அன்பரே! சமூகப் பணிகளில் உங்களின் ஈடுபாடு என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஜீவியம் ஒன்றே ஒன்றுதான். அது விரைவில் கழிந்துவிடும்.
நாம் கிறிஸ்துவுக்காக என்ன செய்தோமோ
அது மட்டுமே நிலை நிற்கும்.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் ஜீவிய காலமெல்லாம்
உம் நாம மகிமைக்காக உயர்ந்த பணிகளை செய்வேன்.

தியானத்திற்கு : யோசுவா.19, ஏசா.25, எபிரே.8-9.

இன்று...

மண்ணில் : 02.06.1883
விண்ணில் : 11.04.1954
ஊர் : பெர்த்சயர்
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : இந்தியா

அலெக்ஸாண்டர் சில்வர் பிறந்த தினம்

ஜெபிக்க :

உண்மையான அர்ப்பணிப்பு



1832 - 1905

சீன உள்நாட்டு மிஷன், ஹட்சன் டெய்லரின் தரிசனத்தால் உருவான மிஷனெரி ஸ்தாபனம். இளம் மிஷனெரிகளிடம் பேசுவதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார் ஹட்சன். சீனாவில் சிங்கியாங் மிஷன் வீட்டில் இக்கூட்டம் நடைபெற்றது.

அம்மிஷன் வீட்டின் அருகில் ஒரு கல்லறைத் தோட்டம், ஹட்சன் டெய்லர் பழைய நினைவுகளில் ஆழ்ந்தார். தனது அன்புக்குரிய மனைவியுடன் 4 குழந்தைகளும் அருகருகே புதைக்கப்பட்டிருந்தனர். ஒரு காலத்தில் மிகவும் துக்கமாக இருந்த சம்பவம் இப்பொழுது அவருக்கு இனிமையாயிருந்தது.

நீண்ட காலத்தை (உலகில்) மிஷனெரிப் பணியில் செலவு செய்துவிட்ட தானும் விரைவில் அவர்களோடு சேரப்போகும் எண்ணம் அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஹட்சன் அங்கிருந்த இளம் மிஷனெரிகளிடம் பேச ஆரம்பித்தார்.

"உங்களை இங்கு சந்திக்கும் பெரிய சிலாக்கியம் கிடைத்தது; என் மனைவி இங்கேயே மரித்தாள். நான் விரும்பியவர்கள் இங்கே சமீபத்திலிருக்கிறார்கள்; கடவுளும் அருகிலிருக்கிறார். கர்த்தராகிய இயேசு ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை. அவரில் சுகித்திருங்கள், என்னருமை நண்பர்களே! அவருக்கும் அவர் வார்த்தைக்கும் உண்மையாயிருங்கள். அவர் ஒருபோதும் உங்களை ஏமாற்றமாட்டார். நீங்கள் அடிக்கடி சோர்ந்து போகலாம்; அடிக்கடி தனிமையில் வாடலாம்;அப்போதெல்லாம் அவரை நோக்கிப் பாருங்கள்."

39 வருடங்கள் சீன மக்களுக்காகவே உழைத்து நூற்றுக்கணக்கான மிஷனெரிகளை தெரிந்தெடுத்து சீனா முழுவதும் சுவிசேஷப் பணியைச் செய்தவரே ஹட்சன். கோடிக்கணக்கான மக்களைக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்தார். 'சீனாவின் தந்தை' என்று அழைக்கப்பட்டார்.

அன்பரே, இழப்பிலும் ஆசீர்வாதம் உண்டு என்பதை அனுபவித்திருக்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆ! எனக்கு நூறு வாழ்க்கையிருந்தால் அவை அத்தனையும் சீனாவுக்காகவே வாழ்ந்திருப்பேன் – ஹட்சன் டெய்லர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஹட்சன் டெய்லரைப் போன்ற தியாகமுள்ள வாழ்வை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : யோசுவா.20-21, ஏசா.26-27, எபிரே.10.

இன்று...

மண்ணில் : 21.05.1832

விண்ணில் : 03.06.1905

ஊர் : யார்க்ஷையர்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : சீனா

ஹட்சன் டெய்லர் நினைவு தினம்

ஜோசப் முகாசா 1860

மாற்கு டேனியல் பாண்டேன் 1989

பிரான்சிஸ் ஹாவர்கேள் 1879

ஜெபிக்க : Finny Praisy G.D/o. Edwin Samuel

ஜே. பி. ராட்லர்



1749 - 1836

ஏறெடுத்துப் பாருங்கள்

யுத்தங்கள். எங்கு பார்த்தாலும் கவலையும், கண்ணீரும் நிறைந்திருந்தது. வாழ்வையே வெறுத்து மக்கள் ஏனோதானோவென்று நடமாடிக் கொண்டிருந்தனர். பஞ்சத்தினால் பசியும், பட்டினியுமாய் பரிதாபமாகக் காட்சியளித்தனர். ஆற்றுவாரும் தேற்றுவாரும் இல்லாமல் வீதிகளில் அல்லல்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தியாவின் இந்நிலைமை வெளிநாட்டவருக்கு இரக்கத்தை ஏற்படுத்தியது. ஜெர்மனியில் பிறந்த ராட்லர் இந்தியாவின் வேதனையை நீக்கி நற்போதனையைத் தர இடம் பெயர்ந்தார். தரங்கம்பாடி என்ற இடத்திற்கு ராட்லர் 1776ஆம் ஆண்டு வந்து சேர்ந்தார். ஏற்கனவே அங்குப் பணிசெய்த மிஷனெரிகளுடன் இணைந்து ஊழியங்களை உற்சாகப்படுத்தினார்.

ராட்லர் சிறுபிள்ளைகளின் மேல் மிகவும் பிரியமுள்ளவர். எனவே மிஷனெரி ஜான் என்பவர் நிறுவிய பள்ளியை மிகவும் சிறந்த முறையில் வளர்ச்சி பெறச் செய்தார். செடி கொடிகளை வளர்த்து பள்ளிக்கூடங்களைச் சுற்றி அழகியத் தோட்டங்களை உண்டுபண்ணினார். அப்பள்ளியின் மூலம் சிறுவர்களின் அறிவுக் கண்கள் திறக்கப்பட்டன.

ஏழை எளியவர்க்கு வருமானம் பெற்றுத் தர நூல் காலுறைகளைத் தயாரிக்கும் கூடம் ஒன்றைக் கட்டி அதனைத் திறம்பட நடத்தினார். முதன்முதலாக இத்தொழிலை அறிமுகப்படுத்தியவர் ராட்லரே. இதனால் ஏழைகளின் வாழ்வு மலர்ந்தது.

தரங்கம்பாடி மட்டுமல்லாமல் சென்னையிலும் பல இடங்களில் குருவாகப் பணியாற்றினார். மக்களிடையேக் காணப்பட்ட உயர்வு தாழ்வுகளைக் கண்டித்தார். "ஜெப வாழ்வினால் சிக்கல்கள் தீரும்" என்பதைத் தன் வாழ்வில் கடைபிடித்த ராட்லர் ஜெப புத்தகம் ஒன்றையும் தமிழில் வெளியிட்டார்.

60 வருடங்கள். இந்தியாவில் மிஷனெரியாகப் பணியாற்றிய ராட்லர் தமது 87வது வயதில் இப்பூலோகப் பணியை முடித்து மேலோகம் சென்றார்.

அன்பரே, உங்கள் அர்ப்பணம் ஆயிரம்பேரை வாழவைக்கும் அல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நான் தொங்க வேண்டிய கயிற்றை
முத்தம் செய்ய ஆயத்தம். ஆனால் ஒருபோதும்
என் விசுவாசத்தை மறுதலிக்கமாட்டேன். - இக்பால்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் கண்களை ஏறெடுத்துப் பார்த்து
மக்களின் தேவைகளை நிறைவு செய்ய உதவியருளும்.

தியானத்திற்கு : யோசுவா.22, ஏசா.28, எபிரே.11.

இன்று...

மண்ணில் : 1749 விண்ணில் : 1836 ஊர் : ஸ்டிராஸ்பர்க் நாடு : ஜெர்மனி தரிசன பூமி : இந்தியா	தாக்குதலுக்கு பலியான உலக பச்சிளஞ்சிறார் தினம் தாமஸ் பர்னார்டோ 1845

ஜெபிக்க :

பானிபெஸ்

680 - 755

இழப்பு அல்ல

இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து என்றார் திருச்சபைத் தந்தை தெர்த்தூலியன். ஆம்! இது எவ்வளவு பெரிய உண்மை. இன்றையத் திருச்சபைகள் இரத்த சாட்சிகளின் இரத்தத்தின் மேலேயே கட்டப்பட்டு வருகின்றது.

கிறிஸ்துவினிமித்தம் உயிரைக் கொடுப்பது என்பது இழப்பு அல்ல. அது ஆயிரக்கணக்கானோர் வாழ்வு பெறவே ஆகும். அப்படிப்பட்ட இரத்த சாட்சிகளின் வரிசையில் தன்னைத் தியாகமாக்கியவர் பானிபெஸ்.

பானிபெஸ் இயேசுவைப் பற்றி அறியாத மக்களிடையே தொண்டு செய்து அவர்களை கிறிஸ்துவண்டை நடத்துவதையே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். சிறு வயதிலேயே ஆசிரம வாழ்க்கை வாழ ஆரம்பித்த இவர், தமது 30வது வயதில் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். இவரின் பரந்த அறிவும், வேத வியாக்கியானமும், பரிசுத்த வாழ்வும் மடாதிபதி பதவியைத் தந்தது. ஆனால் இவர் அப்பதவியை விட்டு . பல இடங்களிலும் சுற்றித் திரிந்து ஆலயங்கள் கட்ட ஆரம்பித்தார். தனி நிறுவனமாக இவர் சேவை வளரத் தொடங்கியது.

பானிபெஸ் ஆலயங்களைக் கட்டியதோடு ஆசிரமத்தையும் நிறுவினார். ஏராளமான குருக்களைத் தாம் கட்டிய சபைகளில் நியமித்தார். தம்மை முழுவதுமாக வெறுத்து, ஓய்வின்றி உழைத்தார். ஆயிரக்கணக்காக மக்கள் இவரின் வாழ்க்கையினால் தொடப்பட்டு திருச்சபையில் இணைந்தனர். திருச்சபையின் அனைத்து வளர்ச்சிக்கும், ஜெபம் ஒன்றையே தனது ஆயுதமாகப் பயன்படுத்தி தனது குருமார்களையும் அவ்வழியே நடத்திய பானிபெஸ் மக்களின் நினைவில நீங்கா இடம் பெற்றவர்.

கி.பி.755. ஜீன் 5. ஒரு சிறிய கூடாரத்தில் தம் தொண்டர்களுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார் பானிபெஸ். எங்கிருந்தோ வந்த மூர்க்கக் கூட்டத்தினர் அரிவாளுடன் அக்கூடாரத்திற்குள் புகுந்தனர். தொண்டர்களின் தடைகளைத் தாண்டி பானிபெஸைத் தாக்கினர். கயவன் ஒருவனின் வாள் அவரது தலையைத் துண்டித்தது. இரத்தம் பெருக்கெடுத்து ஓட அவரது உடல் கீழே விழுந்தது. உயிர் விண்ணுலகம் சென்றது.

அன்பரே, உமது பணிகள் உலகம் உள்ளவரை இயேசுவை புகழ்ந்து பேசட்டும்.

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இழந்துபோன ஒரு ஆத்துமாவுக்காக கடவுளிடம் பரிந்து பேசினபோது, யாதொரு வார்த்தையும் சொல்லமுடியாமல் அழுகையும், புலம்பலுமே எனக்கு வந்தன. - சார்லஸ் பின்னி

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் வீரர்களை உருவாக்க என்னை பயன்படுத்தும்.

தியானத்திற்கு : யோசுவா.23-24, ஏசா.29, எபிரே.12.

இன்று...

மண்ணில் : 680

விண்ணில் : 05.06.755

ஊர் : கிர்டன்

நாடு : டெவன்சியர்

தரிசன பூமி : துருக்கி

பானிபெஸ் நினைவு தினம்

உலக சுற்றுசூழல் தினம்

ரேனியஸ் 1838

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஜார்ஜ் வில்லியம்ஸ்



1821 - 1905

உலகம் அறியட்டும்

உலகில் இதுவரை எண்ணற்ற நிறுவனங்கள் தோன்றியுள்ளன. ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு குறிக்கோள்கள் உண்டு. ஆனால், இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டு செயல்படும் நிறுவனங்கள், மனிதருக்கு வளத்தையும், உலகிற்கு முன்னேற்றத்தையும் அளிக்கின்றன.

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு மனதோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு இருதயத்தோடும் அன்புகூருவாயாக." இவ்வசனத்தை அடிப்படையாகக் கொண்டு 1844ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே அகில உலக கிறிஸ்தவ இளைஞர் இயக்கமாகும். (YMCA)

ஜார்ஜ் வில்லியம், இளம் வயதிலேயே மிகவும் சுறுசுறுப்பும் ஆர்வமும் நிறைந்தவராக கிறிஸ்தவ ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்டவர். கிறிஸ்தவ இளைஞர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற வாஞ்சை அவருக்குள் காணப்பட்டது. தன் விருப்பத்தை ஜெபத்தின் மூலமாக ஆண்டவருக்கு தெரியப்படுத்தினார். அவரின் ஜெபம் கேட்கப்பட்டது.

மே 6, 1844ஆம் ஆண்டு லண்டன் மாநகரத்தில் மிகுந்த ஜெபத்துடன் ஒய்.எம்.சி.எ. என்ற அமைப்பை உருவாக்கினார். உலகத்தின் எல்லா பகுதிகளிலுள்ள கிறிஸ்தவ இளைஞர்களையும், இயேசு கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தி, அவரை தங்கள் சொந்த மீட்பராகவும், கடவுளாகவும் ஏற்றுக்கொண்டு, அவரின் அரசை விரிவுபடுத்த தங்களை அர்ப்பணிக்க ஒன்றுபட்டு பாடுபடுவதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

1855ஆம் வருடம், இது பன்னாட்டு சங்கமாக உயர்வு பெற்று, இன்று சுமார் 150 நாடுகளில், கிளை சங்கங்களை ஆரம்பித்து, சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. மனிதனின் உடல், உள்ளம், ஆவி ஆகிய மூன்றும் ஒன்றாக முழுமையடைய பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. உலக அமைதி, உலக சமத்துவம், சமூக நீதி போன்றவை வளர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இச்சிறந்த நிறுவனத்தை ஆரம்பித்த வில்லியம்ஸ் இளைஞர்களின் வழிகாட்டியாக இவ்வுலகில் வாழ்ந்து காட்டினார்.

அன்பரே! உமது பணியினால் யாருடைய வாழ்வு மேம்படுகிறது?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னை காத்துக் கொள்ளுகிறதினால் தானே.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு சிந்தையோடும் உம்மிடத்தில் அன்புகூருவேன்.

தியானத்திற்கு : நியாதி.1, ஏசா.30, எபிரே.13.

இன்று...

மண்ணில் : 11.10.1821

விண்ணில் : 1905

ஊர் : சோமர்செட்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : உலகமெங்கும்



பக்த்சிங் 1903

ஜெபிக்க :

Scanned with CamScanner

தீமைக்குத் துணை போகாதே

தாமஸ் மூர்

1478 - 1535

எட்டாம் ஹென்றி இங்கிலாந்தை ஆட்சி செய்த காலம் அது. திருச்சபையின் சட்டதிட்டங்களில் அரசு அதிகமாகத் தலையிட்டது. குருக்கள் தங்கள் பணிகளைச் சரிவர கவனிக்க முடியவில்லை.

தாமஸ் மூர் நேர்மையானவர். தந்தை ஒரு நீதிபதியானதால் மூர் சகல ஒழுக்கங்களிலும் முறைப்படி வளர்க்கப்பட்டார். ஆழ்ந்த இறை பக்தி உள்ளவராகவே வளர்ந்தார். கர்த்தூசியன் என்ற மடத்தில் இணைந்து நான்கு ஆண்டுகள் வேத நூல்களை தெளிவாகப் படித்தார். தேவ அழைத்தலை உணர்ந்து கொண்ட பின்னர் திருப்பணிக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார்.

பொது வாழ்விலும் பல உயர்வுகளைப் பெற்றார். எட்டாம் ஹென்றி மன்னரின் நண்பராகவும் திகழ்ந்தார். பக்தியில் நாளுக்கு நாள் சிறந்தோங்கி வளர்ந்தார். நாள்தோறும் நான்கு முதல் ஐந்து மணி நேரமே தூங்குவார். பிற நேரங்களை வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலுமே செலவிட்டார்.

தாமஸ் மூர் தனக்கென்று பணம் சேமித்ததில்லை. ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும் தாராளமாக உதவி செய்தார். எப்பொழுதும் மகிழ்ச்சியான மனநிலையுடன் காணப்படுவார். நகைச்சுவை உணர்வு நிரம்பப் பெற்றவர்.

எட்டாம் ஹென்றி அரசன் தம் முதல் மனைவியைத் தள்ளிவிட்டு வேறே திருமணம் செய்யப் போகும் அறிவிப்பு திடீரென வெளியிடப்பட்டது. மேலும் தானே திருச்சபையின் தலைவர் என்றும் அறிவித்தார். எனவே, திருச்சபை சட்ட திட்டங்களுக்கு எதிராக செயல்பட்ட அரசனை தாமஸ் மூர் வெளிப்படையாகவே எதிர்த்தார். அரசாங்கத்தில் தான் வகித்து வந்த பதவியிலிருந்தும் விலகினார். இதனால் ஆத்திரம் அடைந்த அரசன், இவரைச் சிறையிலடைத்தான். 15 மாத சிறைவாசத்திற்குப் பின்னும் அரசனின் விருப்பத்திற்கு ஒத்துழைக்காததால் இதே மாதம் 7ஆம் தேதி 1535ஆம் ஆண்டு தலை வெட்டப்பட்டு உயிர் துறந்தார்.

அன்பரே! தீமையான காரியங்களுக்கு எதிர்த்து நின்று நீதியை நிலைநாட்டுகிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நாம் மெல்லிய இறகு மெத்தையில் பயணம் செய்து விண்ணகம் சென்றடைய நினைக்கக் கூடாது. - தாமஸ் மூர்

இயேசுவின் கரங்களில் : ஆண்டவரே! தீமைக்குத் துணை போகாத நல்ல வாழ்வையும், நன்மையே செய்யும் நல்ல சிந்தனையையும் எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : நியாதி.2-3, ஏசா.31, யாக்.1.

இன்று...

மண்ணில் : 07.02.1478

விண்ணில் : 07.06.1535

ஊர் : லண்டன்

நாடு : இங்கிலாந்து

தரிசன பூமி : இங்கிலாந்து

தாமஸ் மூர் நினைவு தினம்

ஜெபிக்க :



1859 - 1947

அற்புதம் செய்வார் இயேசு

அது ஒரு கன்வென்ஷன் கூட்டம். ஆராதனை நடத்திய ஸ்மித் அன்று செய்தியைப் பகிர்ந்து கொண்டார். கூட்டம் முடிந்தது. மக்கள் தங்கள் வீடுகளை நோக்கி நடக்கலாயினர். சுமார் 15 பேர், தங்களுக்கு சுகம் பெற வேண்டி ஸ்மித்திடம் ஜெபிக்க முன்வந்தனர்.

இரு கைகளிலும் ஊன்று கோலுடன் வந்த மனிதன் மேல் கைகளை வைத்து ஜெபிக்க ஆரம்பித்தார் ஸ்மித். என்ன ஆச்சர்யம்? அவன் தன்னுடைய ஊன்றுகோல்களை எறிந்துவிட்டு துள்ளிக் குதித்தான். ஸ்மித்தால் நம்பவே முடியவில்லை. முதன் முதலாகத் தன்னிடமிருந்து ஒரு மாபெரும் வல்லமையானது செயல்படுவதை உணர்ந்தார். ஆண்டவர் ஸ்மித்தைப் பயன்படுத்த ஆரம்பித்தார். அதன்பின் அவர் ஊழியத்தில் ஏராளம் ஏராளமான அற்புதங்கள் நடைபெற்றன. கட்டிகள் மறைய ஆரம்பித்தன. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்கள் மீண்டும் புத்துணர்வுடன் செயல்படத் தொடங்கினர்.

இவரின் அற்புதமாக்கும் வரம் உலகமெங்கும் காட்டுத் தீ போல் பரவ ஆரம்பித்தது. இங்கிலாந்து, அமெரிக்கா, நியூஸிலாந்து, இலங்கை, ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, நார்வே, கலிபோர்னியா போன்ற நாடுகளில் இவர் மூலம் பெரிய அசைவு ஏற்பட்டு ஜனங்கள் ஆத்துமாவில் இரட்சிப்பையும் தெய்வீக சுகத்தையும் பெற்றனர்.

இவர் கைகளில் எப்பொழுதும் எண்ணெய் பூசி ஜெபித்த உடனே அவர்கள் சுகம் பெற்றுவிடுவர். ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில் நடந்தது போலவே மாபெரும் பணிகள் இவர் மூலம் நடைபெறத் தொடங்கியது.

இம்மாபெரும் ஆத்தும ஆதாயகர் பள்ளிக்குச் செல்லாதவர் என்பது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. ஒரு மனிதன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டால், ஆண்டவர் அவர் மூலம் அற்புதமாய் செயல்படுவார் என்பதற்கு ஸ்மித்தின் வாழ்வே ஓர் சாட்சி.

அன்பரே! உங்களைக் கொண்டும் ஆண்டவர் செயல்பட முடியுமல்லவா? அர்ப்பணிப்பீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தேவன் கொடுக்கும் மேன்மையானதை நீ பெற விரும்பினால், அவர் உன்னை அங்கே சந்திக்கும் வரை அமைதியாக ஒரு வாக்குத்தத்தத்தில் காத்திரு.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் பெற்ற அற்புதங்களைஅனைவருக்கும் அறிவித்து உந்தன் நாமத்தை மகிமைப்படுத்துவேன்.

தியானத்திற்கு : நியாதி.4-5, ஏசா.32, யாக்.2.

இன்று...

மண்ணில் : 08.06.1859 **விண்ணில்** : 12.03.1947 **ஊர்** : மென்ஸ்டன் **நாடு** : இங்கிலாந்து **தரிசன பூமி** : உலகின் பல பகுதிகள்	ஸ்மித் விக்கிள்ஸ் வொர்த் பிறந்த தினம் ஈவன் ராபர்ட்ஸ் 1878

ஜெபிக்க :

Scanned with CamScanner

எளிமையில் இனிமை

521 - 597

துறவு வாழ்க்கை, குடும்பங்களை விட்டு இறைவனையே சார்ந்து வாழும் வாழ்வு. உலக ஆசாபாசங்களுக்கு இதில் இடமில்லை. எளிமையும், தனிமையுமே இதன் நண்பர்கள்.

ஐரோப்பிய நாடுகளில் இத்துறவு வாழ்வை அநேகர் விரும்பி ஏற்றுக்கொண்டிருந்த காலம். சிறு சிறு மடங்கள் ஆங்காங்கே தோன்றிக் கொண்டிருந்தன.

ஆடம்பரமற்ற வாழ்வும், எளிய உணவும், வேத வாசிப்பும், தியானமும் மக்களின் மனதைக் கவர்ந்தன. துறவிகளின் பரிசுத்த வாழ்க்கை ஜொலிக்க ஆரம்பித்தது.

அயர்லாந்தில் பிறந்த கொலம்பா இவ்வாழ்வால் மிகவும் கவரப்பட்டார். ஆத்ம வளர்ச்சியில் அனுதினமும் வளர அரும் பிரயாசப்பட்டார். எனவே துறவு மடத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உலகப் பற்றுகள் அவரை விட்டு ஓட்டம் பிடித்தன.

கி.பி.550ல் டர்மாக் என்னுமிடத்தில் ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தை நிறுவினார். இவருடைய தூய வாழ்க்கையையும், சொற்பொழிவையும் கேட்ட மக்கள் இரவுப் பகலாக அவரைக் காணத் துடித்துக் கொண்டிருந்தனர். பலர் துறவு வாழ்வை மேற்கொண்டு இம்மடத்தில் இணைந்தனர்.

அந்நாட்டின் அரசன் தீயவழிகளில் சென்றதால் அவனைத் திருத்த முயற்சிகள் மேற்கொண்டார். அம்முயற்சிகள் பலனளிக்காததால் அந்நாட்டை விட்டு வெளியேறினார். ஐயோனா என்ற தீவில் வந்து சேர்ந்த இவர், அங்கு ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தைக் கட்டி அநேகரைக் கிறிஸ்துவுக்குள் நடத்தினார்.

வேதம் வாசிப்பதையும், ஜெபம் செய்வதையுமே பிரதானமாகக் கொண்ட கொலம்பா தரையில் உறங்கி, ஒரு கல்லைத் தனக்கு தலையணையாகப் பயன்படுத்தி, எளிய உணவை உண்டு சிறப்பான வாழ்வை நடத்தியவர். ஏழைக் குடியானவன் முதல் அரசன் வரை அனைவரும் இவர் சொற்படிக் கேட்டு நடந்ததால் நாட்டில் அமைதியும் இன்பமும் அளவில்லாமல் காணப்பட்டது.

அன்பரே, எளிய வாழ்வில் இறைவனைக் காண முயற்சி செய்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : வாயினால் கிறிஸ்துவை பிரசங்கிக்கிறவன் பிரசங்கியல்ல. உண்மையான கிறிஸ்தவனாக ஜீவிப்பவனும் சுவிசேஷ பிரசங்கியே.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! எளிமையான வாழ்க்கை வாழ்ந்து உம்மைப் பிரதிபலிக்க எனக்கு அருள் செய்யும்.

தியானத்திற்கு : நியாதி.6, ஏசா.33, யாக்.3-4.

இன்று...

மண்ணில் : 12.07.521
விண்ணில் : 09.06.597
ஊர் : கார்ட்டன்
நாடு : அயர்லாந்து
தரிசன பூமி : ஸ்காட்லாந்து

கொலம்பா நினைவு தினம்

வில்லியம் கேரி 1834

ஜெபிக்க :

Scanned with CamScanner

1849 - 1890

துணிந்து செயலாற்று

1876ம் ஆண்டு. 27 வயது நிரம்பிய வாலிபன் ஆப்பிரிக்கா நாட்டிலுள்ள உகாண்டா என்ற பகுதிக்குப் பயணமானான். போகும் வழியிலோ பல தடைகள். கப்பல் கென்சிபர் என்ற இடத்தை அடைந்தபோது அவன் காய்ச்சலால் பாதிக்கப்பட்டான். சில நாட்கள் கப்பல் அங்கு நிற்கலாயிற்று. பின் மீண்டும் பணியைத் தொடர தென் ஆப்பிரிக்கா வந்தடைந்தான்.

அதிக எதிர்பார்ப்பும், அறியாமையும் மண்டிக் கிடந்த உகாண்டா தேசத்திற்கு முன்னோடி மிஷனெரியாகச் சென்று சுவிசேஷப் பணிக்கு பாதையை ஏற்படுத்திய பொறியாளரான அலெக்ஸாண்டர் மெக்கே என்பவரே அந்த வாலிபன்.

அடர்ந்த காட்டின் நடுவே, சிறு பூனை கூட நுழைந்து போக முடியாத இருண்ட பகுதியில் 230 மைலுக்கான பாதையைப் பல கடினமான சூழ்நிலைக்கு மத்தியில் அடைந்தார். இது கிறிஸ்து ராஜாவின் பாதையாக மாறியது. மேலும் இருண்ட மூட நம்பிக்கை கொண்ட மக்களின் மூடத்தனங்களைத் தகர்த்த எறியப் பாடுபட்டார். மக்கள் தீய ஆவிகளுக்குப் பயந்ததால் எப்பொழுதும் கழுத்திலும், கைகளிலும் தாயத்துகளை அணிந்திருந்தனர். அவைகளை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அறுத்து எறிந்தார்.

உகாண்டா மக்களுக்குத் தொழிற்கூடம் அமைத்து இரும்பை உருக்கவும், பல இரும்புச் சாமான்களைச் செய்யவும் கற்றுக் கொடுத்தார். பெண்கள் மட்டுமே வேலை செய்ய வேண்டும் என்ற நிலையை மாற்றினார். புதிய ஏற்பாட்டுப் பகுதிகளை மொழிபெயர்த்து அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். கிறிஸ்தவர்களுக்குத் துன்பங்களும், உபத்திரவங்களும் ஏற்பட்டபோது அவர்களை விசுவாசத்தில் பெலப்படுத்தினார்.

14 வருடம் ஆப்பிரிக்க தேசத்திலே பணிபுரிந்த இவர் ஒருமுறை கூடத் தனது சொந்த நாடு திரும்பவில்லை. தனது 41வது வயதில் கொடூரமான விஷக்காய்ச்சலுக்குப் பலியான மெக்கே தனது வாழ்வால் உகாண்டாவை கிறிஸ்துவின் கோட்டையாக மாற்றினார்.

அன்பரே, துணிந்து செயலாற்றும் பக்குவம் நம்மில் மலர வேண்டுமல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆன்மாக்களுக்காக பற்றி எரியும் வைராக்கியத்தை, எனக்குத் தாரும். - அலெக்ஸாண்டர் மெக்கே

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! துணிந்து செயலாற்றும் துணிவுள்ள இருதயத்தை நான் பெற்று, உமக்குள் செயல்பட உதவிடும்.

தியானத்திற்கு : நியாதி.7-8, ஏசா.34, யாக்.5.

இன்று...

மண்ணில் : 13.10.1849

விண்ணில் : 08.02.1890

ஊர் : ரைனே

நாடு : ஸ்காட்லாந்து

தரிசன பூமி : தென் ஆப்பிரிக்கா

சீகன் பால்கு 1682

ஜாக்குவாஸ் மார்குட்டி 1637

ஜெபிக்க :

ஜான் சுங்

சுவிசேஷத் தீபமாய் மாறுவோம்

1901 - 1944

"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்தினாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?"

இந்த வேத வசனம் ஜான் சுங்கின் வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. யார் இந்த ஜான் சுங்? சீன மெதடிஸ்ட் ஊழியரின் மகனாகப் பிறந்தார். சிறு வயதிலேயே மிகுந்த அறிவாளியாக காணப்பட்ட இவர், அறிவியல் துறையில் அதிக நாட்டம் கொண்டார். அமெரிக்காவிற்குச் சென்று அத்துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். கல்வியிலே அவர் உயர்ந்த நிலையை அடைந்திருந்தாலும், மனதிலே நிம்மதியற்றவராகவும், குழப்பங்கள் நிறைந்தவராகவும் வாழ்ந்து வந்தார்.

ஓர் நாள், மேற்கண்ட வேத வசனம் அவரோடு பேச ஆரம்பித்தது. ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிய ஆரம்பித்தார். வேதாகம கல்லூரியில் சேர்ந்தார். எனினும், அக்கல்லூரியின் போதனைகள் அவருக்கு உற்சாகத்தை அளிக்காத நிலையில், தனிமையில் இறைவனோடு உறவாட ஆரம்பித்தார். வேதாகமத்தை படிக்கப் படிக்க, அவர் உள்ளத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அவரோடு இடைப்பட்டார். ஜான் சுங் பெற்ற ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

தான் பெற்ற மகிழ்ச்சியை, நண்பர்களிடம் வந்து கூற, அவர்களோ இவரைப் பைத்தியம் பிடித்தவர் என்று எண்ணினர். ஜான் சுங்கின் கொளுந்துவிட்டு எரியும் சுவிசேஷ வாஞ்சையை அறியாத அக்கல்லூரி நிர்வாகம் இவரை ஒரு அறையில் தள்ளி கதவை மூடியது. 193 நாட்கள் அவ்வறையிலேயே அடைபட்டுக் கிடந்தார். இந்நாட்களில் வேதாகமம் ஒன்றே அவர் துணையாக காணப்பட்டது. 40 முறை வேதாகமத்தை மீண்டும் மீண்டும் படித்தார். அங்கிருந்து விடுதலை கிடைக்கவே சீனாவை நோக்கி பயணம் மேற்கொண்டார்.

தான் படித்த பட்டங்களுக்கான சான்றிதழ்களை, கடலில் வீசி எறிந்தார். சீனாவின் கடைமுனைக்குச் சென்று 15 வருடங்கள் மிஷனெரியாக பணியாற்றினார். ஆயிரமாயிரம் மக்களின் ஆத்மீக வீரராக மாறினார். அதிகாலை ஜெபத்தில் அதிசயங்களைக் கண்ட இவர் தனது 43ஆம் வயதில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து இறைவனில் இணைந்தார்.

அன்பரே! உமது சுவிசேஷ வாஞ்சையை அனல் பெறச் செய்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்தவர்களில் இரு சாராரே உண்டு. ஒன்று ஆத்தும ஆதாயகர். மற்றொன்று பின்மாற்றக்காரர் - ஆன்ட்ரு முர்ரே

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! பின்மாற்றமடைந்தவர்களை மனந்திரும்பச் செய்து உந்தன் பிள்ளையாய் மாற்ற என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : நியாதி.9, ஏசா.35, 1பேதுரு.1.

இன்று...

மண்ணில் : 29.09.1901
விண்ணில் : 18.08.1944
ஊர் : ஹவிங்வா
நாடு : சீனா
தரிசன பூமி : சீனா

ஜேம்ஸ் ஹெப்பர்ன் 1911
அடா லீ 1948
அலெக்ஸாண்டர் சில்வர் 1954

ஜெபிக்க :

Scanned with CamScanner

சவாரா குரியாகோஸ்

1805 - 1871

இழப்பது மேன்மைக்கே

இந்தியாவில் கத்தோலிக்க திருச்சபை வேரூன்றி வளரவும், அதற்குத் தேவையான துறவிகளை இந்தியாவில் உருவாக்கவும் அரும்பாடுபட்டவர்களில் ஒருவரே சவாரா குரியாகோஸ். இவர் காலத்தில் கேரள திருச்சபை புதுப் பொலிவுடன் வளரத் தொடங்கியது. கேரள மாநிலத்தில் பிறந்த இவர், இளம் வயதிலேயே குரு மடத்தில் மாணவராக இணைந்தார்.

தமது 24வது வயதில் குருபட்டம் பெற்ற இவர், மிகுந்த கட்டுப்பாடுடனும், இறைப்பற்றுடனும் திருப்பணிகளை நிறைவேற்றினார். துறவறத்தை விரும்பிய இவர் சந்நியாச மடம் ஒன்றைத் தோற்றுவிக்க ஆவல் கொண்டார்.

கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார். துறவிகளுக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்தில், "நாம் பட்டினியாலும், அமைதியின்மையினாலும் உலகைவிட்டுத் துறவிகள் இல்லம் புகுந்தவர்கள் அல்ல. பிறரைப் போல் செல்வங்களையும், இன்பங்களையும் நாம் உலகில் அடைந்திருக்கலாம். ஆயினும், உற்றார், பெற்றோர், உலக உடமைகள் அனைத்தையும் துறந்த நாம் ஞான வாழ்வில் நம் கவலையினால் இறை அருளை விட்டுவிட்டால், நம்மைவிட அற்பர்களும், இழிவானவர்களும் வேறு எவரும் இருக்க முடியாது" என்றார்.

இவரது கடினமான சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாத சில அர்ப்பணிப்பில்லாத துறவிகள், அச்சபையை விட்டு வெளியேறினர். நேர்மையையும், ஒழுக்கத்தையும் தாம் கடைப்பிடித்தோடு பிறரையும் அவ்வழியைப் பின்பற்றுமாறு எதிர்பார்த்தார். கேரளத்தின் முதல் அச்சகத்தைத் தோற்றுவித்தார். தமிழ் மொழியைக் கற்று, அதின் மூலம் அநேக மலையாள நூல்களை வெளியிட்டார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர்.

ஆதரவற்றவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் கருணை இல்லங்களை ஏற்படுத்தினார். திருச்சபைகளுக்கு இடையே காணப்பட்ட வேற்றுமைகளைக் களைந்து, ஒற்றுமை ஏற்படக் காரணமான இவர், தம் போதனைகளால் அநேகரைக் கிறிஸ்துவின் அண்டையில் ஈர்த்தார். எனவே 'போதகச் சம்மட்டி' என்றும் இவர் அழைக்கப்பட்டார்.

அன்பரே! உங்களைச் சுற்றி வாழும் மக்களுக்கு நீங்கள் செய்யும் நற்செயல் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : துன்புறுத்தல்களை விட பேர் புகழே அநேக தீர்க்கர்களைக் கொன்று விட்டது - வேன்ஸ் ஹேவ்னர்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! திருச்சபையின் மலர்ச்சிக்கு நானும் பயன்பட உதவிசெய்யும்.

தியானத்திற்கு : நியாதி.10-11, ஏசா.36, 1பேதுரு.2.

இன்று...

பிறப்பு : 10.02.1805
இறப்பு : 03.01.1871
ஊர் : கைனஹரி, கேரளா
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

ஜேம்ஸ் கில்மோர் 1843

ஜெபிக்க :

Scanned with CamScanner

லோத்தி மூன்

1840 - 1912

உள்ளத்தில் இயேசு

சீன தேசம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது ஒரு கம்யூனிச நாடு. பொதுவுடமைக் கொள்கை பரவியிருந்தது. கடவுள் பக்தியற்ற அரசாங்கம் மக்களை ஆட்சி செய்து கொண்டிருந்தது. எனவே நீதியும், நேர்மையும் பெயரளவிலே காணப்பட்டது. இயேசு இல்லாத நாடு எப்படியிருக்கும்? இருளில் அல்லவா மூழ்கிக் கிடக்கும்?

சீன தேசத்தை நோக்கிப் பல மிஷனெரிகள் பற்பல தரிசனங்களுடன் கிறிஸ்துவின் அன்பை அறிவிக்கக் கடந்து சென்று கொண்டிருந்தனர். சிலர் பாதியிலேயே திரும்பிவிட்டனர். ஏனெனில் உபத்திரவங்களும், போராட்டங்களும் அங்கு மலிந்து கிடந்தன.

லோத்தி மூன் தன்னந்தனியான பெண்ணாக சீன தேசத்தை நோக்கிப் புறப்பட்டாள். உள்ளத்தில் இயேசு இருந்ததால் அவள் வேறெதற்கும் பயப்படவில்லை. சீனர்களின் உள்ளத்திலும், இல்லத்திலும் கிறிஸ்துவே வீற்றிருக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளே அவர் சிந்தையில் நிறைந்திருந்தது. 1885ல் ஆரம்பிக்கப்பட்ட அப்பயணம் மிகவும் சுறுசுறுப்படைந்து பற்பல மக்களை சந்திக்கச் செய்தது.

பிங்குடு என்னும் இடத்தில் பணி செய்ய இடம் பெயர்ந்தபோது அவர்களுக்கு 44 வயதாகியிருந்தது. அங்குள்ள மக்கள் அம்மையாரைப் பார்த்துப் பேய் பிடித்த கிழவி என்று தூற்றினர். ஆயினும் அஞ்சா நெஞ்சத்துடன் பணியைத் தொடர்ந்தார் லோத்தி.

விடுப்பு எடுக்கவேண்டிய காலத்தில் கூட விடுமுறை எடுக்காமல் மும்முரமாகச் சுவிசேஷப் பணியில் ஈடுபடலானார். இதினிமித்தம் திருச்சபை ஒன்றை ஆரம்பித்தார். 1889ம் ஆண்டில் ஞானஸ்நான ஆராதனையும் நடைபெற்றது. இருபது ஆண்டுகளில் ஆயிரத்திற்கும் மேலானோர் இயேசுகிறிஸ்துவைத் தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

சீன மக்களுக்காகவே வாழ்ந்த இத்தாய் 1912ம் ஆண்டு இளைப்பாறுதலில் பிரவேசித்தார்.

அன்பரே! எதிர்ப்பு வரும் இடங்களிலும் உறுதியாக நின்று நற்செய்தியை அறிவிப்பதற்கு நீங்கள் ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதைக் காட்டிலும் ஆழமான சந்தோஷம் வேறெதிலும் இல்லை – லோத்தி மூன்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஆத்துமாக்களை நானும் ஆதாயப்படுத்தி உமக்குள் களிகூர எனக்கு உதவி செய்யும்.

தியானத்திற்கு : நியாதி.12-13, ஏசா.37, 1பேதுரு.3-5.

இன்று...

மண்ணில் : 12.12.1840
விண்ணில் : 24.12.1912
ஊர் : விர்ஜினியா
நாடு : அமெரிக்கா
தரிசன பூமி : சீனா

டோரத்தி சேயர்ஸ் 1893
ஐசக் மெக்கே 1784

புனித அந்தோணி 1231

ஜெபிக்க : Jesreen Paul, s/o. R.Jayakumar. Chennai

Scanned with CamScanner

1873 - 1954

உடலிலும் உள்ளத்திலும்

நற்செய்திப் பணியில் மருத்துவப் பணி மிகவும் முக்கியமானது. ஏனெனில் மனிதர்கள் இரண்டு விதங்களில் குணமடைய வேண்டியது அவசியம். ஒன்று, சரீரத்தில் குணமடைதல். மற்றொன்று, ஆவிக்குரிய வாழ்வில் குணமடைதலாகும்.

சீன மருத்துவ மிஷனெரி ஷீமேயு இரண்டு பணிகளையும் ஒரே நேரத்தில் செய்வதற்கு ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்டார். இவர் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுடைய கரங்களையும், சுவிசேஷகர்களுடைய இருதயத்தையும் பெற்றிருந்தார்.

சீனாவில் பிறந்த இவர், அமெரிக்கா சென்று மருத்துவப் பட்டம் பெற்ற சீனப் பெண்மணி ஆவார். சீன தேசத்து மக்களுக்காக மருத்துவமனை ஒன்றைக் கட்டினார். ஒவ்வொரு மாதமும் 3,000 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தார். மேலும் சீன செவிலியர்களுக்கு ஒரு பயிற்சித் திட்டத்தை உருவாக்க உழைத்தார். மேற்கத்திய மருத்துவ புத்தகங்களை மொழிபெயர்ப்புச் செய்தார். செவிலியர்களுக்கென்று தனியே வேதாகம வகுப்புகளை நடத்தினார்.

1918ல் ஷீமேயு ஐந்து கிறிஸ்தவ தலைவர்களுடன் இணைந்து சீன உள்நாட்டு ஊழிய சங்கத்தை ஏற்படுத்தினார். இது ஒரு சுயநிதி சங்கமாகச் செயல்பட்டது. 1920ம் ஆண்டு தான் பணியாற்றி வந்த மெதடிஸ்ட் மிஷனெரி சங்கத்தை விட்டு விட்டு 'பெத்தேல் மிஷன்' என்ற புதிய ஊழியத்தை ஆரம்பித்தார். 17 ஆண்டு காலத்தில் இந்த ஊழியமானது வளர்ச்சி அடைந்தது. ஆரம்ப மற்றும் செகண்டரி பள்ளிகள், மருத்துவமனை, செவிலியர் பள்ளி, வேதாகம கலாசாலை, அனாதை இல்லம் மற்றும் ஆராதனை மையம் ஏற்படுத்தப்பட்டன.

ஷீமேயு, 36 சீனக் குழந்தைகளை தன் வீட்டில் வைத்தே பராமரித்தார். ஒவ்வொரு வியாழக்கிழமையும் தன் வீட்டில் செவிலியர்களுக்கென வேதாகமக் கூட்டங்களை நடத்தி அநேக செவிலியர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தினார். 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் சீன கிறிஸ்தவ பெண்மணிகளில் டாக்டர்.ஷுமேயு ஒருவராவார். தனது இடைவிடாத உழைப்பினால் இச்சீன மிஷனெரி இதே நாள் 1954ம் ஆண்டு நோயற்ற வீட்டிற்கு பயணமானார்.

அன்பரே! உங்கள் மூலம் பிறர் எவ்விதத்தில் குணமடைந்துள்ளனர்?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம் இறைவனை விட்டு வெகுதூரம் விலகியே இருக்கிறது.

– ஜீவ நீரோடை

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! பிறர் வாழ்க்கை குணப்படுவதற்கு என் வாழ்க்கை அவர்களுக்கு சாட்சியாக காணப்பட அருள் தாரும்.

தியானத்திற்கு : நியாதி.14-15, ஏசா.38, 2 பேதுரு.1-2.

இன்று...

மண்ணில் : 01.05.1873 விண்ணில் : 30.12.1954 ஊர் : ஜியாங்சி நாடு : சீனா தரிசன பூமி : சீனா	ஷுமேயு நினைவு தினம் எலிசா அக்னியு 1883

ஜெபிக்க :

ஜேம்ஸ் சால்மர்ஸ்



1841 - 1901

துணிவு வேண்டும்

அது ஒரு விருந்து சாலை. முக்கியமான கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஜேம்ஸ் சால்மரும், அவரது மனைவியும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப் பட்டிருந்தனர். கூட்டம் முடிந்ததும் விருந்து பரிமாறப்பட்டது. பெரிய தட்டு ஒன்றில் எண்ணெயில் பொரித்து எடுக்கப்பட்ட பெரிய இறைச்சித்துண்டு. அது என்ன என்று உற்றுநோக்கிய சால்மரின் மனைவிக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அது என்ன தெரியுமா? ஒரு மனிதனின் மார்பு பகுதி. எப்படியிருக்கும்?

நியூ கினியா என்ற தீவு. நாகரீகமற்ற, பாவம் நிறைந்த, மூடத்தனமிக்க, கொடூர பழங்குடிகள் வாழும் இடம் அது.

1877ம் ஆண்டு சால்மரும் அவரது மனைவியும் அப்பகுதிக்குக் கடந்து சென்றார்கள். மனிதர்களையே சாப்பிடும் அக்கொடூர மக்களுக்குக் கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துக் கூறினார்கள்.

எதிர்பாராதவிதமாக சால்மரின் மனைவி பெலவீனமாகி மரித்துப் போனார்கள். ஆனாலும் கிறிஸ்துவின் பணியில் ஈடுபடுவதின் மூலம் என் துக்கத்தை மறப்பேன் எனக் கூறி இன்னும் தீவிரப் பணியில் ஈடுபட்டார். புதிய பழங்குடி மக்களிடம் பழக, அவர்களுக்கு பரிசுப் பொருட்களைக் கொடுத்தார். இதனால் மக்கள் இவரின் நண்பரானார்கள். புதுப் புது தீவுகளுக்கும் சென்று கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார். 1901ம் ஆண்டு கோரிபாரி என்ற தீவிற்குப் பயணமானார். நரமாமிசம் உண்ணும் பழங்குடி மக்கள் அவர் படகைச் சூழ்ந்து கொண்டனர். நாளை மறுபடியும் வருகிறேன் என்று கூறி அவர்களிடமிருந்து விடைபெற்றார்.

மறுநாள், சால்மர் தன் உடன் ஊழியர் டாம்கின்ஸ் உடன் அங்கு சென்றார். சிறப்பான வரவேற்புடன் அப்பழங்குடிகள் அவர்களை விருந்து சாலைக்கு அழைத்து சென்றனர். திடீரென உருட்டு கட்டைகளால் தாக்கப்பட்டனர். அவர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டன. பழங்குடியினருக்கு விருந்தாக்கப்பட்டனர். என்னே கொடூரம்!

ஆனால், சால்மர் விதைத்த வசனம் விருதாவாகவில்லை. பின்னாட்களில் மனந்திரும்பிய மக்கள் எண்ணற்றோர். இன்று அம்மக்கள் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்கின்றனர்.

அன்பரே! ஜேம்ஸ் சால்மரைப் போன்று நற்செய்தி கூறுவதில் வீரம் உங்களிடம் உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : கிறிஸ்துவிடம் நெருங்கி வரும்போதெல்லாம்
ஆண்டவரை அறியாத மக்கள் குறித்த வாஞ்சையே
என்னை ஆட்கொள்ளுகிறது. - ஜேம்ஸ்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஜேம்ஸ் சால்மரைப் போன்று
சுவிசேஷம் அறிவிப்பதில் துணிவை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : நியாதி.16, ஏசா.39, 2 பேதுரு.3.

இன்று...

மண்ணில் : 04.08.1841
விண்ணில் : 08.04.1901
ஊர் : ஆர்டிஸ்சா
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : பசுபிக் கடலில் உள்ள தீவுகள்

பி. சாமுவேல் 1922
சாமுவேல் பவுல் ஐயர் 1844

ஜெசிமன் பிராண்ட் 1928

ஜெபிக்க : திரு. சிவகுமார், சென்னை.

Scanned with CamScanner

கானானியனாகிய சீமோன்

- 104

தீவிரவாதமும் தகரட்டும்

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது அநேக சீடர்களை உருவாக்கினார். அதிலும் குறிப்பாக 12 சீடர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். இதில் சீமோன் என்பவரும் ஒருவர். சீமோன் என்பதற்கு நாணல் என்று பொருள். இவர் கானான் நாட்டைச் சார்ந்தவர். தீவிரவாதியாக இருந்து பின் மனமாற்றம் அடைந்து இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டார் என்று கருதப்படுகிறது.

இன்னும் சிலர் பற்தொலோமேயு இவரை அழைத்து வந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். ஆனால் வேறு சிலரோ இவர் பேதுரு மூலம் சீடரானார் என்று சொல்லுகின்றனர்.

இயேசுவின் கடைசி இரவு உணவின்போது, "பணப்பை உள்ளவன் அதை எடுத்துக்கொள்ளட்டும், கைப்பை உள்ளவனும் அவ்வாறே செய்யட்டும். வாள் இல்லாதவன் மேலாடையை விற்று, வாள் ஒன்றை வாங்கிக் கொள்ளட்டும். நெறி கெட்டவர்களோடு ஒன்றாக எண்ணப்பட்டார் என்று எழுதியுள்ளது என் மட்டில் நிறைவேற வேண்டும்" என்றார். அப்போது ஆண்டவரே, இதோ 2 பட்டயங்கள் நம்மிடத்தில் உள்ளன என்றார்கள் சீடர்கள். இதில் சீமோனின் குரலே ஓங்கி ஒலித்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சீமோனைப் பற்றி அதிகமாக வேதாகமம் கூறாவிட்டாலும், சரித்திரத்தில் சில சான்றுகள் பதிக்கப்பட்டுள்ளன. ஏரோது ராஜாவுக்குப் பின் ஏற்பட்ட புரட்சியினால் சீமோன் தீவிரவாதியாக மாறினார் என்று கருதப்படுகிறது. பரபாஸ் என்ற கள்வனும், இயேசுவுடன் சிலுவையில் அறையுண்டவர்களும், இவர் கூட்டத்தைச் சார்ந்தவர்களே. இயேசுவால் தெரிந்துகொள்ளப்பட்ட சீமோன் எகிப்து, சீரியா, லிபியா, ஆப்பிரிக்கா, பெர்சியா போன்ற நாடுகளுக்குச் சென்று சுவிசேஷம் அறிவித்ததாகக்கருதப்படுகிறது.

'தோல் வியாபாரிகளின் பாதுகாவலர்' என்று கருதப்படும் இவர், கடவுளது சட்டங்களை அனுசரிப்பதிலும், பாவத்தை எதிர்த்துப் போராடுவதிலும், கிறிஸ்து நாதரிடம் மக்களை கொண்டு சேர்ப்பதிலும் மிகுந்த ஆர்வத்துடன் உழைத்தார். சீமோனின் மரணத்தைப் பற்றி பல தகவல்கள் கூறப்படுகின்றன. ரோம் மன்னன் டிராஜன் காலத்தில் கி.பி. 104ம் ஆண்டு சிலுவையில் அறையப்பட்டு கிறிஸ்துவுக்குச் சாட்சியாக மரித்தார்.

அன்பரே! தீவிரவாதத்திற்கு எதிராக உங்களின் குரல் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உன்னால் கட்ட முடியாமல் போனாலும் கட்டுகிறவனுக்குப் பொருளை சேகரித்து கொடுக்கிறவனாக நீ இருக்கலாம்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! தீவிரவாத சக்திகளை முறியடிக்க என்னையும் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : நியாதி.17-18, ஏசா.40, 1யோவான்.1-2.

இன்று...

பிறப்பு :

இறப்பு : 104

ஊர் : கானான்

நாடு : கலிலேயா

தரிசன பூமி: லிபியா, ஆப்பிரிக்கா, எகிப்து

சாமுவேல் ஜான் மில்ஸ் 1818

ஜெபிக்க : செல்வி. ரெபேக்கா, D/o.அகஸ்டின்

Scanned with CamScanner

கிறிஸ்டோபர் மோசஸ்



1943 - 1983

அறியாதவர்களைத் தேடி

தமிழ்நாட்டில் கரூர் பகுதியில் பிறந்தவர் கிறிஸ்டோபர் மோசஸ். இறை பக்தியுள்ள பெற்றோருக்குப் பிறந்ததால் சிறுவயதிலேயே வேத வசனங்களை மனனம் செய்வதிலும் வாஞ்சையுள்ளவர். பள்ளிப் படிப்பிற்குப் பின்பு ஆசிரியர் பயிற்சியை முடித்து தாராபுரம், உடுமலைப் பேட்டை, அரியலூர் போன்ற இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1976ம் ஆண்டு. எதிர்பாராதவிதமாக உடல்நிலை பாதிக்கப்பட்டது. ஆஸ்துமா நோயினால் அவதிப்பட்டார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

அதிகாலை நேரம் மெல்லிய காற்றில் பாடல் ஒன்று மிதந்து வந்தது. ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார். இயேசு கிறிஸ்து தன்னைத் தொடுவதை உணர்ந்தார். இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றார். ஊழியத்திற்குத் தன்னை அர்ப்பணித்தார். ஆசிரியப் பணிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவானது, 1980ம் ஆண்டு இவரைத் தெரிவு செய்து குஜராத்திற்கு மிஷனெரியாக அனுப்பியது. குஜராத் மொழியை முறையாகக் கற்றார். 'சுமித் சவுத்ரி' என்ற இன மக்களின் வாழ்வில் கிறிஸ்துவாகிய நம்பிக்கையைக் கொடுத்தார். படிப்பறிவில்லாத மக்களுக்குக் கல்வி அறிவைக் கொடுக்க பள்ளிகளை ஆரம்பித்தார். சிறுவர் விடுதிகளையும் ஏற்படுத்தினார்.

கடின உழைப்பையும், நேர்மையையும் வாழ்வின் மையமாகக் கொண்ட இவர், ஏழைச் சிறுவர்களின் மீது அன்பும் அக்கறையும் கொண்டவர். பல சிறுவர்கள் படித்து பட்டம் பெற்று சமுதாயத்தில் உயர்ந்த பதவிகளில் வந்தனர். மிஷனெரிகளாகவும்,போதகர்களாகவும் மாறினர்.

அந்தோ! மக்களின் துணைவனான இவர் 1983ம் ஆண்டு இதே நாள் மலேரியா காய்ச்சலால் தாக்குண்டு கர்த்தருக்குள் தன் கண்களை மூடினார். குஜராத்தில் இவர் ஆரம்பித்த பணி இன்னமும் தொடர்கின்றது.

அன்பரே! இயேசுவை அறியாத மக்கள் கூட்டம் இன்னமும் உண்டு அல்லவா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பாவம் மனிதனுக்கு தேவனை மறைக்கிறது.
ஆனால் அது தேவனுக்கு மனிதனை மறைப்பதில்லை.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! அறியாமையில் வாழும் மக்களுக்கு உமது இரட்சிப்பை எடுத்துச் சொல்லும் கருவியாக என்னை மாற்றும்.

தியானத்திற்கு : நியாதி.19, ஏசா.41, 1யோவான்.3-4.

இன்று...

பிறப்பு	: 17.12.1943
இறப்பு	: 17.06.1983
ஊர்	: கரூர்
நாடு	: இந்தியா
தரிசன பூமி	: குஜராத், இந்தியா

கிறிஸ்டோபர் மோசஸ் நினைவு தினம்

ஜான் வெஸ்லி 1703

சாலமோன் துரைசாமி 1917

ஜெபிக்க :

தாமஸ் கிராண்மர்

1489 - 1556

திறந்து பாருங்கள்

இங்கிலாந்து நாட்டில் மேரி என்ற அரசி பட்டத்திற்கு வந்தாள். தன் நாட்டில் காணப்பட்ட சீர்திருத்தவாதிகளை ஒழிக்கும் எண்ணத்துடன் மும்முரமாய் செயல்பட ஆரம்பித்தாள். நாட்டின் பல பாகங்களிலே, தூய்மையான வாழ்க்கை நடத்திய ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் தங்கள் விசுவாசத்தின் பொருட்டாக, சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பலர் நாட்டை விட்டே துரத்தப்பட்டனர் மற்றும் சிலர் உயிரோடு வைத்து கொளுத்தப்பட்டார்கள். நாட்டிலே இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது.

இரத்த மேரி என்றழைக்கப்பட்ட இவ்வரசியால், அதிகமாக துன்புறுத்தப்பட்டவர்களில் ஒருவரே தாமஸ் கிராண்மர். கேம்பிரிட்ஜ் கல்வி சாலையில் உயர்கல்வி கற்றவர். 1533ஆம் ஆண்டு பேராயராக ஹென்றி 8 என்ற அரசனால், பதவியேற்றவர். அரசனுக்கு சிறந்த ஆலோசகராக செயல்பட்டவர்.

1538ஆம் ஆண்டு, அவ்வரசனுக்கு சிறந்த ஓர் ஆலோசனை வழங்கினார். ஒவ்வொரு திருச்சபையிலும், வேத புத்தகமானது எந்நிலையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே அது. அதன்படி திருச்சபைகள் அனைத்திலும் மக்கள் வேதாகமத்தைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால், திருச்சபையின் சீர்கேடுகளை மக்கள் களைந்து, சிறந்த வாழ்க்கை வாழ ஆரம்பித்தனர். கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சி குன்றி, புரோட்டஸ்டாண்ட் தலை நிமிர ஆரம்பித்தது.

ஆயினும், வெகுவிரைவில் ஹென்றி 8 தன் மகன் எட்வர்ட் 6ஆல் கொல்லப்பட்டார். அவரும் வெகு விரைவில் மரிக்கவே மேரி அரசி பட்டத்திற்கு வந்தாள். திருச்சபையின் நிலைமைகள் தலைகீழானது. மீண்டும் கத்தோலிக்கம் தழைத்தது. புரோட்டஸ்டாண்டை சார்ந்தவர்கள் விரட்டி பிடிக்கப்பட்டு கிறிஸ்துவின் மேல் உள்ள பற்றுதலால் அவர்கள் கொல்லப்பட்டனர். பேராயராக காணப்பட்ட கிராண்மரும், அவ்வரசியால் பிடிக்கப்பட்டு, உயிரோடே தீயில் தள்ளப்பட்டு கொல்லப்பட்டார்.

அன்பரே! வேதாகமத்தைப் பிறர் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு உண்டா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பரிசுத்த வேதாகமத்தை தங்களுடைய வழிகாட்டியாக மக்கள் கொள்வார்களென்றால் இரட்சிப்பை விட்டு அவர்கள் எப்படி வழி தவறிப் போகக்கூடும். - மைக்கேல் பாரடே

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்முடைய வேதத்தை இன்னும் அநேகர் படிக்க என்னைக் கருவியாக பயன்படுத்தும்.

தியானத்திற்கு : நியாதி.20, ஏசா.42, 1யோவான்.5.

இன்று...

மண்ணில் : 02.07.1489
விண்ணில் : 21.03.1556
ஊர் : நாட்டிங்கம்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இங்கிலாந்து

ஜெபிக்க :

எபன் அசரியா

1932 - 1987

வந்து பாருங்கள்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு. மிஷனெரி தாகத்துடன் அர்ப்பணிப்புள்ள அடியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அற்புதமான ஊழியம். நூற்றுக்கணக்கான ஊழியர்களைத் தன்னகத்தே கொண்டது.

இந்தியாவின் சந்து பொந்து தெருக்களிலெல்லாம் இதன் மிஷனெரிகள் சென்று சுவிசேஷம் அறிவித்து வருகின்றனர். மகத்தான பணிகள் மாட்சிமையுடன் நடந்து வருகின்றது. மக்கள் மனந்திரும்பி மறுவாழ்வு பெற்று வருகின்றனர்.

1975ம் ஆண்டு இதன் ஊழியராக வட இந்தியாவை நோக்கித் தன் குடும்பத்துடன் புறப்பட்டார் எபன் அசரியா. பஸ்தி, கோண்டா ஆகிய பகுதிகளில் கிராமம் கிராமமாகச் சென்று முன்னோடி மிஷனெரிப் பணி செய்தார். பிசாசு பிடித்தவர்களும் வியாதியாஸ்தர்களும் தங்கள் இக்கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றனர்.

எபன் அசரியா தினமும் 4 மணிக்கே எழுந்து ஜெபிக்கும் பழக்கம் உடையவர். புதன், வெள்ளி, ஞாயிறு கிழமைகளில் உபவாசித்து ஜெபிப்பார். எல்லோரிடமும் அன்புடன் பழகுபவர். மிஷனெரிச் சகோதரர்களைத் தன் சொந்த சகோதரர்களாக நினைத்து அன்பு பாராட்டுவார்.

1980ம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள மாரஹண்ட பள்ளிக்கு மிஷனெரியாகச் சென்றார். மீண்டும் 1981ம் ஆண்டு வட இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். டெல்லியில் பட்பர்கஞ்ச் பகுதியில் வாழும் சேரிவாழ் மக்கள் மத்தியில் ஆலயம் கட்டப்பட்டது. மேற்கிந்திய சுவிசேஷ தீவிர படை முயற்சி இயக்கத்தை அறிமுகம் செய்து உற்சாகமாகப் பணிகளை மேற்கொண்டார்.

1983மஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் பணி செய்து கொண்டிருக்கும்போது முதுகுவலியால் பாதிக்கப்பட்டார். இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் 1987ம் ஆண்டு இறைவனை துதித்தவாறே இறைராஜ்யம் சென்றார். இவர் பிறந்தது இன்றுதான்.

அன்பரே! ஆண்டவரின் அழைப்பை உணர்ந்து புறப்படத் தயாரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : தினமும் காலை இரண்டு மணி நேரமாவாது
ஜெபிக்காவிட்டால் அந்நாளில் பிசாசு ஜெயித்து விடுகிறான்.
– மார்ட்டின் லூத்தர்

குயவனின் கரங்களில் : ஆணடவரே! உமது வேதத்தை நான் எப்பொழுதும்
உறுதியாக பற்றிப் பிடித்து அதில் நடக்க உதவியருளும்.

தியானத்திற்கு : நியாதி.21, ஏசா.43, 2 யோவான் – 3 யோவான்.

இன்று...

பிறப்பு : 19.06.1932
இறப்பு : 1987
ஊர் : ஸ்ரீவைகுண்டம்
நாடு : இந்தியா
தரிசன பூமி : வட இந்தியா

எபன் அசரியா பிறந்த தினம்

சார்லஸ் ஸ்பர்ஜன் 1834
ஜான் ஹோல்ம்ஸ் 1866
கிங் ஜேம்ஸ் 1566

ஜெபிக்க :

Scanned with CamScanner

1905 - 1964

கடமையில் கண்ணியம்

தூய பவுல் பள்ளி. இது சென்னையில் உள்ளது. இதன் தலைமை ஆசிரியராக 18 ஆண்டுகள் பொறுப்பேற்று நடத்திபின் பேராயராக தென்னிந்தியத் திருச்சபையை நடத்தியவரே டேவிட் செல்லப்பா.

தலைமையாசிரியராக பணியாற்றியக் காலம். ஒருமுறை பள்ளித் தமிழ் இலக்கிய மன்ற சிறப்பு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. கல்வித்துறை அமைச்சர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். விழா தொடங்க வேண்டிய நேரத்தில் அமைச்சர் வருகை தரவில்லை. எனவே பொறுமையுடன் காத்திருந்த மாணவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். காலம் கடந்து வந்த அமைச்சருக்கு செய்தி அறிவிக்கப்பட்டது. அமைச்சர் திரும்பிச் சென்று விட்டார். உடனடியாக அரசு உதவித் தொகை நிறுத்தப்பட்ட செய்தி ஆணையாக வந்தது.

டேவிட் செல்லப்பா இதனைக் கண்டு மனம் தளரவில்லை. உடனே விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்தார். காலம் தவறாமையைப் போதிக்கின்ற நாங்கள், பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்.

அமைச்சர் தன் தவறை உணர்ந்தவராக நிறுத்தப்பட்ட உதவித் தொகையை வழங்கியதோடு, அடுத்த ஆண்டு நடைபெற்ற இலக்கியமன்ற நிகழ்ச்சியில் சரியான நேரத்தில் கலந்து கொண்டார்.

பேராயர் செல்லப்பா அவர்கள் பேணிக் காத்தவை ஒழுக்கம், காலந் தவறாமை எனும் இரு பண்புகளாகும். திருச்சபைகளில் இவைகளைத் திறம்பட வலியுறுத்தினார். பணிகளில் நேர்மையுடன் கடமையாற்றுபவர்களின் நண்பராக அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்தார்.

சென்னைப் பேராயத்தின் சிறந்த பேராயராக விளங்கிய இவர், சிறந்த செயல் வீரர். அவருடைய எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் சிறப்பு பெற்றவையாகும்.

அன்பரே! கடமையும், காலந் தவறாமையும் உங்களிடம் உள்ளதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : பிரசங்க பீடமானது நமது தாலந்துகளை வெளிக்காட்டும் கொலு மண்டபமாகலாம். ஆனால் ஜெப அறையோ அதற்கு மரண தண்டனை விதிக்கும். - ரேவன் ஹில்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் கடமையில் கண்ணியத்துடன் நடக்க என்னை உம் பாதையில் நடத்தியருளும்.

தியானத்திற்கு : ரூத்.1-2, ஏசா.44, யூதா.1.

இன்று...

மண்ணில் : 05.02.1905
விண்ணில் : 25.08.1964
ஊர் :
நாடு : **இந்தியா**
தரிசன பூமி : **இந்தியா**

தந்தையர் தினம்

சாமுவேல் பிரவுன் 1880

ஜெபிக்க :

புனித டொமினிக்

புரட்டுக்களை புரட்டிப் போடுங்கள்

1170 - 1221

சாமிநாதர் என்றழைக்கப்படும் டொமினிக் ஸ்பெயின் நாட்டில் 1170ல் பிறந்தார். இவர் தாய் மிகுந்த பக்தியுள்ளவர். ஆண்டவரோடு அனுதினமும் பேசவும், தியானிக்கவும் கற்றுக்கொடுத்தார். இவர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்ததால் தம் சொத்துக்களையெல்லாம் எடுத்து, ஏழைகளுக்குக் கொடுத்து உதவினார்.

ஒருமுறை பஞ்சம் ஏற்பட்டபோது, தம்மிடம் பணம் இல்லாத நிலையைக் கண்ட அவர், தமது புத்தகங்களையெல்லாம் விற்று, தர்மம் செய்தார். உயிருள்ள மனிதர்களைக் காப்பாற்றுபடி உயிரற்ற புத்தகங்களை விற்று உதவிகளைச் செய்வது சரியே என்று நினைத்தார். ஒரு அடிமையை மீட்கும்படி அவருக்குப் பதிலாகத் தாமே அடிமையாக மாறினார்.

இவர் காலத்தில் அல்பிஜன்ஸ் என்கிற தவறான போதகர்கள் கிறிஸ்தவர்களைக் கொலை செய்தும், கோயில்களைக் கொள்ளையடித்தும், பட்டணங்களைக் கொளுத்தியும் பற்பல கேடுகளைச் செய்து வந்தனர். எனவே டொமினிக் தம் ஆயர்களுடன் இத்தீமை மேலும் பரவாமல் இருக்க, அதை ஒழிக்கும் முயற்சியில் முழு மனதுடன் செயல்பட்டார். தவறான கொள்கைகளைப் பரப்பினவர்கள் தலைதெறிக்க ஓடினர்.

'போதகர் துறவற சபை' என்ற இயக்கத்தை ஆரம்பித்து, அநேக துறவிகளை அதில் சேர்த்தார். இன்று இந்த சபையின் உறுப்பினர் 50,000க்கும் மேல் காணப்படுகின்றனர். இவர் இடைவிடாமல் ஜெபம் செய்யும் பழக்கம் உள்ளவர். 153 மணிநேர தொடர் ஜெபத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். திருச்சபை போதகர்கள் வசதியான வாழ்க்கை வாழ ஆசைப்பட்டதை வன்மையாக கண்டித்தார். இயேசுவின் எளிமை, தாழ்ச்சி இவற்றை கடைப்பிடிக்க வேண்டும் என்று உணர்த்தினார். கால்நடையாகவே தெருக்கள்தோறும் சென்று போதித்தார்.

இவர் உயர்குடி ஆண்களும், பெண்களும் இறை ஊழியத்தில் ஈடுபடும்படி அவர்களைத் தம் போதனையால் கவர்ந்து, திருச்சபைகளுக்கு நன்மைகள் பல புரிந்து, திருச்சபையின் கலங்கரை தீபமாக வாழ்ந்து மறைந்தார்.

அன்பரே! புரட்டு உபதேங்களை ஒழிக்க உங்களின் முயற்சி என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆன்மீக மனிதனின் முதல் அடையாளம் அவன் பரவசத்தைவிட பரிசுத்தத்தை நாடுவான் - ஏ. டபிள்யு. போசர்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! புரட்டு உபதேசங்களில் நான் சிக்கிக் கொள்ளாமல் பரிசுத்த ஜீவியம் செய்ய என்னை வழி நடத்தும்.

தியானத்திற்கு : ரூத்.3-4, ஏசா.45,வெளி.1-2.

இன்று...

மண்ணில் : 1170

விண்ணில் : 06.08.1221

ஊர் : கெலாருகா

நாடு : ஸ்பெயின்

தரிசன பூமி : பிரான்ஸ்

ஞானப்பிரகாசம் 1591

ஐசக் ஹெக்கே 1846

ஜெபிக்க :

1469 - 1535

உண்மையே பேசுங்கள்

உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.

வேத வசனம் பற்பல காரியங்களில் நம்மை எச்சரித்து உணர்த்துகின்றது. நாம் தவறுகள் செய்தல் கூடாது. அதேவேளையில், தவறு செய்கிறவர்களுக்கு துணை நிற்கவும் கூடாது.

கி.பி. 1469ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் பிறந்த ஜான் ஃபிஷர் தீமைகளுக்கு எதிராக எதிர்த்து நின்றார். அப்போதைய அரசன் ஹென்றி 8 சில தீமையான முயற்சிகளைத் துணிந்து செய்ய முற்பட்டான். அவன் தனது மனைவியைத் தள்ளிவிட்டு வேறொரு பெண்ணை விவாகம் செய்ய முற்பட்டான். இதற்குப் பலர் உடன்பட்ட கருத்துக் கூறினாலும், ஜான் ஃபிஷரோ முற்றிலும் எதிர்த்து நின்றார். அரசனின் தவறை சுட்டிக் காட்டினார். தவறு செய்பவர் அரசனாயினும், அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதில் உறுதியானார்.

இதனால் ஹென்றி 8 அரசன் தானே அரசிற்கும், மதத்திற்கும் தலைவன் என்று தன்னை பிரகடனப்படுத்தினான். எனவே, தனக்கு கீழ்ப்படியாத எவரையும் கொலை செய்ய முற்பட்டான். ஃபிஷர் இவ்வறிப்பால் சிறைப்பிடிக்கப்பட்டார். அரசனுக்குக் கீழ்ப்படியும் வரை சித்திரவதைகள் செய்யப்பட்டார். ஆனால் போதகரான இவரோ கிறிஸ்துவின் போதகத்தைத் தள்ளிவிட மறுத்து விட்டார். உண்மையை உண்மையென்றும், தவறுகளைத் திறம்பட சுட்டிக் காட்டியும் தன் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தினார்.

அது ஒரு அதிகாலை வேளை. திடீரென ஒரு அறிவிப்பு ஜான் ஃபிஷருக்கு கொடுக்கப்பட்டது. காலை 5 மணிக்கு தூக்குத் தண்டனை என்பதே அச்செய்தி. பதட்டமோ, பயமோ இல்லாமல் தன் வேத புத்தகத்தை திறந்தார் ஃபிஷர். ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தார். இறைவனுடைய செயல்களை எண்ணிப் புகழ்ந்தார்.இரண்டு மணி நேரங்கள் நிம்மதியாக படுத்து உறங்கினார். இறைவனின் சித்தத்திற்கு தன்னைக் கையளித்தார். தூக்கு மேடைக்குச் செல்லும்போது கையில் வேத புத்தகமே அவர் துணையானது. உடல் தூக்கில் தொங்க, உயிரோ தன்னைத் தந்த இறைவனிடம் சென்றது.

அன்பரே! எந்த நிலையிலும் சத்தியத்திற்காக நிலைத்து நிற்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நம் ஜீவியத்தில் தேவனை முதன்மையாக வைத்தால் நமக்கு நேரிடும் எப்படிப்பட்ட தீமையைக் குறித்தும் நாம் பயப்பட வேண்டியதில்லை.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மைச் சார்ந்து உமக்குள் நிலைத்திருந்து பரலோக இன்பம் பெற என்னை நடத்தியருளும்.

தியானத்திற்கு : 1சாமு.1, ஏசா.46-47, வெளி.3-4.

இன்று...

மண்ணில் : 1469
விண்ணில் : 22.06.1535
ஊர் : யார்க்ஷையர்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இங்கிலாந்து

ஜான் ஃபிஷர் நினைவு தினம்

நாதன் பிரவுன் 1807

மேத்யூ ஹென்றி 1714

ஜெபிக்க :

இயேசுவைக் காட்டுங்கள்



1726 - 1798

திருநெல்வேலி திருமண்டிலம். கிறிஸ்தவ ஆலயங்களே இல்லாத காலம். இருள் நிறைந்த காலம் என்று கூடக் கூறலாம். ஏனெனில் சுவிசேஷம் அங்கு அறிவிக்கப்படாதிருந்தது.

விடிவெள்ளி நட்சத்திரமாய் 1771ம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்தார் கிறிஸ்டியன் பிரடரிக் சுவார்ட்ஸ். சிறுவயதிலேயே தாயாரை இழந்திருந்தாலும் தந்தையின் வளர்ப்பு அவரை மிஷனெரியாக்கியது.

ஊழியப்பணியோடு சமுதாயப் பணியையும் செய்தார். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதையே பாக்கியமாகக் கருதி ஏழைகளின் வாழ்வை உயிரடையச் செய்தார்.

கிழக்கிந்திய கம்பெனியாருக்கும், ஹைதர் அலிக்கும் மைசூரில் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது அநேக மக்கள் தங்கள் உயிரை இழந்தார்கள். அதிக சேதங்கள் ஏற்பட்டது. ஹைதர் அலியுடன் வீணாகப் போரிட்டு தங்களை இழந்துபோக விரும்பாத கிழக்கிந்திய கம்பெனியார் ஹைதர் அலியிடம் உடன்படிக்கை செய்யச் சென்றார்கள். அப்போது ஹைதர் அலி சுவார்ட்ஸ் ஐயர் அவர்களை சுட்டிகாட்டி, அந்த கிறிஸ்தவரை கூப்பிடுங்கள். அவர் யாரையும் ஏமாற்றமாட்டார். அவர் சொன்னால் போதும் என்றார்.

சுவார்ட்ஸ் ஐயர் தஞ்சாவூர் அரசவையில் முதல் அமைச்சராகவும், மன்னரின் தலைமை குருவாகவும் செயல்பட்டார். தஞ்சை மன்னன் சரபோஜியை உருவாக்கியவரும் இவரே. தஞ்சாவூரில் பஞ்சம் தலைவிரித்தாடியபோது, உணவுப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் உண்மைப் பொறுப்பைப் பெற்று, எல்லா சமயத்தினருக்கும் சேவைகள் செய்தார்.

"திருநெல்வேலியின் தந்தை" என்றழைக்கப்படும் சுவார்ட்ஸ் ஐயர்தான் முதல் திருச்சபையை அங்கு பிரதிஷ்டை செய்து, முதல் ஞானஸ்நான ஆராதனையையும் நடத்தினார். குளோரிந்தாள், சத்தியநாதன், தாவீது சுந்தரானந்தம், வேதநாயகம் சாஸ்திரியார் ஆகியோரை கிறிஸ்துவுக்காக மாபெரும் பணி செய்யத் தூண்டுகோலானார்.

48 ஆண்டுகள் இந்தியாவிலேயே அரும்பணிகள் செய்த இவர், ஒருமுறை கூடத் தம் தாயகம் திரும்பவில்லை.

அன்பரே! ஆண்டவரின் அழைப்பில் நிலைத்து நிற்கிறீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : விருப்பம் இல்லாத காரியம் எதிர்ப்படும்போது
ஒருமணிநேரம் வேதத்துடன் ஒட்டிக் கொள். - சுவார்ட்ஸ்

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! என் வாழ்க்கை முழுவதும் உம்மைப் பிரதிபலித்து உமது பணி செய்ய என்னை வழி நடத்தும்.

தியானத்திற்கு : 1சாமு.2, ஏசா.48, வெளி.5-6.

இன்று...

மண்ணில் : 26.10.1726
விண்ணில்: 13.02.1798
ஊர் : சோனென்பர்க்
நாடு : ஜெர்மனி
தரிசன பூமி: இந்தியா

H.A. கிருஷ்ணபிள்ளை 1827

டான் பீச் பிராட்லி 1873

ஜெபிக்க :

சிலுவையின் யோவான்

சுயத்தைச் சுத்தமாக்குவோம்

1542 - 1591

திருச்சபை வரலாற்றில் யோவான் என்ற பெயரையுடைய அநேக பக்தர்களுடைய வரலாற்றை நாம் காண முடியும். இயேசுவுக்கு முன்னோடியான யோவான்ஸ்நானகன் முதல் இயேசுவுக்கு அன்பான சீடன் யோவான் மற்றும் கடவுளின் யோவான், எகிப்தின் யோவான், மௌன யோவான், குள்ள யோவான் போன்ற பலருடைய வாழ்க்கைகள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வோருக்கு பக்க பலமாக விளங்குகின்றன.

அவ்வரிசையில், சிலுவையின் யோவானும் மிகவும் பெயர் பெற்றவரே. சிலுவை என்ற வார்த்தையை நாம் கேட்டவுடனே, ஒரு பக்தி பரவசம் நம்மை ஆட்கொள்ளக்கூடும். அதே வேளையில், கிறிஸ்துவின் பாடு மரணங்களையும், அதன் மூலம் மனுக்குலத்திற்குக் கிடைத்த இரட்சிப்பையும் காணக்கூடும். கிறிஸ்துவுக்காக எவ்வித துன்பத்தையும் ஏற்கத் தயாராக இருந்தவரே இந்த சிலுவையின் யோவான்.

உலக பற்றைத் துறந்து உன்னதரின் பணியை நாடி, உண்மையான வாழ்க்கை வாழ்ந்தார் இவர். ஒரு மருத்துவமனையில் சேர்ந்து நோயாளிகளுக்குத் தொண்டு செய்வதை தன்னுடைய கடமையாக உணர்ந்தார். கடும் தவ வாழ்வை மேற்கொண்டு, துறவற சபையில் இணைந்தார். இவரின் சிந்தனைகள் துறவற மடத்திற்கு வருவோரை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தியது.

"ஆன்மாவானது எந்த சிருஷ்டி மீது பற்று வைக்கிறதோ, அந்த சிருஷ்டி போலவே இருக்கும். பற்று அதிகரிக்க அதிகரிக்க சிருஷ்டியும் அதுபோலவே மாறும். ஏனென்றால், நேசிக்கிறவன் நேசிக்கப்படும் பொருளைப் போல் இருக்க விரும்புகிறான். எனவே, ஒரு சிருஷ்டியை நேசிக்கிறவன், சிருஷ்டியின் மட்டத்திற்குத் தன்னைத் தாழ்த்துகிறான். அது அவனை அடிமைப்படுத்துகிறது." இது இவரின் சிந்தனைகளாகும்.

பல சோதனைகள் இவர் வாழ்வில் குறுக்கிட்டபோது, ஆழ்ந்த தாழ்மையினால் அவற்றை எதிர்கொண்டார். ஆண்டவருக்காக இரத்த சாட்சியாக மரிக்க விரும்பிய இவர், சிலுவையைத் தன் கைகளில் ஏந்தியவாறே தன் காலத்தை முடித்தார்.

அன்பரே! உலக ஆசா பாசங்களிலிருந்து உங்களை விடுவித்துக் கொண்டீர்களா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஆண்டவரே! உமக்காக நான் வேதனைப்பட்டு
நிந்திக்கப்படும் வரம் எனக்குத் தாரும். -சிலுவையின் யோவான்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உலகப் பற்றை வெறுத்து,
உம்மையே பற்றிப் பிடிக்க எனக்கு உதவும்.

தியானத்திற்கு : 1சாமு.3, ஏசா.49, வெளி.7-9.

இன்று...

மண்ணில் : 24.06.1542
விண்ணில் : 14.12.1591
ஊர் : போந்திபரோஸ்
நாடு : ஸ்பெயின்
தரிசன பூமி : ஸ்பெயின்

சிலுவையின் யோவான் பிறந்த தினம்

தியோடர் பிசா 1519

பால் சுந்தரம் கடம்பவனம்

மனதில் மாற்றம்



1887 - 1980

சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்து, சைவ பக்தராய் வளர்ந்து தன் 20ம் வயதில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, புதிய மனிதனாக வளர்ந்து, இறுதிவரை இயேசு கிறிஸ்துவின் அடியாராகவும் சாட்சியாகவும் வாழ்ந்த ஜெபவீரர், தந்தை பால் கடம்பவனம்.

ஞானஸ்நானம் பெற்றபின் ஒரு கிறிஸ்தவ துறவியாக விரும்பினார். ஆயினும், அம்முயற்சியைக் கைவிட்டு கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கப் பயணச் செயலாளராக பணியாற்றினார். 1912ம் ஆண்டு சுதேச மிஷனெரி சங்க பணியினை ஏற்றார். பல இடங்களில் அருளுரையாற்றும் பொறுப்பு கிடைத்தது. கூட்டங்களில் கலந்து கொண்டோர் இவரின் அருளுரையைக் கேட்டவுடன் மனதில் மாற்றமடைந்து, கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். "இயேசுவை நம்பி கெட்டவன் இல்லை. இயேசுவுக்குக் கொடுத்து கெட்டவனில்லை. இயேசுவுக்கு உழைத்து கெட்டவனில்லை." இது பால் கடம்பவனத்தின் அசையாத அருளுரையின் சாரம்.

இவர் பல ஆவிக்குரிய நூல்களை எழுதியுள்ளார். நான் ஏன் கிறிஸ்தவனானேன்? (1910) மற்றும் அனுபவ திருஷ்டாந்தங்கள் (1974) என்ற நூல்வரை சுமார் 16 நூல்கள் எழுதியுள்ளார். பால் கடம்பவனத்தின் நூல்கள் யாவும், இரட்சிப்பின் அனுபவங்களாக வரலாற்று சான்றுகளாக, நற்செய்திப் பணி ஊடகங்களாக, ஜெபத்தின் செயல்களாக விளங்குகின்றன. இவரது பேச்சு, கல் நெஞ்சங்களையும் உடைக்கும் வலிமைபெற்றவை.

'தமிழ்நாட்டின் மூடி பிரசங்கியாராக' ஆன்மீக எழுப்புதலை உண்டுபண்ணினார். இறைவனே தம்மை அவரின் அடியாராக தெரிந்துக் கொண்டதாக அறிவித்து, இறுதிவரை உண்மையான கிறிஸ்தவ ஜெபவீரராக விளங்கி, தன் வாழ்வில் வந்த பல சோதனைகளையும் மேற்கொண்டு, கிறிஸ்துவுக்குள் ஆழமான விசுவாசத்தை செயலில் காட்டி மக்களின் முன்மாதிரியானார். இவர் தம் முதிர்வயதில், கண்ணொளி இழந்த பின்னும், தன்னைக் காண வரும் அனைவரின் தலைமீதும் கைகள் வைத்து ஜெபித்து, அன்பு பாராட்டுவார்.

அன்பரே! நீங்கள் செல்லுமிடமெங்கும் கிறிஸ்துவைப் பறைசாற்றுகிறீரா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : நீ செய்வதையெல்லாம் கடவுளுக்கு ஒப்புக்கொடு. அவருக்கு ஒப்புக்கொடாமல் செய்யும் வேலை அனைத்தும் வீணே.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! நான் சந்திக்கும் அனைவருக்கும் உம் அன்பை எடுத்துச் சொல்ல என்னைப் பயன்படுத்தும்.

தியானத்திற்கு : 1சாமு.4, ஏசா.50, வெளி.10-11.

இன்று...

பிறப்பு	: 25.06.1887
இறப்பு	: 15.03.1980
ஊர்	: தஞ்சாவூர்
நாடு	: இந்தியா
நற்செய்தி பூமி	: இந்தியா

பால் சுந்தரம் கடம்பவனம் பிறந்த தினம்

லூசி வெப் ஹெய்ஸ் 1889

ஆரோன் 1745

P. சாமுவேல்

செயல்படும் அன்பு

1922 - 2005

இன்று ஓர் மாமனிதரின் நினைவு நாள். அவர்தான் "அன்பறியா பிள்ளைகளின் அப்பா" என்றழைக்கப்படும் P. சாமுவேல் என்பவர்.

1952ஆம் ஆண்டு துவக்கம். அதுவரை இந்தியாவில் விடுமுறை வேதாகமப் பள்ளி என்று ஒன்று நடந்ததே கிடையாது. முதன்முதலாக ஒரு நண்பர் வட்டத்தை உருவாக்கி தமிழகத்திலும் மற்றும் பிற மாநிலங்களிலும் இவ்வரிய வேதாகமப் பள்ளியை ஆரம்பித்து ஆயிரக்கணக்கான இளம் நெஞ்சங்களின் பிஞ்சு மனதில் கிறிஸ்துவை விதைக்கக் காரணமானவர் இவர்.

பெத்தேல் வேதாகமப் பள்ளி, பெத்தேல் சிறுவர் பராமரிப்பு மையங்கள், பெத்தேல் மருத்துவமனை, பெத்தேல் மெட்ரிகுலேசன், பெத்தேல் தொழிற்பயிற்சி மையம், பெத்தேல் அச்சுக்கூடம், பெத்தேல் விவசாயப்பண்ணை என பல்வேறு கிளை நிறுவனங்களைக் கொண்ட 'பெத்தேல் விவசாய ஐக்கியம்' என்னும் மாபெரும் கூட்டமைப்பு உருவாக தேவனால் பயன்படுத்தப்பட்டவர்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு உருவாவதற்கும் அதன் அறைகூவல் பத்திரிகை வெளியிடப்படுவதற்கும் காரணமானவர். கர்ஜிக்கும் சிங்கமாக சந்தியா கூட்டங்கள் நடத்தி ஆயிரமாயிரம் பேரைக் கிறிஸ்துவுக்குள் நடத்தியவர். உடைந்த உள்ளங்களைக் கட்டும் அன்பு கனிந்த வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர்.

இயேசு கிறிஸ்துவின் சீடராக, குழந்தைகளின் நேசராக, ஒப்பற்ற தலைவராக, தலைவர்களை உருவாக்கும் தலைவராக, தரிசனங்களைச் செயல்படுத்துபவராக, ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கும் பாரம் மிகுந்தவராக, காட்சிக்கு எளியவராக, செயலில் வீரராக, அன்பிலும், நடக்கையிலும் புனிதராக, விசுவாசத்தில் உயர்ந்தவராக, மிஷனெரி சகாப்தமாக வாழ்ந்த இவ்வரிய "மனிதருள் மாணிக்கம்," நம்மிடையே வாழ்ந்தவர் என்பது நமக்கு சிறப்பையும், நற்செய்திப் பணியில் நமக்கு ஆர்வத்தையுமல்லவா தருகின்றது! இவர் வாழ்ந்தவர் மட்டுமல்ல; இன்றும் அநேகமாயிரம் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

அன்பரே! உம் வாழ்விற்குப் பின்பும் உம் செயலால் மக்கள் வாழ முடியுமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஊழியத்தில் கிடைக்கும் ஊதியம் கொஞ்சமாயிருந்தாலும் அது தேவ கரத்தினின்று வருவது; எனவே குறைவின்றி போஷிப்பார்.
– பி. சாமுவேல்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! செயல்படும் அன்புடையவனாக என்னை மாற்றி பிறருக்கு பயன்பட உதவி செய்யும்.

தியானத்திற்கு : 1சாமு.5-6, ஏசா.51, வெளி.12-13.

இன்று...

மண்ணில் : 15.06.1922
விண்ணில் : 26.06.2005
ஊர் : கோவில்பட்டி, தமிழ்நாடு
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

P.சாமுவேல் நினைவு தினம்
உலக போதை பொருள் தடுப்பு தினம்

பியர்ல் பக் 1892

ஜெபிக்க : திரு. வால்டர், Transform India Mission, சென்னை.

Scanned with CamScanner

எட்வர்ட் கொர்நேலியு

1831 - 1916

கட்டளைக்குக் கீழ்ப்படி

இந்திய நாட்டில் பலவிதமான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதில் சந்தாலி என்ற மலைவாசிகளும் ஒரு பிரிவினர். இவர்கள் வங்காளத்தின் வடமேற்குப் பகுதியில் காடுகள் நிறைந்த பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். திராவிட நாடாகிய இந்தியாவின் பூர்வீக குடிமக்கள் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

சந்தாலி மக்களின் மொழியை அறிந்து கொள்வது மிகக் கடினம். எனினும் அர்ப்பணம் மிக்க ஊழியர்கள் எவருக்கும் அது எளிது; ஏனெனில் அவர்கள் மக்களோடு மக்களாகவே வாழ்ந்து விடுகிறார்கள்.

சுவீடன் நாட்டில் பிறந்த எட்வர்ட் கொர்நேலியு வாணிபத்தை முன்னிட்டு பல நாடுகளுக்குக் கப்பல் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒருநாள் ஆண்டவர் அவரோடு தனிப்பட்ட முறையில் பேசினார். அன்றிலிருந்து ஆண்டவரின் மகத்தான செயல்களைப் பிறருக்கு அறிவிக்க ஆரம்பித்தார்.

அவர் பயணம் செய்த கப்பல் கல்கத்தா துறைமுகத்தை அடைந்த சமயத்தில் ஆண்டவரின் கட்டளை பெற்று இந்திய மண்ணில் அடி எடுத்து வைத்தார். கல்கத்தாவில் தங்காமல் கிராமங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க மிகுந்த தீவிரத்துடன் சென்றார்.

100 மைல்கள் தூரம் கடந்து வந்தபின் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். தான் தேடிவந்த மக்களைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில் ஆனந்தமடைந்தார். அம்மக்களின் மொழியை விரைவாகக் கற்றுக் கொண்டார். இயேசு கிறிஸ்துவின் இனிய செய்தியை இன்பமுடன் எடுத்துக் கூறினார்.

40 ஆண்டுகள் அப்பழங்குடி மக்களிடயே பணியாற்றினார். பஞ்சத்திலும், கொள்ளை நோயிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் புரிந்தார். பல இடங்களில் கொடுமையான துன்பங்களை அனுபவித்தாலும், கிறிஸ்துவுக்குள்ளாக அவைகளை இன்பமாக ஏற்றுக் கொண்டு அம்மக்கள் மத்தியிலேயே தன் உயிரை விட்டார்.

அன்பரே! இயேசு உம்மை அழைக்கும் சத்தம் கேட்கிறதா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : சாத்தானோடு விளையாடி மகிழ விரும்புகிறவன் கிறிஸ்துவுடன் பேரின்பம் அனுபவிக்க முடியாது.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து உம்மைப் பின்பற்றும் நல்மனதை எனக்குத் தாரும்.

தியானத்திற்கு : 1சாமு.7-8, ஏசா.52, வெளி.14.

இன்று...

பிறப்பு : 1831
இறப்பு : 1916
ஊர் :
நாடு : சுவீடன்
தரிசன பூமி : இந்தியா

உலக நீரழிவு தினம்

புனித சிரில் 444

ஹெலன் கெல்லர் 1880

ஜெபிக்க :



1866 - 1934

உங்கள் திட்டம் என்ன?

பாப்புவா நியூகினியா தீவு. அங்கு வாழும் மக்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள். உயிருடன் மனிதர்களைக் கடித்து, ருசித்து சாப்பிடும் நர மாமிசப் பட்சிணிகள். அழுக்கு நிறைந்த உடலுடன் துர்நாற்றம் உடையவர்களாக நடமாடும் நாகரிகமில்லா மக்கள். இவர்களின் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும், மண்டை ஓடுகளாலான அலங்காரம் காணப்படும்.

பல நூற்றாண்டுகளாகவே இம்மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை அறிவிப்பதற்கு ஆட்கள் யாரும் செல்லவில்லை. அவ்விதம் சென்றவர்களில் சிலரும் தங்கள் நாடு திரும்பவில்லை.

இம்மக்களைப் பற்றி கேள்விப்பட்டார் ஜான் ஹோல்ம்ஸ். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த நியூகினியா தீவு மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைக்கத் தீவிரம் கொண்டார். எனவே, லண்டன் மிஷனெரி ஸ்தாபனத்தில் இணைந்தார். ஜேம்ஸ் சால்மர்ஸ் என்ற மிஷனெரியுடன் இணைந்து பணி செய்ய தன் ஆவலைத் தெரிவித்தார். தன்னுடைய விருப்பம் நிறைவேற்றப்படவே, அதிக மகிழ்ச்சியுடன் கையில் ஒரு பழைய பெட்டியுடன், ஆஸ்திரேலியாவுக்கு கப்பலில் பயணமானார்.

வியாழன் என்ற தீவு. கப்பல் வந்து நின்றது. ஜேம்ஸ் சால்மர்ஸ் என்ற மிஷனெரி ஜான் ஹோல்ம்ஸை எதிர்நோக்கி நின்றார். அவரைத் தனது சிறிய கப்பலில் ஏற்றிக்கொண்டு பாப்புவா தீவிற்குச் சென்றார். அம்மக்களின் நிலையைக் கண்ட ஹோல்ம்ஸ் ஒரு நொடி கதிகலங்கினார். உடலிலே துணிகள் இல்லாமல், சகிக்கக் கூடாத துர்நாற்றம் மிக்கவர்களாக நின்று கொண்டிருந்தனர் மக்கள். முதலில் அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்ட இவர், அவர்களுடன் நட்புடன் பழக ஆரம்பித்தார். மக்களின் மூட நம்பிக்கைகளினிமித்தம் ஏற்பட்ட சண்டைகளினால், பல மனிதர்கள் கொல்லப்பட்டபோது, அவர்களிடம் சமரசத்தை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்டினார்.

பள்ளிக்கூடங்களையும், வீடுகளையும் கட்டினார். வேதாகமத்தை அவர்கள் மொழியிலேயே வாசிப்பதற்கு உதவினார். இதனால், பாப்புவா தீவின் மக்களின் வாழ்க்கைத் தரம் மாறியது. காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தவர்கள் கிறிஸ்துவின் மனிதர்களாக மாறினர்.

அன்பரே! ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிய ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : இயேசுவோடு நாம் மகிமையடைய விரும்பினால் அவர் பருகிய கசப்பான கிண்ணத்திலிருந்து நாமும் பருக தயாராக இருக்க வேண்டும்.

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஜான் ஹோல்ம்ஸைப் போன்று உமக்காக பெரிய காரியங்களை சாதிக்க என்னை அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : 1சாமு.9, ஏசா.53, வெளி.15-16.

பிறப்பு : 19.06.1866
இறப்பு : 19.04.1934
ஊர் : ஹார்பர்டோன்
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : பாப்புவா தீவு

இன்று...

ஆலன் கார்டினர் 1794
நான்காம் ஹென்றி 1491
லெஸ்டர் ரோலஃப் 1914
இரேமெயஸ் 195

ஜெபிக்க :

Scanned with CamScanner

இயேசுவைத் தவிர...

ஒருமுறை இயேசு கிறிஸ்து மக்களுக்குப் போதனை செய்து கொண்டிருந்தார். சத்தியம் பலரின் உள்ளத்தில் கிரியை செய்ததால் கடினமான உபதேசம் எனக்கூறி அவ்விடத்தை விட்டு கடந்து சென்றனர்.

சீடர்கள் மட்டுமே இயேசுவுடன் உட்கார்ந்திருந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டார். நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? பேதுருவின் உள்ளம் உடைப்பட்டது. "ஆண்டவரே நாங்கள் யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே!" பேதுரு தன் விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

- 67

இயேசுகிறிஸ்து தெரிந்தெடுத்த முதல் சீடன் பேதுரு என்பவரே. மீன் பிடிக்கும் தொழில் செய்த இவரை மனிதனைப் பிடிக்கும் பணிக்கு அழைத்தார். தன் உடமைகள் அனைத்தையும் விட்டு கிறிஸ்துவைப் பின்பற்றினார் பேதுரு. இயேசுவின் நெருங்கிய சீடரானார். எனவே வானகத்தின் திறவுகோல்களைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார் இயேசு.

சுறுசுறுப்பும், துடுதுடுப்பும் எதற்கெடுத்தாலும் அவசரப்படும் குணமும் கொண்ட இவர், 3 முறை இயேசுவை மறுதலித்து, பின் அதற்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டவர். மும்முறை இயேசு அவரிடம், "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்று கேட்டதினால் மனம் உடைந்த இவர், தன்னையே முழுமையாக இயேசுவுக்கு அர்ப்பணித்தார்.

பெந்தேகொஸ்தே திருநாளின் போது இவரின் பிரசங்கத்தினால் 3,000 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். பல அற்புதங்களைச் செய்தார். பவுல் அப்போஸ்தலனும் இவருடன் இணைந்து பணியாற்றினார். எபேசு மற்றும் கிரேக்க நாடுகளுக்கும் பின்னர் ரோமை அடைந்து யூதர்களுக்கும் நற்செய்தியைப் பிரசங்கித்தவர்.

கி.பி.64ம் ஆண்டு சுவிசேஷம் அறிவித்ததால் சிறைப்பிடிக்கப்பட்டார். சிலுவையில் அவரை அறையப்படும் முன், தன்னைத் தலைகீழாக அறையும்படி கேட்டுகொண்டு, அவ்விதமே இரத்த சாட்சியாக மரித்து இன்றும் பேசப்படுகிறார்.

அன்பரே! நீங்கள் இயேசுவினிடத்தில் அன்பு கூறுவதன் அடையாளம் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால், வெட்கப்படாதிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். - பேதுரு

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம் நிமித்தம் வரும் பாடுகளை சுமையாக நினைக்காமல் சுகமாக நினைக்க உதவியருளும்.

தியானத்திற்கு : 1சாமு.10, ஏசா.54, வெளி.17-18.

இன்று...

மண்ணில் : **விண்ணில் :** கி.பி. 67 **ஊர் :** பெத்சாயிதா **நாடு :** பாலஸ்தீனா **தரிசன பூமி :** பாலஸ்தீனா	ரேமண்ட் லல் 1315

ஜெபிக்க :

ஜஸ்டின் மார்ட்டையர்



100 - 167

கிறிஸ்துவைப் போல்...

இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாத மக்கள் உலகில் எண்ணற்றவர்கள் உண்டு. இன்று கிறிஸ்தவம் வேகமாக பரவியபோதும், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்ட போதும் பலர் மனந்திரும்பாமல் இருப்பதன் காரணம் என்ன?

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டும், கிறிஸ்துவைப் போன்று வாழாத மக்களின் வாழ்வைக் கண்டு, பிற மதத்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள தயங்குகிறார்கள். நாம் கிறிஸ்துவைப் போன்று வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம். இதுவே தலையாய பணியாகும்.

கி.பி. 100ல் பிறந்த ஜஸ்டின் உண்மையை அறியாதவராக, உள்ளத்தில் சமாதானம் அற்றவராக, உலக கவலைகள் நிறைந்தவராக, ஒரு கடற்கரையோரம் உலாவிக் கொண்டிருந்தார். உண்மையை அறிவிக்கும் ஒருவரை அவரின் கண்கள் தேடியது. தூரத்தில் ஒரு முதியவர் மெதுவாக இவரை நோக்கி வந்தார். கிறிஸ்துவின் தியாகமான வாழ்வையும், அவர் தரும் விடுதலையையும், இரட்சிப்பின் நிச்சயத்தையும் தெளிவாக எடுத்துக் கூறினார். வேதாகமத்தின் சத்தியங்களை தேனைப் போல் பருகினார் ஜஸ்டின். அவர் வாழ்வு மாற்றம் பெற்றது .மிகுந்த மகிழ்ச்சியோடு தன் வீடு சென்றார்.

130ஆம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்ற இவர், கிரேக்க நாடு, எகிப்து, இத்தாலி போன்ற இடங்களுக்குச் சென்று கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தார். கிறிஸ்துவைப் போல் வாழும், மாணவர்கள் அடங்கிய ஒரு பள்ளியை நிறுவினார். பல தத்துவ புத்தகங்களையும் எழுதினார். கிறிஸ்தவத்திற்கு எதிரான ரோமப் பேரரசன், இவரைப் பிடித்து சிறையிலடைக்க ஆணையிட்டான்.

ரோம அதிகாரி இவரை நோக்கி, "நீ இறந்ததும் மோட்சம் சேருவாய் என்றும், கடவுள் உனக்கு சன்மானம் கொடுப்பார் என்றும் நினைக்கிறாயா" என்று கேட்டார். அதற்கு ஜஸ்டின், நினைக்கவில்லை, ஆனால் "நிச்சயமாக நம்புகிறேன்" என்றார். இதனால் கோபமுற்ற அவ்வதிகாரி இவரைக் கொடூரமாக கொலை செய்ய ஆணையிட்டான்.

அன்பரே! கிறிஸ்துவைப் போன்று வாழ உமது பிரயாசம் என்ன?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : உலகின் எப்பகுதியிலும், எக்காலத்திலாகிலும் உண்மையைச் சுட்டிக்காட்டிய ஞானிகள் கிறிஸ்தவர்களே.

- ஜஸ்டின்

குயவனின் கரங்களில் : ஆண்டவரே! உம்மைப் போல் அனுதினமும் வாழ என்னைப் பக்குவப்படுத்தி பயன்படுத்தும்.

தியானத்திற்கு : 1சாமு.11-12, ஏசா.55, வெளி.19-20.

இன்று...

மண்ணில் : கி.பி. 100

விண்ணில் : கி.பி. 167

ஊர் : சிகம்

நாடு : சிசெரியா

தரிசன பூமி : ரோம்

ரமான் லல் 1315

ஜெபிக்க :

Scanned with CamScanner

ஜாண் ஹைடு

எழுப்புதல் எனும் தீயைப் பற்ற வையுங்கள்

1865 - 1912

1904ம் ஆண்டு பஞ்சாப் மாநிலம்; சீயாஸ் கோட் நகரில் ஓர் மாபெரும் மாநாடு; இந்தியத் திருச்சபையின் செயல்பாட்டை உயர்த்தும் ஓர் மாநாடாகக் காணப்பட்டது.

'ஜெப அப்போஸ்தலன்' என்றழைக்கப்படும் ஜாண் ஹைடு அம்மாநாட்டில் ஆற்றிய அருளுரைகள் எழுப்புதல் தீயைப் பற்ற வைப்பதாக அமைந்தன. பஞ்சாப் திருச்சபைகளுக்கு அது புத்துயிரை அளித்தது.

ஜாண் ஹைடு கிறிஸ்தவ அன்பிலும், பக்தியிலும் வளர்க்கப்பட்டவர். இறையியல் படிப்பை முடித்து ஆண்டவரின் சித்தம் செயல்பட தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

இந்திய நாட்டுக்கு சுவிசேஷம் அறிவிக்கக் கடவுளால் அழைக்கப்படுவதை உணர்ந்த அவர் 1892ம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்துக்கு வந்தார். திட்டமிட்ட உழைப்பினாலும், விடாப்பிடியான ஜெபத்தினாலும், வளர்ச்சி குன்றிய திருச்சபையின் நிலையை மாற்றியமைத்தார். திருச்சபைகள் வளர்ந்து பெருகியது. இவர் கண்ணீர் மல்க ஜெபிக்கும் பழக்கம் கொண்டவர். கிறிஸ்துவை அறியாத மக்களின் இரட்சிப்பிற்காகவும், கிறிஸ்துவை அறிந்தவர்கள் சத்தியத்தில் நிலைத்திருக்கவும் ஊக்கமாக ஜெபித்தார்.

ஆயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றனர். சுவிசேஷம் அறிவிப்பதில் தீவிரமாய் செயல்பட்டார். எழுப்புதல் தீ பற்றியெரிந்தது.

தன்னை முழுமையுமாக இயேசுவுக்கு அர்ப்பணித்த இவர், எதிர்பாராத புற்றுநோயால் தாக்கப்பட்டார். இளம் வயதிலேயே தன் ஓட்டத்தை முடித்து இதே நாள் 1912ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மகிமைக்குள் பிரவேசித்தார்.

இன்றைய இந்தியாவில் எழுப்புதல் என்னும் தீயைப் பற்ற வைக்க ஜான் ஹைடுவைப் போன்ற இளம் உள்ளங்கள் எழும்பினாலன்றி, இந்தியாவிற்கு விடிவுகாலம் தோன்றுவது எப்போது?

அன்பரே! ஜான் ஹைடுவைப் போன்று எழுப்புதல் தீயைப் பற்றவைக்க நீங்கள் ஆயத்தமா?

வாழ்விலிருந்து வாழ்வுக்கு : மக்கள் நரகத்தில் விழுவதை தடுக்க வேண்டும். கடவுளுடைய இரத்தத்தால் மீட்கப்பட்ட ஆத்துமாக்கள் சேதமாகலாகாது.

தூயவனின் கரங்களில் : ஆண்டவரே! ஜான் ஹைடைப் போன்று எழுப்புதல் தீயைப் பற்ற வைக்க என்னை முற்றிலும் அர்ப்பணிக்கிறேன்.

தியானத்திற்கு : 1 சாமு.13, ஏசா.56-57, வெளி.21-22.

இன்று...

மண்ணில் : 09.11.1865
விண்ணில் : 17.02.1912
ஊர் :
நாடு : இந்தியா
தரிசன பூமி : பஞ்சாப், இந்தியா

மருத்துவர்கள் தினம்

ஜார்ஜ் கிரென்ஃபெல் 1906

ஜெபிக்க :

Scanned with CamScanner